வரு.75 இல. 02 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி
2023 ஜனவரி 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
January 08 Sunday, 2023
24 பக்கங்கள் 100/-




02 சலுகைகளை பெறாமல் எனது வீட்டில் வாழ்ந்தது தீயிட்டு எரிப்பதற்குரிய குற்றமா?
05 மக்களில் பலர் சலுகைகளையே எதிர்பார்க்கின்றனர்!
11 குழந்தைகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலா?
24 இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒருநாள் தொடர்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் இந்தியா பயணம்



இந்தியாவினால் நடத்தப்படும் உலகளாவிய தெற்கு உச்சிமாநாட்டில் பங்கேற்கும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா பயணமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அவர் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் முதல் பயணமாக இது அமைகிறது.

இந்தநிலையில், இந்த மாநாட்டில் 20 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ஜனவரி 12 மற்றும் ஜனவரி 13 ஆகிய திகதிகளில் இந்த உச்சி மாநாடு நடைபெறுகிறது.

அண்டை நாடுகளின் தலைவர்களை தவிர ஆபிரிக்கா, அங்கோலா, 06

அமெரிக்காவில் கண்டறியப்பட்டுள்ள

## புதிய XBB.1.5 வகை திரிபு நாட்டுக்குள் பரவும் அபாயம்

காய்ச்சல், சளி, இருமல், உடல்வலி, தலைவலியை உண்டாக்கும்




அமெரிக்காவில் தோன்றியுள்ள புதிய எக்ஸ்பிபி.1.5 கொரோனா மாறுபாடு குறித்து இலங்கையின் சுகாதார அதிகாரிகள் விழிப்புடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக தற்போது கண்டறியப்பட்ட நாடுகளில் அந்த திரிபு வேகமாக பரவி வருவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

எக்ஸ்பிபி.1.5 மாறுபாடு எக்ஸ்பிபி தொடரிலிருந்து வந்தது, இது முதலில் அமெரிக்காவில் கண்டறியப்பட்டது. 2022 நவம்பர் முதல் இலங்கையில் எக்ஸ்பிபி வரிசை மாறுபாடு கண்டறியப்பட்ட போதிலும், 06

ரூ. 53 க்கு முட்டை விற்பனை

## கொழும்புக்கு 08 இலட்சம் முட்டைகள் விநியோகம்



முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவிப்பு

கொழும்பிலுள்ள அனைத்து பொருளாதார நிலையங்களுக்கும் 53 ரூபாவுக்கு முட்டை வழங்கப்படுமென 06

2022 க.பொ.த உயர்தர பரீட்சை;

## பயிற்சி, மேலதிக வகுப்புகளுக்கு 17 ஆம் திகதிக்கு பின் தடை

2022 க.பொ.த உயர்தர பரீட்சையை இலக்காகக் கொண்டு பயிற்சி வகுப்புகள் அல்லது மேலதிக வகுப்புகளை நடத்துவது 06

உள். சபைத் தேர்தலில் உரிய விதிகள் மீறப்பட்டால்

# தேர்தல் ஆணைக்குழுவுக்கு கட்டுப்பணம் இழக்க நேரிடும்




## சட்ட வல்லுநர்கள் அரசுக்கு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனு கோரலின் போது உரிய சட்ட ரீதியான விதிமுறைகளை பின்பற்றத் தவறினால் தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்கள் செலுத்தும் கட்டுப்பணத்தை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் தனிப்பட்ட நிதியில் செலுத்த வேண்டிய நிலை நேருமென சட்ட வல்லுநர்கள் தரப்பு அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை 06

## 75 ஆவது சுதந்திர தினத்திற்காக 75 பஸ்கள்



இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 75 பயணிகள் பஸ்கள் இந்திய அரசின் கடன் அடிப்படையில் கிடைக்கப் பெற்றுள்ளது. அந்த பஸ்களை உத்தியோகப்பூர்வமாக கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன,இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இலங்கை அசோக் லேலன்ட் நிறுவனத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்தோடு மேலும் 425 பஸ்களை பொது போக்குவரத்தில் இணைத்துக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### எங்கள் கருத்து...

## உள்ளூராட்சி சபைத் தேர்தலும் விடை தெரியாத வினாக்களும்!


அதலபாதாளத்தில் வீழ்ந்திருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்காக அரசாங்கம் பெரும் பிரயத்தனம் மேற்கொண்டிருக்கையில், ஆயிரம் கோடி ரூபா செலவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தங்கள் ஆரம்பமாகியுள்ளன.

புதிய வருடத்தின் முதற்காலாண்டுப் பகுதியில் நடைபெறலாமென ஊகிக்கப்படுகின்ற இத்தேர்தலானது, நாட்டின் ஆட்சியதிகாரத்தைத் தீர்மானிக்கின்ற பொதுத்தேர்தலோ அன்றி ஜனாதிபதித் தேர்தலோ அல்ல! அது மாகாணசபைகளுக்கான தேர்தலும் அல்ல!

மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேசசபைகள் ஆகியவற்றுக்கான புதிய நிர்வாகத்தைத் தீர்மானிக்கின்ற உள்ளூராட்சித் தேர்தலே அதுவாகும். 'கொவிட் தொற்று அலைகள், அரசியல் நெருக்கடி ஆகியவற்றைத் தாண்டி எமது நாடு தற்போது பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகியிருக்கின்ற இவ்வேளையில், பெரும் செலவில் இத்தகைய குட்டித் தேர்தலொன்று அவசியம்தானா?' என்ற வினாவை புத்திஜீவிகள் முன்வைக்கத் தவறவில்லை. 06

## கண்டி, தெல்தெனிய பகுதியிலுள்ள 15 வயது மாணவியை காணவில்லை

காலிமுகத்திடலில் மாயம்;
பொதுமக்களின் உதவியை
நாடுகிறது பொலிஸ்



கண்டி தெல்தெனிய பொலிஸ் பிரிவில் அம்பகோட்டை, கென்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயது மாணவியொருவர் காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பவில்லையென 06

மிரிஸ்ஸ, மீன்பிடி துறைமுகத்துக்கருகே

## ஆழ் கடல் மீன்பிடிப்படகிலிருந்து 23 Kg ஹெரோயின் பொதிகள் மீட்பு

05 சந்தேக நபர்களும் கைது



ஆழ் கடல் மீன் பிடிப்படகொன்றிலிருந்து 23 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளதுடன் படகில் 06

## புதிய வாக்காளர்களாக 02 இலட்சம் பேர் தகுதி


உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பதற்கு 01 கோடியே 68 இலட்சம் பேர் தகுதி பெற்றுள்ளனர். இதில், 02 இலட்சம் பேர் முதன் முறையாக வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்குள் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த தேசிய தேர்தல் ஆணைக்குழு உத்தேசித்துள்ளது.

உளளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலை எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 06

## புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற இம்முறை 3,500 பேருக்கு அனுமதி

நாளை ஒப்பந்தம் கைச்சாத்து



இலங்கையிலிருந்து இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற 3,500 பேருக்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் இதற்காக சவூதி அரசாங்கத்துடன் 06

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தக்கோரி

## இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க தமிழக தலைவர்களிடம் வலியுறுத்தல்



இலங்கை - தமிழக தலைவர்கள் சென்னையில் சந்தித்து உரையாடல்

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மாகாண சபைகளின் முழுமையான அதிகாரப்பரவலாக்கத்தை தடையின்றி நடைமுறைப்படுத்த 06

அதிதுரித
Dialog HOME BROADBAND இடமிருந்து
வீட்டிற்கு Wi-Fi ரீலோட்
வீட்டிற்கு Wi-Fi RELOAD
இணைப்புடன் ரவுட்டர் ரூ.5990/-
புதியது மாதத்திற்கு 20GB ரூ.540/-
2 வாரங்களுக்கு 10GB ரூ.299/-
செயற்படுத்தல் ரீலோட் அல்லது MyDialog App மூலம்
Dialog
எதிர்காலம் இன்றே.

# சலுகைகளை பெறாமல் எனது வீட்டில் வாழ்ந்தது தீயிட்டு எரிப்பதற்குரிய குற்றமா?



அனேகமானோர் அன்றைய நாளை வழக்கம்போல ஆரம்பித்தாலும், சூரியன் சுட்டெரிக்க ஆரம்பித்த போது எதிர்பாராத வகையில் நாடும் சூடாகத் தொடங்கியது. நாடு முழுவதும் ஆங்காங்கே ஒன்று கூடிய குழப்பக்காரர்கள் நிராயுதபாணிகளான மனிதர்களைத் தாக்கியும், வீதிகளை மறித்து வாகனங்களை தீயிட்டுக் கொளுத்தியும், பொதுச்சொத்துக்களுக்கு சேதங்களை ஏற்படுத்தியும் ஆரம்பித்த வன்முறைகள் அன்றைய தினம் மாலை ஆகும்போது பேரழிவாக மாறியது. பட்டப்பகலில் ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினரும் அவரது மெய்ப்பாதுகாவலரும் மிகக் கொடூரமான முறையில் வீதியில் படுகொலை செய்யப்பட்டனர். வன்முறையாளர்களின் மூர்க்கத்தனமான இரத்த வெறி அதற்கும் தணியவில்லை. அவர்களின் அடுத்த இலக்கு மக்கள் பிரதிநிதிகளின் வீடுகள் மற்றும் தனிப்பட்ட சொத்துக்களைத் தேடித் தேடிச் சென்று எரிப்பதாகவே இருந்தது. அடுத்த நாள் உதயமான போது இந்த நாட்டின் மக்கள் பிரதிநிதிகள் ஏராளமானோரின் வீடுகள், வாகனங்கள் தீயிடப்பட்டு கொளுத்தப்பட்டு அவர்கள் இருப்பிடங்களை இழக்குமளவு வன்முறைகள் தீவிரமடைந்திருந்தன. நாட்டையே அச்சத்தில் ஆழ்த்திய அந்த தொடர் நிகழ்வுகள் ஒரு திரைப்படத்தில் வரும் காட்சி என்றால் அதுதான் இல்லை. நாட்டு அரசியல் வரலாற்றில் அழிக்க முடியாத கறுப்பு கறையை ஏற்படுத்திய 2022 மே 09ம் திகதி ஒரு "இருண்ட திங்கட் கிழமை" க்கு உரிய நினைவுக் குறிப்புக்களாகும். அந்த இருண்ட நினைவுகளை பிரதிபலிக்கும் வகையில், 'தினகரன்', பத்திரிகைக்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவை நேர்காணல் செய்தோம்.



"எந்த ஒரு தார்மீகமுள்ள, நாகரீகமான நாட்டிலும் அந்நாட்டு மக்களுக்கு உரித்தான அடிப்படையான மனித உரிமையாக இருப்பது பயமின்றி, சந்தேகமின்றி தமது வீட்டினுள் வாழ்வதற்கு இருக்கும் உரிமையாகும். எந்த ஒரு பிரஜையும் எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த மதத்தைப் பின்பற்றுபவராக இருந்தாலும், எந்தக் குலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டவராக இருந்தாலும் தமது சொந்த வீட்டினுள் தமது மனைவி பிள்ளைகளுடன் எவ்வித இடையூறுகளுமின்றி நிம்மதியாக வாழும் உரிமை அந்நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசியலமைப்பின் 14 (1) (C) பிரிவுக்கு அமைய இதனை இவ்வாறு குறிப்பிட முடியும். "ஒவ்வொரு குடிமகனுக்கும் இலங்கைக்குள் நடமாடுவதற்கும் விருப்பமான இடத்தில் வசிப்பதற்கும் சுதந்திரம் உண்டு". 2022 மே 9ஆம் திகதியன்று, குரோத அரசியலால் சூழப்பட்டவர்களும், சில வன்முறைப் போராட்டக்காரர்களும் திட்டமிட்ட வகையில், நுணுக்கமான முறையில் செயற்பட்டு இந்த நாட்டின் அடிப்படை மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் எரித்தனர். இதன் ஊடாக அவர்கள் இந்நாட்டின் நற்பெயருக்கு உலக வரலாற்றில் பாரிய கறுப்பு கறையை ஏற்படுத்தினார்கள். அரசியலமைப்பு, நிறைவேற்று அதிகாரம் மற்றும் நீதிமன்றம் ஆகிய மூன்று தூண்களில் ஒட்டுமொத்த சமூகத்தின் நல்வாழ்வும் தங்கி இருக்கிறது. பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளுக்கு நாட்டு குடிமக்களுக்கு உரித்தான அடிப்படை உரிமைகளுக்கு மேலதிகமாக விசேட வரப்பிரசாதங்கள், சலுகைகள் உலக பாராளுமன்ற முறையினால் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் மே ஒன்பதாம் திகதி இந்த நாட்டில் என்ன நடந்தது? பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஆளும் கட்சியின் அப்பாவியான மக்கள் பிரதிநிதி ஒருவரையும், அவரது மெய்ப் பாதுகாவலரையும் ஏராளமானவர்கள் ஒன்று சேர்ந்து பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கி கொடூரமாக கொலை செய்தனர். அது மாத்திரமல்ல அவர்களது சடலத்திற்கும் கூட பல மணி நேரம் சித்திரவதை செய்தார்கள். அன்று பன்னிரண்டு மணி நேரத்திற்குள் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 70 மக்கள் பிரதிநிதிகளின் வீடுகளை உடைத்து எரித்து அழித்தார்கள். உலக பாராளுமன்ற வரலாற்றில் இவ்வாறான பேரழிவு இடம் பெற்ற, பாராளுமன்ற ஜனநாயகம் கொண்ட ஒரே நாடாக இலங்கையை மாற்றி அழிக்கவே முடியாத கறுப்பு கறையை வரலாற்றில் சேர்த்துள்ளார்கள்.



படங்கள்: கயான் புஷ்பிக



ஏதேனும் குற்றங்கள், தவறுகளைச் செய்த குடிமகனாக இருந்தாலும் நீதியை நிலைநாட்டி அவருக்கு சட்டத்தினால் தண்டனை வழங்கப்பட வேண்டுமே தவிர, சமூகத்தின் நிராயுதபாணிகளான அப்பாவி மக்களைத் தண்டிக்கும் அதிகாரம் கொலைகார குண்டர் குழுவிற்கு இல்லை. பாகிஸ்தானில் தொழிற்சாலை ஒன்றில் முகாமையாளராக பணியாற்றிய இலங்கையைச் சார்ந்த ஒருவர் அங்கு கும்பல் ஒன்றினால் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் பாகிஸ்தான் அரசு தலைவரான இம்ரான்கான், அந்தச் சம்பவத்தால் பாகிஸ்தானுக்கு அவப்பெயர் ஏற்படுவதைத் தடுப்பதற்காக சந்தேக நபர்கள் அனைவரையும் சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, வெளிப்படையான நீதி நடைமுறை மூலம் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதித்தார். எனினும் நடுவீதியில் வைத்து மனிதாபிமானமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அத்துகோரலவின் வழக்கு விசாரணையைக் கூட துரிதப்படுத்தி விசேட நீதிமன்றத்தின் கீழ் கொண்டு வருவதற்கான வாய்ப்பு இலங்கை பாராளுமன்றத்திற்கு இல்லை என்பதையிட்டு நான் மிகவும் வேதனை அடைகிறேன்" என அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அனுதாபத்துடன் தெரிவித்தார்.



மே 9ம் திகதியன்று கலவரக்காரர்கள் தீ வைத்து அழிக்க முயன்ற சொத்துக்களிடையே நுகேகொடை, ஜம்புகஸ் மாவத்தையில் அமைந்துள்ள அமைச்சருக்கு சொந்தமான வீடு, அதற்கு அருகாமையில் பாலர் பாடசாலையை நடத்திச்சென்ற அமைச்சரின் மூத்த மகனுக்கு சொந்தமான வீடு மற்றும் கார் உள்ளிட்ட வாகனங்களும் அடங்கும். சுமார் 45 முதல் 50 இளைஞர், யுவதிகளைக் கொண்ட குழுவினரும், வேறு இனம் தெரியாத ஏராளமானவர்களும் இந்த வன்முறை அழிப்புக்காக வந்திருந்ததோடு, ஏதோ காரணத்திற்காக முழுமையாகவே அந்த உடைமைகளை அழிப்பதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை. எனினும் அவர்களது வன்முறைச் செயற்பாடுகள் அமைச்சரின் உள்ளத்தில் பெரும் வேதனையை ஏற்படுத்தியது. காரணம் பந்துல குணவர்தன என்பவர் வெறுமனே ஒரு மக்கள் பிரதிநிதி மட்டுமல்ல, இரண்டரை தசாப்தங்களுக்கும் மேலாக இந்நாட்டின் பிள்ளைகளுக்கு அறிவைப் புகட்டிவரும் புகழ் பெற்ற பொருளாதார போதகரும் சிறந்த ஆசிரியரும் ஆவார். ஒரு அரசியல்வாதியாக கிடைத்த அனுபவங்களை விடவும் அவர் இன்றும் மகிழ்ச்சி அடைவது ஆசிரியராக கிடைத்த ஆத்ம திருப்தியிலாகும்.

""இரண்டரை தசாப்தங்களாக, நாள் முழுவதும் மிகுந்த அர்ப்பணிப்புடனும் கடின உழைப்புடனும் இளம் சந்ததியினருக்கு வாழ்க்கையை கட்டியெழுப்ப சரியான வழிகாட்டலை வழங்கினேன். அந்த கடந்த காலத்தை திரும்பிப் பார்க்கும்போது, எனது தனிப்பட்ட திறன்கள், திறமைகள் மற்றும் ஆக்கபூர்வமான கற்பித்தல் முறை மூலம், பல பயனுள்ள மனித வளங்களை நாட்டிற்கு வழங்க முடிந்திருப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களிடையே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர்கள், தேசிய பல்கலைக்கழக உப வேந்தர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், முதலமைச்சர்கள், நீதிபதிகள் மற்றும் கலைஞர்களும் உள்ளனர். 225 பாராளுமன்ற உறுப்பினர்களிடையே எனது சொந்த ஆற்றலைக் கொண்டு இவ்வாறான பெறுமதிமிக்க மனித வளங்களை நாட்டிற்கு வழங்கிய என்னை, கடந்த மே மாதம் ஒன்பதாம் திகதி எனது வீட்டினுள்ளே வைத்து தீயிட்டுக் கொளுத்தி என்னை கொலை செய்ய முயன்றது நியாயமானது தானா என்பதை அந்த செயற்பாடுகளுடன் தொடர்புடைய மாணவர்கள் தமது மனசாட்சியிடம் கேட்டுப் பார்க்க வேண்டும்"

அமைச்சர் பந்துல குணவர்தன ஒரு எழுத்தாளருமாவார். பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இதுவரை சுமார் 55 புத்தகங்களை எழுதியுள்ளார். பல்வேறு விஷயங்களைப் பற்றி நிறைய வாசித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டுவரும் அவரது வீட்டில் பல மதிப்புமிக்க புத்தகங்களைக் கொண்ட ஒரு பெரிய நூலகமும் உள்ளது.



"காட்டுமிராண்டித்தனமான மனிதர்களால் அன்று எனது வீடு எரிக்கப்பட்டபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பெறுமதியான நூலகத்தைப் போன்று எனது இந்த நூலகமும் முழுமையாக அழிந்து போயிருக்கும். புத்தகங்களின் பெறுமதியை ஒருபோதும் பணத்தை கொண்டு மதிப்பிட முடியாது. நான் மரணித்த பின் இந்த நூலகத்தை நான் கல்வி கற்ற ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு வழங்கி விடுமாறு நான் கூறியிருக்கின்றேன். எவ்வாறாயினும் எனது இந்த நூலகத்தை தீயிட்டு எரிக்காமல் விட்டு வைத்ததற்காக வன்முறையில் ஈடுபட்ட மாணவத் தலைவர்களுக்கு நான் நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்".

அமைச்சர் பந்துல கல்வி அமைச்சராகச் செயற்பட்ட சமயத்தில் எதிர்கால சந்ததியினருக்காக பாரிய மாற்றங்களை செய்வதற்கும் பங்களிப்பு செய்தார். கணித பாடத்தில் சித்தி அடையாதவர்களும் உயர்தரம் கற்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல், உயர் தரத்திற்கான பாடங்களுக்காக பல விடயங்களைக் கொண்ட தொழில்நுட்ப பாடத்தை அறிமுகப்படுத்தல், 1000 தொழில்நுட்ப ஆய்வுக்கூடங்கள் ஆரம்பித்தல், 251 தொழில்நுட்ப பீடங்களை ஆரம்பித்தல் மற்றும் பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப பீடங்களை நிறுவுவதும் அவற்றுள் முக்கியமானவைகளாகும். அது மாத்திரமின்றி கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் அவரது பிறந்த தினத்தில் தனது சொந்த நிதியிலிருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் செலவு செய்து தொழில்நுட்பத்தை கற்கும் மாணவர்களுக்கு புலமைப் பரிசினை வழங்கும் நோக்கில் "பந்து புலமைப் பரிசில் நிதிய" த்தினை உருவாக்கியுள்ளார். தெற்காசியாவின் மிகப் பெரிய இடைநிலைப் பாடசாலையாகக் கருதப்படும் ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி மற்றும் மாத்தறை மஹிந்த ராஜபக்ஷ கல்லூரிகளை நிறுவி அபிவிருத்தி செய்த பெருமை கலாநிதி பந்துல குணவர்தனவையே சாரும்.

"நாட்டின் எதிர்காலத்திற்காக திறமையான பிள்ளைகளை உருவாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இந்த விடயங்கள் தொடர்பில் நான் மிகவும் திருப்தியடைகிறேன். எனினும் எனக்குள்ள பிரச்சினை யாதெனில் இவ்வாறான சிந்தனைகளைக் கொண்ட எங்களைப் போன்றவர்களை அழிக்க முற்படும் அரசியல் இருக்குமானால், அதற்குத் தலைமைத்துவத்தை வழங்குபவர்கள் புதிதாக எதையும் செய்ய முடியாத, எவ்வித செயன்முறை ஆற்றலுமில்லாத குரோத மனப்பாங்கு கொண்டவர்களே அன்றி, அவர்களால் சமூக முன்னேற்றத்திற்கு எவ்வித பங்களிப்பையும் செய்ய முடியாது"

"இந்த வீடு வளவுகள் காணிகள் அனைத்தும் நான் மக்கள் பிரதிநிதியாக ஆகுவதற்கு முன்னரே மிகவும் நியாயமான முறையில் உழைத்து வாங்கியவைகளாகும். நாட்டில் நன்கு அறியப்பட்ட பொருளியல் பாட ஆசிரியராகவும், திரைப்பட தயாரிப்பாளராகவும் இருந்த நான், திருமணமாகி எனது மனைவி தமாராவை அழைத்து வருவதற்காகவே இந்த வீட்டைக் கட்டினேன். எனது இரண்டு மகன்களும் மூன்று மகளும் பிறந்தது வளர்ந்ததும், பாடசாலைகள் பல்கலைக்கழகத்திற்குச் சென்றதும் இந்த வீட்டிலிருந்தேயாகும். இதுதான் எமது குடும்பத்தின் வதிவிடம். யுத்த சமயத்தில் நாட்டுக்காகப் போராடிய படை வீரர்களுக்காக அமைக்கப்பட்ட "நமக்காக நாம்" என்ற நிதியத்திற்கு பாராளுமன்ற உறுப்பினருக்கான சம்பளத்தை வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர் நான். அதேபோன்று எனது தாயின் மரணத்திற்குப் பின்னர் நான் எனது முழு பாராளுமன்ற உறுப்பினருக்கான சம்பளத்தையும் "எங்களின் தாய்" எனும் சமூக மேம்பாட்டு நிதியத்திற்கு வழங்கினேன். முக்கியமான பல்வேறு அமைச்சுக்களுக்கு பொறுப்பான அமைச்சுப் பதவிகளை நான் வகித்தாலும் இன்று வரைக்கும் ஒரு போதும் அரசாங்க உத்தியோகபூர்வ இல்லங்களை நான் பயன்படுத்தியதில்லை. உத்தியோகபூர்வ வீட்டுக்கான வாடகையோ, மின்சாரம் நீர் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளையோ நான் பெறவில்லை. நான் எப்போதும் எனது அமைச்சுப் பணிகளைச் செய்தது நான் கட்டிய எனது வீட்டிலிருந்தாகும். பாதுகாப்புடன் கூடிய அமைச்சு இல்லத்தில் நான் அன்று இருந்திருந்தால் சிலவேளை எனது இந்த வீட்டை எரித்திருக்க மாட்டார்கள். அரசாங்கத்திலிருந்து கிடைக்கக்கூடிய வரப்பிரசாதங்கள் சலுகைகளைப் பெறாமல் தனது வீட்டில் வாழ்வது வீட்டை தீயிட்டு எரிப்பதற்குரிய குற்றமா என்ற கேள்வி எனக்குள் இருக்கிறது.

அதேபோன்று வன்முறையாளர்கள் மக்கள் பிரதிநிதிகளான எமது சொந்த உடைமைகளை மாத்திரமின்றி எமக்குச் சொந்தமில்லாத வேறு உடைமைகளையும் கூட தேடிச் சென்று அழிப்பதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். நான் பாராளுமன்ற உறுப்பினராவதற்கு முன்னர் மஹரகம நகருக்கு அருகில் விலைக்கு வாங்கிய ஒன்றரை ஏக்கர் காணியை முக்கிய நிறுவனம் ஒன்றுக்கு வர்த்தக நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்காக நீண்ட கால குத்தகைக்கு வழங்கி இருக்கிறேன். அந்த இடம் எனக்கு சொந்தமாக இருந்தாலும் அந்த வியாபார நிலையம் என்னுடையது அல்ல. என்றாலும் போராட்டக்காரர்கள் மே மாதம் ஒன்பதாம் திகதி அந்த வியாபார நிலையத்தையும் தீயிட முயற்சி செய்துள்ளார்கள். நாம் அரசியலில் இல்லாமல் உழைத்துக் கொண்ட சொத்துக்களையும் விட்டு வைக்காதளவுக்கு குரோதத்துடனான வெறுப்பு மனநிலையைக் கொண்டவர்கள் அவர்கள்.

நான் பல்வேறு அமைச்சுப் பொறுப்புக்களை வகித்தாலும் ஒரு போதும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தோ அல்லது ஊழல் மோசடிகள், திருட்டுக்களிலோ ஈடுபட்டவனல்ல. நான் அல்லது எனது குடும்பத்தைச் சேர்ந்த எவரோ இவ்வாறான விடயங்களில் தொடர்பு பட்டுள்ளார்கள் என்பதை நிரூபித்தால் அதற்கு அடுத்த நாளே நான் எனது அமைச்சுப் பதவியிலிருந்து மாத்திரமின்றி அரசியலிலிருந்தும் நிரந்தரமாகவே விலகி விடுவேன் என்பதை எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் நான் தொடர்ந்து கூறி வருகிறேன். வணிக நிர்வாகத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பட்டதாரி, கலாநிதிப் பட்டம் பெற்ற ஒருவர், பிரபல ஆசிரியர், திரைப்படத் தயாரிப்பாளரான நான் அரசியலில் ஈடுபடாமல் இருந்திருந்தால் நாட்டின் தலைசிறந்த கோடீஸ்வரர்களில் ஒருவராக ஆகியிருப்பேன்".

என்றாலும் அரசியலால் மனித நேயமும் மனித நேயத்தின் பெறுமதியும் இல்லாமல் போகுமானால், அத்தகைய அரசியலும் அரசியல்வாதிகளும் ஒரு நாட்டிற்கு தேவையில்லை என்பது அமைச்சர் பந்துல குணவர்தனவின் நம்பிக்கையாகும்.

"நான் நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தக்கூடிய விடயங்களுக்கு பங்களிப்பு செய்யவில்லை. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மதிக்கப்படும் எம்மைப் போன்ற மக்கள் பிரதிநிதிகளை எரித்துக்கொலை செய்ய வேண்டும் என நினைத்துச் செயற்படும் மக்களால்தானா பாராளுமன்றம் நிரம்ப வேண்டும் என்பதை இந்நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும். 1977க்கு முன்னர் இந்த நாட்டில் முக்கியமான மனிதர்களை உள்ளடக்கிய அறிவொளி அரசியல் இருந்தாலும், துரதிர்ஷ்டவசமாக வடக்கு மற்றும் தெற்கில் இடம் பெற்ற ஆயுதம் ஏந்திய வன்முறை கொலைகார அரசியல் கலாசாரம், தார்மீகத்தின் சரிவு மற்றும் மனிதாபிமானத்தின் கடுமையான சரிவும் ஏற்பட்டிருக்கின்றது. இது இந்த கடுமையான பொருளாதார நெருக்கடியை விடவும் கடுமையான நெருக்கடியாகும். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடிந்தாலும், நாட்டு மக்களால் அச்சமின்றி சந்தேகம் இன்றி தமது வீடுகளில் சுதந்திரமாக வாழ முடியாத நிலை உள்ளது. குடும்ப வன்முறை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பும் நாம் செய்ய வேண்டிய மாபெரும் தேசியக் கடமையும் பொறுப்பும் யாதெனில் அரசியல், அரசியல் அல்லாத எவ்வித வன்முறைகளுமற்ற சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பதாகும்.

சுரேகா நில்மினி இலங்கோன்
தமிழில் – எம்.எஸ். முஸப்பிர்

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# குறைவடையும் பணவீக்கத்தின் நன்மைகள் நுகர்வோரை சென்றடையுமா?

**இலங்கையில் பணவீக்கம் குறைவடைந்து செல்வதாக தொகை மதிப்புப் புள்ளிவிபரத்திணைக்களம் கூறுகிறது. எரிபொருள் விலைகளிலும் ஆங்காங்கே சிறிய விலைக்குறைப்புகள் இடம் பெறுவதைக்காண முடிகிறது. சந்தையிலே விற்கப்படுகின்ற அரிசி, சீனி போன்ற ஒருசில பொருள்களின் விலைகளும் சற்று குறைவடைந்திருக்கிறது. 810 ரூபாவுக்கு விற்கப்பட்ட டின் மீன் அண்மையில் பாராளுமன்ற சுற்று வீதியில் உள்ள ஓரிடத்தில் குவிக்கப்பட்டு 500 ரூபா விலையில் விற்கப்பட்டதைக்காண முடிந்தது. குருணாகல் மாவட்டத்தில் உள்ள ஒரு கடையில் ஒரு மீன் டின் 390 ரூபாவுக்கு விற்கப்படுமென அறிவித்தல் காணப்பட்டது. கொழும்பில் உள்ள பல்பொருள் அங்காடிகளில் இன்னமும் டின் மீனுக்கு 810 ரூபா விலை குறிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.**

உண்மையிலேயே பணவீக்கம் குறைவடைந்து உணவுப் பொருள் விலைகள் குறைவடைந்திருக்குமாயின் அதன் உடனடி நன்மைகள் நுகர்வோரைச் சென்றடைவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். வெறுமனே சதொச நிறுவனத்தில் குறைந்த விலையில் கிடைக்கும் என அறிவிப்பது மட்டும் போதாது. எல்லா இடங்களிலும் நியாயமான விலையில் பொருட்கள் மக்களுக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. விலை அதிகரிக்கும் போது உடனடியாக அதை நுகர்வோர் மீது சுமத்தும் வியாபாரிகள் பலர் விலை குறைவடைவதன் பயனை உடனடியாக நுகர்வோருக்குத் தர முன்வருவதில்லை. எனவே அரச தலையீடு இவ்விடயத்தில் மிகவும் முக்கியமானது.

கடந்த காலங்களில் மருந்துப் பொருள்களின் விலைகள் இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளதுடன் மருத்துவ சேவைகளின் கட்டணங்களும் மிகவுயர்ந்தள்ளன. விலை கூடினாலும் கட்டாயம் நுகர்ந்தே ஆகவேண்டிய பண்டங்கள் இவை. எனவே இவற்றிற்கு தமது விருப்பப்படி விலை அறவிடக்கூடிய வல்லமை இவற்றை விற்பவர்களுக்கு உண்டு. இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டுவருகின்ற போதிலும் நோயாளிகள் வெளியிலிருந்து மருந்துகளையும் மருத்துவ உபகரணங்களையும் மருத்துவ சேவைகளையும் பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அவற்றின் விலைகள் எகிறிச் செல்கின்ற நிலையில் மக்களில் பலர் உரிய மருத்துவ பராமரிப்பின்றி அல்லலுறும் நிலைக்கும் காப்பாற்றப்படக்கூடிய பலர் இறக்கும் நிலைக்கும் தள்ளப் படலாம்.

அறம் சார்ந்த கடப்பாடு உள்ள அரசாங்கங்கள் மக்களின் மருத்துவ தேவைகளை ஈடு செய்ய வேண்டியது கடமையாகும். குறைந்த பட்சம் மருந்துப் பொருள்களின் விலைகள் தொடர்பிலும் மருத்துவ சேவைகளின் விலைகள் தொடர்பிலும் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியது அவசியமாகும். அது மட்டுமன்றி அண்மைய அரசாங்கக் கொள்கைகள் காரணமாக மருத்துவர்களில் அதிக எண்ணிக்கையிலானோர் ஏற்கெனவே நாட்டை விட்டு வெளியேறி விட்டனர். இன்னும் பலர் வெளியேறக் காத்திருக்கின்றனர். இது எதிர் காலத்தில் மருத்துவத்துறையில் நெருக்கடிகளை மேலும் தீவிரப்படுத்தக் கூடும். தடைகளையும் கட்டுப்பாடுகளையும் போட்டு இத்தகைய வெளியேற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாது. மேற்படிப்புக்காக செல்லும் அரச உத்தியோகத்தர்கள் வைத்துச் செல்ல வேண்டிய பிணைப்பணத்தின் அளவு பல மில்லியன்களாக (சுமார் அறுபது மில்லியன்கள் வரையில்) அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு புறம் அத்தகைய உயர் தொகைகளுக்கு பிணைநிற்கக் கூடிய நபர்களைத் தேடுவது கடினம். மறுபுறம் அவ்வளவு பெரிய தொகையை பிணையாக வைத்துவிட்டு செல்ல வேண்டுமா என்ற வினா மறுபுறம் மேற்படிப்பை முடித்த பின் அந்த நாட்டிலேயே வாழ்வதற்கான வேலை செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கும் சூழலில், இப்படி உயர்ந்த பிணைகளை வைத்து இங்கு திரும்பி வரத்தான் வேண்டுமா என்ற கேள்வி எழும் நிலையில் உத்தியோகத்தை இராஜநாமா செய்து விட்டு நாட்டை விட்டு வெளியேறுவதே பகுத்தறிவான நடவடிக்கையாக அமைகிறது.

இலவசக் கல்வியால் நன்மை பெற்றமை நாட்டுப்பற்று போன்ற உணர்வு சார்ந்த விடயங்கள் எல்லாம் ஒரு கட்டத்துக்கு மேல் எடுபடாது. இலங்கை மத்திய வங்கியிலிருந்து உயர்கல்விக்காக அண்மையில் வாய்ப்புப் பெற்ற சிலர் பிணைக் கட்டணத்தைத் தாங்க முடியாமல் தமது பதவிகளைத் துறந்து உயர்கல்விக்குச் சென்றுள்ளனர். பல்கலைக் கழகங்களில் உள்ளவர்களும் அதையே செய்கின்றனர். வெளிநாடுகளில் அவர்களது எதிர் கால வாழ்க்கைக்கான வாய்ப்புகள் மிகப் பிரகாசமாக இருக்கும் நிலையில் உத்தியோகத்தை உதறிவிட்டுச் செல்வது பகுத்தறிவற்ற முடிவாக இருக்காது.

நாட்டிலிருந்து அல்லல் படுவதைவிட தமது அறிவையும் அனுபவத்தையும் சிறப்பாகப் பயன் படுத்தத்தக்க ஒரு நாட்டிற்குப் புலம் பெயர்ந்து செல்வது பிழையான தெரிவாகாது.

இத்தகைய குடியகல்வுகளை தடுத்த நிறுத்துவது இப்போதைய நிலையில் சாத்தியமானதல்ல. பொதுவாக இலங்கையில் உள்ள எல்லாக் குடும்பங்களும் குறைந்தபட்சம் தமது குடும்பத்தில் ஒரு உறுப்பினரையாவது வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதில் கவனம் செலுத்தியுள்ளமையைக் காண முடிகிறது.

பொதுவாக ஒரு நாட்டின் கல்விகற்ற புலமைசார் சமூகமும் தொழில் சார் வல்லமை கொண்டவர்களும் மிகப்பெரிய சொத்தாகவும் மிக அரிய வளமாகவும் கருதப்படுகிறது. அத்தகைய வளத்தை எப்பாடுபட்டேனும் பெற்றுக் கொள்ள அதன் அருமை தெரிந்த நாடுகள் முனைப்பாக முயற்சிக்கின்றன. பல்வேறு ஊக்குவிப்புகளை வழங்கி நாட்டுக்குள் அவர்களை வரவழைக்க முயற்சிக்கின்றன. குறிப்பாக அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, கனடா போன்ற நாடுகள் அவர்களை கவர்ந்திழுக்கின்றன.

இலங்கையோ இத்தகையவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அதன் மூலம் டொலர் உழைப்பதிலேயே முனைப்பாக இருப்பதைக்காண முடிகிறது. இலங்கையில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதியக் கொள்கை காரணமாக ஒரே தடவையில் 35 ஆயிரம் பேர்வரையில் ஓய்வு பெற்றதால் புகையிரதப் போக்குவரத்து போன்ற முக்கிய சேவைகளை வழமை போல மேற்கொள்வதில் சிரமங்களை எதிர் நோக்க நேர்ந்துள்ளது.

இலங்கையின் அரசசேவையில் மிக அதிகளவு ஊழியர்கள் சேவையில் உள்ளனர், என்பது எந்தளவு உண்மையோ அதேபோல் சில துறைகளில் பற்றாக் குறையாகவும் உள்ளனர்.

ஆகவே ஓய்வு பெறுகை போன்றவற்றை மேற்கொள்ளும் போது உரிய முறையில் அவற்றை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாகும்.




**உடனடி நன்மைகள் நுகர்வேரைச் சென்றடைவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்.**

கெனொவின் ஹொடெல்ஸ் எண்ட் ஸ்பாஸ் (பிரைவட்) லிமிட்டட்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் முழுமையாக இணைந்த நிறுவனமான கெனொவின் ஹொடெல்ஸ் என்ட் ஸ்பாஸ் (பிரைவேட்) லிமிட்டட் இற்கு சொந்தமான தெற்கு அதிவேக வீதியில் வெலிபென்ன கெனொவின் சேவை நிலையத்தில் சில வர்த்தக கூடங்கள் வெற்றிடமாக உள்ளன.

உங்களது வியாபாரத்தை கெனொவின் சேவை இல்லத்தில் நடத்திச் செல்வதற்கு என்னுவதாயின் கீழ்க்காணும் தகவல்களுடன் உங்களது விண்ணப்பங்களை 2023 பெப்ரவரி 15ம் திகதிக்கு முன் எமக்கு அனுப்புங்கள்

- வியாபாரத்தின் தன்மை
- வியாபார பதிவுச் சான்றிதழ்

கெனொவின் ஹொடேல்ஸ் என்ட் ஸ்பாஸ் (பிரைவட்) லிமிட்டட்
இல. 46/46, மூன்றாம் மாடி, கிறீன் லங்கா கட்டிடம், நவம் மாவத்த, கொழும்பு-02

மின்னஞ்சல் முகவரி - admin@canowin.lk

# 2023 வருடப்பிறப்பில் சர்வமத ஆராதனைகளுடன் HNBயின் செயற்பாடுகள் ஆரம்பம்














இலங்கையின் முன்னணி தனியார்துறை வங்கிகளில் ஒன்றான HNB வங்கி, 2023 புது வருடத்துக்கான தமது பணிகளை சர்வமத ஆராதனைகளுடன் அதன் வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு ஆசிகளையும் நன்றிகளையும் தெரிவித்து சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தது. HNB தலைமையக அலுவலகத்தில் HNB தலைவர் அருணி குணதிலக்க, HNB முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி ஜொனதன் அலஸ் மற்றும் HNB நிறைவேற்று பணிப்பாளர்/ பிரதான செயற்பாட்டு அதிகாரி டில்ஷான் ரொட்ரிகோ ஆகியோர் தலைமையில் புதிய வருடத்திற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்நிகழ்வில் வங்கியின் உயர்மட்ட முகாமையாளர்கள், நிறைவேற்று முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டனர். HNB இன் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி ஜொனதன் அலஸ் 2023ஆம் புது வருட வாழ்த்துக்களை கலந்து கொண்ட அனைவருக்கும் தெரிவித்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# எட்டு மணி நேர சேவை, ஐந்து நாள் கடமை மனப்பான்மையிலிருந்து விடுபடுங்கள்

## புதுவருட முதல்நாளில் ஊழியர்களுக்கு ஜனாதிபதியின் ஆலோசனை

'எட்டு மணி நேர சேவை. ஐந்து நாள் கடமை மனப்பான்மையிலிருந்து விடுபடுங்கள்" புது வருட முதல் நாளில் ஜனாதிபதி செயலக ஊழியர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கிய ஆலோசனை இதுவாகும். சம்பிரதாயபூர்வமான அரச சேவை உறுதி மொழியை எடுத்துக் கொண்ட பின்னர், அவர் தனது ஊழியர்களின் முன்னிலையில் உரையாற்றி முழு நாட்டுக்கும் இச் செய்தியை வழங்கினார்.

புத்தாண்டின் முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை என்பதால், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் கடமைக்கு சமூகமளிக்கும் முதல் நாள் ஜனவரி இரண்டாம் திகதியாகும். ஜனாதிபதி செயலகத்தில் தேசியக் கொடியை ஏற்றிய பின்னர் ஜனாதிபதி ரணில் ஜனாதிபதி செயலக நுழைவாயிலுக்கு முன்பாக உள்ள படிக்கட்டுகளில் நின்று தனது ஊழியர்களுக்கு மத்தியில் உரையாற்றினார்.

சில நிமிடங்கள் உரை நிகழ்த்திவிட்டு அவர் தனது அலுவலகப் பணிகளைத் தொடங்கச் சென்றார். சம்பிரதாயபூர்வமாக, ஊழியர்களுக்காக இரண்டு இடங்களில் புத்தாண்டு உணவு மேசைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

"சேர், நீங்கள் சாப்பாட்டு மேசையைத் திறந்துவைக்கும் வரை அனைவரும் காத்திருக்கின்றனர்" என்று பிரத்தியேக செயலாளர் செண்ட்ரா பெரேரா ஜனாதிபதிக்கு அறிவித்ததையடுத்து, அவர் உடனடியாக அங்கு சென்றார்.

அன்றைய தினம் பொதுவான அழைப்பு விடுக்கப்பட்ட இடமாக ஜனாதிபதி அலுவலகம் இருந்ததால், ஜனாதிபதி மற்றும் ஏனைய தலைவர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்க ஏராளமானோர் அங்கு வந்திருந்தனர். ஜனாதிபதி செயலகத்தின் விருந்தினர் சாப்பாட்டு அறையில் தயார் செய்யப்பட்டிருந்த சாப்பாட்டு மேசையை நோக்கி ஜனாதிபதி சென்ற வேளையில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க கட்டடத்திற்கு வெளியே தயார் செய்யப்பட்டிருந்த மற்றைய புத்தாண்டு உணவு மேசையை நோக்கிச் சென்றார்.

ஜனாதிபதியின் செயலாளர் அங்கு சென்று கொண்டிருந்த போது, வழியில் சந்தித்த அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக கருணாரத்ன உள்ளிட்ட குழுவினரை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றார். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஊழியர்களை அங்கு உணவருந்த அழைத்ததுடன் அவரும் அங்கு உணவருந்தினார்.

"பல நாட்கள் கழித்து, ஜனாதிபதியின் செயலாளர் ஒருவர் எங்களுடன் சாப்பிடுகின்றார்." என்று அங்கிருந்த ஒரு சிரேஷ்ட ஊழியர் ஒருவர், இன்னொரு ஊழியரிடம் கூறியதோடு வரலாற்றையும் நினைவுபடுத்தினார்.

ஜனாதிபதியின் செயலாளர் ஊழியர்களுடன் சாப்பிட்டு முடித்துவிட்டு மீண்டும் விருந்தினர்களின் சாப்பாட்டு அறைக்குச் சென்றபோதும், அங்கு நிகழ்வுகள் முடிவடைந்திருக்கவில்லை. ஜனாதிபதி ரணில் அமர்ந்திருந்த மேசையைச் சுற்றி ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சிந்தக கருணாரத்ன ஆகியோர் அமர்ந்திருந்ததுடன், ஜனாதிபதியின் செயலாளரும் அங்கு அமர்ந்து கொண்டார்.

அவர்கள் சிநேகபூர்வ கலந்துரையாடலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது, ஊழியர்களும் விருந்தினர்களும் ஜனாதிபதிக்கும் ஏனையோருக்கும் வாழ்த்துகளைத் தெரிவிக்க வருகை தந்தனர். ஒரு குழுவினர் ஜனாதிபதியுடன் குழுவாகப் புகைப்படம் எடுத்தனர், மற்றவர்கள் செல்பி புகைப்படம் எடுத்துக்கொண்டனர். ஜனாதிபதியும் அங்கு நீண்ட நேரம் உரையாடி விட்டு தனது கடமைகளை ஆரம்பிப்பதற்காக தனது அலுவலகத்திற்குச் சென்றார்.

ஜனாதிபதிக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்க பெருமளவான அமைச்சர்களும் அங்கு வந்திருந்தனர். அன்று மாலை ஜனாதிபதிக்கு பழைய வெளிநாட்டு அரசியல் நண்பர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. பிரித்தானிய முன்னாள் பிரதமர் டேவிட் கெமரூன் தனது குடும்ப உறுப்பினர்களுடன் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருந்தார்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகை தந்த டேவிட் கெமரூனை ஜனாதிபதி அன்புடன் வரவேற்றார். டேவிட் கெமரூனுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் சர்வதேச விவகார பணிப்பாளர் தினுக் கொழம்பகே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் விடுமுறையைக் கழித்தது குறித்து அவரிடம் ஜனாதிபதி ரணில் முதலில் கேட்டார். "இலங்கை எனக்கு மிகவும் பிடித்த நாடு. அதனால் நான் எனது குடும்பத்துடன் சிறப்பான முறையில் விடுமுறையை கழித்தேன்."



என்று கேமரூன் பதிலளித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் முன்பிருந்த பொருளாதார நிலைமை குறித்து சாகல ரத்நாயக்க விளக்கமளித்தார். நெருக்கடி நிலைமையில் இருந்து நாட்டை மீட்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்காக ஜனாதிபதியை அவர் பாராட்டினார்.

கொழும்புத் துறைமுக நகருக்கு விஜயம் செய்திருந்த கெமரூன் , அது தொடர்பில் சாதகமாக கருத்துத் தெரிவித்தார். சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் மீணடும் தலைதூக்கும் கொவிட் தொற்றுநோய் குறித்தும் கருத்துத் தெரிவித்த அவர், இரசாயன உரம் இல்லாததால் விவசாயம் வீழ்ச்சியடைந்துள்ளமை குறித்தும் கருத்து வெளியிட்டார்.

கடன் மறுசீரமைப்புக்கு தன்னால் இயன்ற ஆதரவை வழங்குவதாகக் கூறிய முன்னாள் பிரதமர் கெமரூன், அரச நிறுவனங்களை மறுசீரமைத்தல் மற்றும் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டினார்.

இதேவேளை புது வருடத்தின் அமைச்சரவைக் கூட்டம் அன்று மாலை இடம்பெற்றதுடன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் கருத்துப் பரிமாறப்பட்டது. மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை இம்முறை அமைச்சரவையில் முன்வைக்கப்படாது என அமைச்சர் கஞ்சன தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை புத்தாண்டில் முதன்முறையாக பாதுகாப்புப் பிரதானிகள் ஜனாதிபதியை சந்தித்தனர். இதன் போது, நாட்டின் பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு குறித்து கலந்துரையாடப்பட்டது. ஜனாதிபதியினால் ஸ்தாபிக்கப்பட்ட போதைப் பொருள் தடுப்பு செயலணி மற்றும் அதன் செயற்பாடுகள் குறித்தும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அன்று பிற்பகல் ஜனாதிபதி ரணில், முன்னாள் பாப்பரசர் 16 ஆம் பெனடிக்ட்டின் மறைவுக்கு இரங்கல் தெரிவிப்பதற்காக கொழும்பில் உள்ள அப்போஸ்தலிக்க தூதரகத்திற்குச் சென்றார். அன்றைய தினம் ஜனாதிபதிக்கு கிடைத்த தொலைபேசி செய்தியில், நிதியமைச்சினால் வெளியிடப்பட்ட அறிவித்தலை மீறி மூன்று அரச நிறுவனங்கள் போனஸ் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலாபம் ஈட்டாத எந்த ஒரு அரச நிறுவனமும் போனஸ் வழங்கக் கூடாது என்று நிதி அமைச்சு அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் ஏனைய சட்டபூர்வ நிறுவனங்களுக்கு அறிவித்திருந்தது. இருந்த போதிலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை ஆகிய நிறுவனங்கள் போனஸ் செலுத்தியமை தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி ரணில், ஜனாதிபதியின் செயலாளருக்கு அறிவித்தார். ஆனால் மின்சார சபை போனஸ் வழங்கவில்லை என்று மீண்டும் தெரிவிக்கப்பட்டது.

"இது குறித்து உடனடியாக விளக்கமளிக்குமாறு மற்ற இரண்டு நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அறிவிக்கவும்" செயலாளர் சமனுக்கு ஜனாதிபதி ரணில் இவ்வாறு அறிவுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பொதுச் செயலாளர் புதன்கிழமை ஜனாதிபதியை சந்தித்தார்.

இந் நாட்டின் பொருளாதார மறுசீரமைப்புகள் மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது. நாட்டின் எதிர்காலத்திற்காக கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளமை குறித்தும் அவர் கருத்துத் தெரிவித்தார். இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் பொருளாதாரம் மற்றும் வணிக விவகாரங்களுக்கான இந்திய முதல் செயலாளர் கலாநிதி ராகேஷ் பாண்டே ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்ததுடன், இலங்கையில் திரவப் பாலை பிரபலப்படுத்த இந்திய அரசின் ஆதரவை வழங்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அன்று மாலை ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் குழுவைச் சந்தித்தார். எதிர்வரும் தேர்தல் குறித்து கட்சி தவிசாளர் வஜிர ஜனாபதிபதியிடம் கேட்டறிந்தார்.

"உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு எடுக்க இருக்கும் முடிவுக்காகக் காத்திருக்கிறேன். என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

"நாங்கள் வேட்புமனுக் குழுவை நியமித்து அடுத்த கட்டப் பணிகளை ஆரம்பிப்போம். உங்களின் தலைமையில் இந்த பணிகளை செய்வோம்." கட்சியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஷமல் தெரிவிக்கும்போது. ஜனாதிபதி யாரும் எதிர்பார்க்காத பதிலை அளித்தார்.

"இந்தத் தேர்தலில் நான் எந்தக் கட்சிப் பணிகளிலும் ஈடுபடப்போவதில்லை. கட்சியின் வேட்புமனுக்களை அங்கீகரிக்கும் செயற்குழுவின் தலைவர் பதவியில் மட்டுமே நான் தொடர்புபடுவேன். எனக்கு வேறு வேலை இருக்கிறது. நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப எனக்கு ஆணை கிடைத்துள்ளது. நீங்கள் தேர்தல் பிரசாரத்தைச் செய்யுங்கள்" என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

"தேர்தல் ஆணைக் குழுவுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தலைவர் ஒற்றைக் கருத்துடன் செயல்படுகிறார் என்று தகவல்" வஜிர மீண்டும் கூறினார். **(17 ஆம் பக்கம் பார்க்க)**

# 100 வீத பரீட்சை பெறுபேற்றைப் பெற்ற ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி

ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியானது தெற்காசியாவிலேயே மிகப் பெரிய இடைநிலை மாதிரிப் பாடசாலையாகும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் நடைமுறைப்படுத்திய மஹிந்த சிந்தனை அனைவருக்கும் திட்டத்தின் பிரகாரம் ஆயிரம் இடைநிலை பாடசாலைகளை ஆரம்பிக்கும் திட்டத்தின் கீழ் முதலாவது பாடசாலையாக ஹோமாகம பிடிபத்த பிரதேசத்தில் 26 ஏக்கர் நிலப்பரப்பில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையாகும். 2011 ஜனவரி 20ம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ கல்லூரிக்கு 11 வருடங்களேயான குறுகிய பயணத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சம்பவம் இந்த வருடம் நிகழ்ந்திருப்பது சாதாரண தரப் பரிட்சைக்கு இலங்கை பாடசாலைகளிலேயே அதிக மாணவர்களை தோற்றச்செய்தாகும். அண்மையில் இடம்பெற்ற சாதாரண தர பரீட்சைக்கு இலங்கையின் அனைத்து பாடசாலைகளையும் தாண்டி 763 என்ற அதிகமான மாணவர்களை முன்னிறுத்தியது மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி என்பதோடு, வரலாற்றில் முதற் தடவையாக நீண்ட வரலாற்றைக் கொண்ட பிரபலமான பாடசாலைகளையும் தாண்டி 100 வீத சித்தியைப் பெற்ற பாடசாலையாகவும் ஆகியிருக்கின்றது.

அப்போதைய கல்வி அமைச்சரான தற்போதைய ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவின் எண்ணக்கருவுக்கு அமைய அன்று ஆரம்பிக்கப்பட்ட தெற்காசியாவிலேயே மிகப்பெரும் இடைநிலை மாதிரி பாடசாலையான இப்பாடசாலையில் ஒவ்வொரு இணை வகுப்பிலும் 17 வகுப்பறைகள் வரை பராமரிக்க முடிந்துள்ளது. ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையின் வெட்டு புள்ளிக்கு அமைவாகவே நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக இந்தப் பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள். தற்போது சுமார் 6300க்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலையில் சுமார் 293 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றார்கள். அத்துடன் சுமார் 40க்கும் அதிகமான கல்விப் பணியாளர்களும் இங்கு பணியாற்றுகின்றார்கள். இணை வகுப்பறைகள் அதிகமானதன் காரணமாக மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்ததால் கல்லூரியின் நிர்வாகச் செயற்பாடும் தனித்துவமானதாகும்.

சிறப்பான கல்வி இலக்குகளை அடையும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, ஆரம்பத்தில் பிற்பகல் 3.30 மணி வரையும் பாடசாலையை நடாத்தி இந்நாட்டின் பாடசாலை கட்டமைப்பில் புதிய அனுபவத்தை ஏற்படுத்தியது. 2011ஆம் ஆண்டு கல்வித்துறையில் மதிப்பிற்குரியவராக விளங்கிய எச். என். டி சில்வா ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ பாடசாலையின் ஸ்தாபக அதிபரானார். 2015ம் ஆண்டிலிருந்து இன்று



வரைக்கும் தற்போதைய அதிபரான எம். ஆர். டி. கசுன் குணரத்ன பாடசாலைக்காகச் சிறப்பான செயற்பாடுகளைச் செய்து தினம் தினம் பாடசாலையை வெற்றி இலக்கை நோக்கி கொண்டு செல்கின்றார். இலங்கையில் முதலாவது ஸ்மார்ட் வகுப்பறை கொரிய அரசின் உதவியுடன் ஸ்தாபிக்கப்பட்டது மஹிந்த ராஜபக்ச கல்லூரியிலாகும். இந்தியாவின் தக்ரால் நிறுவனத்தின் உதவியாகக் கிடைத்த கணனி ஆய்வு கூடம், ஆங்கிலம் பேசும் மாணவர்களுக்கு கணனி ஆய்வு கூடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் போன்றன இந்நாட்டில் எந்த ஒரு பாடசாலையிலும் காண முடியாத வரப்பிரசாதங்களாகும்.

இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்கு அதிகூடிய மாணவர்களை முன்னிறுத்திய ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் 763 மாணவர்களும் சித்தி பெற்றதோடு 95 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் "ஏ" சித்தியையும், 94 மாணவர்கள் 8 பாடங்களில் "ஏ" சித்தியையும், 89 மாணவர்கள் ஏழு பாடங்களில் "ஏ" சித்தியையும் பெற்றுள்ளார்கள். மஹிந்த ராஜபக்ச கல்லூரியின் சிறப்பான பெறுபேற்றுக்கிடையே ஜப்பான் மொழிக்காகத் தோன்றிய 71 மாணவர்களும் சித்தியடைந்துள்ளதோடு, அவர்களுள் 15 பேர் "ஏ" சித்தியையும் பெற்றுள்ளார்கள். அதேபோன்று கொரிய மொழிப் பாடத்திற்கு தோற்றிய 73 மாணவர்களும் சித்தியடைந்துள்ளார்கள். இந்தப் பாடத்தில் ஒன்பது பேர் "ஏ" சித்திகளைப் பெற்றுள்ளார்கள். ஆங்கில மொழி மூலப் பிரிவில் 92 மாணவர்கள் தோற்றியதோடு, அவர்களுள் 17 மாணவர்கள் 9 பாடங்களிலும் "ஏ" சித்தியை பெற்றுள்ளார்கள். இப்பாடசாலையில் 17 சமமான வகுப்பறைகள் உள்ளன. கடந்த கொவிட் தொற்று காலத்தில் ஒன்லைன் மூலமான கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும், ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியின் 763 மாணவர்களுக்கும் ஒன்லைன் மூலமான கற்றல் இலகுவானதாக இருக்கவில்லை. இடைநிலை மாதிரி பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் சாதாரண தரப் பரீட்சைக்கு அதி கூடிய மாணவர்கள் தோற்றும் பாடசாலையாக இப்பாடசாலை இருப்பது சிறப்பம்சமாகும். இதனால் அதிபர் உட்பட ஆசிரியர்கள் இந்த ஒன்லைன் மூலமான கற்றல் நடவடிக்கைகளை மிகச் சிறப்பாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதோடு, இந்த வெற்றியின் கௌரவம் பாடசாலையின் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சேர வேண்டும் என கல்லூரி அதிபர் தெரிவித்தார். கொவிட் தொற்றின் காரணமாக சாதாரண தர மாணவர்களுக்கு வெளி நடவடிக்கைகள் விடுபட்டதோடு, மாணவர்களுக்கு அந்தச் சந்தர்ப்பத்தை மீண்டும் எந்த வகையிலேனும் பெற்றுக் கொடுப்பதற்கு பாடசாலை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

மஹிந்த ராஜபக்ஷ கல்லூரியில் 20 விதமான விளையாட்டுகள் உள்ளதோடு, 50க்கும் அதிகமான சங்கங்களும் செயற்படுகின்றன. இவை அனைத்தையும் மாணவர்களுக்கு வழங்குவதற்கும், விடுபட்டுப் போன விடயங்களை முழுமைப் படுத்துவதற்கும் வதிவிட முகாம்கள் பலமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டதோடு, அவை வெற்றியளித்துமுள்ளது. சாதாரண தரம் மாத்திரமன்றி உயர்தரத்தையும் இலக்காகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வதிவிட முகாமில் மாணவர்களுக்கு பாட விடயங்களைப் புரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் வேறுபட்ட அனுபவங்களின் ஊடாக வழங்கப்பட்டது. இதன் ஊடாக சாதாரண தரப் பரீட்சைக்கு முகம் கொடுக்க ஆயத்தமான மாணவர்களுக்கு கல்வியில் குதூகலத்துடனும் மகிழ்ச்சியுடனும் எதிர்பார்த்த இலக்கை அடைவதற்கான வாய்ப்பு கிடைத்ததோடு, பாடசாலை நண்பர் வட்டத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்பு கிடைத்தது.

இதற்கு மேலாக பாடசாலையின் வளங்கள் மற்றும் வாய்ப்புகளை கூடியவிரைவில் பயன்படுத்தி பரீட்சைக்கு





முகம்கொடுக்கும் மாணவர்களின் கற்றல் திறனை ஊக்குவிக்கும் வகையில் தனிப்பட்ட திறன், மனித திறன் அபிவிருத்தி நிபுணர்கள் பாடசாலைக்கு வரவழைக்கப்பட்டு விரிவுரைகள், கருத்தரங்குகள் ஆரம்பிக்கப்பட்டன. வீட்டுக்குள் அடைபட்டிருந்த மாணவர்களின் மனங்களை மாற்றும் வகையில் சிறப்பு கருத்தரங்குகள், சிந்தனைத் திறன்களை மேம்படுத்தும் செயலமர்வுகளை நடத்துவதன் மூலம் பரீட்சையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்த புரிதலை மாணவர்களுக்கு வழங்குவதற்கு அதிபர் உள்ளிட்ட முகாமைத்துவ குழுவிற்கு முடிந்தது. கடந்த காலங்களில் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் எந்த அளவுக்கு தவறவிடப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு சில நிமிடங்கள் வீதம் ஒன்று சேர்த்து புதிய காலை நேர வாசிப்பு நேரத்தை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது பரீட்சைக்கு மாத்திரமின்றி அறிவுள்ள சமூகத்தை நாட்டுக்கு வழங்குவதற்கு அது அத்தியாவசியமான விடயம் என்பதனாலாகும். இதன் மூலம் மாணவர்கள் எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் மாத்திரமின்றி சிந்திப்பதற்கான ஆற்றலை வளர்ப்பதற்கும் பெரும் உந்துசக்தியாக ஆகியது. இப்பாடசாலைக்கு பல்வேறு ஆற்றல்களை கொண்ட மாணவர்களைப் போன்று, பல்வேறு பொருளாதார சூழ்நிலைகளைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் கல்வி நடவடிக்கைகளுக்காக வருகின்றார்கள். இவர்கள் அனைவரும் மஹிந்த ராஜபக்ச கல்லூரியின் பிள்ளைகள் என்ற கருப்பொருளை முன்வைத்து, இவ்வாறான நிதி நெருக்கடியில் தவிக்கும் பிள்ளைகளுக்கு உதவுவதற்கு பாடசாலை முன்வந்தது. மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஜுக்கி தையல் இயந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தல், சீமெந்து கல் வெட்டும் இயந்திரத்தை பெற்றுக் கொடுத்தல் போன்றவற்றின் ஊடாக அந்த மாணவர்களின் பொருளாதார பிரச்சினைகளுக்கு கை கொடுப்பதற்கு பாடசாலையால் முடிந்தது. இதுவரைக்கும் 24 ஜுக்கி தையல் இயந்திரங்களையும், 12 சீமெந்து கல் வெட்டும் இயந்திரங்களையும் வழங்குவதற்கு கல்லூரி முகாமைத்துவத்தினால் முடிந்திருக்கிறது. கடந்த பரீட்சையில் உயர் சித்திகளைப் பெற்ற மாணவர்களும் இவர்களிடையே அடங்குகின்றார்கள். அதுமட்டுமல்லாமல், இதுபோன்ற சிரமங்களுக்கு உள்ளான ஏனைய மாணவர்களுக்கும் உதவுவதற்காக பாடசாலையின் 'சஹன செவன' திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. அன்றாடம் தேவையான உணவுகள், ஆடைகள், புத்தகக் கொப்பிகள் உள்ளடக்கியதாக இந்த நான்கு நிவாரண அறைகள் இப்பாடசாலையில் செயல்படுவதோடு, அவை தேவையான மாணவர்களுக்கு இலவசமாகவே பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புள்ளமை சிறப்பம்சமாகும். மாணவர்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் பாடசாலையின் மூலம் நிவர்த்தி செய்யப்படுவதால் மாணவர்கள் நிம்மதியாக பரீட்சைக்கு ஆயத்தமாக முடிகின்றது. நடைமுறை வாழ்க்கை அனுபவங்கள் மூலம் மாணவர்களின் கற்றல் மற்றும் கற்பித்தல் அனுபவத்தை வழங்குவதன் ஊடாக பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு திட்ட அடிப்படையிலான கல்வி கட்டாயமாகும். எல்லா வகுப்புகளிலும் திட்டத்தைச் செய்வது அத்தியாவசியமாகியது. இதன் மூலம் மாணவர்கள் பன்முக மற்றும் பன்முக அனுபவங்களைப் பெறுவதற்கு வாய்ப்பளித்தது. கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை, பசுமையான சூழலைக் கட்டியெழுப்புவதில் பாடசாலை பெரும் பங்காற்றியது. சுற்றாடலுக்கு மாணவர்களை பழக்கப்படுத்தி பாடசாலையின் எல்லா இடங்களிலும் மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்துவதற்கு பாடசாலை நிர்வாகம் கடுமையாக உழைத்தது.

இம்முறை சாதாரண தரப் பரீட்சையில் உயர் சித்தியைப் பெற்ற மாணவர்கள் தேசிய, சர்வதேச வெற்றிகளை பெற்றவர்களாகும். iNaturalist என்ற இணையதளத்தின் ஊடாக இந்தக் கல்லூரி மாணவர்களின் அறிவியல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதோடு, அவர்கள் இதன் மூலம் சிறப்பு மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இது இலங்கையில் முதல் தடவையாக மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இந்தப் பணியின் மற்றொரு முக்கிய மைல்கலாக அமைந்தது, பாடசாலையில் தலைமைத்துவத்திற்கு பழக்கப்பட்ட மாணவர்களைப் போன்று, தலைமைத்துவ சூழல் உருவாகியதுமாகும்.

பாடசாலை பயணத்தின் இந்த 11 வருட குறுகிய காலத்தில் முகம் கொடுத்த கஷ்டங்கள் ஏராளம். ஆரம்பம் அண்மையானது என்பதால் பாடசாலையில் முன்னேற்றத்திற்கு பழைய மாணவர் சங்கம் இல்லாமை பாரிய குறையாகும். இதன் காரணமாக அனைத்து செலவுகளையும் பல்வேறு தரப்பின் ஊடாக தேடிக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது. இவ்வாறான பல தடைகள் இருந்தாலும் மாணவர்களுக்கு பாடசாலையிலிருந்து கிடைக்க வேண்டிய கல்வி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பாடசாலையால் முடிந்துள்ளது. இந்தளவு பெரிய மாணவர்களை முகாமைத்துவம் செய்யும் அனைத்து கௌரவமும் அதிபருக்கும், ஊடகப் பிரிவுக்கு பொறுப்பான பிரதி அதிபர் டீ. டி. டீ. வீரக்கொடி, 10ம் வகுப்பு தலைமை ஆசிரியர் தொடம்பே சத்தாவிமல தேரர் மற்றும் 11ம் வகுப்பு தலைமை ஆசிரியர் ரஞ்சித் பிரேம்குமார உள்ளிட்ட ஆசிரியர் குழாத்துக்கே செல்ல வேண்டும்.

**சுபாஷினி ஜயரத்ன**
**தமிழில் எம்.எஸ். முஸப்பிர்**






# மக்களில் பலர் நாட்டில் அக்கறையின்றி சலுகைகளையே எதிர்பார்க்கின்றனர்!

**எமது மக்களில் பெரும்பாலானவர்கள் நாட்டைப் பற்றி கவலைப்படாமல், தங்களின் சலுகைகளைப் பற்றி மட்டுமே அக்கறைப்படுகிறார்கள். அரசியல்வாதிகளை விமர்சிப்போரும், கண்டிப்போரும் அதே மக்கள்தான் என்று கூறுகிறார் நீதி, சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ. எமக்கு வழங்கிய பேட்டியிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.**

**கேள்வி: உள்ளூராட்சித் தேர்தலை இனிமேலும் தாமதிக்காமல் நடத்த வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. உள்ளூராட்சித் தேர்தலை நடத்த இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளதா?**

பதில்: உண்மையில், உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது குறித்து அரசாங்கம் முடிவெடுக்க முடியாது என்று நினைக்கிறேன். சட்டத்தின் கீழ் அதனைச் செய்வதற்கான பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உள்ளது. அதனால்தான் நாங்கள் அதை சுயாதீன ஆணைக்குழு என்கிறோம். எனவே, அவர்கள் எப்படி முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும்.

**கேள்வி: தேர்தலில் வெற்றிபெற முடியாத நிலையில் உள்ளூராட்சித் தேர்தலை அரசாங்கம் வேண்டுமென்றே ஒத்திவைக்க முயற்சிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. உங்கள் கருத்து என்ன?**

பதில்: எனக்கு அவ்வாறு தோன்றவில்லை. வாக்காளர்கள் இலங்கைப் பிரஜைகள் அவர்கள் யாரையும் தேர்ந்தெடுக்கட்டும்! எங்களுக்குக் கவலையில்லை. நிச்சயமாக, எனக்கு தனிப்பட்ட அரசியல் கட்சி எதுவும் இல்லை. கட்சிகளை நடத்துபவர்கள் அதற்கான கவலைகளைக் கொண்டுள்ளனர். ஆனால் எப்படியாவது மக்கள் முடிவு செய்யட்டும். அவர்கள் விரும்பினால், அதே உறுப்பினர்களை மீண்டும் தேர்ந்தெடுக்கட்டும் அல்லது அவர்களை வெளியேற்ற விரும்பினால் வெளியேற்றட்டும். இம்முறை முடிவுகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் இருக்கும் என்பதும், பெரும்பாலான அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை மக்கள் நிராகரிப்பார்கள் என்பதும் எனது கருத்து.

## "அதே மக்களே அரசியல்வாதிகளை விமர்சிக்கின்றார்கள்"

**கேள்வி: தற்போதைய அரசியல் நெருக்கடிக்குப் பாராளுமன்றத் தேர்தலுக்கு செல்வதே ஒரே வழி என்று சிலர் கூறுகின்றனர். இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: இதில் இரண்டு பார்வைகள் உள்ளன. இரு தரப்பினரும் நியாயப்படுத்தக் கூடிய காரணங்கள் உள்ளன. எப்படியிருந்தாலும், இறுதியாக இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன. ஒன்று ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மார்ச் மாதத்திற்குப் பிறகு தீர்மானமொன்றை எடுக்க வேண்டும் அல்லது பாராளுமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அந்த இரு பிரிவினருக்கும் அவர்களின் உரிமைகள் உள்ளன. அவர்கள் விரும்பும் வழியில் அவர்கள் பயன்படுத்தலாம்.

**கேள்வி: நாட்டின் அரசியல்வாதிகளின் நடத்தை குறித்து மக்கள் மத்தியில் அதிருப்தி அதிகரித்து வரும் நிலையில், மேலும் படித்த அறிஞர்களை அரசியலுக்கு அனுப்புமாறு பொதுமக்களை நீங்கள் வலியுறுத்தியுள்ளீர்கள். இதனை விளக்க முடியுமா?**

பதில்: ஆம். 2007 ஆம் ஆண்டு எனது கோப் அறிக்கையின் பின்னர், இந்தக் கருத்தை முன்வைத்தேன். ஆனால் மக்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. தேர்தல் பிரசாரத்துக்கு அதிகமாக செலவு செய்யக் கூடியவர்களையும் பணம், உலர் உணவுகள், மதுபானம் மற்றும் பல்வேறு பொருட்களை விநியோகிக்கக் கூடியவர்களையும் மக்களில் பலர் எதிர்பார்க்கின்றனர். நாட்டைப் பற்றி சிந்திக்காமல் மக்கள் அத்தகைய வேட்பாளர்களுக்கு வாக்களிக்கின்றனர். மாகாண மற்றும் உள்ளூராட்சி அரசியல்வாதிகளிடம் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய தனிப்பட்ட உதவிகள் தொடர்பில் மக்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். 1977 ஆம் ஆண்டு முதல் இந்த அனர்த்தம் நாடு முழுவதிலும் இடம்பெற்று வருகின்றது. பெரும்பாலான மக்கள் நாட்டைப் பற்றி கவலைப்படாமல், தங்களின் சலுகைகளைப் பற்றி மட்டுமே கவலைப்படுகிறார்கள். அரசியல்வாதிகளை விமர்சிக்கும்போதும், கண்டிக்கும்போதும், அந்த முடிவை எடுப்பவர்களும் அதே மக்கள்தான்.

> **வாக்காளர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் யாரையாவது தேர்ந்தெடுக்கட்டும்! எங்களுக்குக் கவலையில்லை. எனக்கு தனிப்பட்ட அரசியல் கட்சி எதுவும் இல்லை. கட்சிகளை நடத்துபவர்களே அதற்கான கவலைகளைக் கொண்டுள்ளனர்**

**கேள்வி: தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் சமூக கட்டமைப்பில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்துமென்று கூறப்படுகிறது. நீங்கள் கருத்துத் தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

பதில்: தற்போது அரசியல்வாதிகளின் தகுதி மற்றும் கல்வித் தகுதி பற்றி பலரும் பேசுகின்றனர். இந்தச் சட்டமூலத்தை நான் பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ளேன். ஆனால் யாரும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. நாட்டின் மீது அக்கறை கொண்டு குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள் குறைந்தபட்சம் சில மாற்றங்களைச் செய்வது குறித்து அக்கறை காண்பிப்பதில்லை. தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால், வேட்பாளர்கள் அரசாங்க வளங்கள், வாகனங்கள், பொதுநிதி மற்றும் வெளிநாட்டு நன்கொடைகளைப் பயன்படுத்தக் கூடாது என்று சில தடைகள் உள்ளன. ஒரு வேட்பாளர் செலவு செய்யக்கூடிய வரம்பும் இருக்கும். மூன்றாவதாக, தேர்தல் முடிந்த பிறகு, அனைத்து வேட்பாளர்களும் பணத்தை எப்படிச் செலவழித்தோம், யாரிடம் இருந்து பணத்தைப் பெற்றோம் என்பதற்கான நிதிநிலை அறிக்கையுடன் பிரமாணப் பத்திரத்தை மூன்று வாரங்களுக்குள் அனுப்ப வேண்டும்.

அவர்கள் தவறான அறிவிப்புகளை வழங்கியதாக ஆணையம் கண்டறிந்தால், அவர்களின் உறுப்பினர் பதவியை நீதிமன்றங்கள் ரத்து செய்யலாம் மற்றும் அபராதத் தடைகளும் விதிக்கப்படலாம்.

அதைத் திருத்துவது சட்டவாக்கம் என்ற முறையில் பாராளுமன்றத்தின் கடமையாகும்.

எனவேதான் தேர்தல் முறைமையில் சில திருத்தங்களை மேற்கொள்ள முன்வந்துள்ளேன். நிச்சயமாக, நாங்கள் 21 ஆவது திருத்தத்தின் மூலம் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான ஏற்பாடுகளை செய்து முழு அரசாங்கத் துறையையும் அரசியலற்றதாக மாற்றினோம். நாங்கள் இரண்டு சட்டமூலங்களை உருவாக்குகிறோம், எனவே, படித்த, உண்மையான, நாட்டின் மீது அக்கறை உள்ளவர்கள் பாராளுமன்றம் வருவதற்கான வாய்ப்பு மிகவும் அரிதானது.

எனவே, இந்த முறையை அகற்ற வேண்டும். அதனால்தான் தற்போது உச்சநீதிமன்றத்தில் சவால் செய்யப்பட்டுள்ள பிரசார நிதி மசோதாவை தாக்கல் செய்தேன். செலவினங்களுக்கு அரசியல்வாதிகளே அதிக பொறுப்பு.

> **இம்முறை தேர்தல் முடிவுகள் முன்னெப்போதும் இல்லாத வகையில் இருக்கும் என்பதும், பெரும்பாலான அரசியல் கட்சிகளையும் வேட்பாளர்களையும் மக்கள் நிராகரிப்பார்கள் என்பதும் எனது கருத்து**




# நிதித் தொகுதிக்குள் நாட்டு மக்களையும் இணைப்பதால் உருவாகும் நன்மைகள்!

புதுவருடத்தில் புதிய சந்தர்ப்பங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது. சமூகம் முகம்கொடுத்துள்ள கஷ்டமான சூழலிருந்து விடுபட்டு எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கும் காலமாகும். தைரியம் மற்றும் சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய திறன் எமக்குத் தேவை. இதுவரை காலமும் இல்லாத பக்கங்கள் குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்தியா தனது மக்களை நிதி தொகுதிக்குள் உள்ளீர்க்கும் முயற்சியை 2005 ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. மக்கள் சமூகத்தை விழிப்புணர்வூட்டுவது இலகுவான முயற்சியாக இருக்கவில்லை. இந்திய மத்திய வங்கி திட்டமிட்டபடி மக்களை நிதிமயப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்காக கொடுப்பனவுகள் மற்றும் செலவை வங்கிகள் மூலம் மேற்கொள்வதற்கு இடமளித்துள்ளது. அது தேவையற்ற தாமதம் மற்றும் காலவிரயத்தை தடுக்கின்றது.

2014 இல் பிரதமர் நரேந்திர மோடி இந்திய மக்களை நிதிமயப்படுத்துவதற்கு உட்படுத்தும் முயற்சியை விரைவுபடுத்தினார். அவர் அதிகாரத்துக்கு வந்த பின்னர் கொண்டாடப்பட்ட முதலாவது சுதந்திர தினத்தில் 'மகா மந்திரி ஜனதன' என்னும் பெயரில் வங்கிக் கணக்கொன்றை அறிமுகம் செய்ததோடு, வங்கிக் கணக்கில்லாத பத்து வயது தொடக்கம் சிரேஷ்ட குடிமக்கள் வரையிலானோருக்கு கணக்குகளை ஆரம்பிக்கச் செய்தார்.

பிரதமரின் நோக்கத்துக்கு அமைய நிதிமயமாக்கல் விரைவுபடுத்தப்பட்டது. ஒரு வாரத்துக்குள் 15 மில்லியன் ஜனதன வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டதோடு, அது கின்னஸ் சாதனையாகவும் பதியப்பட்டது. 2021 ஆம் ஆண்டு முடிவில் அதன் எண்ணிக்கை 417 மில்லியனாகக் காணப்பட்டது. வங்கிக் கணக்கு உள்ளவர்களுக்கு கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய வகையில் டெபிட் கார்ட் ஒன்றை வழங்கியதுடன், இந்திய ரூபாயில் 30 ஆயிரத்துக்கான ஆயுள் காப்புறுதி மற்றும் இந்திய ரூபாவில் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான திடீர் விபத்து காப்புறுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. சந்தர்ப்பம் கிட்டாத மக்கள் பிரிவினரை பொருளாதாரத்துக்கு இணைத்துக் கொள்ளும் விசேட தந்திரோபாயமாக இதனை குறிப்பிட முடியும்.

அங்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்ற மக்கள் கொவிட் லொக்டவுன் வேளையிலும் இந்தியாவில் வரப்பிரசாதங்கள் பெறும் நிலைமையில் காணப்பட்டார்கள். வங்கி நடவடிக்கைகள் முடக்கப்பட்டு அவை மூடப்பட்டிருந்த வேளையிலும் டெபிட் கார்டுடன் கூடிய புதிய வங்கிக் கணக்குகள் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டார்கள். அத்துடன் மருந்து மற்றும் உணவு வகைகளை பெறும் போது கட்டணங்களை செலுத்துவதிலும் முன்னணியில் இருந்தார்கள். அது சமூக மற்றும் பொருளாதார மாற்றத்திற்கு வழிவகுத்தது.

இந்தியா ஆரம்பித்துள்ள நிதி தொகுதிக்கு மக்களை உள்ளீர்க்கும் திட்டத்திற்கு அமைய சேமிப்பு முறை மற்றும் ஓய்வூதிய முறைகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அவசர நிலைமைகளில் தற்காலிக கடன் வசதியை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் தானாகவே கிடைத்தது. இந்திய மக்கள் சமூகத்தில் மில்லியன் கணக்கானோர் அதன் நன்மைகளை அறிந்துள்ளார்கள்.

ஜி. 20 மாநாட்டின் தலைமைப் பதவியைப் பெற்றுள்ள இந்தியா உலகில் வளர்ச்சி அடையும் நிதி மற்றும் முதலீடு பிரிவுகளுக்கு நாட்டு மக்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை பின்பற்றத் தயாராகிறது.

இலங்கையில் நிதி மற்றும் முதலீட்டு முறைகள் அதில் ஈடுபடும் வரப்பிரசாதத்துடன் கூடிய நபர்களுக்கே உரியதாகவுள்ளன. தானியங்கி டெலர் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு தற்போது இலங்கையில் வங்கி நடவடிக்கைகளில் தங்களுடைய கணக்குகளை தாமே மேற்கொள்ளும் சந்தர்ப்பம் வாடிக்கையாளர்களுக்கு கிடைத்துள்ளது. எவ்வாறாயினும் இந்த மாற்றத்துடன் தொடர்பு இல்லாத மக்களும் சமூகத்தில் காணப்படுகிறார்கள். இன்னும் அண்மையில் உள்ள கந்து வட்டிகாரர்களிடமே கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் பலரும் காணப்படுகிறார்கள். நெல் விவசாயம் செய்யும் விவசாயிகளின் திறமையற்ற நிதிமயமாக்கலே வருமானம் குறைவதற்கான காரணமாக அறியப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாளும் கடனுக்கு பணத்தைப் பெற்று அதனைப் பயன்படுத்தி வர்த்தகம் செய்யும் தொழில்முனேவோரும் நாட்டில் காணப்படுகிறார்கள். அவர்கள் வங்கிகளில் உள்ள நிபந்தனைகள் மற்றும் ஏற்பாடுகள் காரணமாக சிரமத்துக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். தொழில் முனைவுக்காக மூலதனத்தை பெறுவதில் சிரமத்தை சந்திக்கும் இளைஞர்களும் எம்மிடையே காணப்படுகிறார்கள். வங்கியில் பிணை நிபந்தனை, சொத்துக்கள் மற்றும் வர்த்தக அறிக்கையை கருத்தில் கொள்வதால் பெரும் முயற்சியில் பொருளாதாரத்துக்குள் நுழைய முயற்சி செய்பவர்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள். பொருளாதார பாதிப்புக்கு முகம் கொடுத்துள்ள இலங்கை அதிலிருந்து மீள்வதற்கு மேலும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. எதிர்காலத்தில் நிலைமை சீராகலாம். பொருளாதார மற்றும் நிதி நிலைமையை விரைவுபடுத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம். நிதித் தொகுதிக்கு மக்கள் நுழைய வேண்டியுள்ளது. பல தசாப்தங்களுக்கு முன்னர் காணப்பட்ட வங்கி முறைகளை விட தற்போது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

முதலீடு,காப்புறுதி, ஓய்வூதியம், சேமிப்பு முறைகள் மற்றும் வங்கி கொடுக்கல் வாங்கல்களில் வரப்பிரசாதங்களை பெறக்கூடிய புதிய சமூக கட்டமைப்பு நாட்டுக்கு தேவையாகவுள்ளது. வங்கி மற்றும் நிதி தொகுதியில் ஏற்படுத்தப்படும் நவீன மயம் மற்றும் நெகிழ்வுத்தன்மை அதற்கு வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும். இளைஞர்கள் முன்வந்து சந்தர்ப்பங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என இங்கு குறிப்பிட வேண்டியதோடு அதற்கு தேவையான முறைகளை உடனடியாக தயாரிப்பது கொள்கை வகுப்பாளர்களின் பொறுப்பாகும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

வாழ்க்கைச் செலவு, பொருளாதார நெருக்கடி

# உள்ளூராட்சி தேர்தல் நாட்டுக்கு இப்போது தேவையில்லை

## ஐக்கிய சமூக அமைப்பின் தலைவர் புலஸ்த்தி தெரிவிப்பு

**லுணுகல நிருபர்**

உள்ளூராட்சித் மன்றங்களுக்கான தேர்தல் இந்த சந்தர்ப்பத்தில் நாட்டுக்குக் தேவையற்றது என சிவில் அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் ஒன்றியத்தின் ஊடகச் சந்திப்பொன்றில் (5) கருத்து தெரிவிக்கும் போது ஐக்கிய சமூக அமைப்பின் தலைவர் புலஸ்த்தி வன்னியாராச்சி குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர்,..

கடந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் பின்னர் சம்பளம் வழங்கும் பொருட்டு அந்த நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியுள்ளது. அந்த சுமையும் பொதுமக்கள் மீதே சுமத்தப்படுகிறது எனவும் அவர் கூறினார்.



அதேபோன்று இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம்' ஈ உள்ளூராட்சி மன்றங்கள்' என்ற பெயரில் 2009 ல் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டம் தோல்வியடைந்திருந்தாலும் மீண்டும் அது 2016 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2017 டிசம்பர் 31 ம் திகதி வரை அந்தக் கருத்திட்டத்திற்காக 39 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டிருந்தாலும் எந்த பலனும் கிடைக்கவில்லை என்பதுடன் கோப் குழுவினால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது என்றும் புலஸ்த்தி மேலும் தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவு, பணவீக்கம், பொருளாதார சிக்கல் மற்றும் அரசியல் வேறுபாடுகளுக்கு மத்தியில் அரசியல் கட்சிகள் தேர்தல் ஒன்றையே கேட்கின்றன. எதிர்க்கட்சிகள் இதனைவிட பொறுப்புடன் செயல்பட வேண்டும் என புலஸ்த்தி சுட்டிக்காட்டினார்.

முன்னாள் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்

# பிரேமதாச சில்வாவின் இறுதிக் கிரியைகள் இன்று

பாணந்துறை ஸ்ரீ சுமங்கள கல்லூரியின் முன்னாள் கிரிக்கெட் பயிற்சியாளர் பி.பிரேமதாச சில்வா காலமானார். அவர் முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரர் கௌஷால் சில்வாவின் தந்தை ஆவார். இறக்கும் போது அவருக்கு 80 வயது.



ஸ்ரீ சுமங்கள கல்லூரியின் பழைய மாணவரான பிரேமதாச, இந்த நாட்டில் கிரிக்கெட்டுக்கு பல சிறந்த வீரர்களை உருவாக்க பங்களித்தார்.


தேசிய அணி வீரர்களான டொன் அருணசிறி, இந்திக கல்லகே, கித்ருவான் விதானகே, தில்ருவன் பெரேரா, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உப தலைவர் ரவின் விக்கிரமரத்ன போன்றோரும் இவரது பயிற்சியின் மூலம் தேசிய மட்டத்துக்கு வந்துள்ளனர்.

லேக்ஹவுஸ் நிறுவனத்திலும் பணியாற்றிய பிரேமதாச, தனது கிரிக்கெட் பயிற்சியாளர் வாழ்க்கையின் 50ஆவது ஆண்டு நிறைவையும், 80ஆவது பிறந்தநாளையும் முன்னிட்டு ஸ்ரீ சுமங்கல கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் விசேட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பிரேமதாசவின் இறுதிக் கிரியை இன்று பாணந்துறையில் நடைபெறும்.

# பகவான் ரமண மகரிஷியின் 143 ஆவது ஜெயந்தி விழா

கொழும்பு ரமணபீடம் பகவான் ரமண மகரிஷியின் 143 ஆவது ஜெயந்தி தின விழாவை இன்று பிற்பகல் 3.30 மணியிலிருந்து 6.30 மணிவரை வெள்ளவத்தை ராமகிருஷ்ணமிஷன் சிறிய மண்டபத்தில் பக்திபூர்வமாக கொண்டாடுகிறது.



நி. ஆனந்தரூபனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் இராமகிருஷ்ணன் சாராத மிஷன் கொழும்பு கிளை பிருவிராஜிக்கா ஆத்மதேவ பிராண மாதாஜி பிரதமவிருந்தினர் உரையும், முனைவர் டாக்டர் ம. ஜெயராஜன் 'அன்றாட வாழ்வில் பகவான் ரமணரின் உபதேசங்கள்' என்ற தலைப்பில் சிறப்புரையும், வரதராஜ விநாயகர் ஆலய தர்மகர்த்த கணேஷ் ஈஸ்வரன், திருமதி பிரியா தவராஜா ஆகியோரின் சிறப்புரையும், திருமதி காயத்திரி பிரதீப் நன்றியுரையும் வழங்குவார்கள்.

இறை அன்பர்கள் அனைவரும் வருகை தந்து பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் குருவருளும் ஸ்ரீ அருணாச்சலேஸ்வரரின் இறையருளும் பெற்று பெருவாழ்வு வாழ அன்புடன் கொழும்பு ரமணபீம் அழைக்கிறது.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் (2023.01.11) புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் "தமிழ்த் தேசிய அரசியல் கோட்பாட்டு உருவாக்கத்தில் சேர். பொன்.அருணாசலத்தின் வகிபாகம்" என்னும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் மா.கணபதிப்பிள்ளை உரை நிகழ்த்தவுள்ளார்.

அதிபர், ஆசிரியர் வெற்றிடங்கள்

# மூன்று மாதங்களுக்குள் நிரப்புவதற்கு ஏற்பாடு

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்த வருடத்தின் மார்ச் 27ஆம் திகதி புதிய பாடசாலை தவணை ஆரம்பமாவதற்கு முன்னர், எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களையும் முழுமையாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 60 வயதை நிறைவு செய்துள்ளவர்கள் ஓய்வு பெறும் அரசாங்கத்தின் கொள்கை தீர்மானத்திற்கமைய தேசிய பாடசாலைகளில் மாத்திரம் சுமார் 12,000 பேர் ஒரே தடவையில் ஓய்வு பெற்றுள்ளனர். கடந்த வருடங்களில் சுமார் 4000 பேரே இவ்வாறு ஓய்வு பெற்று வந்துள்ளனர். எனினும் கடந்த வருடத்தில் பெருந்தொகையிலான ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுள்ளனர். அதனால் கல்வி கட்டமைப்பில் பெரும் சவால்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

இரண்டு வருட காலமாக கல்வி நிர்வாக சேவையில் 900 வெற்றிடங்களும் அதிபர் சேவையில் 4,500 வெற்றிடங்களும் காணப்படுகின்றன. அதேவேளை ஆசிரியர்களுக்கான வெற்றிடம் சரிபாதியாக காணப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.



மாணவர்கள் மத்தியில் கணிதபாட விருத்தியை மேம்படுத்தும் 'மெற்ஸ் கேம்' (maths camp)செயற்திட்ட நிகழ்வு பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலையில் நடைபெற்றது பாடசாலை அதிபர் கே.எல்.உபைதுள்ளா, அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.யுசுப் பிரதம அதிதியாகவும் கொண்டனர்.

படம்: பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை பிரதேச செயலக, சமூக சேவை பிரிவினால் வலது குறைந்தோருக்கான சக்கர நாற்காலி, ஊன்றுகோல், வெள்ளைப்பிரம்பு போன்றன அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமத் ஷாபிர், கணக்காளர் ஏ.எல். ரிபாஸ், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.ஜி. அர்சாத் ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்ட போது...

படம்: திராய்க்கேனி தினகரன் நிருபர்

# இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதி வார இறுதியில் நாட்டை வந்தடையும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் நிலவும் முட்டைக்கான அதிகரித்த விலை மற்றும் முட்டைக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் முட்டையை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன் முதலாவது தொகுதி முட்டை இந்தியாவிலிருந்து இந்த வாரத்துக்கு நாட்டை வந்தடையவுள்ளது.

முட்டை உற்பத்தியாளர்களால் தொடர்ச்சியாக முட்டை விலை அதிகரிக்கப்பட்டு வருவதால் அதிலிருந்து மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் வகையில் முட்டையை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ அமைச்சரவைக்கு அது தொடர்பில் அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்திருந்ததுடன் அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்தது.

அதனையடுத்தே வெளிநாடுகளிலிருந்து முட்டையை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதற்கட்டமாகவே இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முதலாவது கட்ட முட்டை இவ்வாரத்திற்குள் நாட்டை வந்தடையவுள்ளதுடன் அந்த முட்டையை 45 ரூபாயை விட குறைந்த விலைக்கு விற்பனை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## புனித ஹஜ் கடமையை...

நாளை 09 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது. கடந்த முறையை போன்று வயதெல்லை தொடர்பிலான வரையறைகள் இம்முறை இல்லையெனவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், கொவிட் 19 தடுப்பூசி தொடர்பிலான வரையறைகளும் இம்முறை தளர்த்தப்பட்டுள்ளதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## கொழும்புக்கு 08 இலட்சம்...

அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

08 இலட்சம் முட்டைகள் நேற்று (07) கொழும்புக்கு கொண்டுவரப்பட்டதாக அதன் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

குருணாகல் பிரதேசத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு இலவச முட்டை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க...

கானா, நைஜீரியா, மொசாம்பிக், செனகல், தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், உஸ்பெகிஸ்தான், மங்கோலியா, ஐக்கிய அரபு இராட்சியம், பப்புவா நியூ கினி ஆகிய நாடுகளின் தலைவர்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர்.

அமைச்சர்கள் அமர்வுகள், நிதி, சுற்றுச்சூழல், வெளியுறவு, எரிசக்தி, சுகாதாரம், கல்வி மற்றும் வர்த்தக நிலைகளில் "உலகளாவிய தெற்கின் குரல்"மாநாடு நடைபெறவுள்ளது.

நான்கு அமர்வுகள் ஜனவரி 12ஆம் திகதியும், ஆறு அமர்வுகள் ஜனவரி 13ஆம் திகதியும் நடைபெறும். இந்த மாநாட்டுக்காக புதுடில்லி 120 நாடுகளுக்கு அழைப்புகளை அனுப்பியுள்ளது.

## புதிய XBB.1.5 வகை திரிபு...

எக்ஸ்பிபி.1.5 மாறுபாட்டை இன்னும் கண்டறியவில்லையென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், அனைத்து நாடுகளிலும் நுழைந்தது போல, அமெரிக்காவிலிருந்து எக்ஸ்பிபி.1.5 விரைவில் இலங்கைக்குள் நுழையுமென்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொரோனா வரிசை முறை ஒவ்வொரு மாதமும் தொடர்வதாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு உயிரியல் துறைத் தலைவர் நீலிகா மாளவிகே தெரிவித்தார்.

எவ்வாறாயினும், சில நாடுகளில் பரவி வரும் எக்ஸ்பிபி.1.5 இலங்கையில் இன்னும் கண்டறியப்படவில்லை என்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

புதிய எக்ஸ்பிபி.1.5 வகைக்கான அறிகுறிகளாக காய்ச்சல், சளி, இருமல், உடல்வலி, சளி மற்றும் தலைவலி போன்றவை ஏற்படுவதாக நீலிகா மாளவிகே தெரிவித்துள்ளார்.

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு...

சில தினங்களுக்கு முன் சந்தித்த போது அது தொடர்பில் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தெளிவத்தாட்சி அதிகாரிகள், உதவித் தேர்தல் ஆணையாளர்கள், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவினர் உள்ளடங்கிய தரப்பினரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தப்படாமல் தேர்தல் தொடர்பான எத்தகைய அறிவித்தலையும் விடுக்க முடியாதென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். தேர்தல் ஆணைக்குழு, இறுதியாக அந்த அதிகாரிகளை டிசம்பர் 21 ஆம் திகதியே அழைத்துள்ளமை தொடர்பில் ஜனாதிபதியுடனான இந்தப் பேச்சுவார்த்தையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய வாக்காளர்களாக...

21 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்வதாக தேசிய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய அரசுக்கு அழுத்தம்...

ஜனநாயக முறைப்படி தேர்தல்களை நடத்த வேண்டும். காணி பொலிஸ் அதிகாரங்கள் அடங்கலாக தடைப்பட்டுள்ள நிர்வாகம், அபிவிருத்தி பணிகளை விரைந்து நிறைவேற்றுவதற்கு முன்வருமாறு இலங்கை, இந்திய அரசுகளிடம் வலியுறுத்தி கோருவதற்காக தமிழகத் தலைவர்களிடம் ஆதரவு திரட்டும் கருத்தாய்வு கூட்டமும் செய்தியாளர் சந்திப்பும் நேற்றுமுன்தினம் சென்னை பத்திரிகையாளர் மன்ற Chennai Press Club மண்டபத்தில் நடைபெற்றது.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் எம்.பி, ம.ம.மு தலைவர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், த.தே.கூ பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் எம்.பி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் சி.மகேந்திரன், மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் சதீஷ்குமார் சிவலிங்கம், புரவலர் ஹாசிம் உமர், தினகரன்,வாரமஞ்சரி பத்திரிகைகளின் தலைமை ஆசிரியர் தே.செந்தில்வேலவர்,விசிக செய்தி தொடர்பாளர் வன்னிஅரசு, CHRPSD இணைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.செல்வகுமாரி, பேராசிரியர் டேவிட் ஸ்டான்லி, தர்மசீலன் செந்தூரான் ஆகியோரும் இதன்போது கலந்து கொண்டனர்.

மனித உரிமகள் மற்றும் சமாதானம் ஊடான அபிவிருத்தி அமைப்பினரின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டில் சகல கட்சிளினதும் பங்களிப்புடன் சிறப்பு மாநாடொன்று பிரமாண்டமாக சென்னையில் நடத்தப்பட்ட உள்ளதோடு தலைநகர் டெல்லியிலும் பல்வேறு கட்டங்களாக அரசியல் தலைவர்கள் அதிகாரிகள் உடனான சந்திப்புகளும் இடம்பெறவுள்ளன.

1987 ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இரு நாடுகளுக்கும் இடையிலான சர்வதேச ஒப்பந்தத்தில் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவோடு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ் மக்கள் சார்பாக கையெழுத்திட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது

## கண்டி, தெல்தெனிய பகுயிலுள்ள...

அவரின் உறவினர்களால் தெல்தெனிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்தாண்டு ஒக்டோபர் 13 ஆம் திகதி மாணவி தனது பாடசாலை நண்பியொருவருடன் அன்றையதினம் பாடசாலைக்கு செல்லாமல் ரயிலில் கண்டியிலிருந்து கொழும்புக்கு சென்றுள்ளார்.

இதன்போது அதே ரயிலில் பயணித்த இளைஞன் இவர்கள் தொடர்பில் ஒருவருக்கு ஏற்பட்ட சந்தேகத்தினால் அவர்களது தகவல்களை கேட்டறிந்து கொண்டுள்ளார்.

பின்னர் அந்த இளைஞன் இரு மாணவிகளினதும் பெற்றோருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு, அவர்களை அழைத்துச் செல்லுமாறு குறிப்பிட்டுள்ளார்.

தாம் வரும் வரை அவர்களை பாதுகாப்பாக வைத்திருக்குமாறு பெற்றோர் இளைஞனிடம் கேட்டுக் கொண்டுள்ளனர். இவ்வாறு கொழும்பு காலி முகத்திடலில் பெற்றோருக்காக காத்திருந்த சந்தர்ப்பத்திலேயே மாணவி அங்கிருந்து இளைஞனுக்கு தெரியாமல் தலைமறைவாகியுள்ளார்.

எனினும் மற்றைய மாணவியை அவரது பெற்றோரிடம் இளைஞன் ஒப்படைத்துள்ளார். காணாமல் போன 15 வயது மாணவி தொடர்பில் இதுவரையில் எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை. இவரை கண்டு பிடிப்பதற்காக பொலிஸார் பொது மக்களின் உதவியைக் கோரியுள்ளனர்.

மாணவி தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் தெல்தெனிய பொலிஸ் நிலையத்தின் 0812374073 என்ற இலக்கத்துக்கும், தெல்தெனிய பொலிஸ் தலைமையகத்தின் பொலிஸ் அத்தியட்சகரின் 0718591066 என்ற இலக்கத்துக்கும் அழைத்து தகவல்களை வழங்க முடியுமென்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## ஆழ் கடல் மீன்பிடிப்படகிலிருந்து...

பயணித்த சந்தேக நபர்கள் 05 பேரையும் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடற்படையினருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய மாத்தறை, மிரிஸ்ஸ மீன்பிடி துறைமுகத்துக்கு அருகிலுள்ள கடற் பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான ஆழ் கடல் மீன்பிடி படகொன்று சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

இதன் போது படகிலிருந்து மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 23 கிலோ 235 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதோடு, சந்தேகநபர்கள் 05 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 33, 42 வயதுக்கிடைப்பட்ட சந்தேக நபர்கள் மிரிஸ்ஸ மற்றும் கம்புறுகமுவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வெள்ளிக்கிழமை (06) கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, அவர்களை 07 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்த உத்தரவிடப்பட்டது.

அதற்கமைய பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## பயிற்சி, மேலதிக வகுப்புகளுக்கு...

ஜனவரி 17ஆம் திகதிக்குப் பின்னர் தடைசெய்யப்படுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாடம் சார்ந்த விரிவுரைகள், கருத்தரங்குகள் அல்லது வகுப்புகளை ஏற்பாடு செய்தல், நடத்துதல், பரீட்சை சார்ந்த வினாத்தாள்களை அச்சிடுதல், விநியோகம் செய்தல் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக விளம்பரம் செய்தல், பரீட்சைக்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் இதேபோன்ற கேள்விகளை வழங்குவதாகக் கூறி சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை வழங்குதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

"ஒரு நபரோ அல்லது ஒரு நிறுவனமோ விதிமுறைகளை மீறினால், அருகிலுள்ள பொலிஸ் நிலையம், தேர்வுகள் திணைக்களம் அல்லது பின்வரும் எண்களில் முறைப்பாடு செய்யலாம்," என்று அவர் கூறினார்.

பொலிஸ் தலைமையகம்: 011,2421111, பொலிஸ் அவசர நிலை: 119, ஹொட் லைன் (தேர்வுகள் துறை): 1911, பாடசாலை தேர்வுகள் ஏற்பாடு கிளை: 011,2784208 / 011,2784537 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறும் பரீட்சைகள் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

எங்கள் கருத்து

# உள்ளூராட்சி சபைத் தேர்தலும் விடை தெரியாத வினாக்களும்!

இலகுவில் மீள இயலாத பொருளாதார நெருக்கடிக்குள் எமது நாடு சிக்குண்டு இருக்கையில், ஆயிரம் கோடி ரூபாவைச் செலவிட்டு உள்ளூராட்சித் தேர்தலை நடத்தினால் இலங்கை மேலும் படுகுழிக்குள் அமிழ்ந்து விடுமென்பது தான் கற்றறிந்தோரின் கவலை ஆகும்.

நிலைமை இவ்வாறிருக்கையில், எதிரணியினரோ நாட்டின் பொருளாதார வீழ்ச்சி பற்றி இவ்வேளையில் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்பதே எதிரணியினரின் வலியுறுத்தலாக உள்ளது. இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் அரசாங்கம் மீது மக்கள் அதிருப்தி கொண்டிருப்பார்களெனவும், அதன் காரணமாக மக்களின் வாக்குகளை தாங்கள் வசீகரித்துக் கொள்வதற்கான வேளை இதுவெனவும் எதிரணி எதிர்பார்க்கின்றது.


இந்நிலையில், உள்ளூராட்சித் தேர்தலுக்குரிய வேட்புமனுக்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளார். 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களைக் கோருவது தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ஜனவரி 4ஆம் திகதி முதல் ஜனவரி 20ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணம் செலுத்த வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இயங்கி வருகின்ற உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் மார்ச் 19 ஆம் திகதியுடன் முடிவுக்கு வரவுள்ள நிலையிலேயே வேட்புமனுக் கோரல் தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. ஆகவே இத்தேர்தல் நடத்தப்படுவது உறுதியாகி விட்டதென்றே கூற வேண்டும்.

ஏற்கனவே வெளிநாட்டுக் கடன்களில் மூழ்கியிருக்கும் இலங்கைத் தேசம், இத்தேர்தலுக்கான ஆயிரம் கோடி ரூபாவை எவ்வாறு பெற்றுக் கொள்ளப் போகின்றது? மக்களின் தலையில் அல்லவா சுமை ஏறப் போகின்றது? மென் மேலும் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தால் நாடு எவ்வாறு தாங்கிக் கொள்ளப் போகின்றது?

தேர்தலைக் கோருகின்ற தரப்பினரிடம்தான் இவ்வினாக்களுக்கான விடைகளைத் தேட வேண்டியுள்ளது.

# தேர்தல் என்பது மாயக் கம்பளமா?


புதிய ஆண்டொன்று பிறந்திருக்கின்றது. இந்த ஆண்டு எப்படியிருக்கப் போகிறது? புதிய ஆண்டில் மாற்றங்கள் நிகழுமா? அல்லது மேலும் நெருக்கடிகள் கூடுமா? அல்லது அதுவும் குழப்பங்கள், பிரச்சினைகள் என்ற நிலையில் மந்த கதியாக நகருமா? என்ற கேள்விகளால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறது நாடு. இந்தக் கேள்விகளுக்கு உரிய பதில்களை தனியே ஆட்சியாளர்களால் காண முடியாது. அல்லது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியினாலும் கண்டுவிட முடியாது. இது அனைத்து அரசியற் தரப்பினாலும் மக்களாலும் காண வேண்டிய பதில்களாகும். தீர்வாகும். இதற்கு நேர்மையான கூட்டுழைப்பே அவசியம்.

ஆகவே, புதிய ஆண்டில் நிறைய மாற்றங்கள் நிகழ வேண்டும். அந்த மாற்றங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு தரப்பிற்குள்ளும் நிகழ வேண்டும். ஒவ்வொரு கட்சிக்குள்ளும் ஒவ்வொரு இனத்துக்குள்ளும் இனங்களுக்கிடையிலும் நிகழ வேண்டும். அப்படி மாற்றம் நிகழ்ந்தால் மட்டுமே நல் விளைவுகள் உண்டாகும். இல்லையெனில், நாடு மேலும் மோசமான நிலையைச் சந்திக்க வேண்டியிருக்கும். நாடு என்பது வேறு எதுவுமல்ல. நாம்தான். ஆகவே நாடு மோசமான நிலையைச் சந்திக்கிறது என்றால், நம்முடைய வாழ்க்கையே மோசமானதாகும்.

புதிய ஆண்டு புதிய பல வாய்ப்புகளைத் தரவுள்ளது. அதைச் சரியாகப் பயன்படுத்துவதும் விடுவதும் நம்முடைய கைகளில்தான் உள்ளது.

1. முதல் வாரங்களில் இனப் பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை ஆரம்பமாகவுள்ளது. இதைச் சரியாகக் கையாள வேண்டிய அவசியம் அனைத்துத் தரப்பினருக்கும் உண்டு. தமிழ்த்தரப்பு இதை மிக நிதானமாக அணுக வேண்டும். அண்மையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தனுடன் உரையாடும்போது, சில விடயங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டார். அவர் தெரிவித்துள்ளதன்படி இந்தப் பேச்சுக்களை அணுகினால் குறைந்த பட்சம் நம் காலடியில் சுற்றியிருக்கும் பல நெருக்கடிகளுக்கான தீர்வினைப் பெறலாம். "நாங்கள் முழுமையான தீர்வை எதிர்பார்த்துப் பல இழப்புகளைச் சந்தித்திருக்கிறோம். இப்பொழுது வடக்குக் கிழக்கின் இணைப்பைப் பற்றிக் கதைக்கிறோம். ஆனால், நடைமுறையில் வடக்குக் கிழக்குத் துண்டாடப்படுகிறது. இதைத் தடுக்க வேண்டுமானால் மாகாணசபையை நாங்கள் வலுப்படுத்த வேண்டும். அதனுடைய அதிகாரங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டால், வடக்குக் கிழக்கு மாகாணங்களின் காணியை நாங்களே கவனித்துக் கொள்ள முடியும். காணிகள் பறிபோகாது. இதை ஆறு கட்சிகளும் தெளிவாக ஆராய்ந்து தீர்மானித்தே இந்த விடயத்தைக் கையாள்கிறோம்.

இதேவேளை ஜனாதிபதி தன்னால் முடிந்த விடயங்களை செய்து வருவதையும் நான் குறிப்பிட வேணும். சில விடயங்கள் நடக்கின்றன என்பதையும் குறிப்பிட வேண்டும். அரசியற் கைதிகளின் விடுதலை, காணிச் சுவீகரிப்புப் போன்ற விடயங்களில் அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசுவது இப்படி முன்னேற்றகரமான நடவடிக்கைகள் உண்டு. இதெல்லாம் முழுமையாக நடக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். அதற்காக எதுவுமே நடக்காது என்று சொல்லி விட்டு நாம் சும்மா இருந்து விட முடியாது. ரணில் விக்கிரமசிங்கவைப் பலப்படுத்தும் நடவடிக்கை இது. அரசை நம்ப முடியாது என்றெல்லாம் நாங்களாகவே கற்பனை செய்து கொண்டு பேச்சுகளை மறுதலிப்பது பொருத்தமல்ல. அந்த நெருக்கடியை நாம் எமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வோம். 13ம் திருத்தம், அரசியற் கைதிகளின் விடுதலை தொடர்பாக எல்லாம் பலரும் சம்மதிக்கிறார்கள். ஆகவே இதையெல்லாம் நாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வோம்.

இதில் நாம் நம்பிக்கையோடு செல்கிறோமா இல்லையா என்பதற்கு அப்பால், இன்றைய சூழலை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் எமக்குத் தந்த ஆணையை நாம் மதிக்க வேண்டும். எந்த வழியிலாவது தீர்வைப் பெற வேண்டும் என்றுதான் மக்கள் ஆணை தந்திருக்கிறார்களே தவிர, பேச்சுகளில் கலந்து கொள்ள வேண்டாம் என்று அவர்கள் தடுக்கவில்லையே. கடந்த காலங்களில் பல பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கு. அதில் தோல்விகள் ஏற்பட்டிருக்கு. சிலதில் எங்கள் தரப்பிலும் தவறுகள் நடந்திருக்கு. பலதில் அவர்கள் தரப்புக்குப் பொறுப்புண்டு. அதற்காகப் பேசாமல் விட்டதில்லையே. ஆகவே நாமும் நம்முடைய முயற்சிகளைக் கைவிட முடியாதல்லவா! இன்றைக்கு உள்ள ஒரே விசயம், பேச்சுவார்த்தைக்குள்ளால் தீர்வைக் காண்பதுதான். இதை விட வேறு வழியென்ன?" என்று யதார்த்த நிலையைச் சித்தார்த்தன் தெளிவாகச் சொல்கிறார்.

ஆகவே, தமிழ்த்தரப்பு இதை மிகக் கவனமாகக் கையாண்டால், முழு வெற்றியைப் பெற முடியவில்லை என்றாலும் கணிசமான வெற்றியை – பல விடயங்களைச் சாத்தியப்படுத்திக் கொள்ள முடியும். அது தமிழ்ச்சமூகத்தின் இருப்புக்கு மிகமிக அவசியமானது.

அதைப்போல இந்த விடயங்களை முஸ்லிம்களும் மலையக மக்களும் அவர்களுடைய அரசியற் தலைமைகளும் தந்திரோபாய அடிப்படையில் கையாள முற்படுவது அவசியம்.

2. சித்தார்த்தன் இப்படிச் சொன்னாலும் இதைச் சரியாகப் புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் ஏனைய தரப்புகள் இல்லை என்றே தெரிகிறது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அதி விசேச அரசியல் தயாரிப்பில் இருக்கிறது. அது இதை முற்றாகவே நிராகரிக்கிறது.

3. முஸ்லிம், மலையகத் தரப்பினரின் நிலைப்பாடு என்ன என்று தெரியவில்லை. அவர்களிடத்தில் தெளிவான நிலைப்பாடு இருந்தால் அதை எப்படியும் இந்த இனப்பிரச்சினையோடு இணைத்துத் தீர்வைக் காண்பதற்கு உதவியாக இருக்கும்.

4. இனப்பிரச்சினையை வைத்து அரசியற் பிழைப்பு நடத்துவதை சிங்கள தரப்புகள் கை விடுவது அவசியம். ஆனால், இது எளிதில் நடக்காது என்று தெரியும். தமிழ்க் காங்கிரஸைப்போல, இனவாதத்திலேயே தமது அரசியல் முதலீட்டை வைத்திருப்பதால் இது கடினமான ஒரு நிலைதான். என்றாலும் வரலாற்றின் நிர்ப்பந்தம், இதைக் கடக்குமாறுதான் கோருகிறது. இல்லையென்றால் வரலாறு இவ்வாறான சக்திகளை நிராகரித்து விடும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணம், இனவாதமும் அதன் விளைவான யுத்தமும் அது உண்டாக்கிய பேரழிவும் செலவுகளும் என்பது சொல்லித்தான் தெரியவேண்டும் என்றில்லை. ஆயுத ஊழல் தொடக்கம் படைத்துறைப் பெருக்கம் வரையில் சக்தி மீறிய செலவீனங்களை நாடு சந்தித்தது. மட்டுமல்ல, உழைக்கும் மனித வளத்தில் பெருமளவு யுத்தத்தில் இழக்கப்பட்டது. இதை இனியாவது சீர்ப்படுத்தவில்லை என்றால் அதற்கான தண்டனையை நாடு சந்தித்தே தீர வேண்டும். நாடு என்பது வேறில்லை. அது நாம்தான். எனவே இதைப் புரிந்து கொண்டு மக்களாகிய நாம் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு மறுப்பைச் செய்ய வேண்டும். அல்லது அவர்களுக்குப் பாடம் படிப்பிக்க வேண்டும்.

5. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கிறது என்றால், அதன் மறுபக்கத்தில் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்குரிய தீர்வையும் காண வேண்டும். அதற்கான பொறிமுறைகள் உருவாக்கப்படுவது அவசியம். ஆனால், இதுவரையில் அப்படியான எந்தப் பொறிமுறையையும் காணவில்லை. அதில் யாருக்கும் அக்கறையும் இருப்பதாகத் தெரியவில்லை. பதிலாக ஆளையாள் குற்றம் சாட்டுவதிலும் அணி சேர்ந்து கும்மியடிப்பதையும்தான் காண்கிறோம். இது பொறுப்பான அரசியற் தரப்பினரின் பணியல்ல. பண்பும் அல்ல. கையில் சரக்கும் மூளையில் சங்கதியும் இல்லாதவர்களின் வார்த்தைகளாகவே பல அரசியற் தரப்புகளின் வாயடிப்புகளும் திட்டங்களும் உள்ளன.

6. எந்தத் திட்டங்களையும் முன்வைக்காமல், வெறுமனே தேர்தல் ஒன்று வந்துவிட்டால் எல்லாமே சரி வந்து விடும் என்று சினிமாத்தனமாகச் சிந்திக்கின்றன. அப்படித்தான் மக்களுக்கும் சொல்லி வருகின்றன. ஆட்சியைத் தந்த பாருங்கள். அடுத்த ஆண்டிலேயே நாட்டில் தேனும் பாலும் ஓடும் என்று சொல்கிறார்கள் பல அரசியற் தலைவர்களும்.

7. எல்லாவற்றுக்கும் ஒரே தீர்வு தேர்தல்தான் என்பது இவற்றின் நிலைப்பாடு. அந்தத் தேர்தல் வந்தால் அல்லது ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் அரசியல் மாற்றமும் பொருளாதார வளர்ச்சியும் எப்படி ஏற்படும் என்று எவரும் விளக்குவதாக இல்லை. ஆனால் எல்லோருக்கும் தேவைப்படுவது தேர்தல். அப்படியென்றால் தேர்தல் என்பது மாயக் கம்பளமா அல்லது, அலாவுதீன் கை அற்புத விளக்கா? அப்படித்தான் இவை கருதியுள்ளன. அப்படித்தான் மக்களைக் கருதவும் வைக்கின்றன.

8. அடிப்படையில் உள்ள பிரச்சினை என்னவென்றால், உண்மையான பிரச்சினையை விளங்கிக் கொண்டு, அதற்குப் பொருத்தமான முறையில் அரசியலை முன்னெடுக்கவோ, மக்களுக்கு என்ன வேணும் என்று மனப்பூர்வமாகச் சிந்திப்பதற்கோ யாரும் தயாரில்லை. பதிலாக மற்றவர்களின் மீது பழியைச் சுமத்தி விட்டுத் தாம் தப்பி விடவே முயற்சிக்கின்றனர். இது மிகப் பெரிய தவறாகும்.இலங்கையின் கடந்த காலமும் நிகழ்காலமும் இப்படியாக இருந்ததால்தான் நாடு இந்த நிலைக்கு – இன்றைய நிலைக்கு வந்தது.

இதை மீட்டெடுக்க வேண்டும் என்றால், மாற்ற வேண்டும் என்றால் மாற்றத்தை நம்மிலிருந்தே நிகழ்த்த வேண்டும். அதற்கு நாம் மாற வேண்டும். நம்முடைய மாற்றமே மெய்யான அரசியல் மாற்றமாகும்.

கருணாகரன்...

# புத்தகத்தை தாங்கவேண்டிய கைகள் இன்று குழந்தைகளை தாங்குகின்றன

## இது யாருடைய தவறு?




இன்று உலகளாவிய ரீதியில் காணப்படும் சமூக ஆரோக்கியப் பிரச்சினையாகப் பதின்ம வயது கர்ப்பம் தரித்தலானது காணப்படுகிறது. வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளில் இது சார்ந்த பிரச்சினைகள் தீவிரமாகக் காணப்படுகின்றன. பதின்ம வயதுப் பருவமென்பது குழந்தைப் பருவத்திலிருந்து வயது வந்த பருவத்திற்கு மாற்றமடையும் கால எல்லையாகும். உலக சுகாதார அமையமானது 15 முதல் 19 வயதினரே பதின்மப் பருவத்தினர் (கட்டிளமைப் பருவத்தினர்) என வரையறுக்கின்றது. பதின்மப்பருவக் கர்ப்பம் என்பது 13முதல் 19 வயதிற்குட்பட்ட பெண் கர்ப்பம் தரித்துள்ள நிலையினைக் குறிக்கின்றது.

இலங்கையைப் பொறுத்த வரையில் 18 வயதிற்கு குறைந்த பெண் திருமணம் செய்துகொள்ளத் தான் தடை இருக்கின்றதே தவிர விரும்பும் ஆணுடன் இணைந்து வாழ தடை இல்லை என்கின்ற நிலையும் காணப்படுகிறது. இதனால் பதின்மப் பருவத்தினர் இல்லற வாழ்க்கையில் இணைகின்ற நிலை காணப்படுகிறது. இதனாலேயே பதின்ம வயதுக் கர்ப்பம் தரித்தலானது அதிகரித்துச் செல்கின்றது.

பதின்ம பருவக் கர்ப்பம் தரித்தலானது பல்வேறு காரணங்களால் ஏற்படுகிறது. அந்த வகையில் பதின்ம வயதுக் கர்ப்பம் தரித்தலுக்கான தனியாள் காரணிகள் என்று நோக்குமிடத்து காதல், பாலியல் கல்வி தொடர்பான போதிய அறிவின்மை, பதின்மப் பருவத் திருமணம் பற்றிய அறிவின்மை, கருத்தடைச் சாதனங்கள் பற்றிய போதிய அறிவின்மை என்பவும், சமூகக் காரணிகளான போரிற்குப் பிந்திய சூழலில் பெற்றோரால் செய்து வைக்கப்பட்ட இளவயதுத் திருமணம், கொவிட் காலத்தில் வீடுகளில் அடைபட்டிருந்த வேளைகளில் பாலியல் தேவைகளின் அதிகரிப்பு, மது, போதைப்பொருள் பாவனை, பாடசாலை இடைவிலகல், தொழில்நுட்ப வளர்ச்சி (பாலியல் படங்களை தொலைபேசி,கணனி இணையத்தளங்களில் பார்த்தல்), சினிமாக்களின் தாக்கம் (கவர்ச்சிப் படங்கள்), நெருங்கிய குடியிருப்புக்கள் (நலன்புரி முகாம்களில் தங்கியிருப்பதால் முறைதவறிய உறவினால் கர்ப்பமடைதல்), மற்றும் நண்பர்களின் தவறான வழிநடத்தல், சமூகப் புறமொதுக்கல் என்பனவும், குடும்பக் காரணிகளான பிள்ளைகள் மீது பெற்றோரின் அக்கறையின்மை, முறைதவறிய உறவு என்பனவும், பொருளாதாரக் காரணிகளாக நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வறுமை, குறைந்த வருமானம் என்பனவும் கட்டிளமைப் பருவக் கர்ப்பத்திற்குக் காரணமாக அமைவதுடன், மன அழுத்தம், உளநோயால் பாதிக்கப்பட்டு நிதானமற்ற நிலையில் இருக்கும் போதான துஷ்பிரயோகம் எனும் உளவியல் காரணமும் பதின்மப் பருவக் கர்ப்பத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

இன்று வேலைக்குச் செல்லுகின்ற பெற்றோர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் இவர்கள் தமது பிள்ளைகளை வேறு நபர்களிடம் பாதுகாப்பு கருதி விட்டுச் செல்கின்றனர். 'இவரால் பிள்ளைக்கு நிச்சயம் பாதிப்பு வராது' என்று ஒருவரை முற்று முழுதாக நம்பி பிள்ளைகளை ஒப்படைத்து விட்டு செல்கின்றனர். ஆனால் அக் குறிப்பிட்ட நபரே அப் பிள்ளையை துஷ்பிரயோகம் செய்துவிட்டுப் போகின்றார்.

தாய்க்குரிய பக்குவ நிலையில் இல்லாத பெண்கள் கருத்தரிக்கும் பருவ நிலையாக பதின்மப் பருவக் கர்ப்பம் காணப்படுகின்றது. சிறுவர் தொடர்பான ஐக்கிய நாடுகள் பிரகடனமானது தனது உறுப்புரை ஒன்றில்; "18 வயதிற்குக் குறைவான பிள்ளைகள் மனித வடிவிலான சிறுவர்கள்" எனக் குறிப்பிட்டுள்ளது. ஆனால் இச் சிறுவர்கள் பக்குவப்படாத வயதுகளில் கர்ப்பம் தரித்தலானது பாரதூரமான பாதிப்புகளையும் தரக்கூடியது.

ஒரு பெண் தாயாகும் வயதெல்லை 20 – 29 என்று உலக சுகாதார அமையம் கூறுகின்றது. மாறாக பதின்மப் பருவக் காலப்பகுதியான பூப்படைதல் போக்கானது அவர்களின் உடல் மற்றும் உணர்வுசார் விருத்தி நிலையடையாத பருவமாகக் காணப்படுவதனால் இப் பருவத்தினர் பிறப்பு வழியில் மற்றும் தசைநார்களில் முழுமையற்ற விருத்திநிலை ஏற்படாமையால் அவர்கள் இப்பருவத்தில் கர்ப்பம் தரிப்பதனால் மிக மோசமான மகப்பேற்று விளைவுகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. அந்தவகையில் நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறுகின்ற நாடுகளில் வருடமொன்றிற்கு 16 மில்லியன் பதின்மப் பருவப் பெண்கள் குழந்தை பெறுகின்றனர். ஒவ்வொரு வருடமும் 15முதல் 19 வயதிற்குட்பட்ட பெண்கள் பாதுகாப்பற்ற முறையிலான கருக்கலைப்பில் ஈடுபடுகின்றனர். மற்றும் குறைந்த, நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் 15முதல் 19 வயதிற்குட்பட்ட பெண்கள் குழந்தைப் பிறப்பின் போது இறக்கின்றனர்.

இக் கட்டிளமைப்பருவத்தினால் பல்வேறுபட்ட விளைவுகளை எதிர்கொள்கின்றனர். அந்த வகையில் இவ்வாறான கட்டிளமைப்பருவக் கர்ப்பமானது உடல் ஆரோக்கிய ரீதியான விளைவுகள், உள ஆரோக்கியம் சார் பிரச்சினைகள், உறவு சார் பிரச்சினைகள், சமூகம் சார் பிரச்சினைகள், பொருளாதாரம் சார் விளைவுகள் போன்றவற்றை ஏற்படுத்துகின்றன.

பதின்ம வயதுப் கர்ப்பத்தினை தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் நிலைய பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தவர்(யாழ்ப்பாணம்) விக்னராஜா குறிப்பிடுகையில் "அரசாங்கத்தின் கல்விக்கொள்கைகளில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டியது அவசியமாகும். அதாவது பாலியல் கல்வியை பாடவிதானங்களில் சேர்க்க வேண்டும். இதன் மூலம் பாலியல் சார் விடயங்களை அவர்களினால் அறிந்து கொள்ள முடியும். இதன் மூலமாக பாலியல் சார்பான அறிவு விழிப்புணர்வுகளை சிறுவர்கள் மத்தியில் கொண்டுவரமுடிகிறது. பெற்றோர்களைப் பொறுத்த வரையில் தமது பிள்ளைகளைக் கையாள்வதற்கான அறிவு,தெளிவு, கண்காணிப்பு அவசியமாகின்றது. போதைப் பொருள் பாவனையானது இன்று சர்வதேச ரீதியிலான பாரிய பிரச்சினையாகத் தான் காணப்படுகிறது. இதனை முற்று முழுதாக தடுப்பது என்பது கடினமான ஒரு விடயம் தான். ஆனால் அதனைக் குறைக்க வேண்டிய தேவையுள்ளது. இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையை குறைக்கின்ற சந்தர்ப்பத்தில் சமூகப் பிறழ்வான செயற்பாடுகள் குறைக்கப்படும் என்பது வெளிப்படையான உண்மை. இதனால் சிறுவர் துஷ்பிரயோகச் செயற்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ள முடிகிறது. குடும்ப சிதைவுகள், தாபரிப்பு வழக்குகள், தாய் தந்தை வேறு திருமணம் செய்தல் போன்ற செயற்பாடுகள் சிறுவர்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. பெற்றோர்கள் பிரிந்து வாழ்கின்ற போது பிள்ளையானது நிர்க்கதியாக நிற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதன் காரணமாக சிறுவர்கள் தவறு விடுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இதனை பெற்றோர்கள் உணர்ந்து செயற்படவேண்டும். தமது பிள்ளைகளை பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோர்களதும் கடமை அதனை முறையாக செய்கின்றபோது இவற்றை குறைத்துக் கொள்ள முடியும்" எனக் குறிப்பிடுகின்றார்.

இளவயதுக் கர்ப்பம் அல்லது துஷ்பிரயோகச் செயற்பாடுகள் இடம்பெறுகின்ற போது அதனை நீதி மன்றுகளுக்கு பெரும்பாலான பெற்றோர் வெளிக்கொணர்வதில்லை.

இதற்கு காரணம் சமூகத்தில் அவமதிப்பு ஏற்படும் என்ற புரிதலின் கீழ் அவற்றை வெளிக்கொண்டுவராத நிலை காணப்படுகிறது.

நீதிமன்றுக்கு பாதிக்கப்பட்டவர்களை அடையாளப்படுத்துகின்ற போது அவர்களுக்குப் பொருத்தமான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

மீண்டும் கல்வியை தொடர நினைக்கும் சிறுமிகள் இல்லங்களுடன் மீள இணைக்கப்பட்டு பாடசாலைக்கு அனுப்பப்பட்டு அதன் மூலம் கல்வியை மீளப் பெற்றுக்கொடுக்கின்றனர்.

குடும்பங்கள் பொருளாதார ரீதியாக நலிவுற்றிருப்பின் வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக்கொடுத்துது குடும்பத்தை வலுப்படுத்தி சிறுவர்களை மீண்டும் குடும்பத்துடன் வாழ்வதற்கு வழியமைத்துக் கொடுக்கப்படுகின்றது. சமூகம் எப்போது மாற்றத்திற்கு தயாராகின்றதோ அப்போது இளவயது வயது திருமணம், துஷ்பிரயோகம், பதின்ம வயது கர்ப்பம் என்பனவற்றைத் தடுக்க முடியும் என்பது வெளிப்படையான உண்மை.

பெண் பிள்ளைகள் சமூகத்தில் கேள்விக்குறியாவதை தடுக்கவேண்டியது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.



கிசோபனா சுந்தரலிங்கம்
ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

**இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காண்பது குறித்த பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ள இன்றைய நிலையில், தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி மக்கள் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்குள் மீளப் பெற முடியாத சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வினை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த 5ஆம் திகதி திருகோணமலையில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று நடைபெற்றிருந்தது.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைப்பது என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு அமைய சர்வ கட்சிகளுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் சார்பில் இந்த நிலைப்பாடு சில தினங்களுக்கு முன்னர் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற முதலாவது சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்ட தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் மூன்று முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தியிருந்தனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பது, காணி அபகரிப்பை நிறுத்துவது, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் ஆகிய விடயங்களை நிறைவேற்று அதிகாரமே நேரில் கையாண்டு அடுத்த ஜனவரி மாதத்துக்குள் தீர்வுகளை முன்வைக்க வேண்டும் என்ற என்ற கோரிக்கை அங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

அங்கு நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் அரசியல் தீர்வுகள் எவ்வாறானதாக அமைய வேண்டும் என்பது குறித்த பேச்சுக்கள் இடம்பெறாதபோதும், அதன் பின்னர் தமிழ் அரசியல் கட்சித் தரப்பினர் ஜனாதிபதியை ஒரு சில தடவைகளில் சந்தித்திருந்தனர்.

இவ்வாறான பின்னணியிலேயே மக்கள் சார்பில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

"நடைபெறவுள்ள அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தனியொரு கட்சியைச் சார்ந்த ஒருசில பிரதிநிதிகள் மாத்திரம் கலந்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பிட்ட அரசியல் கட்சியின் தலைமைத்துவங்களிடையேயும் பரஸ்பரம் வெளிப்படைத்தன்மையுடைய கலந்துரையாடல்களோ, ஒருமித்த முன்னெடுப்புகளோ காணப்படாததை நாங்கள் இங்கு சுட்டிக் காட்டுகின்றோம். இது இத்தரப்பினர்களை தேர்தல் மூலம் தெரிவு செய்த மக்கள் மத்தியில் காணப்படும் விமர்சனமாக உள்ளது" என்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

"இவ்வாறான நடவடிக்கைகள் தமிழ் மக்களின் நிலையான



# தமிழர் அரசியலின் ஐக்கியத்தை வலியுறுத்தும் மக்கள் போராட்டம்!

## தமிழர் அரசியல் தரப்புகள் ஒன்றிணையாவிடில் எக்காலமுமே தீர்வில்லை!






## மீண்டும் முன்னிலைப்படுத்தப்படும் சமஷ்டி கோரிக்கை; பிளவுபடாத இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கோரும் மக்கள்!

அரசியல் தீர்வுக்கு பங்கம் விளைவிக்கும் ஜனநாயகமற்ற போக்காகக் காணப்படுவது வருத்தமானதாகும். எனவே அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டு ஒரேகுரலில் ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வினை வலியுறுத்த வேண்டும். இதுவே தமிழ் மக்கள் தமது ஜனநாயக வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்த தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் கடமையாகும்" என்றும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குறிப்பிட்டனர்.

"வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு தனியொரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும், ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மத்திய அரசினால் மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும், ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது மக்களால் ஜனநாயகமான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் பெண்கள் ஐம்பது வீதம் இருப்பது உறுதிசெய்யப்பட வேண்டும், வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட காணிகள் யாவும் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும், தற்போது வடக்கு கிழக்கில் காணப்படும் இராணுவமயமாக்கல் முற்றிலும் நீக்கப்பட்டு, தேசிய பாதுகாப்புக்கான இராணுவம் என்பது 1983களுக்கு முன்னர் இருந்த இடங்களில் மாத்திரம் நிலைநிறுத்தப்பட வேண்டும்" போன்ற கோரிக்கைகளும் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டவர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

**திபெத்தின் ஆன்மிகத் தலைவர் வணக்கத்துக்குரிய தலாய் லாமா அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளொன்று தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பௌத்தமதத் தலைவர்கள் தரப்பினாலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.**

# தலாய் லாமா வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கும் இலங்கை பௌத்தர்கள்!

உலகில் பௌத்தமதத்தின் பாரம்பரிய சிறப்புகள் மிகுந்த இலங்கையில் இருந்து இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். உலகில் பௌத்த மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்ற வணக்கத்துக்குரிய தலாய் லாமா அவர்கள் இலங்கைக்கு வருகை தருவாராயின், இங்குள்ள பௌத்த மக்களுக்கு அவரது விஜயம் பெரும்பேறாக அமையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதுமாத்திரமன்றி, உலகில் பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்ற நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையில் மத மற்றும் பௌத்த கலாசார நல்லுறவுகளை வலுப்படுத்துவதற்கும் வாய்ப்பு ஏற்படுமென்று பௌத்தமதத் தலைவர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் மதத்தலங்களைத் தரிசிப்பதற்காக வருகின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கு இதன் மூலம் வழியேற்படும். எனவே மதத்தலங்களைத் தரிசிக்க வருகின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் திபெத்தின் ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று ராமாண்ய மகாசங்கத்தின் பிரதமகுரு மாஹுல்வேவே விமல தேரர் தலைமையிலான பிக்குகள் குழு அழைப்பு விடுத்துள்ளதாக இந்திய ஊடகமொன்று சில தினங்களுக்கு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது.

தலாய் லாமா முன்னர் இந்தியாவின் புத்தகாயாவுக்கு விஜயம் செய்திருந்தார். அவர் அங்கு விஜயம் செய்ததையடுத்து, புத்தகாயாவுக்கு திருத்தல யாத்திரை செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. புத்தகாயாவுக்கு வருகை தருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு, தலாய் லாமா இலங்கைக்கும் வருகை தருவது வரவேற்கத்தக்கதென பௌத்த பிக்குகள் அழைப்பு விடுத்துள்ளதாக இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.

இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இவ்வேளையில், தலாய் லாமா அவர்களின் இலங்கை வருகையானது பொருளாதார ரீதியில் அனுகூலங்களை ஏற்படுத்துவது ஒருபுறமிருக்க, இலங்கையின் பௌத்த மக்களுக்கு ஆன்மிகரீதியில் பெரும் நன்மையளிப்பதாக அமையுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

திபெத் ஆன்மிகத் தலைவர் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று



## புத்தகாயா புனிதத்தலத்தை தற்போது வெளிநாட்டு யாத்திரிகள் கூடுதலாக தரிசிப்பதைப் போல, இலங்கைக்கும் பௌத்த மக்கள் பல்வேறு நாடுகளிலிருந்தும் வருகை தருவரென ராமாண்ய மகாசங்கத்தின் பிரதம மதகுரு மாஹுல்வேவே விமல தேரர் உள்ளிட்ட மதத்தலைவர்கள் விருப்பம்

வேண்டுகோள் விடுத்திருப்பவர்கள் இந்தியாவின் புத்தகாயாவுக்கு பயணம் செய்திருந்த இலங்கையின் முக்கிய பிக்குகள் குழுவினர் ஆவர்.

ராமாண்ய மகாசங்கத்தின் பிரதம மதகுரு மாஹுல்வேவே விமல தேரர் உள்ளிட்டோரே புத்தகாயாவுக்கான பயணத்தில் இணைந்திருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது. தலாய் லாமா, இந்தியாவின் புத்தகாயாவுக்கு சென்றமை காரணமாக புத்தகாயாவைத் தரிசிப்பதற்காக தற்போது பெரும்பாலான பக்தர்கள் அங்கு பயணம் செய்கின்றனர். இந்த நிலையில் அவர் இலங்கைக்கு வரவேண்டும். அவர் இலங்கைக்கு பயணம் செய்தால், அவரை பின்பற்றி பலர் இலங்கைக்கு பயணம் செய்வர். இதனால் இலங்கையின் சுற்றுலாத்துறை முன்னேற்றம் அடைந்து நாடு பொருளாதாரத்தில் சிறக்கும் என்று விமல தேரர் உட்பட்ட குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்கையில், இலங்கையின் பௌத்த பிக்குகளின் கோரிக்கையை தலாய் லாமா ஏற்றுக்கொண்டாரா என்பது தொடர்பில் இன்னும் தகவல்கள் வெளியாகவில்லை.

இந்த விடயம் இவ்வாறிருக்கையில்,பௌத்த மதத்துக்கு எதிராக சீன கம்யூனிஸ்ட் அரசு முயற்சித்து வருவதாக திபெத் பௌத்த ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா சமீபத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 1949 ஆம் ஆண்டில் திபெத் பூமியை சீன இராணுவம் ஆக்கிரமித்தது. இதன் பிறகு கடந்த 1959 ஆம் ஆண்டு

## கண்டியிலுள்ள தலதா மாளிகை மற்றும் அனுராதபுரத்திலுள்ள புனித அரச மரத்தை தரிசிப்பதற்கு திபெத் பௌத்த ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா ஆர்வம்!

திபெத் பௌத் மதத் தலைவர் தலாய் லாமாவும் அவரது ஆதரவாளர்களும் சீன இராணுவத்தின் பிடியில் இருந்து தப்பி இந்தியாவில் தஞ்சமடைந்தனர். அப்போது முதல் இந்தியாவின் இமாச்சல பிரதேசம் தர்மசாலாவில் தலாய் லாமா வாழ்ந்து வருகிறார்.

"இமாலய மலைப்பிரதேச நாடுகளில் பௌத்த மதம் வியாபித்து பரவியுள்ளது. குறிப்பாக சீனா, மங்கோலியாவில் பௌத்த மதம் செழித்து வளர்ந்துள்ளது. ஆனால் பௌத்த மதத்தை சீன கம்யூனிஸ்ட் அரசு விஷமாகக் கருதுகிறது. பௌத்த மதத்தை அழிக்க தீவிர முயற்சி செய்கிறது. ஆனால் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை.

திபெத் மற்றும் சீனாவில் பல்வேறு பௌத்த மடாலயங்களை சீன அரசு அழித்திருக்கிறது. இது போன்று பல்வேறு வகைகளில் முயற்சி செய்தும் பௌத்த மதம் இன்றும் வலுவாக உள்ளது. சீனாவில் வசிக்கும் மக்கள் பௌத்த மதத்தை உறுதியுடன் பின்பற்றுகின்றனர்.

'பனி பூமி' என்று அழைக்கப்படும் திபெத் பல்வேறு துயரங்களை கடந்து சென்று கொண்டிருக்கிறது. எனினும் இதுவும் ஒருவகையான ஆசீர்வாதம் என்றே கருதுகிறேன். திபெத்தின் துயரம் காரணமாக ஒட்டுமொத்த உலகமும் திபெத் பௌத்த மதத்தை பற்றி அறிந்து கொண்டிருக்கிறது" என்று தலாய் லாமா சமீபத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

சீனாவின் தென்கிழக்கிலும் நேபாளத்தின் வடக்கிலும் இருக்கும் பெரும் நிலப்பரப்பே திபெத் ஆகும். இங்கே பௌத்த மதத்தினர் அதிகம் வாழ்கின்றனர். அதே போன்று பௌத்த துறவிகளும் அங்கு அதிகம். சீன பெருந்தேசிய இனமல்லாத இவர்கள், தனி தேசிய இன மக்கள் ஆவர். சீனா 1949 இல் கம்யூனிச நாடாக மாறியதிலிருந்தே திபெத்தியர்கள் தனிநாடாக முயற்சி செய்தனர்.

அதன் விளைவாகப் பௌத்த மதத்தலைவரான தலாய் லாமா இந்தியாவிற்குத் தனது ஆதரவாளர்களோடு வந்தார். இங்கே தனி திபெத் அரசு, நாடு கடந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

சிறப்புச் சலுகைகள் இந்தியாவுக்கு வந்த திபெத்தியர்களுக்கு அளிக்கப்படுகின்றன. சீனாவோடு முரண்படும் இந்தியா, தலாய் லாமாவை தன் பிடியில் பாதுகாப்பாக வைத்திருப்பது சீனாவிற்குப் பிடிக்கவில்லை. அவர் இந்தியாவிலிருந்து கொண்டு தொல்லை தருகிறார் என்று சீனா நினைக்கிறது.

மேலும் மேற்குலக நாடுகள் தலாய் லாமாவிற்கு அளவுக்கு அதிகமான வரவேற்பையும், ஊடக வெளிச்சத்தையும் தருகின்றன. இதுவும் சீனாவிற்குப் பிடிக்கவில்லை. திபெத்தியர்களின் கலாசார மற்றும் மத அடையாளத்தை இல்லாமல் செய்வதற்காக தலாய் லாமாவைக் கட்டுப்படுத்த சீனா விரும்புகிறது.

தலாய் லாமாவின் பௌத்த மத நிறுவனம் 1400 ஆண்டுகளுக்கும் மேல் பழைமையானது. ஒவ்வொரு தலாய் லாமாவும் இறந்த பிறகு அவர் மற்றொரு பிறவியில் லாமாவாக பிறப்பார் என்பது திபெத்தியர்களின் நம்பிக்கை. ஒரு தலாய் லாமா இறந்து போனால் அவர் தனது மறுபிறவி நபரைத் தேர்ந்தெடுப்பார் என மக்கள் நம்புகிறார்கள்.

முந்திய தலாய் லாமா 1933இல் இறந்தார். அவருடைய வாரிசைக் கண்டுபிடிக்க நான்கு ஆண்டுகள் ஆனது. தற்போதைய தலாய் லாமா 14 ஆவது தலாய் லாமா ஆவார். இவருக்கு தற்போது 85 வயது ஆகிறது. இவர் மறைந்து போனால் அவரது வாரிசைக் கண்டுபிடிப்பது பௌத்த மதத் துறவிகளான லாமாக்களின் பணியாகும்.

ஆனால் இந்த கண்டுபிடிக்கும் செயல்முறையைக் கட்டுப்படுத்த சீனா விரும்புகிறது. தனக்கு இணக்கமான தலாய் லாமாவை நியமிக்கவும் அது விரும்புகிறது. அதேநேரம் அடுத்த தலாய் லாமா யார் என்பதை திபெத்தியர்களே தீர்மானிக்க வேண்டும் என்று அமெரிக்கா கருதுகிறது.

(17ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...




**பிறந்திருக்கும் புதிய வருடமான 2023ஆம் ஆண்டின் முற்பகுதியில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்களில் அரசியல் கட்சிகள் களமிறங்கியுள்ளதை தற்போது காண முடிகின்றது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் குறித்த தேர்தல் ஆணைக்குழுவின் அறிவிப்பையடுத்து, கட்சிகள் தமது செயற்பாடுகளை தீவிரப்படுத்தியிருப்பதைக் காண முடிகிறது.**




# ஆயிரம் கோடி ரூபாவில் உள்ளூராட்சி தேர்தலுக்கு தயாராகின்றது இலங்கை!




உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்குரிய வேட்புமனுக்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவித்துள்ளார். 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களைக் கோருவது தொடர்பான அறிவித்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அல்லது மாவட்ட செயலாளர்களால் வெளியிடப்பட்டுள்ளது. ஜனவரி 4ஆம் திகதி முதல் ஜனவரி 20ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணம் செலுத்த வேண்டுமென





அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்துக்கு அமைய தேர்தல் பிரசாரங்களுக்கு ஐந்து முதல் ஏழு வாரங்கள் வழங்கப்படும். அந்த அடிப்படையில் பார்க்கும்போது தேர்தல் நடத்துவதற்கான முற்கூட்டிய திகதியாக பெப்ரவரி மாத இறுதி வாரத்தில் ஒரு தினம் அமையும். ஆகப் பிந்திய திகதியாக மார்ச் மாதத்தின் இரண்டாவது வாரத்தில் ஒரு தினம்அமையும்.

தற்பொழுது இயங்கிவரும் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் மார்ச் 19 ஆம் திகதியுடன் முடிவுக்கு வரவுள்ள நிலையிலேயே வேட்புமனுக் கோரல் தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

நாட்டில் உள்ள 341 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். இவற்றில் 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகள் உள்ளடங்குகின்றன. இவற்றுக்காக 8,356 உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம் என்றும், இதனைக் குறைக்க வேண்டிய தேவை இருப்பதாகவும் கருத்தாடல்கள் இடம்பெறுகின்றன.

அதேநேரம், நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதாரச் சிக்கல்களுக்கு மத்தியில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமா என்பது குறித்து பரஸ்பரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு அமைய தேர்தல்கள் ஆணைக்குழு வேட்புமனுக் கோரல் குறித்த அறிவிப்பை தற்பொழுது வெளியிட்டுள்ளது.

நாட்டின் நெருக்கடி நிலையில் தேர்தலுக்குப் பெருந்தொகை பணம் செலவாகும் என்ற அக்கறையே பலராலும் முன்வைக்கப்பட்டிருந்தது. குறிப்பாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு சுமார் 10 பில்லியன் ரூபா (ஆயிரம் கோடி ரூபா) செலவாகும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

தேர்தல் நடத்துவதற்கான செலவு குறித்து தேர்தல் ஆணையத்திடம் ஆலோசித்து நிதி கேட்டு விண்ணப்பித்திருப்பதாகவும், உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்ட பிறகு மதிப்பீடுகளை தயார் செய்யவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். இந்தச் செலவினத்தில் வாக்குச் சீட்டுக்கான செலவு மற்றும் தேர்தல் பணியில் இருக்கும் அதிகாரிகளுக்கான கொடுப்பனவு உள்ளிட்ட விடயங்களும் அடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியிருந்தார். இவ்வாறான

## பொருளாதார நெருக்கடியிலிருந்து படிப்படியாக மீண்டெழுகையில், நாடு எதிர்நோக்கும் மற்றொரு பாரிய செலவினம்!




நிலையில் ஆளும் கட்சியான பொதுஜன பெரமுன கட்சி களுத்துறை மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளது. இது தவிர, ஒரு சில சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளன.

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலானது பொருளாதார ரீதியில் அரசுக்கு செலவினத்தைக் கொடுப்பதாக இருந்தாலும், பெரும்பாலான அரசியல் கட்சிகள் தேர்தலொன்றை எதிர்பார்த்திருப்பதாகத் தெரிகிறது. எதிர்க்கட்சிகள் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என வலியுறுத்தி வரும் நிலையில், மக்கள் மத்தியில் தமக்குக் காணப்படும் செல்வாக்கு எந்தளவுக்கு உள்ளது என்பதை அளவிடுவதற்கான ஒரு அளவுகோலாக இத்தேர்தலைப் பயன்படுத்தவும் பல அரசியல் கட்சிகள் முனைகின்றன.

குறிப்பாக ஆளும் பொதுஜன பெரமுன கட்சி இத்தேர்தலை அளவுகோலாகப் பயன்படுத்துவதற்கும், தேர்தலில் கிடைக்கும் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் தம்மைப் பலப்படுத்துவதற்குரிய வியூகங்களை வகுப்பதற்கும் எண்ணியுள்ளதாகத் தெரிகிறது.

ஆளும் பொதுஜன பெரமுன கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. இதற்கான பேச்சுக்கள் இடம்பெற்றபோதும், இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லையென்றே தெரிகிறது.

மறுபக்கத்தில் பொதுஜன பெரமுன கூட்டணியிலிருந்து பிரிந்து சென்ற ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, டளஸ் அழகப்பெரும உள்ளிட்டவர்களைக் கொண்ட பிரிவினர், மற்றும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டவர்களைக் கொண்ட பிரிவினர் ஆகியோர் ஒன்றிணைந்து கூட்டணியொன்றுக்குச் செல்லவிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் இந்தக் கட்சிகள் மத்தியில்

### வார இறுதி அரசியல் குறிப்பேடு


சம்யுக்தன்

இடம்பெற்று வருவதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் தனது பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து கூட்டணியாகப் போட்டியிடவிருப்பதாக அதன் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கூறியுள்ளார். பங்காளிக் கட்சிகளுடன் பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென்பகுதி அரசியல் நிலைவரம் இவ்வாறானதாக இருக்கும் நிலையில் வடக்கு, கிழக்கில் உள்ள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கான தயார்படுத்தல்களில் இறங்கியுள்ளன.

பிரதான முஸ்லிம் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை




## பிளவுபட்டு நின்ற கட்சிகள் மீண்டும் ஒன்றுசேர்ந்து, தேர்தல் கூட்டணியை அமைப்பதற்கு முயற்சி!





மக்கள் காங்கிரஸ் என்பவற்றைப் பொறுத்த வரையில் இவை இரண்டும் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியின் பங்காளிக் கட்சிகளாக இருக்கின்றன. இந்த நிலையில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அந்தந்தப் பகுதிகளில் எவ்வாறு போட்டியிடப் போகின்றன என்பது குறித்து இதுவரை எந்த உத்தியோகபூர்வ அறிவிப்புக்களும் வெளியிடப்படவில்லை.

கடந்த காலத் தேர்தல்களில் பிரதான கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டாலும் தமக்கு செல்வாக்கு அதிகமான பகுதிகளில் தனித்துப் போட்டியிட்ட வரலாறு அக்கட்சிகளுக்கு உள்ளது. இவ்வாறான நிலையில் வட்டார ஒதுக்கீடுகள் குறித்த இறுதிப்படுத்தல்களின் பின்னரே உத்தியோகபூர்வ அறிவிப்புக்களை எதிர்பார்க்க முடியும்.

மறுபக்கத்தில், தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில் இம்முறை பரந்துபட்ட கூட்டணியொன்றுக்குச் செல்ல வேண்டும் என்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த சகல கட்சிகளையும் மீண்டும் ஒன்றிணைத்து பாரிய கூட்டணியொன்றாக தேர்தலை முகங்கொடுக்க வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இருந்தபோதும் இலங்கை தமிழரசுக் கட்சியின் ஒரு சிலர் இதற்கு இணங்கவில்லையென்றே கூறப்படுகிறது. தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளத் தயார் என சி.வி.விக்னேஸ்வரன் கூறியிருந்தார். இருந்தபோதும் தமிழரசுக் கட்சியின் சார்பிலிருந்து இதற்கான முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை. மத்திய குழு கூடி கூட்டணி குறித்த முடிவு எடுக்கப்படும் என்றே சொல்லப்படுகிறது.

அதேநேரம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி எந்தத் தரப்பினருடனும் கூட்டணி அமைப்பது குறித்த அறிவிப்புக்களை வெளியிடவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தொடர்ச்சியாக விமர்சித்து வருவதையே அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அதேபோல, இந்தக் கட்சிகள் தவிர்ந்த எஞ்சியுள்ள கட்சிகள் கடந்த காலத்தைப் போன்று தனியான கூட்டணி அமைப்பார்களா அல்லது தனித்தனியே போட்டியிடுவார்களா என்பது பற்றியும் இதுவரை தெரியவரவில்லை.

இருந்தபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்ளவே விக்னேஸ்வரன் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் விரும்புவதாகத் தெரிகிறது. இதற்கு தமிழரசுக் கட்சி பச்சைக்கொடி காட்டுமா அல்லது எதிர்ப்பை வெளியிடுமா என்பதும் கேள்விக் குறியாகவே காணப்படுகிறது.

## மக்களின் நாடித்துடிப்பை அறிந்து கொள்வதில் சில கட்சிகள் விருப்பம்; நாடு மேலும் பொருளாதார பின்னடைவுக்குச் சென்று விடுமென நாட்டு நலன் மீது ஆர்வம் கொண்டோர் கவலை!







# சிறப்பாக நடைபெற்ற உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு



இந்தியா, சென்னை உலக வர்த்தக மையத்தில் உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டின் ஒன்பதாவது ஆண்டு விழா அதன் தலைவர் ஜே. செல்வகுமார் தலைமையில் நேற்றுமுன்தினம் 6ஆம் திகதி ஆரம்பமாகியது. இதில் விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல். திருமாவளவன், இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் சி.வி விக்னேஸ்வரன், எம்.ஏ சுமந்திரன், பெ. இராதாகிருஷ்ணன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் வெளியிடப்பட்ட சிறப்பு மலரின் முதற் பிரதியை இலங்கை இலக்கிய புரவலர் ஹாசிம் உமர், தொல். திருமாவளவனிடமிருந்து பெற்றுக் கொண்டார். விழாவில் தினகரன் பத்திரிகைக்கு அதன் ஊடக சேவையை பாராட்டி சிறந்த விருது கிடைக்கப்பெற்றது. அதனை தினகரனின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் வீரகேசரி பத்திரிகையை வெளியிடும் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசனுக்கு சாதனை தமிழன் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



படங்கள்: இன்பாஸ் சலாவுதீன்






# ‘பிரவாசி பாரதிய திவாஸ்’ மகாநாடு

**மத்திய பிரதேசத்தின் இந்தூர் நகரில் ஜனவரி 8 முதல் 10 வரை**

வெளிநாடு வாழ் இந்தியர்களை ஒன்றிணைக்கும் 'பிரவாசி பாரதிய திவாஸ்” அமைப்பின் 17ஆவது மகாநாடு ஜனவரி 2023, 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை இந்தியாவின் மத்தியப்பிரதேச மாநிலத்தின் இந்தூர் நகரில் நடைபெறவிருக்கிறது.

இந்திய வெளியுறவு அமைச்சும் மத்தியப்பிரதேச மாநில அரசாங்கமும் இணைந்து நடத்தும் இந்த மகாநாட்டின் தொனிப்பொருள் 'புலம்பெயர் சமூகம்; நற்காலத்தில் இந்தியாவின் முன்னேற்றத்துக்கான நம்பகமான பங்காளர்கள்' என்பதாகும். நற்காலம் (“அம்றிற் கால்”) என்பது அடுத்த 25 வருடங்கள் மீது கவனத்தைச் செலுத்துகிறது. இந்த சொல்லை முதலில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி 2021 அக்டோபரில் பயன்படுத்தினார்.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பாராளுமன்றத்தில் 2022 /2023 மத்திய பட்ஜெட்டை சமர்ப்பித்தபோது “அம்றிற் கால்” என்ற சொல்லைப் பயன்படுத்தினார். அடுத்த 25 வருடங்களை குறிப்பிடுவதற்கு இந்த சொல் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.

இரு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் “பிரவாசி பாரதிய திவாஸ்” மகாநாடு இந்திய அரசாங்கத்துடனான வெளிநாட்டு இந்திய சமூகத்தின் ஊடாட்டத்தை பலப்படுத்துவதற்கும் தங்களது வேர்களுடன் அவர்களை மீள இணைப்பதற்கும் உதவுகிறது.

தெரிவுசெய்யப்பட்ட இந்தியர்களுக்கு இந்த மகாநாட்டின்போது கீர்த்திமிகு “பிரவாசி பாரதிய சம்மான்” விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகிறது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அவர்கள் பல்வேறு துறைகளில் ஆற்றிய பங்களிப்புகளை அங்கீகரித்து கௌரவிப்பதற்கே இந்த விருது வழங்கப்படுகிறது.

இதுவரையில் ஸ்ரீகிருஷ்ணா கோர்ப்பரேசன் தலைவரும் கார்சன், குழுமத்தின் பணிப்பாளருமான மனோ செல்வநாதனே இந்த விருதைப் பெற்ற இலங்கையராக விளங்குகிறார். அதனால் தங்களது துறைகளில் சாதனைகள் படைத்த மேலும் பல இலங்கையர்களுக்கு விருது வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வந்தது. இவ்வாறு வலியுறுத்தியவர்களில் மலையக மக்கள் முன்னணியின் காலஞ்சென்ற தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் குறிப்பிடத்தக்கவர். இப்போது அதன் தலைவர் வி.இராதாகிருஷ்ணன் அவ்வாறு கோரிக்கை விடுத்துவருகின்றார்.

இத்தடவை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் ஒப் சிலோன் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் கோபியோ இலங்கை அமைப்பின் தலைவருமான சிவகுமார் நடேசனுக்கு 'பிரவாசி பாரதிய சம்மான்” விருது வழங்கப்படவிருக்கிறது.

இந்தூர் மகாநாட்டில் பங்குபற்றும் பேராளர்கள் ஜனவரி 26 நடைபெறவிருக்கும் இந்திய குடியரசு தினக்கொண்டாட்டங்களிலும் பங்கேற்க வாய்ப்பிருக்கிறது.



மகாநாட்டின் முதல் நாள் “இளைஞர் பிரவாசி பாரதிய திவாஸ்” வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரினால் ஆரம்பித்து வைக்கப்படும். தொடக்கவுரையை மத்திய இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் அநுராக் சிங் தாகூர் நிகழ்த்துவார். மத்தியப்பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌகானும் அவுஸ்திரேலிய பாராளுமன்ற உறுப்பினர் சனீட்டா மஸகாரினாஸும் கௌரவ அதிதிகள் என்ற வகையில் சிறப்புரைகளை நிகழ்த்துவர். இந்த ஆரம்ப கூட்டத்தொடரில் “புத்தாக்கம் மற்றும் நவீன தொழில்நுட்பவியலில் புலம்பெயர் இந்திய சமூக இளைஞர்களின் வகிபாகம்” குறித்து கலந்துரையாடப்படும்.

இந்தியாவின் மென்சக்தியைப் பயன்படுத்துதல், சிறு தொழில்கள், உணவு தயாரிப்பு மற்றும் படைப்பாற்றல் ஊடாக நல்லெண்ணத்தை பரப்புதல், இந்திய தொழிற்படையின் உலகளாவிய நகர்வை மேம்படுத்துதல் புலம்பெயர்ந்த இந்தியர்களின் பங்கு, தேசத்தின் கட்டமைப்பில் அனைவரையும் உள்வாங்கும் அணுகுமுறை ஊடாக புலம்பெயர்ந்த பெண் தொழில் முயற்சியாளர்களின் வலுவாற்றலை பயன்படுத்திக்கொள்ளல் ஆகிய தலைப்புக்களில் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

இரண்டாம் நாள் கௌரவ அதிதியாக கலந்துகொள்ளும் சூரினாம் குடியரசின் ஜனாதிபதி சந்திரகிபெர்சாட் சன்டோக்கியும் பிரதம அதிதியான கயானா கூட்டுறவு குடியரசின் ஜனாதிபதி கலாநிதி முஹமட் இர்ஃபான் அலியும் உரை நிகழ்த்துவார்கள்.

முக்கிய உரையை இந்தியாபிரதமர் மோடி நிகழ்த்துவார். அதைத் தொடர்ந்து 'இந்திய சுதந்திரப் போராட்டத்துக்கு புலம்பெயர் இந்திய சமூகத்தின் பங்களிப்பு” என்ற தொனிப்பொருளிலான கண்காட்சியை பிரதமர் திறந்துவைப்பார்.

இரண்டாம் நாளின் முதற் கூட்டத்தொடர் “இந்திய சுகாதாரப் பராமரிப்பு, அம்றிற் கால் மற்றும் நோக்கு 2047 மேம்படுத்தலுடன்” தொடர்புடைய விவகாரங்களை கையாள ஒதுக்கப்பட்டுள்ளது.

மாலை நேர கூட்டத்தொடரில் ஜி 20 நாடுகளின் இந்திய தலைமைத்துவம் குறித்து ஆராயப்படும். ஜி 20 தலைமை என்ற வகையில் இந்தியாவின் உலகளாவிய அணுகுமுறை பற்றி ஜி20 பிரதம ஒருங்கிணைப்பாளர்களான ஹர்ஷவர்தன் சிறிங்லாவும், அமாதாப் காந்தும் உரையாற்றுவர். பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றிவரும் வெளிநாட்டு இந்தியர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

இவர்கள் இந்தியாவுடனான தொடர்புகளையும் இந்தியாவின் புகழையும் மேம்படுத்தவும் இந்திய வம்சாவளி மக்களின் வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்புச் செய்தவர்கள். முன்னென்றும் இல்லாதவாறு இந்திய மத்திய அரசின் கவனம் அண்மைக்காலமாக வெளிநாடுகளில் சிறப்பாக பணியாற்றும் இந்திய வம்சாவளியினர் மீது திரும்பியிருக்கிறது. 2003ஆம் ஆண்டு தொடக்கம் 2021ஆம் ஆண்டில் இறுதியாக நடைபெற்ற மகாநாடுவரை 269 வெளிநாட்டு இந்தியர்கள் விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

இறுதிநாள் 2023 பிரவாசி பாரதிய சம்மான் விருதுகள் இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவினால் வழங்கப்படும். பிரியாவிடை உரையையும் அவரே நிகழ்த்துவார்.

குமார் நடேசன் தலைமையில் இந்திய வம்சாவளி மக்கள் மகாசபையின் கோபியோ இலங்கைப்பிரிவின் இருபது பேராளர்களைக் கொண்ட குழு 17வது பிரவாசி பாரதிய திவாஸ் மகாநாட்டில் பங்கேற்கிறது. இந்த மகாநாட்டை தொடர்ந்து பல வரப்பிரசாதங்கள் விருதுகள் பலருக்கு கிடைக்க வாய்ப்பிருப்பதாக வெளிநாடுவாழ் இந்திய பிரசைகளின் இலங்கை உறுப்பினர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள்.

உலகளாவிய ரீதியில் வாழும் 2 கோடி 80 இலட்சம் இந்திய வம்சாவளி மக்களின் நலவுரிமைகளையும் அபிலாசைகளையும் மேம்படுத்துவதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சு வெளிநாட்டு இந்தியர் விவகாரங்களைக் கவனிக்கவென்று தனியான பிரிவை அமைத்துச் செயற்படுத்திவருகிறது. மத்திய அரசின் வெளிநாடு வாழ் இந்தியர் விவகாரத் துறை வெளியிட்டிருக்கும் புள்ளிவிபரத்தின் படி, உலகெங்கிலுமுள்ள 208 நாடுகளில் ஏறத்தாழ 3.32 கோடி இந்தியர்கள் வாழ்கிறார்கள். அவர்களில் 70% பேர் ஒன்பது நாடுகளில் இருப்பதாகப் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. அமெரிக்கா (46.6 இலட்சம்), சவுதி அரேபியா (40 இலட்சம்), மலேசியா (24 இலட்சம்), ஐக்கிய அரபு அமீரகம் (28 இலட்சம்) என்று வெளிநாடுவாழ் இந்தியர்கள் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

வெளிநாட்டில் குடியேறிய இந்தியர்கள், அவர்கள் குடியேறிய நாடுகளை மேம்படுத்தி இருக்கிறார்கள் என்பது மட்டுமல்லாமல், அந்த நாடுகளில் தங்களது ஆளுமையை நிலைநாட்டியும் இருக்கிறார்கள். ஏறத்தாழ 11 நாடுகளில், 28 இந்திய வம்சாவளியினர் அந்த நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்திருக்கிறார்கள். சிங்கப்பூரின் நாயர், நாதன், மோரீஷஸ் தீவின் பிரவீண் ஜகந்நாத், மலேசியாவின் மகாதீர் முகமது, போர்ச்சுகல் நாட்டின் அந்தோனியோ போஸ்டோ, நெதர்லாந்தின் லியோ வரத்கர் என்று ஒரு மிகப்பெரிய பட்டியலே இருக்கிறது.


அதுமட்டுமல்லாமல் எத்தனையோ இந்திய வம்சாவளியினர் பல்வேறு நாடுகளில் அமைச்சர்களாகவும், அரச உயர் பதவிகளிலும், ராஜ தந்திரிகளாகவும், நீதிபதிகளாகவும் இருந்திருக்கிறார்கள். சுமார் 160 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 25க்கும் அதிகமான மாநகர மேயர்கள் என்று 20க்கும் அதிகமான நாடுகளில் இந்திய வம்சாவளியினர் பதவி வகித்திருக்கின்றனர்.

இந்தியாவில் உள்ள பின்தங்கிய சமூகங்களின் கல்வி, பொருளாதார மேம்பாட்டுக்கான பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தும் வெளிநாடுகளில் வாழும் இந்திய இளம் தலைமுறையினர் தமது பண்பாடுகளைப் பற்றி தெளிவாக அறிந்துகொள்ளும் நோக்கிலும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் பல திட்டங்களைச் செயற்படுத்திவருகிறார்.

இந்திய அரசு பல சந்தர்ப்பங்களில் இலங்கையில் வாழும் சுமார் பதினாறு இலட்சம் இந்திய வம்சாவளி மக்களை இலங்கைத் தமிழர்களுடன் இணைத்துப்பார்த்து இரு சாராரையும் ஒன்றாகக் கணிக்க முற்பட்டது. இந்த தவறான அணுகுமுறை பற்றி பல தடவைகள் இந்திய மத்திய அரசிடம் நமது முன்னாள் தலைவர்களான அமரர்கள் சௌமியமூர்த்தி தொண்டமான் பெரியசாமி சந்திரசேகரன் மற்றும் பி.பி. தேவராஜும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இலங்கைத் தமிழர்களை மதிக்கின்ற அதேவேளை எமது தனித்துவத்தை இந்திய அரசு அங்கீகரிக்கவேண்டும் என்பதோடு பிரதமர் மோடியின் வழிநடத்தலின் கீழ் நடைபெறும் வெளிநாடு வாழ் இந்தியர்களை ஒன்றிணைக்கும் 17வது பிரவாசி பாரதிய திவாஸ் மகாநாடு உலகளாவிய பரந்து வாழும் இந்திய வம்சாவளி மக்களின் நலன்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்து திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பது இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி சமூகத்தவர்கள் இரட்டைக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும் போது இந்திய தூதரகத்தினால் கோரப்படும் ஆவணங்கள் பலவற்றை அவர்களால் சமர்ப்பிக்க முடியாமல் உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் அவர்களால் முடியாத ஆவணங்களை தூதரகம் கோருகிறது.



**காயத்ரி விக்கிரமசிங்க**
கொழும்பு மாநகரசபை உறுப்பினர்

# குழந்தைகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகிறதா இன்றைய குடும்ப சூழல்?



**பலருக்கு அன்றாட நெருக்குவாரங்கள் நிறைந்த வாழ்க்கையில் வசந்தத்தைத் தருபவர்கள் குழந்தைகளே. குழந்தைகள் வருங்கால சமுதாயத்தின் ஆணி வேர். ஏராளமாக பணமிருந்தும் மழலைச் சொல் கேட்க தவம் இருப்போர் ஒரு பக்கம், காது குளிர அந்தச் சொற்களை கேட்க வாய்ப்பிருந்தும் வறுமை–யால் வளர்க்க வழியின்றி அந்த வாய்ப்பைத் தவறவிடுவோர் ஒருபக்கம், தங்களின் கவனயீனத்தால் குழந்தைகளைப் பறிகொடுத்துவிட்டு தவிப்போர் ஒருபக்கம் எனத் தடுமாறுவோர் பலர். அந்தவகையில் கடந்த வாரங்களில் நடந்த குழந்தை–களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் நெஞ்சை பதைபதைக்க வைத்தன.**







யாழ். வத்திராயனில் பெற்ற தாயால் தெருவில் விடப்பட்ட குழந்தையொன்று நாய்கள் குதறிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தது.

அவிசாவளை பகுதியில் தாயொருவர் தனது மூன்று மாத குழந்தையை கட்டிலில் படுக்கவைத்து விட்டு 13 வயதான மூத்த மகளிடம் தேனீர் தயாரிப்பதற்கு ஹீட்டரில் தண்ணீரை கொதிக்கவைக்குமாறு கூறிவிட்டு, கிராமத்தில் நடந்த சம்பவமொன்று தொடர்பில் அறிவதற்காக பக்கத்து வீட்டுக்குச் சென்றுள்ளார். இதன்போது 13வயது சிறுமி குழந்தை படுத்திருந்த கட்டிலில் அருகிலிருந்த மேசையில் ஹீட்டரில் தண்ணீரை கொதிக்க வைத்துவிட்டு அவளும் வெளியில் சென்று நெடுநேரமாகியும் திரும்பிவரவில்லை. ஹீட்டரில் வெப்பம் அதிகமாகி தீப் பிடித்து குழந்தை படுத்திருந்த கட்டிலும் சேர்ந்து எரிந்து அந்த பிஞ்சுக் குழந்தையும் தீயில் கருகியது.

அடுத்தது, கம்பஹா லொலுவாகொட பிரதேசத்தில் இளம் பெண்ணொருவர் தனது இரண்டு குழந்தைகளுக்கும் விஷத்தை கொடுத்துவிட்டு தானும் விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தது. கம்பஹா லொலுவாகொட பிரதேசத்தைச் சேர்ந்த தம்மிக்கா (32) தனக்கு சொந்தமான வீட்டில் தனது கணவன், இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வந்தாள். அவளுக்கு மூத்தது 8 வயது பெண் குழந்தை, இளையது 5 வயது ஆண் குழந்தை. கணவன் கூலித் தொழிலாளி. இவருடைய வருமானத்தில் தான் குடும்பச்சக்கரம் நகர்ந்தது. எனினும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, பொருட்கள் தட்டுப்பாடு, விலையேற்றம் காரணமாக குடும்பத்தின் வருமானம் குறைவடைய அவர்களிடையே வறுமையும் பஞ்சமும் தலைவிரித்தாடியது. கடன் மேல் கடன் வாங்கினார்கள். அதுவும் வட்டிக்கு கடன் வாங்கினார்கள். வட்டியை பற்றி நினைக்கவில்லை. பணம் கிடைத்தால் போதும் என்று வாங்கியமையால் இறுதியில் வட்டியைக் கூட ஒழுங்காக செலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. வட்டிக்காரர்கள் வீட்டுக்கு முன்னால் வந்து கத்தினார்கள். இதனால் தம்மிகாவும் குழந்தைகளும் அதிக மன உளைச்சலுக்கு ஆளானார்கள். தம்மிகா செய்வதறியாது தவித்தாள். இறுதியில் யாரும் எதிர்பாராத பாரதூரமான நிரந்தரமான முடிவொன்றை அவள் தேடிச் சென்றாள். குடும்ப பிரச்சினைகள் தாய்ப் பாசத்தை மறைத்தது. தானும் விஷம் அருந்தி இரண்டு குழந்தைகளினதும் உயிரை மாய்க்க முடிவு செய்தாள். தாய் கொடுத்த விஷத்தை குழந்தைகளும் அருந்தினர்.

விஷம் குடித்து மயங்கி கீழே விழுந்த தாயையும் சகோதரியையும் கண்ட 5 வயது சிறுவன் உடனடியாக பக்கத்து வீட்டுக்கு ஓடி சென்று விடயத்தை கூற, அக்கம் பக்கத்தினர் வந்து அவர்களை சோதித்தபோது அவர்கள் விஷம் அருந்தியுள்ளமை தெரியவந்தது. உடனடியாக இரண்டு பிள்ளைகளையும் தாயையும் மீரிகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்க நடவடிக்கை எடுத்தனர். இதனையடுத்து கவலைக்கிடமான நிலையிலிருந்த மூவரும் மேலதிக சிகிச்சைக்காக வட்டுபிட்டியால ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு பின்னர் இரண்டு குழந்தைகளும் கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

எனினும் துரதிஷ்டவசமாக கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 5 வயது சிறுவன் பேஷான் சசிந்தா உயிரிழந்துள்ளதுடன், வட்டுபிட்டிவல அடிப்படை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தம்மிக்கா கடந்த செவ்வாய்க்கிழமை (03) பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

அவரது 8 வயது மகள் உயிருக்குப் போராடிய நிலையில் கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார். இச்சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த தம்மிக்காவின் சகோதரர், தங்கையின் கணவர் மேசன் வேலை செய்பவர். அமைதியான சுபாவமுள்ளவர். அவரிடம் எந்த கெட்ட பழக்கமும் கிடையாது. தங்கை ஏன் இப்படியொரு முடிவெடுத்தார் என்று தெரியவில்லை. அவள் அதிக கடன் வாங்கியிருந்தாள் என்று தெரியவருகின்றது என கண்ணீருடன் தெரிவித்தார்.

ஐந்து வயது சிறுவனின் பாலர் பாடசாலை நண்பனின் தாய் கருத்து தெரிவிக்கையில், பாலர் பாடசாலை கட்டணத்தை கூட செலுத்துவதற்கு முடியாத நிலையிலேயே தம்மிக்கா இருந்தார். என்னிடமும் சில சமயங்களில் செலவுக்கு பணம் வாங்கியிருக்கின்றார். ஆனால் அது பெரியவிடயமல்ல. ஏன் குழந்தைகளுக்கு விஷத்தை கொடுக்க வேண்டும்? எப்படி அவருக்கு மனம் வந்தது? பிள்ளைகளை வளர்க்க வழி இல்லாவிட்டால் குழந்தைகளில் ஒருவரை எங்களிடம் ஒப்படைத்திருந்தால் கூட நாங்கள் வளர்த்திருப்போம் என கண்ணீருடன் அவர் தெரிவித்தார்.

அயலவர்கள் தெரிவிக்கையில், அதிக கடனே தம்மிக்காவின் இந்த முடிவுக்கு காரணமாக இருக்கலாம். அவர்கள் வசித்த இந்த வீடும் அடமானம் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

எந்தப் பிரச்சினைக்கும் தற்கொலை ஒரு முடிவல்ல. அதனாலேயே தற்கொலை எண்ணங்கொண்டோருக்கு அந்த எண்ணத்தை மாற்றும் முயற்சியல் பல்வேறு அமைப்புகள் தற்போது இயங்கி வருகின்றன.

(20ஆம் பக்கம் பார்க்க)



வசந்தா அருள்ரட்ணம்...


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர அபிவிருத்தி அதிகாரசபை
## முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP)



**பன்னிப்பிட்டிய, தெபானமவில் குடியிருப்பு அபிவிருத்தித் திட்டம்**

| | | |
|---|---|---|
| காணி அளவு | : | 02A- 02R- 23.25P |
| குத்தகைக் காலம் | : | 99 வருடம் |
| அடிப்படை பெறுமதி | : | ரூபா 784,000,000/- |
| விலைமனு பிணைமுறி | : | ரூபா 10,000,000/- |
| விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு | : | 2023.03.01 |
| விலைமனு நிறைவு | : | 2023.03.29 |



**நுவரெலியா கிரெகரி பூங்காவில் கேளிக்கைப் பூங்கா அபிவிருத்தித் திட்டம்**

| | | |
|---|---|---|
| காணி அளவு | : | 10A- 03R -28P |
| குத்தகைக் காலம் | : | 30 வருடம் |
| வருடாந்த குத்தகை அடிப்படையில் வாடகை | : | ரூபா 17,500,000/- |
| விலைமனு பிணைமுறி | : | ரூபா 10,000,000/- |
| விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு | : | 2023.02.27 |
| விலைமனு நிறைவு | : | 2023.03.27 |



**கொழும்பு 11 ஒல்கொட் மாவத்தையில் Chalmers Granaries காணிக்கான அடுக்குமாடி கலப்பு அபிவிருத்தித் திட்டம்**

| | | |
|---|---|---|
| காணி அளவு | : | 09A- 02R- 31.75P |
| குத்தகைக் காலம் | : | 99 வருடம் |
| அடிப்படை பெறுமதி | : | ரூபா 25,143,280,000/- |
| விலைமனு பிணைமுறி | : | ரூபா 250,000,000/- |
| விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு | : | 2023.03.03 |
| விலைமனு நிறைவு | : | 2023.04.03 |

**நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் சிறந்த முதலீட்டு வாய்ப்பு**



**ஜாஎல, ஏகலவில் ஏற்பாட்டியல் வசதிகள் மற்றும் இணை மேம்பாட்டுத் திட்டம் (LFADP)**

| | | |
|---|---|---|
| காணி அளவு | : | 12A- 00R- 00P |
| குத்தகைக் காலம் | : | 50 வருடம் |
| அடிப்படை பெறுமதி | : | ரூபா 1,214,200,000/- |
| விலைமனு பிணைமுறி | : | ரூபா 18,000,000/- |
| விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு | : | 2023.03.02 |
| விலைமனு நிறைவு | : | 2023.03.30 |



**தெமட்டகொடவில் அடுக்குமாடி கலப்பு அபிவிருத்தித் திட்டம் (காணி ஒற்றைக் கூறு அல்லது வேறாக இரட்டைக் கூறாக ஒதுக்கப்படும்)**

| | திட்டத்தில் கூறு A இல. 4392A | திட்டத்தில் கூறு A1 இல. 5661 | திட்டத்தில் கூறு A2 இல. 5661 |
|---|---|---|---|
| காணி அளவு | 3A-2R-24.59P | 1A-3R-7.59P | 1A-3R-17P |
| குத்தகைக் காலம் | | 99 வருடம் | |
| அடிப்படை பெறுமதி (ரூபா) | 3,086,000,000/- | 1,411,000,000/- | 1,581,000,000/- |
| விலைமனு பிணைமுறி (ரூபா) | 31,000,000/- | 15,000,000/- | 16,000,000/- |
| விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு | | 2023.02.28 | |
| விலைமனு நிறைவு | | 2023.03.28 | |

பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, 6ஆவது மாடியில் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு அரச வரிகள் உட்பட இலங்கை ரூபா ஒரு இலட்சம் (இ.ரூபா 100,000/-) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023 ஜனவரி 12ஆம் திகதி தொடக்கம் 2023 மார்ச் 10ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் 1, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 8ஆவது மாடி, ஆதன முகாமைத்துவ மற்றும் அபிருத்திப் பிரிவிலிருந்து எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களுக்கு (முதலீடுகள்/ அபிவிருத்திகள்) RFP ஆவணத்தை கொள்வனவு செய்யலாம்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பத்தரமுல்லை, "செத்சிறிபாய" கட்டம் 1, 9ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபையில் மு.ப. 10.00க்கு மேல் குறிப்பிடப்பட்ட திகதியில் இடம்பெறும்.

முன்மொழிவுகளை ஏற்பது மேல் குறிப்பிடப்பட்ட திகதியில் பி.ப. 02.00க்கு நிறைவடையும் என்பதோடு மேல் குறிப்பிடப்பட்டவாறு நேரம் முடிவுற்ற உடன் பத்தரமுல்லை, சுஹுருபாய, 18ஆவது மாடி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு பணிப்பாளர் நாயகத்தின் (தொழில்நுட்பம்) அலுவலகத்தில் தொழில்நுட்ப முன்மொழிவு திறக்கப்படும். விலைமனு திறக்கப்படும் நேரத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதியால் பங்கேற்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு:
பணிப்பாளர் (ஆதன அபிவிருத்தி),
ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவு
நகர அபிவிருத்தி அதிகாரசபை, 8ஆவது மாடி,
செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்லை.

தொலைபேச: 011 2875921 அல்லது 011-2875916-20
நீடிப்பு: 2960 - 2968
கைபேசி: 071-0886743, 077-0399645, 070-2988625
076-7661080, 076-3326843
தொலைநகல்: 011-2875900
மின்னஞ்சல்: directorred@uda.gov.lk
இணையதளம்: www.uda.gov.lk

தலைவர், நிலையான அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு (SCANC),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 17ஆவது மாடி, சுஹுருபாய, பத்தரமுல்லை.

# சிறப்பான சேவையாற்றிவரும் தெல்லிப்பளை வைத்தியசாலை

அது நத்தார் வார இறுதியில் ஒரு தினமாகும். நத்தார் பண்டிகை நிமித்தம் நாம் செல்லும் வழமையான பயணத்தில் வழக்கம் போல காங்கேசன்துறை "பனை நிழல்" (தல் செவன) ஹோட்டலில் கழிந்தது. காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் நத்தார் பண்டிகையின் குதூகலத்தையும், மகிழ்ச்சியையும் யாழ். குடாநாட்டில் உணர முடிந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து 17 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காங்கேசன்துறையானது இலங்கையின் மிக அழகான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். எனினும் அங்கு வசதிகள் மிகவும் குறைவாகும். உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு சுப்பர் மார்க்கட்டுக்கள் முதல் சுகவீனமடையும் போது சிகிச்சைக்கான மருத்துவ நிலையங்களும் காங்கேசன்துறைக்கு அருகில் இல்லை.

இவ்வாறான தேவைகளுக்காக சுமார் 17 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள யாழ்ப்பாணத்திற்கு செல்ல வேண்டும். பல வருடங்களாக யாழ்ப்பாணத்திற்கு சென்று வந்தாலும் ஏற்படும் சுகவீனங்களுக்காக வைத்தியசாலை ஒன்றை தேடிக் கொள்ள வேண்டிய தேவை இதற்கு முன் எமக்கு ஏற்படவில்லை. டிசம்பர் 27ஆம் திகதியும் யாழ்ப்பாண பயணத்தை முடித்துக் கொண்டு காங்கேசன்துறையில் இருந்து கொழும்பை நோக்கி வெளியேறுவதற்கு ஆயத்தமான எமக்கு எதிர்பாராத வகையில் இக்கட்டான ஒரு சூழ்நிலைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எம்மோடு வந்திருந்த ஒருவருக்கு திடீரென சுகவீனம் ஏற்பட்டது. நோயாளியின் உடலில் தேங்கிய நீர் குறையும் வரைக்கும் எதுவும் செய்ய முடியாமல் திணறினோம்.



காங்கேசன் துறையிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு நோயாளியை கொண்டு செல்லுமாறு "பனை நிழல்" (தல் செவன) ஹோட்டல் நிர்வாகம் எமக்கு அறிவுறுத்தியது.

தெல்லிப்பளை என்பது யாழ்ப்பாண தமிழ் மக்கள் வாழும் நகரமாகும். தெல்லிப்பளை நகரிலிருந்து தெற்காக திரும்பிச் செல்லும் போது இந்த சிறிய வைத்தியசாலை அமைந்துள்ளது. இந்த வைத்தியசாலையில் 99 வீதமானவர்கள் தமிழர்களே, சிங்கள மொழியை பேசக்கூடிய மிகச் சொற்பமானவர்களே இருந்தனர். தொலைவிலுள்ள யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு நோயாளியை கொண்டு செல்ல முடியாத போதும் விருப்பமின்றியே இந்த வைத்தியசாலைக்கு நோயாளியை கொண்டு செல்லும் நிலை எமக்கு ஏற்பட்டது. வைத்தியசாலைக்குச் செல்வதற்கு முன்னர் அந்த வைத்தியசாலையைப் பற்றி நமக்குள் இருந்த பிம்பம் நாம் எதிர்பார்த்திருக்காத வகையில் மாறியது. மருத்துவமனைக்குள் நுழைவதற்கு முன் நோயாளிக்கான படுக்கை, சக்கர நாற்காலிகள் தயார் செய்யப்பட்டன. அனைத்தும் மிகச் சிறப்பான முறையில் இடம் பெற்றன. மருத்துவமனை வாசலில் இருக்கும் காவலாளி முதல் மருத்துவமனை பணிப்பாளர் வரை, ஜாதி, மத பேதமின்றி, விரைவான சேவையை வழங்குவதில் அக்கறை காட்டினார்கள்.

வெளி நோயாளர் பிரிவின் வைத்தியர்கள் நோயாளிக்கு விரைவான சிகிச்சைகளை வழங்கினர். வார்டில் அனுமதிக்கப்பட்ட நோயாளி, மருத்துவ மற்றும் தாதியர்களின் கண்காணிப்பில் இருக்க வேண்டும் எனக் கருதப்பட்டதால், அவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். எல்லா பிரிவுகளிலும் கடமையாற்றிய வைத்தியர்கள் மனிதநேயமிக்கவர்களாகவே இருந்தார்கள்.

இங்கு நோயாளிகளைப் பற்றி விசாரிக்கும் போதும், நோயாளிக்கருகில் இருக்கும் போதும் ஏனைய வைத்தியசாலைகளை போலன்றி அன்பாகவே நடந்து கொண்டார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் எமது கைகளில் பணம் இருக்க வில்லை. நோயாளிக்கு தேவையான சில பொருட்களை முன்னால் உள்ள பாமசியில் வாங்கி வருமாறு கூறியதோடு அதற்கான பணத்தையும் அவர்களே எமக்கு வழங்கினார்கள்.

தெல்லிப்பளை வைத்தியசாலை என்பது தெல்லிப்பளையில் அமைந்துள்ள தள வைத்தியசாலையாகும். அது யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாகாணத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இயங்கினாலும், இவ்வாறான பிரதேசத்தில் இந்தளவுக்குச் சேவைகளை வழங்கும் வைத்தியசாலை இருக்கிறதா என்பது எவராலும் நம்ப முடியாத ஒன்றாகும்.

2010ஆம் ஆண்டில் இந்த வைத்தியசாலையில் 102 கட்டில்கள் இருந்துள்ளன. தற்போது அங்கு 17 வார்ட்டுக்கள் உள்ளன. அங்கு பணியாற்றுபவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ் வைத்தியர்களும், தாதியர்கள் மற்றும் பணியாளர்களுமாகும். அங்கு சிங்கள வைத்தியர்கள் மற்றும் ஏனைய பணியாளர்கள் சொற்பளவிலேயே உள்ளனர். இவர்கள் அனைவராலும் மேற்கொள்ளப்படுவது வரையறையற்ற சேவையாகும். நோயாளர் பரிசோதனை, வைத்திய பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் போன்றன தனியார் வைத்தியசாலைகளை விடவும் சிறப்பாகவே இடம் பெறுகின்றன. வைத்தியசாலை வார்ட்டுக்கள் அனைத்தும் சுத்தமாக இருப்பதோடு எல்லா நோயாளிகளும் எவ்வித வேறுபாடுகளுமின்றி சரிசமமாகவே கவனிக்கப்படுகின்றார்கள். வார்ட்டுக்குப் பொறுப்பான பிரதான வைத்தியர்கள் எல்லா நேரமும் வார்ட்டில் நோயாளிகளோடு இருப்பது ஏனைய வைத்தியசாலைகளில் காணக் கிடைக்காத ஓர் அரிய காட்சியாகும்.

பொதுவான மருத்துவ சிகிச்சையைப் போன்று, வைத்தியசாலையின் நீரிழிவு, பல் சிகிச்சை, குடும்பக் கட்டுப்பாடு, மகப்பேற்று சிகிச்சை (மகப்பேறு), புற்றுநோய், குழந்தை நோய்கள், மனநோய் மற்றும் காசநோய் உள்ளிட்ட பல்வேறு சுகாதார சேவைகள் இந்த சிறிய தள வைத்தியசாலையில் மிகவும் சிறப்பான வகையில் வழங்கப்படுகின்றது. மிகவும் கஷ்டமான நிலையில் இருந்த நோயாளி மறுநாள் கட்டிலில் இருந்து இறக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி நீண்ட பயணத்தை மேற்கொள்ளும் அளவுக்கு இந்த வைத்தியசாலையின் சிகிச்சை சிறப்பு மிக்கதாகும். வைத்தியசாலையில் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணரான எம். ரேமன்ஸ், சிகிச்சைப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர்களான எம். கல்பனா மற்றும் பீ. நியான், பிரதான தாதி உத்தியோகத்தர் பீ. திலகவதி, பயிற்சி வைத்தியர்களான என். நிசன்சலா, ரஜிகரன் மற்றும் பிரதான தாதி சகோதரி என். நாராயணன், தாதியர்களான எஸ். சிவகரன், ஆர். துலசிதரன் மற்றும் கே. டி. சூரியாராஞ்சி உள்ளிட்ட பணியாளர்கள், மற்றும் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனைத்து பணியாளர்களுக்கும் எமது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**சுபாஷிணி ஜயரத்ன**
தமிழில் **எம்.எஸ்.முஸப்பிர்**

# மாற்று மோதிரம் 'மணப்பெண் அலங்கார கண்காட்சி' இம்மாதம் 10ஆம் திகதி கலதாரி ஹோட்டலில்

அஷ்ரப் ஏ சமத்



அருந்ததி நிறுவனம் இம்மாதம் 10ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்துள்ள மாற்று மோதிரம் மணப்பெண் அலங்கார மற்றும் கேக் தயாரிப்பு கண்காட்சி நிகழ்வு தொடர்பான ஊடக மாநாடு கலதாரி ஹோட்டலில் கடந்த 4ஆம் திகதி நடைபெற்றது. இந் நிகழ்வில் அருந்ததி நிறுவனப் பணிப்பாளர் செல்வி மேகலா கருத்துத் தெரிவிக்கையில்,





கொழும்பு, மட்டக்களப்பு, கிளிநொச்சி, கண்டி, வவுனியா, கம்பஹா, போன்ற பிரதேசங்களில் உள்ள மணப்பெண் அலங்கார நிபுணர்கள், கேக் தயாரிப்பாளர்கள், ஆடைவடிவமைப்பாளர்கள் ஆகியோரின் திறன்களை மேலும் வலுவூட்டி அவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கவே கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் மாற்று மோதிரம் மீண்டும் இவ்வருடமும் மேடையேற்றப்படுகின்றது.

கடந்த ஆண்டு மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெற்ற கண்காட்சிகளால் அதிகளவான பெண்கள் பிரபலம் அடைந்தனர். நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரம், மற்றும் கொவிட் 19 பிரச்சினைகளால் இத்துறை சார்ந்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

தற்பொழுது பல்வேறு பெண்கள் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு அதற்கான டிப்ளோமா, என்.வி.கியு போன்ற அங்கீகாரங்களைப் பெற்று வெளிநாடுகளுக்குச் சென்று வடிவமைப்புத்துறையில் டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்புகளைப் பெற்றுள்ளனர் "

"அருந்ததி நிறுவனம் ஏற்கனவே கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, போன்ற பிரதேசங்களில் ஐந்து முறை இக் கண்காட்சியை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

எமது மாற்று மோதிரம் திட்டம் மட்டுமே இலங்கையில் உள்ள மணப்பெண் மற்றும் கேக் வடிவமைப்பாளர்களை ஒரே கூரையின் கீழ் கொண்டு வருகின்றது. அத்துடன் இம்முறை 50க்கும் மேற்பட்டவர்களது வடிவமைப்புக்களை மேடையேற்றுகின்றோம்." என்றார்.

இவ்வூடக மாநாட்டில் மாற்று மோதிரம் மணப்பெண் அலங்கார நிகழ்வின் பிரதம இணைப்பாளரும், ஆலோசகருமான கந்தசாமி கருணாகரன், எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எஸ். செந்தில்நாதன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



சென்னையிலுள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி வெங்கடேஸ்வரன், சிவகுமார் நடேசனை 05.01.2023 அன்று சந்தித்தார். இந்த சந்திப்பின்போது பிரதி உயர்ஸ்தானிகர், இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவால் வழங்கப்படவுள்ள பிரவாசி பாரதிய சம்மான் 2023 விருதைபெறவுள்ள சிவகுமார் நடேசனுக்கு மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்தார்.











ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவதரித்து 200 ஆண்டு நிறைவு விழாவும் குருபூஜையும் கடந்த 31ஆம் திகதி சனிக்கிழமை காலை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சின்னத்துரை தனபாலா தலைமையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக உயர் நீதிமன்ற நீதியரசர் சி. துரைராஜா கலந்து சிறப்பித்தார். ஆறுமுகநாவலர் போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற்ற மாணவிக்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்ட நீதியரசர் சி. துரைராஜா பரிசு வழங்குவதையும், கலந்துகொண்ட சிறப்புரையாளர் தி. செல்வமனோகரன், தில்லை நடராஜா, வைத்திய கலாநிதி கி.பிரதாபன், வே. கந்தசாமி, பணிப்பாளர். ய. அநிருத்தனன் மற்றும் சிறப்பதிகளையும் காணலாம்.



தியாகராஜர் கலைக்கோவில் மாணவி செல்வி. பிரியங்கா குகப்ரியாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் இம்மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவர் நாட்டிய கலைமாணி பவானி குகப்பிரியாவின் மாணவியும், திரு. திருமதி குகப்பிரியா பவானியின் மகளும், இறைபதம் அடைந்த ஏகாம்பரம், ஈ. சுதர்ஷாம்பிகை, கே. தியாகராஜா, ரி. ரஞ்சிதம் ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார்.

# எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும் உலகளாவிய திறனாய்வுப் போட்டி - 2023

தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தனின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

**15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.**

முதலாம் பரிசு இலங்கை ரூபாய் 30,000/=
இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய் 25,000/=
மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய் 20,000/=
நாலாவது பரிசு இலங்கை ரூபாய் 15,000/=
ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய் 10,000/=
10 பாராட்டுப் பரிசுகள் இலங்கை ரூபாய் தலா 5,000/=

குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1500 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது. மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும்.

உங்கள் திறனாய்வு கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 31.03.2023

போட்டி முடிவுகள் 2023 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: kurufanclub@gmail.com
இணையம்: kurunovelstory.blogspot.com
<https://canadiantamilsliterature.blogspot.com



# லெனின் மதிவானம்: இளமை-புலமை-இனிமை நூல் வெளியீடும் நினைவேந்தலும்

மலையகக் கல்வியாளராகவும், கல்வி நிர்வாகியாகவும், இலக்கிய விமர்சகராகவும் பரிணமித்து நாடறிந்த ஆளுமையாகத் திகழ்ந்த லெனின் மதிவானம் மறைந்து ஒரு மாத நிறைவில் அவரது நினைவாக லெனின் மதிவானம் இளமை – புலமை இனிமை எனும் நினைவுத்தொகுப்பு நூல் வெளியீடும் நினைவேந்தலும் அண்மையில் ஹட்டன் டிக்கோயா நகரசபை மண்டபத்தில் இடம் பெற்றது.

லெனின் மதிவானம் காப்பாளராகச் செயற்பட்ட நோட்டன் வாசகர் வட்டத்திற்காக ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம் தொகுத்துள்ள இந்த நூலை பாக்யா பதிப்பகம் பதிப்பித்துள்ளது. லெனின் மதிவானத்தின் மறைவினையடுத்து அவருடனான நினைவுகளைப் பகிர்ந்து கொண்ட நாற்பது ஆளுமைகளின் ஆக்





கங்கள் இந்த நூலிலே தொகுக்கப்பட்டுள்ளதுடன் பொருத்தமான அரிய பல நிழற்படங்களையும் சேர்த்து ஒரு வரலாற்று ஆவணமாக இந்த நூல் வெளிவந்துள்ளது. மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் உபதலைவர் 'சாகித்ய ரத்ன' மு.சிவலிங்கம் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வானது லெனின் மதிவானத்தின் உருவப்படத்துக்கு அவரது துணைவியார் சசிகலா மலர் மாலையிட தாயார் தவமணிதேவி அஞ்சலி தீபமேற்ற, வருகை தந்த அனைவரும் மெழுகுவர்த்தி ஏற்றியும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்துவதாக உணர்வுபூர்வமாக ஆரம்பமானது. வரவேற்புரையை நோட்டன் வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் மு.ராமச்சந்திரன் வழங்கினார். பாக்யா பதிப்பகத்தின் நிறுவுனர் மல்லியப்புசந்தி திலகர் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

அமரர் லெனின் மதிவானம் நினைவுகளை இந்தத் தொகுப்பின் மூலம் ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம் பதிவு செய்கிறார். மலையகத்தின் முதல் பெண்மணியான மீனாட்சியம்மையின் ஆளுமையை முழுமையாக வெளிப்படுத்திய, ஆவணப்படுத்திய லெனின் மதிவானம் பெண்ணுரிமைச் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்தவர். அந்தவகையில் ஒரு பெண் ஊடகவியலாளரே முன்வந்து இந்த நூலைத் தொகுத்திருப்பது சிறப்புக்குரியது. இவரதும் சந்திரலேகா கிங்ஸ்லியினதும் ஆக்கங்களைத் தவிர ஏனைய அனைத்து ஆக்கங்களும் ஆண்களுடைதாகவிருப்பதனையும் இந்த நூலில் அவதானிக்க முடிகின்றது. லெனின் மதிவானம் எதிர்பார்த்த பெண்களின் சமூகப் பங்கேற்புக்கு மலையகப் பெண்கள் தயாராக வேண்டியதன் அவசியத்தையும் இது வலியுறுத்தி நிற்கிறது. லெனின் மதிவானத்தின் 'ஊற்றுக்களும் ஓட்டங்களும்' நூலை வெளியிட்ட பாக்யா பதிப்பகம் அவரது நினைவாக வெளிவரும் இந்த நூலையும் பதிப்பிக்கும் பாக்கியத்தை பெற்றுக்கொடுத்தமைக்காக நோட்டன் வாசகர் வட்டத்துக்கு நன்றி தெரிவிக்கிறது எனவும் தெரிவித்தார்.

நூலின் முதற்பிரதியை தொகுப்பாளர் ஜீவா சதாசிவம், நோட்டன் வாசகர் வட்டத்தின் தலைவர் மு.ராமச்சந்திரன் ஆகியோர் இணைந்து லெனின் மதிவானத்தின் தாயார் திருமதி தவமணிதேவி ஜெயராமனிடம் கையளித்தனர்.

தலைமையுரையை ஆற்றிய சாகித்ய ரத்னா மு.சிவலிங்கம், திருவள்ளுவரின் திருக்குறளை பலரும் மேற்கோள் காட்டினாலும் லெனின் மதிவானத்தின் தாய் தந்தையருக்கு அது மிகவும் பொருந்தி வருகிறது. தந்தைக்கும் தாய்க்கும் தரணியில் நல்ல பெயரைப் பெற்றுக் கொடுத்த பிள்ளையாக அவர் வாழ்ந்து மறைந்து இருக்கிறார். அவர் 50 ஆண்டு காலமே வாழ்ந்தாலும் காலத்தால் அழியாத சாதனைகளை நிகழ்த்திச் சென்றுள்ளார். இன்று அவரது நினைவுகளைப் பதிவு செய்யும் ஆவணமாக இந்த நூல் வெளியீடு செய்யப்படுவதும் அந்த வரலாற்று மனிதனுக்கு செய்யப்படும் கௌரவமே என்றும் தெரிவித்தார்.

லண்டனில் இருந்து வருகை தந்திருந்த முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பால.சுகுமார் சிறப்புரையாற்றினார். லெனின் மதிவானம் இலங்கைக் கலை, இலக்கிய உலகில், அரசியல் அரங்கில் மிகக் காத்திரமான தாக்கத்தை உருவாக்கிய எழுத்துக்குச் சொந்தக்காரர். அவர் நினைவாக ஜீவா சதாசிவம் தொகுத்துள்ள இந்த நூல் காலத்தின் தேவையாகிறது. இத்தகைய ஆளுமைகள் மறையும்போது பலநூறு முகநூல் பதிவுகள் வருகின்றன. அவை காற்றில் கரைந்துவிடாமல் அதனைத் தேடிச் சேகரித்து கணினியில் பதிவு செய்து அச்சிட்டு வெளியிடும் பணியை நானும் செய்து வருகிறேன். இலங்கையின் வடக்கு கிழக்கு களங்களைவிட மலையகத்தில்தான் இடதுசாரிய சிந்தனைகளைக்கொண்ட முற்போக்கான அரசியல் உரையாடலைச் செய்வதற்கான களம் நிலவுவதாக நான் உணர்கிறேன். அத்தகைய பல ஆளுமைகளை நான் இங்கே காண்கிறேன். லெனின் மதிவானம் அவ்வாறு வாழ்ந்து மறைந்த மலையக ஆளுமைகளில் முக்கிய மானவர் எனவும் தெரிவித்ததோடு கிழக்கிலங்கை நாட்டார் பாடல் ஒன்றுடன் உரையை நிறைவு செய்தார். அவரது கம்பீரக்குரல் சபையை அதிர்வடையச்செய்தது.







லெனின் மதிவானத்தின் தோழமைகளில் ஒருவரான கொட்டகலை ஆசிரியப் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ஜெ.சற்குருநாதன் உரையாற்றுகையில் மலையக மக்கள் ஒரு தனித் தேசிய இனம் என நிறுவுவதில் லெனின் மதிவானம் தனது ஆரம்ப காலந்தொட்டே கோட்பாட்டு ரீதியாக செயற்பட்டு வந்துள்ளார். கோட்பாட்டுப் புரிதல்களுக்கு அப்பால் நல்ல நட்புடன் பழகக்கூடியவர் லெனின். விமர்சனங்களைக் கடந்து அரசியல் அரங்கில் இயங்கியவர். அரசியலில் அமைப்புச் சார்ந்த இயக்கச் செயற்பாடுகள் முக்கியமானது போன்ற பல கருத்துக்களை முன்வைத்தார்.





கொட்டகலை ஆசிரியப் பயிற்சி கலாசாலையில் விரிவுரையாளராக பணியாற்றிய காலத்தில் லெனின் மதிவானத்தின் செயற்பாடுகள் குறித்து அந்தக் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி. சுமதி அன்பரசு நினைவுகளைப் பகிர்ந்துகொண்டார்.

லெனின் மதிவானம் இளமை புலமை இனிமை நூலின் உள்ளடக்கம் குறித்து கார்பெக்ஸ் தமிழ் வித்தியாலயத்தின் பிரதி அதிபர் ச.வில்சன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். லெனின் மதிவானத்தின் மாணவனான, ச.வில்சன் ஒரு பாடசாலை ஆசிரியராக லெனின் மதிவானம் வகுப்பறையில் எத்தகைய நட்புரீதியான அணுகுமுறைகளைக் கொண்டிருந்தார் என்பதை எடுத்துக் கூறியதுடன் அவரது நினைவாக எழுதிய கவிதையின் சில வரிகளையும் வாசித்தார்.

லெனின் மதிவானத்தின் சொந்த ஊரான காசல்ரீ தோட்டத்தைச் சேர்ந்த அவரது உறவினரான சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் முன்னாள் ஆங்கில விரிவுரையாளர் சிவஜேசுநேசன் சிறுவயது லெனின் மதிவானத்தின் இயல்புகளை பகிர்ந்துகொண்டார்.

லெனின் மதிவானத்தின் இலக்கியத் தோழமையான கவிஞர் சிராஜ் மஷ்ஹூர் தனது தோழமை அனுபவங்களை, 'ஆதிலட்சமி' எனும் மலையகம் குறித்த தனது கவிதையை வாசித்துப் பகிர்ந்துகொண்டார். உணர்வுபூர்வமான அந்தக் கவிதை ஒரு கணம் சபையை கட்டிப்போட்டிருந்தது. தனக்கும் லெனினுக்கும் எவ்வாறு உறவு ஏற்பட்டது என்பது பற்றி பேசிய அவர், மலையகம் தனது 200 வது வருடத்தில் தனது இன அடையாளம் குறித்த தீர்க்கமான உரையாடலைச் செய்து வருகின்றது. இந்தத் தருணத்தில் லெனின் மதிவானத்தின் இழப்பு துயரமானது. லெனின் மதிவானம் வாழ்ந்த காலத்தில் பதிவு செய்த அவரது சிந்தனைகள், எழுத்துக்கள் மூலம் தனது இன அடையாளத்துக்கான சிந்தனைகளையும் மலையகம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்றார்.

லெனின் மதிவானத்தின் குடும்பத்தின் சார்பாக அவரது இளைய சகோதரரும் கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதியுமான இரா.ஜெ.ட்ரொட்ஸ்கி உரையாற்றுகையில், ஓர் எழுத்தாளன் தான் எதனை எழுதுவது என்பதைத் தீர்மானிக்கும் போது இதில் ஏதாவது ஒரு வகையில் ஒடுக்கப்படும் மக்கள் கூட்டத்தின் பிரதிநிதியாக தன்னை வெளிப்படுத்தி எழுதுகின்ற போதுதான் சமூகத்துக்கு பயனுடையதாகின்றது. அல்லாதவிடத்து அவன் வரலாற்றில் குப்பைத் தொட்டிக்குள் வீசப்படுகிறான்.

மலையக உழைக்கும் வர்க்கம் ஒரு விடுதலையை வேண்டி நிற்கும் சமூகம் என்றவகையில் ஏனைய பிரதேச உழைக்கும் வர்க்கத்தோடு இணைந்து அதன் விடுதலையை சாத்தியமாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன்தான் லெனின் மதிவானம் மலையகம் என்ற எல்லையையும் கடந்து தனது இலக்கியப் படைப்புகளையும் எழுத்துக்களையும் முன்வைத்து தேசிய, சர்வதேச தளத்திற்கு சென்றார். அவரது வாழ்க்கைக் காலத்தில் அவர் ஊடாடிய ஆளுமைகள் வெளிப்படுத்திய ஆத்மார்த்தமான எழுத்துக்களை இந்த நூலில் பதிவு செய்துள்ளனர்.

அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு அதனைத் தொகுத்து வெளியிடும் ராம் - ஜீவா தம்பதியருக்கும் பதிப்பித்தளித்த பாக்கியா பதிப்பகத்தினருக்கும் இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கிய சாகித்ய ரத்ன மு.சிவலிங்கம் உள்ளிட்ட அனைத்து உரையாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன் எனறார்.

நிகழ்வுகளை தொகுப்பாசிரியர் ஜீவா சதாசிவம் தொகுத்தளித்தார். தலைமை வகித்த மு.சிவலிங்கத்துக்கு பதிப்பாளர் மல்லியப்புசந்தி திலகர் சிறப்புப் பிரதியை வழங்கி வைக்க லெனின் மதிவானத்தின் மனைவி சசிகலா, மகள், சகோதரர் ட்ரொட்ஸ்கியின் மகள் ஆகியோருக்கு பேராசிரியர் பால.சுகுமார் சிறப்பு பிரதிகளை வழங்கி வைத்தார்.

மண்டபம் நிறைந்த சபையாக வருகை தந்த அனைவருக்கும் நூல் விநியோகிக்கப்பட்டதுடன் ஆக்கங்களை எழுதிய அத்தனை எழுத்தாளர்களுக்கும் நோட்டன் வாசகர் வட்டத்தின் சார்பில் அதன் காப்பாளர் சட்டத்தரணி க.விநாயகமூர்த்தி பாராட்டுக் கடிதங்களையும் வழங்கினார்.

**மு.இராமச்சந்திரன்**

# கனடா இலக்கிய தோட்டத்தின் இயல் விருது பெறும் எழுத்தாளர் லெ. முருகபூபதி

வீரகேசரியில் துணை ஆசிரியராக பணியாற்றியவரும் பிரபல எழுத்தாளருமான லெ. முருகபூபதிக்கு இம்முறை கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் "இயல் விருது" கிடைத்துள்ளது.

கடந்த முப்பத்தைந்து வருடகாலமாக அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வரும் அவர் தொடர்ந்து ஊடகங்களில் எழுதிவருகிறார். இந்த இயல் விருது வழங்கும் விழா 2023 ஆண்டு ஜுன் மாதம் கனடாவில் நடைபெறும்.


கடந்த 2001ஆம் ஆண்டு முதல் கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் இந்த இயல் விருதை வழங்கி வருகிறது.

ஒவ்வோர் ஆண்டும் உலக அளவில் சிறந்த தமிழ் இலக்கியவாதி ஒருவருக்கு, 'இயல் விருது" எனும் வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது வழங்கப்படுகிறது.

இந்த வாழ்நாள் விருது ஒரு படைப்பாளிக்கோ, கல்வியாளருக்கோ, நூல்வெளியீட்டாளருக்கோ, விமர்சகருக்கோ, வேறு ஏதேனும் ஒரு வகையில் சிறந்த தமிழ் தொண்டாற்றியதாக கருதுபவர்களுக்கோ அளிக்கப்படுகிறது.

தலாத்துஓயா கே.கணேஷ், டொமினிக் ஜீவா, இ.மயூரநாதன் ஆகியோர் இலங்கையிலிருந்தும், சுந்தரராமசாமி, வெங்கட் சாமிநாதன், அம்பை, எஸ்.ராமகிருஷ்ணன், நாஞ்சில் நாடன், தியோடர் பாஸ்கரன், கோவை ஞானி, ஜெயமோகன், ஐராவதம் மகாதேவன், என்.சுகுமாரன், வண்ணதாசன், இமையம், சு.வெங்கடேசன், இரா.வெங்கடாசலபதி ஆகியோர் தமிழகத்திலிருந்தும், ஜோர்ஜ் எல்.ஹார்ட், அமெரிக்காவிலிருந்தும், தாஸீஸியஸ், பத்மநாபஐயர், லட்சுமிஹோம்ஸ்ட்ராம் ஆகியோர் லண்டனிலிருந்தும், எஸ்.பொன்னுத்துரை அவுஸ்திரேலியாவிலிருந்தும் இந்த புகழ் பூத்தவிருதை பெற்றுள்ளனர்.

முருகபூபதி இலங்கை தமிழ் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர். 1973ஆம் ஆண்டு அட்டனில் நடைபெற்ற மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் மாநாட்டில் முதன்முதலில் அவரை நான் சந்தித்தேன். அன்று முதல் எங்கள் நட்பும் ஆத்மார்த்தமான உறவும் இன்றும் தொடர்கின்றது. அவ்வப்போது மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் மாநாடு பற்றியும் மலையக எழுத்தாளர்கள் பற்றியும் வீரகேசரியில் முன்னர் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் பற்றியும் எழுதிவந்திருக்கும் இவர் கலை, இலக்கியவாதிகளுடனும் பத்திரிகையாளர்களுடனும் ஆரோக்கியமான தொடர்பாடலை தொடர்ந்தும் பேணிவருபவர்.




தமிழ்நாடு திருநெல்வேலியை பூர்வீகமாகக் கொண்ட இவர் 1972ஆம் ஆண்டு டொமினிக் ஜீவாவின் மல்லிகை இதழில் கனவுகள் ஆயிரம் என்ற தனது முதலாவது சிறுகதையுடன் அறிமுகமாகினார், அந்த காலப்பகுதியில் வீரகேசரி நிருபராகவும் பணியாற்றத் தொடங்கினார். வீரகேசரியில் ஒப்பு நோக்காளராக 1977ல் இணைந்து பின்னர் வீரகேசரி ஆசிரிய பீடத்தில் துணை ஆசிரியராக பதவி உயர்வு பெற்று 1987ஆம் ஆண்டு முற்பகுதி வரை பணியாற்றி அவுஸ்திரேலியாவிற்கு புலம்பெயர்ந்தார்.

இவரது சுமையின் பங்காளிகள் சிறுகதைத் தொகுதிக்கு 1976ஆம் ஆண்டு இலங்கை அரசின் தேசிய சாகித்திய விருது கிடைத்தது.

அன்றைய ஒன்றிணைந்த சோவியத் நாட்டில் மாஸ்கோவில் நடைபெற்ற உலக இளைஞர் மாணவர் மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதிகளில் ஒருவராக 1985ஆம் ஆண்டு கலந்து கொண்டார். தமது சோவியத் பயண அனுபவங்களை சமதர்மபூங்காவில் என்ற தலைப்பில் முதலில் வீரகேசரியில் தொடராக எழுதினார். தனி நூலாகவும் வெளியிட்டுள்ளார்.



இலங்கையில் நீடித்த யுத்தத்தினால் குடும்பத்தின் மூல உழைப்பாளிகளை இழந்த தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக உதவும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் என்ற தன்னார்வத் நிறுவனத்தை நண்பர்களுடன் ஒருங்கிணைத்து 1988ஆம் ஆண்டு ஆரம்பித்தார்.

அவுஸ்திரேலியா தமிழ் அகதிகள் கழகம், அவுஸ்திரேலியத் தமிழர் ஒன்றியம், அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் ஆகியனவற்றின் ஸ்தாபக உறுப்பினரான முருகபூபதி, சிறுகதை, நாவல், கட்டுரை, ஆய்வு, பயண இலக்கியம், புனைவு சாரா பத்தி எழுத்துக்கள், சிறுவர் இலக்கியம் முதலான துறைகளில் இதுவரையில் 28 நூல்களை வெளியிட்டுள்ளார்.

முருக பூபதியின் பறவைகள் நாவலுக்கு 2003ஆம் ஆண்டு இலங்கையில் தேசிய சாகித்திய விருது கிடைத்ததோடு இவரது சிறுகதைகள், நாவல் ஆகியனவற்றை தமிழ் நாடு தஞ்சாவூர், பேராதனை, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் தமது MPhil பட்டத்துக்கான ஆய்வுக்காகப் பயன்படுத்தியுள்ளனர்.

இவரது சிறுகதைகள் மதக செவனலி (Shadows Of Memories) என்ற பெயரில் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

நடந்தாய் வாழி களனி கங்கை என்ற சமூக வரலாற்று நூல், The Mystique of Kelani River என்ற பெயரில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூலுடன், வாழும் வரலாறு மல்லிகை ஜீவா, பாரதி தரிசனம், 28 பெண் ஆளுமைகள் பற்றி எழுதப்பட்ட யாதுமாகி ஆகிய நூல்களை இணையவழியில் தரவிறக்கம் செய்து படிக்க முடியும்.

அவுஸ்திரேலிய தினத்தின் போது விக்ரோரியா மாநில டெறபின் மாநகர சபை சிறந்த பிரஜைக்கான விருதையும் 2002 விக்ரோரியா மாநில பல்தேசிய கலாசார ஆணைய விருதையும் 2011ஆம் ஆண்டு வழங்கி கௌரவித்துள்ளது. அத்துடன், விக்ரோரியா இலங்கைத் தமிழ்ச் சங்கம், மெல்பன் தமிழ்ச் சங்கம், அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், அக்கினிக்குஞ்சு இணைய இதழ், Aust Tamil TV ஆகியன வழங்கிய சாதனையாளர் விருது போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்றார்.

இவரது வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் ரஸஞானி ஆவணப்படம் 2017ஆம் ஆண்டு வெளியானது.

இலங்கை – இந்தியா – புகலிட நாடுகளில் மறைந்த கலை, இலக்கிய, ஊடகத்துறை சார்ந்த ஆளுமைகள் பற்றி காலமும் கணங்களும் என்ற தொடரில் எழுதி வரும் முருகபூபதி, வாசகர் முற்றம் என்ற தொடரில் தேர்ந்த வாசகர்களையும் அறிமுகப்படுத்தி எழுதிவருவதுடன் நூல் விமர்சனங்களையும் தொடர்ந்து எழுதுகின்றார். அவுஸ்திரேலியாவில் 2001ஆம் ஆண்டு தமிழ் எழுத்தாளர் விழா இயக்கத்தை ஆரம்பித்து, இன்றளவும் வருடந்தோறும் முன்னின்று நடத்தி வரும் முருகபூபதி, 2011ஆம் ஆண்டு ஜனவரியில் கொழும்பில் நடந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பிரதம அமைப்பாளராகவும் செயற்பட்டவர்.

தமிழகத்தின் மூத்த எழுத்தாளர்கள் தொ.மு. பாஸ்கரத் தொண்டமான், பாரதி இயல் ஆய்வாளர் தொ.மு. சிதம்பர ரகுநாதன் ஆகியோர் இவரது தந்தை வழி உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



**எச். எச். விக்கிரமசிங்க...**

# சங்கீத மேகம்; தமிழ் திரையுலக பிரபலங்களுக்கு ஓர் இசையஞ்சலி




சங்கீத மேகம் எனும் தமிழ் சினிமா இசை மாலை, முதல் முறையாக சௌந்தரி டேவிட் றொட்ரிகோவின் இயக்கத்தில் உள்ளூர் திறமைகளை உள்ளடக்கி கடந்த ஆண்டு ஜுன் மாதம் எல்பின்ஸ்டன் கலையரங்கில் நடைபெற்றது. கொரோனா வைரஸ், ஊரடங்கு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் நிலவிய கொந்தளிப்பான காலங்களுக்குப் பின் இது நடத்தப்பட்டது இந்நிகழ்ச்சியின் ஒரு வெற்றியாகும். இந்த இசை நிகழ்ச்சி நல்ல வரவேற்பைப் பெற்றதோடு ஊடகங்களில் சிறந்த விமர்சனங்களுடன் மாபெரும் வெற்றி பெற்றது. இப்போது யூ டியூப் வழியாக பொது மக்களுக்கு வெளியிடப்பட்டுள்ள நிகழ்ச்சியின் பகுதிகள் சர்வதேச பார்வையாளர்களால் சிறந்த விமர்சனங்களுடனும் பின்னூட்டங்களோடும் பார்க்கப் பட்டு வருகிறது.

பரவலான கோரிக்கை காரணமாகவும், பலர் முதல் நிகழ்ச்சியைத் தவறவிட்டார்கள் என்ற காரணத்தினாலும், இந்நிகழ்ச்சி, சில மாற்றங்கள் மற்றும் சில சேர்க்கைகளுடன் 2023 ஜனவரி மாதம் 15 ஆம் திகதி சிறப்பு பொங்கல் பதிப்பாக மீண்டும் ஒரு முறை கொழும்பு பிஷப்ஸ் கல்லூரி மண்டபத்தில் அரங்கேற்றப்படவுள்ளது.

விஷாரத ரத்னம் ரத்னதுரையை உள்ளடக்கிய "மாயா" இசைக்குழு, பிரதீப் றொட்ரிகோ, ஷேன் ஜோன், தனுஷ்க செனவிரத்ன, சந்துரு ராஜசூரியர் மற்றும் சௌந்தரி டேவிட் ரோட்ரிகோ போன்ற அனுபவமும் திறமையும் வாய்ந்த இசைக்கலைஞர்களின் ஆதரவுடனும் பின்னணியுடனும், "தி வாய்ஸ்" நிகழ்ச்சியின் நட்சத்திரம், இளம் தமிழ் பாடகர் பிரகாஷ் கே, மெல்போர்ன், ஆஸ்திரேலியாவிலிருந்து எமது நட்சத்திர விருந்தினர் தனுஜா ஜோசப் மற்றும் பாடகர்கள் மேகன் சத்ருகன், அமான் ஆகியோருடன் ரிஃபாய் மற்றும் அபினேஷ் ரவிச்சந்திரன் ஆகிய சிறந்த பாடகர்கள் பங்கு கொள்கின்றனர்.

இளையராஜா மற்றும் ஏ.ஆர். ரஹ்மானின் 80கள் மற்றும் 90களின் மனதை வருடும் சில பாடல்கள், மற்றும் தமிழ் திரையுலகின் வேறு சில இசையமைப்பாளர்களின் புதிய வெற்றிப் பாடல்களும் இந்நிகழ்ச்சியில் இடம்பெறவுள்ளன. நினைவுகளை மீட்டெடுக்கும் விதத்தில் இசை மற்றும் மெட்லிகளின் சில தனித்துவமான இசை ஏற்பாடுகளை ஒன்றாக இந்நிகழ்ச்சியில் எதிர்பார்க்கலாம்.

உள்ளூர் இசை ஆர்வலர்கள் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக "வொய்ஸ் " புகழ் பிரகாஷ் கே மேடையில் சில பிரபலமான பாடல்களைப் பாடுவதைக் கேட்டு மகிழலாம். நிகழ்ச்சியில் தனுஜா ஜோசப் வர்கீஸ், மேகன் தக்ஷினி சத்ருகன், அபினேஷ் ரவிச்சந்திரன் மற்றும் அமான் ரிஃபாய் ஆகியோரும் கலந்து கொள்ளவிருக்கிறார்கள். இந்த கச்சேரியின் தனித்துவமான மற்றொரு அம்சம் சோல் சவுண்ட்ஸ் தமிழ் என்செம்பிளின் மயக்கும் குரல்கள் ஆகும்.

சௌந்தரி டேவிட் ரோட்ரிகோவின் இயக்கத்தில் சங்கீத மேகம் ஜனவரி மாதம் 15ம் திகதியன்று பிஷப்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது, இது பொங்கல் சிறப்பு நிழ்ச்சியாக இருக்கும்.

இதனைப் பார்வையிட விரும்புவோர் 2023, ஜனவரி 3ம் திகதி முதல், சோல் சவுண்ட்ஸ் அகாடமி, 57/2 கஸ்ஸப்பா வீதி, ஜாவத்தை வீதி, கொழும்பு 5 எனும் முகவரியை அணுகலாம்.

# இரவு தேவதை

மெல்லிய சாரலில் ஒதுங்கினாள்
கடும் மழைக்கான காரிருள்
மெல்ல நகர்ந்து முடிப்பை இறக்கினாள்
கோணிய வாயும் கருப்பு மேனியுமாய்

இளமை வனப்பு தெரிகிறது
இருந்தும் அருவருப்பு பூசிக்கொள்கிறது
எட்டப்போ என விரட்டும் மனிதர்கள்
எள்ளிநகையாடுவதோ இவள் மனது

கந்தலில் விலகிய தேகம்
பளீரென சில பார்வையின் ஊடுருவல்
சட்டென மறைத்த கைகள்
சடுதியில் மறைந்தாள் அவ்விடம் நீங்கி

பார்வை படாத நேரம் மறைந்தாள்
பௌர்ணமி நிலவாய் குளித்துவந்தாள்
இத்தனை அழகும் எதற்கு மறைத்தாள்
இல்லாத்துணைக்கு இவ்வுடல் காக்கவென்றாள்

கவிச்சுடர் சிவரமணி
திருகோணமலை



# எது காதல்?

கனவறைக்குள்ளே கணவரைத் தேடும்
கலவரம் தானோ காதல்
மனவறைக்குள்ளே மணவறை காணும்
மதுரச மாமோ காதல்
தினசரி போலே தினம்விழி பார்க்கத்
தேடிடுவ தாமோ காதல்
இனசனம் கூட்டி இல்லற வாழ்வில்
இணைத்திடும் தேனோ காதல்

இருவரு மொன்றி இருதயம் சேர்க்கும்
இலக்கிய மாமோ காதல்
ஒருவரு மறியா உறவது காணும்
ஒருவரம் தானோ காதல்
திருமண மென்னும் திருவிழா காணும்
தெய்வமோ இந்த காதல்
கருவினை சுமக்க கணவரைச் சேரும்
கவிதையைப் போலோ காதல்

இல்லற வண்டி இயங்கிட வுள்ள
எரிபொரு ளாமோ காதல்
அல்லலில் சிக்கி அவதிகள் கொள்ளும்
ஆபத் தாமோ காதல்
மெல்லவும் முடியா விழுங்கவும் முடியா
மீன்முள் போலோ காதல்
சொல்லவே முடியா சோதனை யான
சோகமோ இந்தக் காதல்

கள்வனைப் போலே கனவினில் வந்து
கதையளப் பதாமோ காதல்
முள்ளுளக் கொடியில் முகையை அவிழ்க்கும்
மோகப் பூவோ காதல்
பிள்ளைகள் நாலு பெற்றதன் பின்னே
பிறைபோல் தேய்வதோ காதல்
உள்ளநாள் வரைக்கும் உயிருடன் உயிரை
உயிராய் கொள்வதோ காதல்?

மெய்யன் நடராஜ்...

# கவனமாயிரு

கண்டவர் காதல் கொள்ளுவர் நீ
கடைப் பக்கம் போகாதே
உண்டவரும் துரோகம் நினைப்பர் நீ
ஊருக்குள் அடிக்கடி அலையாதே

நடையழகை கவிதை பாடுவர் நீ
நிம்மதி இன்றி தவிக்காதே
உடையணிதலை உவமை கூறுவர் உன்
உள்ளத்தை பறி கொடுத்திடாதே

சிரித்தாலே வண்டாய் சுழலுவர் நீ
சிந்தனையில் மூழ்கி விடாதே
மரியாதை தருவதாய் நடிப்பர் நீ
மதிமயங்கி வாழ்வை தொலைத்திடாதே

மானே தேனே மரகதமே என்பர் அந்த
மாயை வார்த்தையில் சிக்கிடாதே
காண்பது யாவும் போலியானதே உன்
காரியமதில் என்றும் கவனமாயிரு

பா அமுதன் ஏ.எம்.ஏ.றசூல்
கிண்ணியா

# இச்சை கொள்

குப்பிளான் குமரன்

இச்சை கொள்
மகனே/ மகளே
நீ அதுவாகவே
ஆகிவிடுவாய்
நல்லவனாக/ளாக
இச்சை கொள் உனக்கு
நற்குணங்கள்
இயல்பாகவே உன்
உள்ளத்தில்
உறைந்துவிடும்
அதுபோலவே எல்லாம்
நீ இதுகாலவரை
எதனை இச்சை
கொண்டாயோ

அதுவாகவே
ஆகிவிட்டாய்
கவலைப்படாதே
இன்னமும் உனது
வாழ்க்கை
முடியவில்லை
இன்று தொடக்கம்
உனது மனம் எப்போதும்
ஏற்றுக்கொள்கின்ற
உயர்ந்த ஞானிகளின்
உயர்வான
சிந்தனைகள் மீது
இச்சை கொள்
உலகில் நீயும் ஒருநாள்
உயர்ந்து நிற்கிறாய்
மகனே /மகளே
இது இயற்கை நியதி

# பெண் கொடுமை



தாய்மைத்துவம்
கொண்ட உன்னை
காதல்
மோகம் கொண்டு
உடல் உளரீதியாக
பாலியல் தீங்கினை
விதைத்து சமூக
செயல்முறைக்காக
வரதட்சனை எனும்
பெயரில் வன்முறை
செய்து சில அசுர
பேய்களால்
சூறையாடப்பட்டு
சிதைந்து
கிடக்கின்றது
உன் வாழ்க்கை ......

வாழ்க்கை எனும்
போர்க்களத்தில்
பெண்ணின்
பெருமையை
மேன்படுத்த
உன்னை சீரழிக்கும்
வெறி கொண்ட
நாய்களை மிதித்து
வாழ்ந்து காட்டு
தாயே?....

ஞா. பிரகாஷ்
கந்தப்பளை

# மகத்துவம் மிக்க கவிஞன்

ஆர் கைக்கும் அகப்படாத
ஆகாயம் தன்னைக் கூட
ஓர்மனித் துளியில் தீண்டும்
ஓர்மத்தை கவிஞன் பெற்றான்!.

கற்பனைக் கடலில் தோணி
கச்சிதமாக ஓட்டும்
அற்புதக் கவிஞன் தானே
அவனியில் சிறந்த ஞானி
பொன் பொருள் உலகமென்று
போற்றிடும் கொள்கையாளர்
தன்னனி தன்னில் என்றும்
தகைமை சேர் கவிஞன் சேரான்!.

துன்பத்தில் கூட சற்றும்
துவண்டிடா உள்ளம் உள்ளான்
இன்பத்தை கண்ட போதும்
இறுமாப்பு கவிஞன் கொள்ளான்!.

ஆமைபோல் அடக்கம் உள்ளான்
ஆற்றலில் வேங்கை அன்னான்
தீமைக்கு துணையாய் எந்தத்
தேசத்தும் கவிஞன் நில்லான்!.

இயற்கையை ரசிக்கும் உள்ளம்
இயற்கையில் வரமாய் பெற்றான்
பயமென்ற ஒன்றை மட்டும்
பார்த்ததே கவிஞன் இல்லை!.

மழலையாய் மகளாய் சொந்த
மனைவியாய் தாயாய் பெண்ணை
உலகினில் கண்டு பேசும்
உயர்ந்தவன் கவிஞன் அன்றோ!.

புன்மையை கண்ட போது
புயலென உருவம் கொள்வான்
மன்பதை தனைச் சீராக்கும்
மகத்துவம் கவிஞன் கொண்டான்!.

கவிமணி அ. கௌரிதாசன்
ஆலங்கேணி கிழக்கு

# அன்போடியைந்திரு

அன்பெனும்
பெருந்தீபம்
அணைந்திடும்
பொழுதெல்லாம்
அகிலம் எங்கிலுமே
அதர்மத்தின் வழியே
அநீதியே உழல்கிறது

வாழ்க்கை என்னும்
புத்தகத்தின்
தீராப்பக்கங்களில்
அன்பின் துளிகளே
அதிகமாய்
எழுதப்படுவதுண்மை

வன்மங்கள் சுமக்கும்
வக்கிர மனிதர்களின்
உள்ளத் துவாரத்துள்
அன்பு உள் நுழைந்து
உக்கிர உணர்வுகளை
உருக்குலைத்து விடுகிறது

அழுகின்ற இதயத்தை
ஆற்றிடுதே அன்போ
விழுகின்ற உள்ளத்தை
விரைந்தே தேற்றிடுதே
அன்புக்கு எல்லை
அதிகதூரம் இல்லை அதை
அறியாத மனிதரோ
அரக்கரின் பிள்ளை

அன்பைத் தேடித்தான்
அகிலமும் சுழல்கிறது
அசையும் காற்றும் அன்பால்
திசைமாறிச் சுழல்கிறது
அன்பெனும் இராணியே
உலகத்தின் நீதி
அன்பை உணரா மனம்
எச்சத்தின் மீதி

இருக்கும் போதே
இறைக்கப்படுவதில்லை
இழந்த போதோ அன்போ
இனிக்கப்படுவதுண்மை
அன்பெனும் செடியில்தான்
ஆயிரம் பூப்பூக்கும் அதை
தீக்கிரையாக்கத்தான்
தினமும் இந்த மனம் ஏங்கும்

அன்பை விதைக்காத
அத்தனை மனங்களும்
ஆழப்புதைக்கப்பட்ட
அநாதைகள் மட்டும் தான்
மனதுக்குள் அன்பை
மறைத்து வைக்காமல்
மயிலிறகாய் அன்பால்
மனதை வருடுங்கள்

அன்பு ஒருபோதும்
தோற்றுப் போவதில்லை
அன்பால் தான் பலரிங்கே
தோற்றுப்போவதுண்டு
அன்பினால் யாரையும்
அடிமைப்படுத்தாமல்
அன்புக்கு மட்டும் என்றும்
அடிமையாய் இருங்கள்

அஜி அஜந்தன்
வவுனியா

# மௌனமான மரியாதை

நீ உனக்குள்
பெரியவனாகலாம்..!
நீ கடந்து வந்த
கரடுமுரடான பாதையைக்
கணக்கிட்டுப்பார்..!

உன் பின்புலத்தின்
அறியாமையின் பிரதிபலிப்புகளை
அவை
வெளிச்சம் போட்டுக் காட்டும்..!
உன் பேச்சின் விசிறல்களால்
வாயடைத்து நிற்கும் அப்பாவிகளை
ஏளனமாய் நகைக்காதே..!

ஆசனங்களில் அமர்வதற்காக
இடமளித்த
உறவுகளின் உராய்வுகள்
உன்னை
உயர்வடையச் செய்கின்றன..!

ஆனாலும்
எனக்குள் நீ
பூஜ்ஜியம் தான்..!
விடை காணவியலாத ஒன்றுக்காய்
வீராப்புப் பேசும்
குறைகுடம் நீ..!

நான் எழுந்திருந்தால்..
நீ தலை கவிழ்ந்திருப்பாய்..!
ஆனாலும்..
மௌனமான மரியாதை
உன் பதவிக்கு..!

கிண்ணியா
ஜெனீரா ஹைருல் அமான்

# வாழும் வரைநாம் வாழ்த்துவோம்

கண்கள் குளிர காட்சிதரும்
கடல் சூழ்ந்திட்ட தீவாமெம்
கிண்ணியாவில் பிறந்திந்த
மண்ணின் மகிமை உணர்த்திட்ட
நண்பர் ஏ.எம். கஸ்புள்ளாவின்
அன்பும் இனிய அனுசரிப்பும்
என்றும் எங்கள் கழகத்தை
வந்துசேர வாழ்த்துகிறோம்....

இளமை துள்ளும் பருவத்தில்
எமது அல் புரூஜ் விளையாட்டுக்
கழகம் தன்னில் உறுப்பினராய்
இணைந்து நின்று பணியாற்றி
சளைத்திடாது பல்வேறு
சாதனைகள் புரிந்து நல்ல
நிலையை வாழ்வில் அடைந்திட்ட
உம்மை நாமும் வாழ்த்துகிறோம்

உள்ளம் உவக்கும் விளையாட்டுத்
துறையில் மட்டும் நில்லாது
கல்வி, கலை, கலாசாரம்
நிகழ்வு தன்னை அரங்கேற்றி
எல்லை இல்லா சாதனைகள்
ஈட்டி நிற்கும் எம் கழகம்
உள்ள மட்டும் உம் பெயரை
உச்சரிக்க மறவாதே

நீண்டு செல்லும் வரலாற்றின்
முகவுரையில் உம் பெயரும்
தோன்ற வேண்டும் உம் பணியும்
தொடர வேண்டும்....பலதேசம்
தாண்டி நீங்கள் சென்றாலும்
தொடரும் இந்தப் பதினாறு
ஆண்டு கால பணி தொடர
உழைத்த உம்மை வாழ்த்துகிறோம்!

பா. கவிஞர் எம்.வை.அலி
(வாழ்த்துவது அல்புரூஜ்
விளையாட்டுக் கழகம் கிண்ணியா)

# அன்னையரின் அபிலாஷைகளுக்கு வலுவூட்டும் நெஸ்டமோல்ற் ‘Aramunata Shakthiyak’



நெஸ்லே நிறுவனத்தின் நெஸ்டமோல்ற்று முன்னெடுக்கும் ‘Aramunata Shakthiyak’ எனும் திட்டமானது, தற்போதைய சமூக பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் தமது குடும்பங்களின் முன்னேற்றத்தை உறுதி செய்ய, அர்ப்பணிப்புடன் உழைத்து வருகின்ற நாடு முழுவதும் உள்ள போற்றுதற்குரிய அன்னையரின் விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பை அங்கீகரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு செயற்றிட்டமாகும். அந்தவகையில், நெஸ்லே லங்காவின் பிரதான வர்த்தகநாமமானது, இலங்கை குடும்பங்களின் அபிலாஷைகளை வலுப்படுத்தும் முயற்சியில், அத்தகைய 1,000 அன்னையருக்கு 3 மாதத்திற்கான நெஸ்லே நெஸ்டமோல்ற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2022 செப்டெம்பரில் தொடங்கப்பட்ட இந்த முயற்சியில், வாடிக்கையாளர்கள் தங்கள் வாழ்க்கையில் போற்றுதற்குரிய அன்னையரின் பெயர்களைப் பரிந்துரைக்கும்படியும், சமூக ஊடக தளங்கள் வழியாக அவர்களின் ஊக்கமளிக்கும் கதைகளைப் பகிர்ந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். நாட்டின் நாற்திசையிலிருந்தும் இம்முயற்சிக்கு அமோகமான வரவேற்பைப் பெற்றிருந்த நிலையில், பரிந்துரைக்கப்பட்டவர்கள் மத்தியிலிருந்து தகுதிவாய்ந்த 1,000 பேரைத் தேர்ந்தெடுத்து இந்த வர்த்தகநாமம் அவர்களுக்கு வெகுமதி அளித்துள்ளது.

இலங்கையில் தலைமுறை தலைமுறையாக அபிமானம் பெற்றுள்ள ஒரு வர்த்தகநாமமாக திகழ்ந்து வருவதால், அவர்களின் குடும்பங்களுக்கு பலத்திற்கான தூணாக இருக்கும் போற்றுதற்குரிய அன்னையரின் அபிலாஷைகளுக்கு எங்கள் ஆதரவையும், சக்தியையும் வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இது உண்மையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் கடினமான காலகட்டம். ஓயாத திடசங்கல்பம் இத்தருணத்தில் மிகவும் முக்கியமானது. எனவே, இந்த பிரச்சாரமானது, பகிரப்பட்ட எழுச்சியூட்டும் கதைகள் மூலம் நேர்மறையான சிந்தனையைப் பரப்ப உதவியது என்று நாம் நம்புகின்ற அதே சமயம், போற்றுதற்குரிய இந்த அன்னையர், சவால்களுக்கு மத்தியில் தங்கள் குடும்பத்தின் அபிலாஷைகளை வலுப்படுத்துவதற்கான அவர்களின் முயற்சிகளைத் தொடர ஊக்குவிப்போம்," என்று நெஸ்லே லங்காவின் பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்களுக்கான துணைத் தலைமை அதிகாரியான ருவான் வெலிகல தெரிவித்தார்.

# தனது 33 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தை நடத்தும் நவலோக்க மருத்துவமனைக் குழுமம்



இலங்கையின் தனியார் வைத்தியசாலைத் துறையில் முன்னோடி வர்த்தக நாமமான நவலோக்க மருத்துவமனைக் குழுமம் தனது 33ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தை டிசம்பர் 30ஆம் திகதி வெற்றிகரமாக நடத்தியது. இந்தப் பொதுக் கூட்டமானது கொழும்பு பங்குச் சந்தையின் விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அமைய ஆன்லைனில் நடத்தப்பட்டது.

நவலோக்க மருத்துவமனைக் குழுமத்தின் 33வது பொதுக் கூட்டத்திற்கு நவலோக்க ஹாஸ்பிடல்ஸ் பிஎல்சியின் அனைத்து நிர்வாகக் குழு உறுப்பினர்களும் பங்குபற்றி இருந்ததுடன், தற்போது நிலவும் பொருளாதார சவால்களுக்கு மத்தியில், நவலோக்க மருத்துவமனை குழுமம் கடந்த வருடத்தின் கடைசி சில மாதங்களில் நேர்மறையான வளர்ச்சியை நோக்கி நகர்ந்தது இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனியார் மருத்துவமனைகள் துறையில் முன்னோடியாகத் திகழும் நவலோக்க மருத்துவமனைக் குழு மம், கடந்த 37 ஆண்டுகளாக தனியார் மருத்துவமனைத் துறையில் தனது தலைமைப் பதவியைத் தக்கவைத்து வருவதுடன், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள நோயாளிகளுக்கு குறைந்த விலையில் அதன் சிறந்த சேவை மூலம் சர்வதேச தரம் வாய்ந்த மருத்துவமனை சேவையை வழங்க முடிந்துள்ளது. நோயாளிகள் மீது கவனம் செலுத்தி மருத்துவமனை சேவைகளை பேணுவதன் மூலம், மிகவும் சவாலான காலகட்டத்திலும் நவலோக்க மருத்துவமனை குழுமம் சவால்களை எதிர்கொள்ள முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

நவலோக்க மருத்துவமனைக் குழுமத்தால் தங்க முத்திரையைப் பெற்ற முதல் தனியார் மருத்துவமனை குழுவாகவும் (Joint Commission International's JCI) மாற முடிந்தது, இது சுகாதாரத் துறையின் தரப்படுத்தலுடன் தொடர்புடைய தங்க முத்திரையாகக் கருதப்படுகிறது. 24 மணிநேர வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு, சர்வதேச தரத்திலான வசதிகளுடன் கூடிய அவசர சிகிச்சைப் பிரிவு, விமானம் மற்றும் பொது போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இலங்கையின் முதல் தனியார் மருத்துவமனை குழுவாக நவலோக்க மருத்துவமனை குழுமம் உள்ளது.

# Imagine Cup; தென்கிழக்காசிய புதியசந்தைகள் போட்டி அறிமுகம்

முன்னணி சர்வதேச மாணவர் தொழில்நுட்ப போட்டியாக 21 வருடங்களை பூர்த்திசெய்துள்ளதுடன், Imagine Cup இனூடாக மாணவர்களுக்கு தமது தொழில் முயற்சியாண்மை தொடர்பான வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதுடன், இன்றைய உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கான தொழில்நுட்ப தீர்வைகட்டியெழுப்ப வாய்ப்பை வழங்குவதாகவும் அமைந்திருக்கும். மாணவர்களுக்கு புதியதிறன்களை பெற்றுக்கொள்வதற்கும், ஒரேசிந்தனையுடைய மக்களுடன் இணைப்பதற்கும், பிரத்தியேகமான பயிற்சிகளை அணுகுவது, ஆலோசனை வழங்கலை பெற்றுக்கொள்ளல், சிறந்த பரிசுகளை வெல்வதற்கு வாய்ப்பளிப்பது மற்றும் உலகில் மாற்றத்தை ஏற்படுத்துவது போன்றவற்றை பெற்றுக்கொள்ளமுடியும்.

போட்டியை அறிமுகம்செய்து Microsoft SEANM இன் பொதுமுகாமையாளர் சூக்ஹுன் செயா கருத்துத் தெரிவிக்கையில், “Imagine Cup என்பது மாணவர்களை பாரியளவில் சிந்திக்கச்செய்யவும், வாய்ப்புகளை இனங்காண உதவவும் புத்தாக்கமான சிந்தனைகளை வெளிப்படுத்தி, உலகின் மாபெரும் சமூக, சூழல் மற்றும் சுகாதார சவால்களை சமாளிப்பதற்கு முகங்கொடுக்கச் செய்வதற்கான சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது. மாணவர்களுக்கு தமதுதொழில் நிலையில் முன்னேற்றத்தை எய்துவதற்கான சிறந்த ஆரம்பப்புள்ளியாக இந்தபோட்டி அமைந்திருப்பதுடன், Microsoft இடமிருந்து பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்கள் போன்ற வாய்ப்புகளையும் பெற்றுக்கொள்ளமுடிவதுடன், புதிய, விறுவிறுப்பான மற்றும் வெற்றிகரமான எதிர்கால வழிகாட்டல்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.” என்றார்.

இரண்டு தசாப்த காலப்பகுதிக்கு முன்னர் இந்தப்போட்டி ஆரம்பமாகியது முதல், 163 க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த சுமார் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மாணவர்கள் Microsoft தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பங்கேற்று, பெறுமதியான மற்றும் வினைத்திறனான திட்டங்களை உருவாக்கியிருந்தனர்.

இந்த ஆண்டின் போட்டியின் வெற்றியாளர்களுக்கு Microsoft for Startups Founders Hub நிகழ்ச்சியில் பங்கேற்பதற்கு விண்ணப்பிக்கும் தகைமை கிடைக்கும்.

அதனூடாக, சிறந்த சிந்தனையைக் கொண்டிருக்கும் எந்தவொரு மாணவருக்கும் தொழில்முயற்சியாளராவதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

# கஷ்ட பிரதேச மாணவர்களின் கல்விக்காக 25,000 பாடசாலை உபகரணங்கள்



## Kingsbury ஹோட்டலின் "Carriage of Hope"

Kingsbury ஹோட்டல் கொழும்பு தனது "Carriage of Hope" முயற்சியின் ஒரு பகுதியாக 25,000 அப்பியாசக் கொப்பிகளை 2,500 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வழங்கியுள்ளது. பண்டிகை காலத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட "Carriage of Hope" நடவடிக்கையின் பலனாக 03ஆம் திகதி Kingsbury ஹோட்டலில் வைத்து பாடசாலை அதிபர்களுக்கு இவை கையளிக்கப்பட்டன.

Hayleys PLC தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மோஹான் பண்டிதகே மற்றும் Hayleys நிர்வாக இயக்குனர் ரொஹான் கார் ஆகியோர் தலைமையில் இவை வழங்கப்பட்டன.


2022 நவம்பர் 27ஆம் திகதி "Carriage of Hope" திட்டம் தொடங்கப்பட்டது, பண்டிகைக் காலத்தில் Kingsburyயின் பொறியியல் குழுவால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட அதிநவீன கிறிஸ்மஸ் குதிரை வண்டியை மையமாகக் கொண்ட சமூக பணி இதுவாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பாடசாலைகளில் உள்ள 2,500 குழந்தைகளுக்கு 25,000 அப்பியாச கொப்பிகளை நன்கொடையாக வழங்கும் திட்டத்துக்கு பங்களிப்பு செய்யும் முகமாக "Carriage of Hope" குதிரை வண்டியில் இருந்து படம் எடுத்து அதை தங்கள் சமூக ஊடகதளங்களில் ஹோட்டலைக் குறியிட்டு பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கப்பட்டனர். 1 Tag ஒரு புத்தகத்திற்கு சமம், மேலும் ஒரு குழந்தைக்கு கூடுதல் புத்தகங்களை வாங்க விரும்புவோர் ஹோட்டல் Lobbyயில் மற்றும் Kingsbury Indulgence இணையதளம் மூலம் வாங்கலாம்.

> “இந்த கடினமான காலங்களில்,"Carriage of Hope" திட்டம் 2,500 குழந்தைகளை ஆதரிப்பதற்காக மட்டுமல்லாமல், பாடசாலை உபகரணங்களின் விலை உயர்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒழுங்கு செய்யப்பட்டது.”

“இந்த கடினமான காலங்களில்,"Carriage of Hope" திட்டம் 2,500 குழந்தைகளை ஆதரிப்பதற்காக மட்டுமல்லாமல், பாடசாலை உபகரணங்களின் விலை உயர்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒழுங்கு செய்யப்பட்டது, என்று ரொஹான் கார் தெரிவித்தார்.

# முதல்தர டயர் வர்த்தக நாமமாக இரட்டை SLIM விருதுகளை வென்றுள்ள DSI Tyres





இலங்கையின் முதன்மையான டயர் வர்த்தக நாமமான DSI Tyres, அண்மையில் நடைபெற்ற SLIM Brand Excellence 2022 விருது விழாவில் Product Brand of the Year பிரிவின் வெள்ளிப் பதக்க விருதையும், Product Brand of the Year பிரிவின் வெண்கல பதக்க விருதையும் வென்று மூன்று தசாப்தங்களுக்கு மேற்பட்ட தமது பெருமைமிகு பயணத்தின் தனித்துவமான தடத்தை பதித்துள்ளது.

மேலும், தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் இலங்கையின் முதன்மையான மூன்று வர்த்தக நாமங்களில் ஒன்றாக தமது இடத்தை உறுதிப்படுத்திக்கொண்டுள்ளமை DSI Tyres இன் இன்னுமொரு சரித்திர வெற்றியாகும். தமது உற்பத்திகளை நவீன சந்தைப்படுத்தல் உத்திகள் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு வாடிக்கையாளர்களிடம் சரியான முறையில் கொண்டு சேர்த்தமையே இவ்வெற்றிக்கு பிரதான காரணமாகும்.

கடினமானதும் நெருக்கடிமிக்கதுமான சூழலிலும் நிலைத்தகு இருப்பை அடிப்படையாக கொண்ட சந்தைப்படுத்தல் வழிமுறைகள் ஊடாக வாடிக்கையாளர்களின் மனங்களை கவர்ந்து தமது சந்தைப் பங்கை பெருக்கிக் கொள்வதற்கு DSI Tyres இனால் முடிந்துள்ளது.

“DSI Tyres வாடிக்கையாளர்களின் மனங்களில் ஆழப் பதிந்துள்ள வர்த்தக நாமமாகும். நாம் வென்றுள்ள ஆகச்சிறந்த விருது மக்கள் விருதே. அந்த மக்கள் நம்பிக்கையினை காப்பதற்கு நாம் மேற்கொள்ளும் சகல முயற்சிகளும் இவ்வாறு பாராட்டி கௌரவிக்கப்படுவது எமக்கு பெரும் மகிழ்ச்சியாகவும் கௌரவமாகவும் உள்ளது” என DSI Tyres நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் காவிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

# இந்திரா புற்றுநோய் அறக்கட்டளையுடன் கூட்டுறவைத் தொடரும் Hameedia




ஸ்டைல் மற்றும் தரத்திற்கு பெயர் பெற்றதும் இங்கையின் முன்னணி ஆடவர் ஆடைகள் வர்த்தக நாமமுமான Hameedia, இந்திரா புற்றுநோய் அறக்கட்டளைக்கு (ICT) ரூ.1 மில்லியனை நன்கொடையாக வழங்கியது. அண்மையில் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த விழாவின் போது இந்நன்கொடைஅளிக்கப்பட்டதுடன் அண்மைக்காலமாக இவ்விரு நிறுவனங்களுக்குமிடையில் காணப்பட்ட மிகவும் வலுவான கூட்டாண்மையை மேலும் வலுவடையச் செய்வதாக இது அமைகிறது. இந்த நன்கொடையானது Hameedia வின் ‘Pink Collection’ தெரிவுகளிலிருந்து பெறப்பட்ட விற்பனை வருமானமாகும். இந்த ‘Pink Collection’ ஆனது ICTக்கு ஆதரவளித்திடும் வகையில் விஷேடமாக ஆண்கள் மற்றும் பெண்களுக்காக Hameedia வினால் வடிவமைக்கப்பட்ட முற்றிலும் இளஞ்சிவப்பு ஆடை சேகரிப்பு ஆகும். இது குழுமத்தின் My Friend Foundation எனும் அறக்கட்டளையின் சமூகப் பொறுப்புணர்வு வாக்குறுதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகும்.

இது பின்தங்கிய சமூகங்களில் உள்ள பிள்ளைகளின் வாழ்வினை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் கிரிக்கட் வீரர் ரொஷான் மஹநாம கலந்து கொண்டார். மேலும் இந்திரா கென்சர் ட்ரஸ்ட் (ICT) அறக்கட்டளையின் தலைவர்ஃ அறங்காவலர் கலாநிதி லங்கா ஜயசூரிய திசாநாயக்க மற்றும் Hameedia வின் முகாமைத்துவப் பணிப்பாளரும் ஆண்கள் ஆடையலங்கார ஆலோசகருமான (USA) பவுசுல் ஹமீட் உட்பட பல விருந்தினர்களும் Hameedia குழு அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

Hameedia கடந்த ஆண்டு மகளிர் தினத்தினை பல அறிவூட்டல் மற்றும் சுவாரஸ்யமான நிகழ்வுகளுடன் கொண்டாடியது. அவற்றுள் ஒன்றாக மார்பக புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வும் அமைந்திருந்தது.

அவ்விழிப்புணர்வினை இந்திரா புற்றுநோய் அறக்கட்டளையுடன் இணைந்து மேற்கொண்டதன் மூலம் ஊழியர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதில் கவனம் செலுத்தியது.

# ஒரு வழிப் பயணம்




"தம்பி டீய குடிச்சிட்டு போ!"

"இல்லம்மா நேரம் போய்ட்டு சுணங்கினா பஸ் போயிடும் நான் வாறன்."

"கன நேரமா போகப்போகுது ஊத்தின டீயக் குடிக்க, இந்தாவன் குடிச்சிட்டுப் போவன் தம்பிய ஏத்திக் கொண்டு போய் உடச்சொல்றன்."

தாயின் சொல்லடிக்கு அடங்கிய அன்வர் டீயைக்குடித்துவிட்டு தம்பியின் சைக்கிளில் ஏறி பயணமானான்.

பேருந்துத் தரிப்பிடத்தை அடையும் முன்னமே பயண இடையில் திடீரென மழை கொட்டத் தொடங்கியது. பையிலிருந்து குடையை எடுத்து விரித்துப் பிடித்துக் கொண்டு ஈருளிப்பயணம் தொடர்ந்தது.

பேருந்துத் தரிப்பிடம் வந்ததும் இறங்கித் தன்னைச் சௌகரித்துக்கொண்டு தம்பிக்கு நன்றி கூறினான். தம்பியும் "நான் வாறன்" என்று வீட்டை நோக்கிச் சென்றான்.

அன்வர் தனது கையில் கட்டியிருக்கும் கடிகாரத்தைப் பார்த்தான் அது 5:25 என நேரத்தைக் காட்டிற்று.

அன்வரோடு பயணிக்க வழக்கமாக வரும் பயணிகளோடு இன்னும் பலரும் பேருந்திற்காய் காத்து நின்றனர். புதிதாய் நின்றவர்களில் சிலர் அவனுக்கு தெரிந்த முகங்களாக இருந்தனர். அவர்களிடம் சென்று,

"அஸ்ஸலாமு அலைக்கும் எங்க போப்போறீங்க" எனக் கேட்க

"எம்டீரியு ரெய்னிங் புரொக்கிரம் இருக்கி அதுக்குத்தான் போறம்" என பதில் ஒப்புவிக்கப்பட்டது.

வழக்கமாகப் பேருந்து ஓட்டமாவடிக்கு 5:30 மணிக்கெல்லாம் வந்துவிடும். இன்று வழக்கத்துக்கு மாறாக பேருந்து தாமதமாவதற்கான காரணம் அவனுக்குத் தெரியாமல் இல்லை. இந்நேரத்திற்கு அவன் ஏதோ ஓர் உணர்வினால் ஆட்கொள்ளப்பட்டான்.

அருகில் நின்ற பயணிகள் "பஸ் வாரத்துக்கு நேரமாகுறத்தப் பாத்தா சரியான கிரவ்டா வரும் போல இருக்கு". என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

கடிகாரம் 5:40 என நேரத்தை சரி செய்த வேளை தூரத்தில் பேருந்தொன்று மின்மினி போல் மின்னி வருவதைக் கண்டதும் பயணிகள் தயாராகினர்.

76 என்ற எண்ணிடப்பட்ட பேருந்து அவர்களுக்கு முன் வந்து நின்றது. சன நெரிசலுக்கு மத்தியில் பேருந்து நடத்துனன் "மல மல" என்று கத்திக் கொண்டு பேருந்திலிருந்து இறங்கி வந்தான்.

"ரிங்கோ ரிங்கோ மலக்கி போர ஆக்கள் ஏறுங்க"

அன்வரும் அவனோடு நின்றவர்களும் பெரும் சிரமத்துடன் நெருக்குண்டு ஊசித்துவாரம் வழியாக ஒட்டகம் நுழைவதுபோல் பேருந்துக்குள் நுழைந்தனர்.

பேருந்து புறப்பட்டது. சற்று நேரத்தில் பேருந்து நடத்துனன் "டிக்கட் எடுக்காத ஆக்கள் டிக்கட் எடுங்க" என்று டிக்கட் கொடுக்க ஆரம்பித்தான் நெருக்கத்தை அவன் கடந்து வர பயணிகளிடம் "கொஞ்சம் வழிவிட்டு முன்னுக்குத் தள்ளுங்கையா!" என்று கூறியவனாக பயணிகள் செல்ல வேண்டிய இடங்களைக் கேட்டு டிக்கட்டுக்களைக் கொடுக்க ஆரம்பித்தான்.

டிக்கட்டைப் பெற்றுக்கொண்ட பயணிகளில் ஒருவர் அவனிடம்,

"தம்பி கிட்டத்தில இறங்கிற யாரும் இருக்கா?" எனக் கேட்க,

"இல்ல ஐயா எல்லாம் ரிங்கோ போற பாட்டிதான் இண்டைக்கு சீட் எடுக்கிற கஸ்டம்" என்று பதிலுரைத்தான்.

திங்கட்கிழமை, வேலை ஆரம்ப நாள் என்ற படியினால் திருமலை நோக்கி வருகின்ற பேருந்துகளுக்குள் பயணிகள் தீப்பெட்டிக்குள் அடுக்கப்பட்ட தீக்குச்சிகள் போல்தான் வருவது வழக்கம்.

அரைமணி நேரத்திற்கு ஒன்று என்று பேருந்து சேவை திருமலைக்கு இருந்தாலும் சன நெரிசலுக்கு மட்டும் எப்போதும் குறைவிருக்காது. அதிலும் திங்கட்கிழமை என்றால் சொல்லவா வேண்டும். கிழக்கு மாகாண சபை, அமைச்சுக்கள், திணைக்களங்கள் அனைத்தும் திருமலையில் குடி கொண்டிருப்பதனால் அங்கு பணிக்குப் போவோர், தேவைகளை நிறைவேற்றப் போவோர், பள்ளிக்கூடங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள், அதிபர்கள் என்று பல தரப்பட்டோரும் பயணிப்பர்.

பேருந்து நாவலடி வளைவுச் சந்தியைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. அவ்விடத்திலுள்ள பேருந்து தரிப்பிடத்தில் நின்றவர்களை நோக்கி நடத்துனன் தனது வழக்கமான காட்டுக் கத்தலைக் கத்த, கேட்டவர்கள் பேருந்துக்குள் சனத்திரளுக்குள் நெருக்குண்டு புகுந்தனர். நடத்துனனும் "முன்னுக்குப் போங்க! முன்னுக்குப் போங்க!" என பேருந்தில் நின்று வருவோரிடம் கூறி பயணிகளை அரிசி மூட்டைகள் கடைகளில் எப்படி நெருக்கமாக ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டிருக்குமோ அவ்வாறு ஒழுங்கமைத்தான்.

பேருந்துக்குள் இரகசியம் பேசுவது போல் முணங்கிக் கொண்டு வந்த பாடலின் சத்தத்தை சாரதி அதிகரிக்கச் செய்ய இரகசியம் பரகசியமானது. பயணிகளுக்கு நிற்பதற்கே இடமில்லை என்ற போது பாடலை எப்படி இரசிக்க முடியும்?

பேருந்து மாங்கேணி, பனிச்சங்கேணி, வாகரை, பால்ச்சேனை, கதிரவெளி என ஊர்களைத் தாண்டி பயணித்துக் கொண்டிருந்தது. இவ்வூர்களில் கையைக் காட்டி பேருந்தை நிறுத்தி, ஏறுபவர்கள் ஏறிக்கொள்ள மணியை ஒலிக்கச் செய்து இறங்குபவர்களும் இறங்கச் செய்தனர்.

இவற்றுக்கு நடுவில் நடத்துனரின் கட்டளை ஒலியும் ஒலிக்கத் தவறவில்லை. பேருந்திலிருந்து இறங்கியவர்களிலும் பார்க்க ஏறியவர்களே அதிகம்.

நடத்துநர் பயணி ஒருவரிடம் "நீல சேட் ஐயா கொஞ்சம் முன்னுக்கு போங்க இங்க புட்வோட்ல ஆக்கள் நிக்கினம். அவங்கள உள்ளுக்கு எடுக்கணும் இல்லாட்டி ரபிக் புடிப்பான்" என்றதும் பயணிகள் முன்னுக்குச் செல்ல முயன்றும் முடியாமல் அல்லாடினார்.

மீண்டும் நடத்துனரின் குரல் ஒலிக்கவும் பயணி சினந்து, "முன்னுக்குப் போ முன்னுக்குப் போன்டா எங்க போறது இங்க இடமா இருக்கி" என்றார்.

வெருகலுக்கு முன்னுள்ள ஊரான மாவடிச்சேனையிலுள்ள உணவகமொன்றில் காலை உணவுண்பதற்காக பேருந்து நிறுத்தப்பட்டது.

"சாப்பாட்டுக்காக பஸ் பத்து நிமிசம் நிக்கும்" என்று கூறி நடத்துனன் இறங்கினான். அவனைத் தொடர்ந்து பயணிகளும் புற்றிலிருந்து அவசர அவசரமாக வெளியேறும் ஈசல்களைப் போல் வெளியேறினர்.

சிலர் காலை உணவுண்ணச் செல்ல சிலர் கைபேசியோடு உறவாட சிலர் மீண்டும் பேருந்துக்குள் சென்றிருக்க சிலர் வெளியில் நின்றபடி சக பயணிகளோடு உரையாடினர்.

இவ்வாறு உரையாடிய கட்சிக்காரர்களுள் அன்வரும் ஒருவனாக இருந்தான். அவனுக்கும் திருமலையில்அமையப்பெற்ற பாடசாலையொன்றில் அதிபராகப் பணிபுரியும் ஒருவருக்குமிடையில் உரையாடல் தொடர்ந்தது.

"இண்டக்கி பஸ் வழமய வுட சரியான நெருக்கம். திங்கள் ரிங்கோக்கு போகக்குலயும் வெள்ளி ரிங்கோவுல இருந்து வரக்குலயும் இதே கரச்சல் பட வேண்டியதாய் இருக்கு என்ன செய்றது நம்மட வாழ்க்க இப்படித்தான் கழியுது." என்று அதிபர் கூற இவனும் அவர் கருத்தை ஏற்று ஆமாம் சாமி போட்டான்.

இவ்வுரையாடலின் இடையில் இவர்களோடு இணைந்த ஒரு பயணி "நான் வளமயா புக்பண்ணித்தான் வார. நேத்து டிக்கட் புக் பண்ணலாம்டுதான் இருந்தன் ஒரு வேலயா போனதால பண்ண முடியல இன்டக்கி ச்சீ! ச்சீ!" என்று கூற அன்வர் அவரிடம் "ஓட்டமாவடியில இருந்து புக் பண்ரத்துக்கு நான் முந்தி ஒருநாள் கோல் எடுத்து கேட்டன் பஸ்காரன் ஓட்டமாவடின்டா கஸ்டம்டு சொல்லிட்டான்" என தன் சொந்த அனுபவத்தை எடுத்து வைத்தான்.

பத்து நிமிடங்களின் பின் பயணிகள் மெது மெதுவாக பேருந்தை நிறைக்க மகா ஜனங்களோடு பேருந்து பயணிக்கத் தொடங்கியது.

'உலக அதிசயங்கள் ஏழு அதில் ஏன் உன்னைச் சேர்க்கவில்லை' ஒலித்துக் கொண்டிருந்த பாடலின் இவ்வரியைக் கேட்டதும் அன்வர் வாய்திறந்து சக பிரயாணியிடம் "பாட்டப்பாரு நாங்க இங்க பர்ர பாட்டுக்கு!. உலக அதிசயங்கள்ள அவளச் சேக்காகளோ இல்லயோ எட்டாவது அதிசயமா இந்தப் பயணத்த சேக்கணும் போல இருக்கு" என்றதும் சகபயணிகள் முகமலர்ச்சி காட்டினர்.

அன்வர் பேருந்தின் பின்பக்கமாக நின்று பயணித்துக் கொண்டிருக்கிறான். பேருந்தின் சாளரத்தை மறைத்து நின்ற ஓராள் இறங்குவதற்கான இடம் வந்ததும் மற்றவர்களைச் சற்று விலகுமாறு கூறி முன் சென்ற பின் சாளரத்தின் வழி தெரிகின்ற காட்சிகளை அவனால் பார்க்க முடிகிறது.

வயல்வெளிகளில் நெல்விதைப்பதற்காக உழவு இயந்திரங்களினால் வயலை உழுது கொண்டிருந்தனர். உழுத இடங்களில் கொக்குகள் புழுக்களைத் தேடி உண்டு கொண்டிருந்தன.

பேருந்து சிங்கள மக்கள் செறிந்து வாழும் சேருநுவரவை அடைந்ததும் அவ்விடத்தில் அமையப் பெற்றுள்ள பிரதேச செயலகத்தில் பணிபுரியும் சிலருடன் வேறு சிலரும் பேருந்தை மணியடித்து நிறுத்தி இறங்கினர். பேருந்திற்காய் காத்து நின்றவர்கள் ஏறிக்கொண்டனர். நடத்துனர் "இஸ்ஸரட்ட யண்ட இஸ்ஸரட்ட யண்ட" என்று முன்னுக்குப் போகுமாறு கூறினான்.

புதிதாகப் பயணத்தில் இணைந்தவர்களில் பாட்டியர் இருவர். காடு வா வா எங்குது வீடு போ போ எங்குது என்ற நிலையை அடைந்தவர்கள். பட்டமரம் உழுத்து ஆடி விழும் தோற்றம் போன்றது அவர்களின் தோற்றம்.

இரண்டு பாட்டியரும் நின்று கொண்டேதான் வந்தனர். அன்வர் நெரிசல்களுக்கிடையில் இந்த கண்கொல்லும் காட்சியைக் கண்டு அருகில் நின்ற பயணிகளிடம் "சே! சே!... வயசு போன மனுஷங்கள் நிண்டு வாராங்களே! யாராச்சும் நல்ல மனசு பண்ணி இடங் கொடுங்களேன்! உடம்பு கிடம்பு நடுக்கி உழுந்துட்டா என்ன செய்றது? இப்படித்தான் எங்கட ஊருலயும் போஸ்டொபிஸில பிச்சச் சம்பளம் எடுக்க வந்த மனுசி கதிர ஒண்டும் இல்லாததால நிண்டு நடு நடுங்கி விழுந்து தல அடிபட்டு அப்படியே தல பொந்து பெய்த்து புறவு நாங்கதான் கொஸ்பிடலுக்கு கொண்டு போனம். யாராவது எழும்பி சீட் குடுங்களம் பாவம் தானே" என்றான்.

யாரும் எழுந்திருப்பதாக இல்லை.

பின்னர் சிரமத்துடன் நடத்துனரை அழைத்து நிலைமையை எடுத்துரைத்தான்.

அதற்கு நடத்துனர் "நான் யார எழுப்புறது யாராவது விரும்பி இடம் கொடுத்தா கொடுக்கட்டும்" என கடுந்தொனியில் கூறினான்.

அன்வர் அவனிடம் "ஏன் அப்ப நீங்க பஸ்ல இவகல ஏத்தினிங்க? ஏத்தாம வந்திருக்கலாந்தானே கேட்க,

"சொல்லச் சொல்லக் கேக்காம அவகதான் ஏறினாங்க அதுக்கு நான் என்ன செய்யட்டும்? ஏறின ஆக்கள் சமாளிக்க வேண்டியதுதான்." என நடத்துனர் கூறிச்சென்றான்.

யாரோ ஒரு புண்ணியவான் எழுந்து பாட்டி ஒருவருக்கு இருக்க இடம் கொடுக்க மற்றப் பாட்டி நின்று கொண்டு வந்தாள்.

பயண இடையில் ஒருவர் தாம் செல்ல வேண்டிய இடம் வந்ததும் எழுந்தார். இவ்வேளை பாட்டி அவ்விருக்கையில் அவசரமாக இருக்க முயன்றபோது அன்வர் "மூத்தம்மா இடம் உங்களுக்குத்தான் கொஞ்சம் அவரு போனத்துக்குப் பொறவு இரிங்க இல்லாட்டி அவரு இறங்க ஏலாமப் போயிடும்" என்றதும் உடனே நிலைமையைப் புரிந்து கொண்டவளாய் பொக்கைவாய் தெரிய ஒரு சிரிப்புச் சிரித்தாள். அந்தச் சிரிப்புக்குள் ஆயிரம் அர்த்தங்கள்.

அந்தப் பயணி மணியடித்து பேருந்தை நிறுத்தி இறங்கிச் செல்ல அங்கிருந்து இருவர் ஏறினர். பாட்டி நெருக்கத்துக்குள் ஆமைபோல் மெல்ல நகர்ந்து, இருக்க முற்பட்டபோது ஒருவன் குறுக்கிட்டு "இந்தப்புள்ளக்கி சுகமில்ல ரிங்கோ ஆஸ்பத்திரிக்கு கூட்டிப் போறம்" என்றதும் பாட்டி புன்னகை பூத்த முகத்துடன் அப்பெண்ணுக்கு இருக்க இடத்தைக் கொடுத்துவிட்டு நின்று வந்தாள். இன்னும் மனிதாபிமானம் வாழ்கிறது என்பதற்கு அவள் சாட்சியானாள்.

ஆசனத்தில் இருந்து வரும் பயணிகளும் நெருக்குதல் காரணமாக கால்களை ஒழுங்காக வைக்க முடியாத நிலையில் ஆமைபோல் தம்மை ஒடுக்கிக் கொண்டு வந்தனர்.

திடீரென பேருந்து வளைவு வழியாக விரைந்தபோது பயணிகளைக் குலுக்கி விட அவர்கள் சொற்ப நேரத்திற்குள் நிலைகுலைந்து போயினர். அன்வரின் காலை பயணி ஒருவரின் பாதணி பதம்பார்த்து விட்டது. வலியால் அவன் துடி துடித்தான். அவன் அணிந்திருந்த சட்டையிலும் கறை பட்டுவிட்டது. 'இதெல்லாம் நடக்கணும்டு என்ட தலையில எழுதி இருக்கு' என்று மனதுக்குள் தன்னை நொந்து கொண்டான்.

நெருக்கத்தில் நிற்க முடியாமல் போக சற்று இடப் பக்கமாகத் திரும்பினான் அன்வர். இடப்பக்கத்தில் ஆஜானபாகுவான தோற்றங்கொண்ட தடித்த ஒரு பயல் நின்றான். அவன் அன்வரிடம் "அங்காலப் பக்கம் மாறி நில்லுங்கோ" என்றான். அன்வர் ஒன்றும் பேசாதவனாய் மற்றப்பக்கமாக திரும்பி நின்றான்.

இப்போது பேருந்து நத்தை வேகத்தில்தான் நகர்ந்து கொண்டிருக்கிறது. பாலத்தோப்பூரை அடைந்ததும் அங்கொரு கூட்டம் ஏறுவதற்காக காத்து நின்றது. அவர்களுள் கைப்பிள்ளையை வைத்து நின்ற தாயும் ஏற முற்பட்ட வேளை நடத்துனர் "அக்கா சீட்டில்ல இந்த நெருக்கத்தில புள்ளய வெச்சிக்கிட்டு எப்படி நின்டு வரப்போறிங்க?" என்றான்.

அதற்கு அத்தாய் "தம்பி ரிங்கோ கொஸ்பிடல்ல கிளினிக் இருக்குது நேரத்துக்குப் போகனும் நின்டு வாரன் பரவாயில்ல தம்பி" என்று கூறி நின்று கொண்டு வந்தாள். சற்று நேரத்தின் பின் அவளுக்கு இருக்கை கிடைத்தது.

மீண்டும் நடத்துனர் தனது வழக்கமான பல்லவியைத் தொடங்க, அதனால் ஒரு பயணி கோபப்பட்டு "கண்ட கண்ட இடத்தில நிப்பாட்டி ஆக்கள ஏத்திட்டு வந்தா இதுக்குள்ள எப்படி முன்னுக்குப் போற, பஸ்ஸா? இல்ல இது சத்திரமா?" என்று இடித்துரைத்ததைக் கேட்டதுதான் தாமதம் நடத்துனரின் கண்களில் அக்கினித் தாமரை பூத்தது.

"ஐயா டிக்கட்டத் தந்துட்டு நீங்க இறங்குங்க இந்தாங்க உங்க பலன்ஸ் புடிங்க" என்று மணியடித்து பேருந்தை நிறுத்தி அவரை இறக்கி விட்டான்.

பிரயாணம் ஒரு நரகம் என்று முன்னோர் சும்மாவா சொன்னார்கள்? அவர்கள் சொன்னவை எல்லாவற்றிலும் அர்த்தம் இருக்கத்தானே செய்கிறது.

பேருந்து மூதூர் பெரிய பாலத்தை அடைந்ததும், திடீரென ஒரு சத்தம் கேட்டது. புழுதி அள்ளி வாரியது. பயணிகள் அனைவரும் இடியோசை கேட்ட நாகம் போலாயினர்.

பேருந்திலிருந்த பயணியொருவர் சிரித்துக் கொண்டு "கிளய்மோர் வெடிச்சயாக்குமென்டு நான் பயந்து பெய்த்தன். டயர்தான் வெடிச்சிருக்கு" என்றார்.

டயர் மாற்றினால்தான் பயணம் தொடர முடியும். பேருந்திலிருந்து பயணிகள் யாவரும் வெளியில் வந்தனர்.

பயணிகள் இறங்கிய கையோடு டயரை மாற்றுவதற்கான கருவிப்பொருட்களை எடுத்துக்கொண்டு சாரதியும் நடத்துனரும் திருத்தப் பணிகளில் மும்முரமாக நின்றனர். பயணிகள் சிலரும் ஒத்துழைக்க பணி கட்சிதமாக முடிந்தது.

பயணிகள் அனைவரும் ஏறிக்கொள்ள பேருந்து நகர்ந்தது. சாரதி விட்ட நேர தூரத்தை மீளப் பிடிப்பதற்கு பகீரத பிரயத்தனம் செய்யத் தொடங்கினான்.

கருவாட்டு வாசம் வந்ததும் கிண்ணியா வந்துவிட்டதைப் பயணிகள் உணர்ந்து கொண்டனர். கிண்ணியாவில் இறங்குபவர்களோ, ஏறுபவர்களோ இருக்கவில்லை.

பேருந்து, தடை தாண்டிய ஓட்ட வீரனைப் போல் வெள்ளை மணல், சீனக்குடா கடந்து நான்காம் கட்டைக்கு வந்ததும் நடத்துனர் "நாலாம் கட்ட கச்சேரி இறக்கம். ஹதர கனுவ அந்திய பஹின கட்டிய என்ட" என தமிழிலும் சிங்களத்திலும் ஆர்ப்பரித்தான்.

நான்காம் கட்டையில் வைத்து பயணிகளில் அநேகர் இறங்கிச் செல்ல சிலருக்கு இருக்கைகள் கிடைத்தன. இன்னும் சில நிமிடங்களில் பேருந்து அன்வர் இறங்க வேண்டிய சந்தியை அண்மித்து விடும். அவ்விடத்தில் இறங்கி ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் உள்ள, தான் பணிபுரியும் அலுவலகத்திற்கு பேருந்தொன்றில் அவன் செல்ல வேண்டும்.


சந்தியைப் பேருந்து அண்மித்ததும் மணியை அடித்தான். பேருந்து நிற்க, பெரும் பயணிகள் பட்டாளம் இறங்கிக் கொண்டிருந்தது. அன்வர் இறங்க எத்தனித்தபோது பேருந்தை சாரதி ஓட்டத் தொடங்கினான். உடனே அன்வர் கோபத்துடன் மணியை பலமாக அடிக்க பேருந்தை சாரதி உடனே நிறுத்தாமல் அடுத்துள்ள பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்தினான்.

"என்னையா இந்த நெருக்கத்துக்குள்ள கஷ்டப்பட்டு இறங்கிறத்துக்கிடையில பஸ்ஸ இழுத்து வந்திட்டிங்க பெல்லடிச்சாலும் நிப்பாட்டேல்லயே, நாங்க ஒபிசுக்கு டைமுக்கு போறலயா டைமப்பாருங்க 8:40 ஏற்கனவே நல்ல லேட்"

சாரதிக்கு ஏசிவிட்டு பேருந்திலிருந்து இறங்கி சந்தியை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

**இர்ஷாத்,**
வாழைச்சேனை.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
### இல: 52




திரு/திருமதி.செல்வி ..................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..................................
..................................
..................................
.................... ....................
திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 48**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 52

**இடமிருந்து வலம்**

1. குற்றமற்றவன்
2. கடற்பயணத்தின்போது பயன்படுத்தப்படுவது
7. கடலில் கிடைப்பது ஊதி ஒலி எழுப்ப முடியும் (குழம்பியுள்ளது)
8. உடலின் உள்ளுறுப்புகளுள் ஒன்று (திரும்பியுள்ளது)
9. ஏரியிலிருந்து தேவையான நீரை வெளியேற்றப் பயன்படுவது
11. பூமி
12. வாழ்வில் ஒருவர் அடையும் நிலைமை (திரும்பியுள்ளது)
13. கலக்க உணர்வு
15. நன்மையான விளைவைத் தரும் அதிர்ஷ்டம்
16. ஓர் இலக்கம்
17. பரம்பரை (குழம்பியுள்ளது)
21. மனக்கொதிப்பு ( குழம்பியுள்ளது)
22. நண்பன்
23. ஒரு காட்டு மிருகம்

**மேலிருந்து கீழ்**

1. மன அமைதி
2. முழுமையிலிருந்து பிரித்தெடுக்கும் பகுதி
3. நவக்கிரகங்களில் ஒன்று
4. வஞ்சகமான மறைமுகத் திட்டம் (தலைகீழ்)
5. வெற்றி இழப்பு
6. வேலை அல்லது சேவை (தலைகீழ்)
10. குழப்பம் அல்லது மோதல்
11. நிலத்தில் வளரும் இது கால்நடைக்கு உணவு
13. ஓவியம் குழம்பிக் காணப்படுகின்றது
14. ஏழு நாட்களுள் ஒன்று
16. அறிமுகமில்லாத நபர்
18. ஒரு பெண்ணுக்கு திருமணம் செய்து வைக்கத் தேடும் நபர்.
19. இனம்
20. அவசியமற்றதாக வலிந்து செய்யப்படும் வீணான விஷயம்
21. தொடக்கம்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 51

### விடைகள்

**இடமிருந்து வலம்**

| | | |
|---|---|---|
| 1. அதிகாரம் | 5. சாவி | 7. சமர் |
| 8. விடுதலை | 9. காதல் | 10. புலரி |
| 12. தோம்பு | 14. தும்பிக்கை | 17. ஆமை |
| 18. அணை | 19. வில் | 20. காப்பு |
| 22. சிலம்பு | 23. கைதி | |

**மேலிருந்து கீழ்**

| | | |
|---|---|---|
| 1. அசரீரி | 2. மதி | 3. கார்காலம் |
| 4. விதம் | 5. சாதகம் | 6. விலை |
| 11. புதுமை | 12. தோகை | 13. புதல்வி |
| 15. பிணைப்பு | 16. அக்கா | 17. ஆச்சி |
| 21. புகை | | |

### பரிசு பெறுவோர் விபரம்

| முதல் பரிசு (ரூ 500/) | இரண்டாம் பரிசு (ரூ 350/) | மூன்றாம் பரிசு (ரூ 150/) |
|---|---|---|
| சல்மா முஷ்டாக், 213, ரொட்ணி வீதி, பொரளை, கொழும்பு 08. | எஸ். கனகரட்ணம், 975, அன்புவழிபுரம், திருகோணமலை | பாத்திமா ராஸீக் வாஹீத், 26/2 பெரியபள்ளிவாசல் விதி, பதுளை |


## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 51

### பாராட்டு பெறுவோர்

**1.மல்லிகாதேவி பத்மநாதன்**
பசறை
**2. எஸ் பாக்கியநாதன்**
காரைதீவு 02
**3. எஸ் செல்வராஜ்**
கொழும்பு 11
**4. மங்களம் மனோரஞ்சன்**
கல்முனை
**5. றைவா அஸீஸ்**
தெஹிவளை
**6. எப். ரஷ்பா**
தர்கா நகர்
**7. எம்.ஏ. அத்தாஸ்**
மாத்தறை
**8.எம். சத்தியவேணி**
ஹட்டன்
**9. பி. ரஜினி**
கொழும்பி 06
**10. பாத்திமா நுஸ்கா**
அக்கறைப்பற்று

# தமிழக தகவல்கள்

## சின்னச் சின்னதாய்...



தமிழ்மணி மானா மக்கீன்

கலைஞர் முத்துவேல் கருணாநிதியின் மைந்தர் ஸ்டாலின் ஆட்சிக்கு வந்த புதிதில் பெண் மணிகளுக்கு வழங்கிய வரப்பிரசாதம், போக்குவரத்துப் பேருந்துகளில் பயணம் செய்யும் இலவச அனுமதி

அதனை சென்னை மாநகரத்தில் வெள்ளை நிறப் பேருந்துகளில் கண்டேன்.

டிசம்பர் 21ல், சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகப் பணிமனையைத் தாண்டிச்செல்கையில் இன்னொரு காட்சியைக் கண்டேன்.

முதியோர்கள் 60அகவைகள் மேற்பட்டோர் வரிசையில் அமைதியாக நின்று 'இலவச பஸ் பாஸ் பெற்றுக் கொண்டிருந்தனர்!

பிறந்திருக்கும் ஜனவரி முதல் ஜூன் வரை சென்னை வாழ் வயது வந்தோர் பேருந்துகளில் இலவசப் பயணமோ பயணம்.


நானும் 'நிழலும் அனுமதிச்சீட்டு ஒன்றைப் பெற ஆசைப்பட்டோம். "முயன்று பாருங்கள் சென்னை முழுக்கச் செலவின்றிச் சுற்றிப் பார்க்கலாம்" என்றது 'நிழல்'

"இலங்கைப் பிரஜைகளுக்கு இல்லையே" என்றார்கள். ஆசை நிராசை.

(குறிப்பு! இந்த இலவச அனுமதி பத்துத் தடவைகள் பயணிக்க மாத்திரம் பயன்படும்.)

**மக்கள் திலகம் மீது கொண்டிருக்கும் மதிப்பு மகத்தானது**

தமிழக நாளேடுகளில் **"தினமலர்"** என்ற பெயரில் வெளியாகும் இதழுக்கு ஒரு தனி மௌசு உண்டு.



**"டி.வி.ஆர்"** என நினைவு கூரப்படும் ஒரு குமரி மாவட்ட (நாகர் கோவில் ராமரத்தினம்' சரியோ பிழையோ!?) உருவாக்கிய ஒப்பாரும் மிக்காரும் இல்லாப் பழம்பெரும் தின இதழ். நமது வாரமஞ்சரி "செந்தூரம்" போல் ஞாயிறு தோறும் வழங்கும் அன்பளிப்பு மலருக்கு ஆவலால் காத்திருப்போர் ஆயிரமாயிரம்.

'தினமலரின் பிரதமப் பொறுப்பாசிரியர் **ரமேஷ்** "பா.கே.ப" என்ற (பார்த்தது கேட்டது படித்தது) தலைப்பில் '**அந்து மணி'** என்கிற புனைப் பெயரில் அள்ளி இரைக்கும் பத்தி எழுத்துக்களுக்கு நமது பேனை சாமான்யம்.

இந்த இலவச 'தினமலர்' வாரமலர் ஒரு சிறப்புச் சிறுகதைக்கு வழங்கும் பரிசு ஐயாயிரம்! (இந்திய நாணயத்தில்) டிசம்பர் 18ந் திகதி இதழில் பிரபல நாவலாசிரியர் **"ராஜேஸ்குமார்"** இத் தொகையைப் பெற்றிருந்தார்.

இன்னொன்றையும் இந்த 'வாரமலர்' ஒவ்வொரு டிசம்பர் மாதத்திலும் செய்து வருகிறது. அது **'மக்கள் திலகம்'** எம்.ஜி.ஆருக்கு அளிக்கும் மதிப்பு கௌரவம் டிசம்பர் மாத இறுதி வாரத்தில் அட்டைப்படத்தில் அவர் படமும், உள்ளே ஒரு பக்க நினைவுத் தினத்தகவலும் நிச்சயம்! இதைப் பல ஆண்டுகளாக நிறைவேற்றி வருகிறது 'தினமலர்' வாரமலர்' இங்கே டிச. 18 இதழ் முகப்பு.

இந்த வகையில் தமிழக ஏடுகளில் 'தினமலர் வாரமலர்' ஒரு தனித்துவம் பெறுகிறது.

**நாய் சேகர், நாய் படாதபாடு!**

நம் நாட்டில் இப்பொழுது நாய் சங்கதி பெரிய சங்கதி.

தமிழகத்திலும் கடந்த டிசம்பர் 09ல் ஒரு நாயின் வருகை பெரிதாக எதிர்பார்க்கப்பட்டது. பேசப்பட்டது.

அன்றையத் திகதியில் பெரும்பாலான தமிழக நகரங்களில், ஊர்களில் மேக மூட்டமும், கடுங்காற்றும் மழையுமாக இருந்த சூழ்நிலையில் **"நாய் சேகர் ரிட்டான்ஸ்"** வருகை தீர்மானிக்கப்பட்டிருந்தது.

என் பேனை வலிய ஆங்கிலத்தை நுழைக்கவில்லை. 'வைகைப்புயல்' என்றே பெயர் எடுத்து விட்ட **வடிவேலு அய்யா,** தான் திரைக்குத் திரும்பிவரும் நாள் 09 என்று குறித்து, படத்தின் பெயரை 'நாய் சேகர் ரிட்டான்ஸ்' வைத்து 'மாண்டஸ்' புயலில் மாட்டி நாய் படாதபாடு பட்டுப் போனார்.

புயல், மழையோடு போராடி படமாளிகை ஒன்றுக்குள் நுழைய எடுத்த முயற்சி எனக்கு 'நிழ'லாக இருப்பவரால் தடுக்கப்பட்டது.

ஆக 'வாரமஞ்சரி' அபிமானிகளுக்கு படம் பற்றிய என் சுய கண்ணோட்டத்தைத் தர இயலாமல், பழம் பெறும் **'ஆனந்தவிகடன்'** சஞ்சிகை வழங்கியுள்ள திறனாய்விலிருந்து ஒரு சிறுபகுதித் திரட்டு: (திருட்டு அன்று!)



**நாய்களைக் கடத்தி அதன் முதலாளிகளிடம் பணம் பறிக்கும் நாய்சேகர் தன் குடும்பத்துக்குச் சொந்தமான நாயையே திருடச் சென்றால் என்ன வாகும் என்பதே இந்த 'நாய் சேகர் ரிட்டர்ன்ஸ்'**

**வடிவேலு ரிட்டர்ன்ஸ் என்றதும் லாஜிக் எல்லாம் பார்க்காமல் இறங்கி ஆட நினைத்தது ஓகேதான். ஆனால் சிரிக்கவும் வைத்திருக்கலாமே! திரைக்கதை மட்டுமல்ல, காமெடி காட்சிகளும் யூகிக்கும் வண்ணமே எழுதப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் வடிவேலு ரெடின் கிங்ஸ்லி கூட்டணி சிரிக்க வைத்தாலும், அதற்காகப் பல படு சுமாரான காமெடிகளை லாங் ஜம்ப்பில் தாண்ட வேண்டியிருக்கிறது. ஷிவானி, முனீஸ்காந்த், தங்கதுரை, பாலா, சச்சு, ராஜா ராணி கார்த்தி, மனோபாலா, ராமர் என ஒரு பிளேயிங் லெவனே இருந்தும் டெஸ்ட்மெட்ச் சுவாரஸ்யம் கூட படத்தில் இல்லை.**

**வைரல் ஆட்களைப் பிடித்து ஷிஃப்ட் முறையில் நடிக்க வைத்திருந்தாலும், காமெடி ஸ்க்ரிப்ட் என்ற பெயரில் பழைய பட்டாசையே வெடித்திருப்பதால் சிரிப்பு வெடிச் சத்தம் கேட்கவே இல்லை.**

**விகடன் விமர்சனக்குழு**

குறிப்பு இந்தத் திறனாய்வில் தமிழ் வார்த்தைகள், சொற்கள் அதிகமாக அல்லது ஆங்கிலமா என்பதை அபிமானிகள் கணக்கிட்டுப் பாருங்கள். தமிழக ஊடகவியலாளர்கள் இலட்சணம் இப்படி! ஐயகோ!

**மனிதரைக் காக்க மஞ்சப்பை**

ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் ராஜ்கிரண், சேதுபதி நடித்த 'மஞ்சப்பை' திரைப்படத்தை மலேசியாவில் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இலங்கையில் திரையிடப்படவில்லை.

நல்ல கதையம்சத்துடன் மஞ்சப்பை மகிமையையும் அது சொல்லாமல் சொல்லியது.



இப்பொழுது, டிசம்பரில் என் கண்ணெதிரே சென்னைவாசிகள் தூக்கித் திரிய நானும் ஒன்றைத் தூக்கிக் கொண்டேன்.

தமிழக அரசின் சட்டமொன்று இருப்பது தெரியாமலேயே இப்படிச் செய்தேன்.

அதாகப்பட்டது, "பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தக்கூடாது" என மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சட்டம் போடப்பட்டு விட்டதாம்.

ஆனாலும், பிளாஸ்டிக் பை மோகம் பல நகர மக்களையும் விட்டபாடில்லை.

பழனி என்கிற ஆன்மிக ஊரைச் சேர்ந்த ஓய்வுநிலைச் சித்த வைத்தியர் **மகேந்திரன்** என்பார், மஞ்சள் நிறப்பைகளைச் சுமந்து கொண்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருவதாக சொன்னார்கள். விரும்புவர்களுக்கு அன்பளிப்பும் செய்வாராம்!

இப்படியும் தமிழகத்தில் சேவையாளர்களா என்று அதிசயப்பட வேண்டியிருக்கிறது.

நம் நாட்டையும் நினைத்துப் பார்த்தால் ஐந்து கிலோ அரிசியைச் சுமந்திருக்கிற மஞ்சள் பைகளைக் காண முடிகிறது. அரிசி காலியானதும் அதை பிற காரியங்களுக்கு உபயோகப்படுத்த பலரும் கூச்சப்படுகிறார்கள். பிளாஸ்டிக் பைகளையே தேடுகிறார்கள்.

நம் தீவு நவ நாகரிகம் மிக்க ஒன்றல்லவா நாசமடையும் வழியே கண்களுக்குப் புலப்படும்.

**நாடாளுமன்ற உறுப்பினர் முஸாரஃப் தமிழ்நாட்டவருக்கு அமைச்சர்!?**

'சென்னை பிரஸ்கிளப்' என்கிற ஊடகவியலாளர் சபைச் சந்திப்புக்கு அழைக்க வந்த ஊடக அபிமானிகள் சிலர் "உங்கள் அமைச்சர் முஸாரஃப் நலமா? மகளாருக்கு மருத்துவம் பார்க்க பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் வந்திருந்தாரே? சந்தித்தோமே!" என்றனர்.

ஒரே திகைப்பு! 'எப்போது அவர் மீண்டும் அமைச்சரானார்' என எனக்குள் குடைச்சல்.

"இப்பொழுது நா. உ. மட்டுந்தான் முன்பே ராஜாங்க அமைச்சர் என்ற விளக்கம் எடுபடவில்லை!

தொண்டி நம்புதாளை பரம்பரைக்காரரும், நிந்தவூர் அக்கரைப்பற்று குடும்ப உறவுகள் கொண்டவருமான ஓர் ஊடகவியலாளர் பெரிய விவாதமே நடத்தி விட்டார்.

"சரி... சரி... உங்களுக்கு அமைச்சர்! எங்களுக்கு நா. உ" என்று சமாளித்து வேறு விடயங்கள் அலச பாய்ச்சலோ பாய்ச்சல்.

**(அடுத்த வாரமும் வேறு சில தகவல்கள்)**

# 2022: பின்னோக்கிய பார்வையில்...

(கடந்த வாரத் தொடர்)

● சீன ஜனாதிபதியாக ஸீஜின்பிங் கடந்த அக்டோபர் 20ம் திகதி பதவியேற்றார். ஒரு சீன அதிபர் மூன்றாவது தடவையாக பதவியேற்பது இதுவே முதல் தடவை. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவுனரான மாவோ சேதுங் மாத்திரமே ஆயுட்காலத் தலைவராகத் திகழ்ந்தார். அதன்பின்னர், பதவியில் நீண்ட நெடிய காலத்துக்கு ஒருவர் தலைவராக நீடிக்கக் கூடாது என்பதற்காக 'இரண்டு தடவைகள் மாத்திரமே' என்றவாறு சீன அரசியலமைப்



பில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஸீஜின்பிங் 2018இல் இத் திருத்தத்தை நீக்கி மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார். மோதல் போக்கைத் தவிர்த்து அமெரிக்காவுடன் ஓரளவுக்கு இணங்கிப் போகும் கொள்கையை இவ்வருடம் கடை ப்பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தைவான் மீது போர்ப் பதற்ற அச்சுறுத்தல் குறையும் என்றும் நம்பப்படுகிறது.


● கடந்த செப்டம்பர் 8ம் திகதி தனது 96வது வயதில் எலிஸபெத் மகாராணியார் காலமானார். அவருடைய தந்தையார் ஆறாம் ஜோர்ஜ் மன்னர் 1952ம்ஆண்டு மறைந்த போது நம்மில் பலருக்கு ஒரு மன்னரின் மரணச்சடங்கு எவ்வாறு நடைபெறும் என்பது தெரியாது. அதை மகாராணியின் மரணச் சடங்கில் நாம் பார்த்தோம். கிடைக்கவே கிடைக்காதோ என்றிருந்த மன்னர் பதவியை சார்ள்ஸ் எதிர்வரும் மே 6ம் திகதி ஏற்கப் போகிறார்.

● பழம்பெரும் ஹொலிவூட் நடிகர் சிட்னி பொயிட்டியர் தன் 94வது வயதில் கடந்த ஜனவரி 6ம் திகதி மரணமானார். அமெரிக்க கறுப்பின நடிகரான இவர் தன் நடிப்பால் முன்னணிக்கு வந்தவர். 1967இல் வெளியான *To Sir with love, Guess who coming to dinner* என்பன குறிப்பிடத்தக்க திரைப்படங்கள்.

● கடந்த ஆண்டு அக்டோபர் 26ம் திகதி இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக மல்லிகார்ஜுன் கார்கே தேர்ந்தெடுக்கப்பட்டார். 24 வருடங்களின் பின்னர் நேரு குடும்பத்தைச் சாராத காங்கிரஸ் தலைவராக இவர் பதவிக்கு வந்துள்ளனார். சோனியாவும் ராகுலும் தலைமை பதவிக்கு போட்டியிட விரும்பாத நிலையில் கார்கே இப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

● ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் கிடையிலான மோதல் 2014 இல் வெடித்தாலும் கடந்த பெப்ரவரி 22ம் திகதியே அது முழு அளவிலான ரஷ்ய ஆக்கிரமிப்பாக மாறியது. இரண்டே இரண்டு வாரங்களில் 1966 ஆறுநாள் அரபு இஸ்ரேல் யுத்தம் போல முடிவுக்கு வந்துவிடும் எனக் கருதப்பட்டாலும் உக்ரைனைவிட ரஷ்யாவே தற்போது களைத்துப் போய், சிவிலியன் மீதான தாக்குதல்களை தொடுத்து வருவதைப் பார்க்க முடிகிறது.

● ஐ.எஸ். தலைவரான அபுபக்கர் அல்பக்காதியை வட மேற்கு சிரியாவின் இட்லிப் பகுதியில் அமெரிக்க விசேட அதிரடிப்படையினர் 2019ம் ஆண்டு சுற்றி வளைத்தனர். அவர் தற்கொலை செய்து கொண்டார். அவருடைய இடத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர், அபு இப்றாஹிம் அல்குரேஷி. அவரை நோக்கி வலைவிரிக்க ஆரம்பித்த அமெரிக்கா, இட்லி மாகாணத்தின் ஒதுக்குப்புறமான ஒரு கிராமத்தில் இரண்டுமாடிக் கட்டடத்தில் அவர் வசித்து வருவதை மோப்பம் பிடித்து பெப்ரவரி மூன்றாம் திகதி அவ்வீட்டின் மீது தாக்குதல் நடத்தி அவரைக் கொன்றது.



● இந்திய வம்சாவளியான பிரிட்டிஷ் அரசியல்வாதி ரிஷி சுனக் கடந்த அக்டோபர் 22ம் திகதி பிரிட்டனின் பிரதமராக பதவியேற்றுக் கொண்டது வரலாற்று முக்கியத்தும் வாய்ந்தது. இந்திய சுதந்திரம் போராட்டத்தின் போது இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 1931ம் ஆண்டு மகாத்மா காந்தி லண்டன் சென்றிருந்தார். வின்ஸ்டன் சேர்ச்சிலுக்கு இது பிடிக்கவில்லை. எனவே காந்தியை விமர்சிக்கும் வகையில் அவரை அரை நிர்வாண பக்கிரி என்றழைத்தார். அனைத்து இந்தியர்களையும் அவமதிக்கும் செயல் என இந்தியாவெங்கும் கடும் கண்டனம் எழுந்தது.

அவ்வாறான ஒரு நாட்டைச் சேர்ந்த, இந்து மதத்தவரான ஒரு இந்திய வம்சாவளி சர்ச்சில் அமர்ந்திருந்த நாற்காலியை பிடித்திருக்கிறார் என்றால் கடந்த ஆண்டில் நிகழ்ந்த ஒரு அற்புதம் என்றுதானே அதை வர்ணிக்க வேண்டும்!

கறுப்பர்களை அடிமைகளாக நடத்திய அமெரிக்காவின் 44ஆவது ஜனாதிபதியாக கறுப்பரான பராக் ஒபாமா 2009ம் ஆண்டு ஜனவரி 20ம் திகதி பதவியேற்றதை இதனுடன் நீங்கள் ஒப்பிட்டுப்பார்த்துக் கொள்ளுங்கள்.

இதைத்தான் தமிழில் வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும் ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும் என்றார்கள்!

அருள் சத்தியநாதன்...

## தலாய் லாமா வருகையை... (08ஆம் பக்கத் தொடர் )

1950 இல் சீனா திபெத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டது. கடந்த 70ஆண்டுகளாக சீனா தனது கட்டுப்பாட்டை திபெத் மீது திணிக்க முயன்று வருகிறது. இதன் பொருட்டு திபெத்தியர்களின் மத விவகாரத்தில் தலையிட்டது. மடங்களைத் தாக்கியது. லாமாக்களுக்கு எதிரான பிரசாரத்தை தூண்டியது. மேலும் 'ஹான்' எனப்படும் சீனப்பெருந்தேசிய இனத்தோரை திபெத்திற்குள் குடியமர்த்தியது.

ஆயினும் திபெத்தை முழுமையாகக் கட்டுப்படுத்துவது சீனாவிற்கு எளிதல்ல. திபெத் மீதான அதன் உரிமையை இன்னும் நியாயப்படுத்த முடியவில்லை.

சீனாவில் இருந்து திபெத்தை பிரிக்கும் முயற்சியில் ஈடுபடுபவராக, தலாய் லாமாவை ஒரு பிரிவினைவாதியாகவே சீனா பார்க்கிறது. ஆனால் திபெத்தியர்களோ தமது பாரம்பரிய பௌத்தமதத் துறவற அமைப்பை சீனா சிதைப்பதாக அஞ்சுகின்றனர்.

இவ்வாறான நிலையில் இலங்கை மஹாபோதி சங்கத் தலைவர் பாணகல்ல உபதிஸ்ஸ தேரரின் அழைப்பினை ஏற்றுக் கொண்ட திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா நாட்டுக்குள் அனுமதிக்கப்படுவாரா என்பது தொடர்பில் கேள்விகள் எழுந்துள்ளன.

இலங்கை ஒரு அமைதியான பௌத்த நாடு என்பதால் தலாய் லாமாவும் அங்கு வரவேண்டும் என்று தாங்கள் அழைப்பு விடுத்துள்ளதாக இலங்கை மஹாபோதி சங்கத் தலைவர் பாணகல்ல உபதிஸ்ஸ தேரர் தெரிவித்திருக்கிறார்.

ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வரும் போது, தலாய் லாமாவும் தமது நாட்டுக்கு வர வேண்டும் என்பது பௌத்தர்களின் விருப்பமாக உள்ளது என்று உபதிஸ்ஸ தேரர் கூறுகிறார்.

கண்டியிலுள்ள தலதா மாளிகை மற்றும் அனுராதபுரத்திலுள்ள புனிதமான அரச மரத்தை வழிபட வேண்டும் எனும் தனது ஆவலை தங்களிடம் தலாய் லாமா வெளிப்படுத்தியாக அவர் கூறுகிறார்.

ஸ்ரீ ராம ஜெயம்
2024 A/L
வர்த்தகப் பிரிவு
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
பொருளியல் – க. கலாகரன்
கணக்கீடு – உ. வரதராஜன்
வணிகக் கல்வி – செ.ரமணன்
நேர அட்டவணைக்கு
TP - 0772332933/0112363903
VALAKAM INSTITUTE
(Tamil Sanga Building)
NO-7, Rudra Mwa, Wellawatte, Col - 6.
GOODWIN



வத்தளை ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் மாணிக்கவாசகர் திரு உருவச்சிலை வீதியுலா வெள்ளிக்கிழமை (05) மாலை வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சிவகுமார குருக்கள் பூஜை வழிபாடுகளை நடத்துவதையும் பக்தர்கள் நடைபவனியாகச் செல்வதையும் படத்தில் காணலாம். *(படம்: கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)*

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வியாழக்கிழமை 2023.01.05
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
| --- | --- | --- | --- | --- |
| மஹஜன சம்பத | 4991 | ரூ. 14,922,467.00 | C | 9 8 6 7 7 2 |
| மெகா பவர் | 1339 | ரூ. 291,143,434.00 | A (சுப்பர் இலக்கம் 08) | 01 16 59 63 |
| ஜாதிக சம்பத | 1446 | ரூ. 13,146,661.60 | | 1 0 2 1 9 2 |
| கொவிசெத | 3233 | ரூ. 68,532,919.60 | Q | 04 55 57 69 |
| ராசி சுப பலன் | 300 | ரூ. 2,654,184.80 | மிதுனம் (விசேட இலக்கினம் மிதுனம்) | 07 36 49 51 |
| தன நிதானய | 1021 | ரூ. 141,095,322.40 | H | 05 17 43 60 |

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## எட்டு மணி நேர சேவை,... (04 ஆம் பக்கத் தொடர்)

"நானும் அதைப் பற்றிக் கேள்விப்பட்டேன். இது குறித்து சட்டமா அதிபரிடம் கதைக்குமாறு பிரதமரிடம் கூறியுள்ளேன்" இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கோருவதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டதுடன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் கையொப்பமில்லாமலேயே வர்த்தமானி அச்சிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ரணில், வியாழக்கிழமை முழு நாளையும் நிதி அமைச்சில் கழித்தார். இதேவேளை, இளைஞர் விவகாரப் பணிப்பாளர் நாயகம் ரந்துல அபேவீரவுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி ரணில், 75 ஆவது சுதந்திர தினத்துடன் இணைந்து ஆரம்பிக்கப்படவுள்ள உத்தேச தேசிய இளைஞர் தளத்துக்கான விண்ணப்பங்களை விரைவாகக் கோருமாறு தெரிவித்தார். அதன்படி, பல பிரிவுகளின் கீழ் விண்ணப்பங்களை கோரும் நடவடிக்கையை ரந்துல மேற்கொண்டார். அவர் வார இறுதியில் தைப் பொங்கலைக் கொண்டாட யாழ்ப்பாணம் சென்றிருந்தார்.

சமூக சமையலறை வேலைத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்காக ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தன ஆகியோர் கடந்த திங்கட்கிழமை ஹுனுப்பிட்டிய கங்காராமவிற்கு சென்றிருந்தனர். ருவன் மற்றும் சாகல ஆகியோர் போஷாக்கு குறைபாட்டிலிருந்து மக்களைபாதுகாக்கும் ஜனாதிபதியின் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் இதனை மேற்கொண்டனர்.

வண.கங்காராம விகாராதிகாரி கிரிந்தே அஸ்ஸஜி தேரர் இந்த நடவடிக்கையை முன்னெடுத்தார். முப்படை மற்றும் பொலிஸார் தமது பங்களிப்பை வழங்கினர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் ஏற்பாட்டில் புத்தாண்டுக்காக ஆசி பெறுவதற்கு ஏற்பாடு செய்திருந்த பிரித் பாராயண நிகழ்வு சோமாவதி ரஜமஹா விகாரையில் 31ஆம் திகதி இரவு இடம்பெற்றது. மறுநாள் 50 தேரர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதோடு, தொலைதூர விகாரைகளின் இருந்து வந்த தேரர்களுகளுக்கு பிரிகர பூஜை வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

சிறிகொத்த கட்சித் தலைமையகத்தில் ஜனவரி முதல் நாள் பால் காய்ச்சிய பின்னர் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மறுநாள் தொகுதி அமைப்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான இரண்டாம் கட்ட நேர்முகப் பரீட்சை இடம்பெற்றதுடன், பிரதித் தலைவர் ருவன், உப தலைவர் அகில, கட்சியின் தவிசாளர் வஜிர, பொதுச் செயலாளர் ரங்கே, நவீன், கொழும்பு நிர்வாகி லசந்த குணவர்தன ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

# வாரபலன்



08-01-2023-14-01-2023

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

சோதனைகளை சாதனைகளாக மாற்றிக் காட்டும் மேஷ ராசி நேயர்களே! 24ஆம் திகதி (08/01/2023) தனுசு ராசியில் சஞ்சரிக்கும் சகாயஸ்தானதிபதி புதன் வக்ர நிவர்த்தியாவதால் அனைத்து வழிகளிலும் நன்மை கிடைக்கும்.

குறிப்பாக கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்வர். சக பணியாளர்களுக்கு மத்தியில் உங்கள் கை மேலோங்கும். ரண சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்ன மருத்துவர்கள் கூட சாதாரண சிகிச்சையின் மூலமாகவே உங்கள் ஆரோக்கியம் சீராக வழி வகுத்து கொடுப்பார். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

## ரிஷபம்

தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றும் ஆற்றலை பெற்ற ரிஷப ராசி நேயர்களே! 24 ஆம் திகதி (08/01/2023)தனுசு ராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்ர நிவர்த்தியாவதால் நிறைய மாற்றங்களை சந்திக்கப் போகிறீர்கள். மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் கிடைக்கும். கரைந்த சேமிப்புகளை ஈடு கட்டுவீர்கள். நிறைந்த மனதோடு நிம்மதி கிடைக்கும் நேரம் இது. மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மன கசப்புகள் மாறும். வாங்கிய கடனை கொடுத்து மகிழ்வீர்கள்.

## மிதுனம்

சவாலான காரியத்தை சாதாரணமாக முடித்துக் காட்டும் மிதுன ராசி நேயர்களே! ராசியில் சஞ்சரிக்கும் புதன் மார்கழி 24ஆம் திகதி (08/01/2023)வக்ர நிவர்த்தியாவதால் நல்ல பலன்கள் இல்லம் தேடி வரப்போகிறது. குறிப்பாக ராசிநாதன் வக்ர நிவர்த்தி ஆவதால் ஆரோக்கியம் சீராகும். ஆதாயம் தரும் தகவல்கள் அதிகம் கிடைக்கும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். நிச்சயித்த பிறகு நின்று போன திருமணங்கள் மீண்டும் கைக்கூடும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் பழக்கத்தால் பணி நிரந்தரமாக எடுத்த முயற்சி கைகூடும். வீடு கட்டும், வாங்கும் யோகம் உண்டு. வெற்றிச் செய்திகள் அதிகம் வீடு வந்து சேரும்.

## கடகம்

வேகமும் விவேகமும் கொண்டு செயல்படும் கடக ராசி நேயர்களே! தனுசு ராசியில் சஞ்சரிக்கும் புதன் மார்கழி 24ஆம் திகதி (08/01/2023)வக்ர நிவர்த்தி ஆவதால் விரஸ்தானம் வலுப்பெறுகிறது.

வீடு மாற்றங்கள் இடமாற்றங்கள் எதிர்பார்த்தபடி அமையும். புதிய முயற்சிகளில் வெற்றி பெற மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு செய்வர்.

## சிம்மம்

கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்று சொல்லும் சிம்ம ராசி நேயர்களே! 24 ஆம் திகதி (08/01/2023) தனுசு ராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்கிர நிவர்த்தி ஆவதால் நல்ல பலன்கள் இல்லம் தேடிவரும். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரும். பூர்வீக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்யும் முயற்சி கூடும். புண்ணிய காரியங்களுக்கு கொடுத்து உதவுவீர்கள். இல்லத்தில் மங்கள் ஓசை கேட்கும் வாய்ப்பு உருவாகும்.

## கன்னி

நிதானமாக செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்று சொல்லும் கன்னி ராசி நேயர்களே! மார்கழி 24ஆம் திகதி (08/01/2023) தனுசு ராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்ர நிவர்த்தி ஆவதால் ஆரோக்கியம் ஆனந்தப்படுத்தும். அதிக முயற்சி செய்தும் முடிவடையாத காரியங்கள் இனி எழுதில் முடிவடையும். நல்ல சந்தர்ப்பங்களை உபயோகித்துக் கொள்வீர்கள். நண்பர்கள் வாயிலாக வருமானம் கிடைக்க வழி பிறக்கும். பணி புரியும் இடத்தில் ஏற்பட்ட சிறு பிரச்சினை காரணமாக அதில் இருந்து விலகிக் கொள்ள முன் வருவீர்கள். விருப்ப ஓய்வில் வெளிவந்து நண்பர்களுடன் கூட்டாக சேர்ந்து சுய தொழில் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். பெற்றோர் உடல் நலத்தில் கவனம் தேவை. பணிபுரியும் இடத்தில் சக பணி ஆட்களால் ஏற்பட்ட தொல்லை அகலும்.

## துலாம்

கவர்ச்சியாக பேசி காரியங்களை சாதிக்கும் துலாம் ராசி நேயர்களே! மார்கழி 24 ஆம் திகதி (08/01/2023) தனுசு ராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்ர நிவர்த்தி ஆவதால் விரயங்கள் கூடும். வீடு மாற்றம் உத்தியோகம் மாற்றம் போன்றவை உங்கள் தகுதிக்கும் தன்மைக்கும் ஏற்ப நடைபெறும். ஆதாயம் குறையும். பெற்றோர்களின் மணிவிழாக்களை முன்நின்று நடத்துவீர்கள். உறவினர்கள் பகை மறந்து செயல்படுவர். குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். கரைந்த சேமிப்புகளை ஈடு கட்டுவது பற்றி சிந்திப்பீர்கள். பணி புரியும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் அகலும். கேட்ட சலுகைகளும் கிடைக்கும்.

## விருச்சிகம்

தன்னம்பிக்கையும் தைரியமும் கொண்டு செயல்படும் விருச்சிக ராசி நேயர்களே! மார்கழி 24ஆம் தேதி (08/01/2023) தனுசு ராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்ர நிவர்த்தி ஆவதால் யோகங்கள் படிப்படியாக வந்து சேரும். குறிப்பாக லாபாதிபதி பலம் பெறும்போது தொழிலில் லாபம் அதிகரிக்கும்.

நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் பொறுப்புகளும் சம்பள உயர்வு கிடைக்கலாம். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சி கைகூடும். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். வர்த்தகம் சார்ந்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

## தனுசு

சந்தர்ப்பங்களை உபயோகித்துக் கொண்டு சாதிக்கும் தனுசு ராசி நேயர்களே! மார்கழி 24ஆம் திகதி (08/01/2023) தனுசு ராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்ர நிவர்த்தி ஆவதால் நன்மைகள் உண்டாகும். உங்கள் ராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் பலம் பெறும் பொழுது தொழில் வெற்றி நடை போடும். லாபம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். உத்தியோகத்தில் உயர்வு தானாக வந்து சேரும். ஏழாம் இடத்திற்கு அதிபதியாகவும் புதன் இருப்பதால் இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புகள் கைகூடி வரும். இதுவரை வந்த வரன்கள் ஒன்றும் பொருத்தமாக இல்லையே என்று அங்கலாய்த்து கொண்டிருந்தவர்கள் நல்ல தகவல்களால் மகிழ்ச்சி அடையப் போகிறீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர்.

## மகரம்

மக்கள் சேவையை மகேசன் சேவை என்று சொல்லும் மகர ராசி நேயர்களே! மார்கழி 24ஆம் திகதி (08/01/2023)தனுசு ராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்ர நிவர்த்தி ஆவதால் தொழில் மற்றும் உத்தியோகத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

உற்சாகமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும். விலகிச் சென்ற நண்பர்கள் விரும்பி வந்திணைவர். உத்தியோகத்தில் தற்காலிக பணியில் இருப்பவர்களுக்கு பணி நிரந்தரம் பற்றிய தகவல் கிடைக்கும்.

பெற்றோர் வழியில் இருந்த பிரச்சினை அகலும். வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும், புதிய வாகனம் வாங்கலாமா? என்று சிந்தித்தவர்களுக்கு இப்பொழுது நல்ல பதில் கிடைக்கும். பயணங்கள் பலன் தருவதாக அமையும்.

## கும்பம்

சேவை செய்வதை பெருமையாக கருதும் கும்ப ராசி நேயர்களே! மார்கழி 24 ஆம் திகதி (08/01/2023) தனுசு ராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்ர நிவர்த்தி ஆவதால் நல்ல மாற்றங்கள் வந்து சேரும்.

குறிப்பாக பஞ்சமாதிபதி பலம் பெறும் பொழுது நெஞ்சம் மகிழும் சம்பவங்கள் நிறையவே நடைபெறும். அஞ்சும் படியாக இருந்த பகைவர்கள் விலகுவர்.

ஆதரவுக் கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை உயரும். தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் இப்பொழுது மனம் மாறுவர்.

பொருளாதாரம் திருப்தி அளிக்கும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும் வாடகை கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்த கட்டிடத்திற்கு மாற்றும் அமைப்பு சிலருக்கு உண்டு.

## மீனம்

முயற்சி ஒன்றே வாழ்வில் முன்னேற வழி என்றுரைக்கும் மீன ராசி நேயர்களே! மார்கழி 24ஆம் திகதி (08/01/2023)தனுசு ராசியில் சஞ்சரிக்கும் புதன் வக்ர நிவர்த்தி ஆவதால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் தலைதூக்கும்.

கொள்கைப்படி செயல்பட இயலாது. தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் குறுக்கீடுகள் ஏற்படலாம். எதிரிகளின் பலம் மேலோங்கும்.

தீட்டும் திட்டங்களை செயற்படுத்த இயலவில்லை என்று கவலைப்படுவீர்கள்.

மனக்குழப்பம் உருவாகும். வருமானம் திருப்தி தரும் என்றாலும் விரயங்கள் கூடுதலாக இருக்கும். புது முயற்சிகளில் ஈடுபடும் பொழுது பொறுமையும் நிதானமும் தேவை.

# போதைவஸ்து பாவனையால் சீரழியும் இளைய சமூகம்

## நேர்வழிப்படுத்துவதில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வகிபாகம்

மனித வாழ்வில் மாணவப்பருவம் என்பது மிக முக்கியமானது. இன்று மாணவ சமுதாயம் தம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளிலிருந்து மீண்டு வர வழிவகை தெரியாது அல்லற்படுகின்றனர். இன்று எமது இளைய சமுதாயம் போதைப்பொருள் பாவனையால் சின்னாபின்னமாகிச் சீரழிந்து கொண்டிருக்கிறது. இதனால் இளம் சந்ததியினர் பலர் சமூகத்துக்கு சவாலாக உள்ளனர்,

**“அரிது அரிது மானிடராதல் அரிது**
**அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தல்**
**அதனிலும் அரிது ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது”**

என்று மானிடப்பிறவி பற்றியும் கல்வியின் பெருமை பற்றியும் ஔவைப் பிராட்டி அழகாக எடுத்தியம்பியுள்ளார். இன்று மனித மனங்களை மயக்கி, மதியை முடக்கி ஆற்றலை அழித்து இறுதியில் உடலையும் அழிக்கும் ஒருவகைக் கறையானான போதைவஸ்துக்கு அடிமையாகி இருக்கும் எம் இளைய சமுதாயத்தைப் பார்க்கும் போது ஔவைப் பிராட்டியின் பாட்டுடன்

**“ஞாலமும் கல்வியும் நயந்த காலை**
**போதையிலும் மூழ்காதிருத்தல் அதனிலும் அரிது”**

என்பதனையும் சேர்த்துக் கொள்ளலாம் போல் சொல்லத் தோன்றுகிறது. போதையின் கோரத்தாண்டவம் கொலை, களவு, கற்பழிப்பு ஆகிய தீய செயல்களுக்கு எமது மாணவ சமுதாயத்தை இட்டுச் செல்கிறது. இன்றைய இளைஞர்கள் தோல்வியைத் தாங்க முடியாதவர்களாகவும், சவால்களை எதிர்கொள்ளத் தயங்குபவர்களாகவும், விரக்தி மனப்பான்மை கொண்டவர்களாகவும் சமய நம்பிக்கை அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். இதன் விளைவால் அவர்கள் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாகின்றனர். தற்போது பெண்களும் போதைப் பொருளுக்கு அடிமையாகி வருகின்றனர். மன எழுச்சியையும் புத்துணர்வினையுந் தந்து மனமாற்றத்தைத் தரும் எனக் கருதிப் போதைக்கு அடிமையாகின்றனர். கூடுதலான உணர்ச்சியை (வெறியை) ஏற்படுத்துவதால் இப்போதைப்பொருட்கள் சவால்களை எதிர்கொள்ளும் மனப்பான்மையை வளர்க்கும் என எண்ணுகின்றனர். இதனால் குறுக்கு வழியில் இன்பம் அனுபவிக்கத் தலைப்பட்டுப் போதைப்பொருளை உட்கொள்கின்றனர். இதன் எதிர்கால விளைவுகளைப் பற்றிப் பாடசாலைப் பருவப் பிள்ளைகள் சிந்திப்பது குறைவாகவே உள்ளது.

“முகத்தின் ஒளியை மூடிய சிப்பியைப் போல” இவர்கள் மனதையும் மதியையும் அறியாமை மற்றும் போதைத்தனம் போன்றவை மூடியுள்ளன. மனமானது,

**“குரங்கு கிளைக்குக் கிளை தாவுவது போல”**

பல்வேறு பட்ட எண்ணங்களால் மாறிக் கொண்டிருக்கிறது. ஏமாறுபவனும் ஏமாற்றப் படுவோரும் இருந்தால் ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள் என்பதற்கு இணங்க, இன்றைய இளைய தலைமுறையினரைத் தன் வழியில் விழுத்தி அவர்களுக்கும் அவர்களது இல்லத்தார்க்கும், பாடசாலைக்கும், நாட்டிற்கும் தலையிடியாகப் போதைப்பொருள் பாவனை விளங்குகிறது. இளைய தலைமுறையினரை இலக்கு வைத்து அவர்களைப் போதைவஸ்துப் பாவனைக்கு உட்படுத்தினால் தான் எதிர்காலத்தில் பெரிய சந்தை வாய்ப்பு தமக்கு கிடைக்குமென்று கொடிய

போதைவஸ்து அரக்கர்கள் எண்ணிச் செயற்படுகின்றனர். இதனால் இவர்கள் இளைஞர்களை வலுவாகப் பற்றிக் கொண்டு இவர்களின் பலவீனத்தைத் தமது பலமாக்கிச் செயற்பட்டு வருகின்றனர். மனுக்குலத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் இத்தகு சமூக விரோதிகளின் சதித் திட்டங்களை முறியடித்து போதைவஸ்து அற்ற ஒளிமயமான எதிர்காலத்தைப் புலர வைக்க ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமானதொன்றாகும். போதைப்பொருள் பாவனையில் சிக்கியவர்களை அவற்றின் பிடியிலிருந்து மீட்க எமது மாமன்ற கிளைச் சங்கங்களும், ஏனைய சமய நிறுவனங்களும் சமூகமும் இணைந்து, தக்க நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும். நண்பர்களும் குடும்பத்தினரும் இணைந்து உங்கள் பிரதேச சூழலுக்கு ஏற்ப நடவடிக்கைகளை எடுத்து அவர்களைத் திருத்த முயல வேண்டும். அப்படிச் செய்யும் போது அவர்கள் திருந்துவதோடு அது உங்கள் பிரதேசங்களையும், நாட்டையும், அதனுடன் இணைந்த சமுதாயத்தையும் புனிதமாக்கும். பாடசாலை மாணவர்களிடையே இப்பழக்கமுண்டு என அறிந்தால் அதனைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுங்கள். இவ்விடத்தில் பாடசாலையிலிருந்து விலகியிராதீர்கள்.

நெருங்கியிருங்கள். பாடசாலைக்கு இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கச் சில வேளைகளில் நிதி வசதியில்லாதிருக்கலாம். அதற்கு உங்கள் அமைப்பினூடாகவோ அல்லது நலன் விரும்பிகளிடமிருந்தோ, வர்த்தக பிரமுகர்களிடமிருந்தோ பெற்று அவர்களுக்குக் கொடுத்து உதவுங்கள்.

பாடசாலையின் கட்டுக்கோப்புக்குள் நிர்வாகத்தில் எத்தலையீடுமின்றிப் பாடசாலையுடன் ஒட்டி உறவாடி மாணவர்களைக் காப்பாற்றுங்கள். பாடசாலையிலும் அதனைச்சூழ்ந்த இடங்களிலும் போதையைத் தடுப்பதற்கான சில ஆலோசனைகள்

- போதை ஏற்படுத்தும் கெடுதல்கள் பற்றியும் அவற்றிலிருந்து விலகியிருப்பதையும் காட்டும் விழிப்புணர்வு தொடர்பான பதாதைகளைக் காட்சிப்படுத்தல்.
- மாணவர்களுக்கிடையே போதைப் பொருள் ஒழிப்புத் தொடர்பான ஓவியப் போட்டிகள் நடாத்துவித்தல்.
- பாடசாலையின் முக்கிய ஒரு தினத்தில் போதை ஒழிப்புத் தொடர்பான நடைபவனியை ஏற்பாடு செய்தல்.
- போதைப் பொருள் ஒழிப்புத் தொடர்பான கையேடுகளை மாணவர்களுக்கும் சூழ உள்ள சமூகத்திற்கும் வழங்க நடவடிக்கை எடுத்தல்
- புகைத்தல் ஒழிப்பு தினத்தை நடத்துதல்.
- புகைத்தல் மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படும் உடல் உளமாற்றம் பற்றிய படக்காட்சிகளைக் காட்டி விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- போதைப் பொருட்களிலிருந்து எமது சமூகத்தைப் பாதுகாப்போம் என்ற வாசகங்களை வகுப்பறைகளிலும், பாடசாலைச் சூழலிலும், பாடசாலை சுற்று மதில்களிலும் சமூகத்தின் பார்வைக்காகப் பாடசாலையைச் சூழ உள்ள பிரதேசங்களிலும் காட்சிப் படுத்தல்.
- மாணவர்களுக்கிடையே போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான கட்டுரைப் போட்டியை நடாத்துதல்.
- போதைக்கு எதிரான பாடசாலையின் பலம் என்ற நிலையில் பேச்சுப் போட்டியை நடத்துதல்.
- போதைப் பொருளற்ற புத்திசாலிப் பிள்ளைகளைக் கொண்டது எமது பாடசாலை என்பது போன்ற வாசகத்தைப் பாடசாலையில் பொறிக்க நடவடிக்கை எடுத்தல்.
- போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான குறும் படம் நாடகம் என்பவற்றைத் தயாரித்து.

மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் காட்சிப்படுத்தல்.

- போதைப் பொருள் தொடர்பான தெருக்கூத்துக்களை ஏற்பாடு செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தல். இவை போன்ற செயற்பாடுகளையும் இது போன்று வேறு செயற்பாடுகளையும் செய்வதனூடாகப் போதையைக் கட்டுப்படுத்தலாம்.

அழகியல் (சங்கீதம், நடனம், சித்திரம், புல்லாங்குழல், வீணை, மிருதங்கம் போன்ற பாடங்கள்) பாடங்களும் மனதை ஒரு வழிப்படுத்தி மனம் கெட்ட வழியில் செல்லவிடாது தடுக்கும். ஆன்மீக எண்ணங்கள்

உருவாகும். மனம் அமைதியாக இருக்கும். விரக்தி எண்ணங்கள் உருவாகாது. உங்கள் பிரதேசங்களில் பாடசாலை மாணவர் முதல் ஏனையவர்களும் இப்பாடங்களைக் கற்க நடவடிக்கை எடுங்கள்.

“போதையற்ற உலகை உருவாக்குவதற்குத் தர்மத்தை செய்” “வாழ்வதற்காகத் திரைகடல் ஓடியும் திரவியம் தேடு”

“இன்பமாக வாழ் , “முத்திப் பேற்றை அடை " “மது அற்ற நிரந்தர வையகம்" வளர வேண்டும்

என்ற போதனையைச் செய்வதனூடாகவும் இதனை ஒழிக்க முயற்சிக்கலாம்.

போதைப்பொருள் பாவனையால் எமது சமூகம் சீரழிந்து கொண்டிருப்பது மறுக்க முடியாத உண்மை.

இதற்கு அடிமையானவர்கள் தமது வாழ்க்கையை இழப்பதுடன் தம்மைச் சார்ந்து இருப்பவர்களின் வாழ்வையும் படுகுழியில் தள்ளுகின்றனர். எம்மையும் எமது வருங்கால சமூகத்தையும் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்று உணர்ந்து செயற்படுங்கள்.

சட்டமுறைமைகளை இறுக்கமாக்கித் தவறு செய்யும் அதிகாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனையைப் பெற்றுக் கொடுங்கள்.

போதைப் பொருள் விற்பவர்களைச் சட்டத்தின் மூலம் கைது செய்து சிறையிலடைக்க உதவி செய்தீர்களானால் இக்குற்றச் செயல்கள் குறைவடைய வாய்ப்புண்டு.



வே.கந்தசாமி...
பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்

### கைத்தொழில் அமைச்சு

# இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

# பதவி வெற்றிடங்கள் – தலைமை அலுவலகம் / புல்மோட்டை பொறித்தொகுதி

முழுமையாக அரசுக்குரித்தான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட் நிறுவனத்தில் நிலவும் பின்வரும் பதவிகளுக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) - Deputy General Manager (Finance)**
**சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதி (HM 1-3)**
**வெற்றிடம் நிலவும் இடம்: தலைமை அலுவலகம் - 01 பதவி**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(அ) கல்வித் தகைமைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் நிதி மற்றும் கணக்கியல் துறையில் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

நிதி மற்றும் கணக்கியல் துறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் அல்லது பட்டயக் கணக்காளர் நிறுவனம்/ பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவனம்/ பட்டய சான்றுபடுத்திய கணக்காளர்களின் சங்கத்தின் இணை அங்கத்துவத்தைப் (ICA/CIMA/ACCA) பெற்றிருத்தல்

மற்றும்

அனுபவம் - அரச துறை, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 17 வருடங்கள் சிறப்பான சேவை சாதனையைப் பெற்றிருத்தல்.

(ஆ) பட்டயக் கணக்காளர் நிறுவனம்/ பட்டய முகாமைத்துவ கணக்காளர்களின் நிறுவனம்/ பட்டய சான்றுபடுத்திய கணக்காளர்களின் சங்கத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் (ICA/CIMA/ACCA) பெற்றிருத்தல்

மற்றும்

அனுபவம் - அரச துறை, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 17 வருடங்கள் சிறப்பான சேவை சாதனையைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியில் (HM 1-1) குறைந்தபட்சம் 02 வருட காலம் குறித்த விடயத் துறையில் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. முகாமைத்துவ சேவை தொகுதி Iஆம் தரத்தில் (MM 1-1) குறைந்தபட்சம் 07 வருட காலம் குறித்த விடயத் துறையில் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**HM-1-3 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - HM-1-3, ரூபா 86,865/- = 2,270x15 = 120,915/-

ரூபா 86,865/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**HM-1-3 சம்பள வகுதிக்கு பின்வரும் மேலதிக கொடுப்பனவுகள் உரித்தாகும்.**

1. PED/1/2015, PED/1/2015(i) மற்றும் PED/1/2015(ii) எனும் சுற்றுநிருபங்களின் பிரகாரம் போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது கடமைகளுக்காக நிறுவனத்தின் வாகனம் எனும் இரண்டில் ஒன்று வழங்கப்படும்.
2. அரச வியாபார 02/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுகள்
3. முகாமைத்துவ சேவை 05/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவிக்குரித்தான செயல்நிலை சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

**02. பிரதான இரசாயனவியலாளர் - (Chief Chemist)**
**சிரேஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதி (HM 1-1)**
**(வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி - 01 பதவி)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

**கல்வித் தகைமைகள் / தொழில்சார் தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

இரசாயனவியல் தொடர்பில் பட்டப் பின்படிப்பு பட்டம் பெற்றிருத்தல்

அல்லது

இரசாயனவியல் துறைக்கு இயைபாக அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்நுட்ப நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

அனுபவம் - அரச துறை, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருடங்கள் சிறப்பான சேவை சாதனையைப் பெற்றிருத்தல்.

(2) கல்வித் / தொழில்சார் தகைமைகள்

இரசாயனவியல் துறைக்கு இயைபாக அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்நுட்ப நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அனுபவம் - அரச துறை, அரச கூட்டுத்தாபனம், சபை, நியாயாதிக்க நிறுவனம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருடங்கள் சிறப்பான சேவை சாதனையைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**
**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ சேவை தொகுதி Iஆம் தரத்தில் (MM 1-1) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் குறித்த விடயத் துறையில் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**HM-1-1 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - HM-1-1, ரூபா 80,295/- = 2,270x15 - 114,345/-

ரூபா 80,295/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**HM-1-1 சம்பள வகுதிக்கு பின்வரும் மேலதிக கொடுப்பனவுகள் உரித்தாகும்.**

1. PED/1/2015, PED/1/2015(i) மற்றும் PED/1/2015(ii) எனும் சுற்றுநிருபங்களின் பிரகாரம் போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது கடமைகளுக்காக நிறுவனத்தின் வாகனம் எனும் இரண்டில் ஒன்று வழங்கப்படும்.
2. அரச வியாபார 02/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு பற்றுச்சீட்டு கொடுப்பனவுகள்
3. முகாமைத்துவ சேவை 05/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவிக்குரித்தான செயல்நிலை சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

**03. சிவில் பொறியியலாளர் - (Civil Engineer)**
**முகாமைத்துவ சேவை தொகுதி (MM 1-1)**
**(வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி - 01 பதவி)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**
**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் (சிவில்) பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

(2) சிவில் வேலைகள் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் தொழில்நுட்பம் / தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்திறனில் (NVQ) ஏழாம் (07) மட்டத்திற்குக் குறையாத மட்டத்தில் தோச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

தகைமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறித்த விடயத்துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு (01) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியில் (JM 1-2) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**MM-1-1 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10 = 95,575/-

ரூபா 53,175/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**04. உள்ளக கணக்காய்வாளர் - (Internal Auditor)**
**முகாமைத்துவ சேவை தொகுதி (MM 1-1)**
**(வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி - 01 பதவி)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் நிதி / கணக்கியல் / வர்த்தகமானி பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் நிதித் துறையில் ஒரு (01) வருட அனுபவம்

அல்லது

(2) (i) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சை (Intermediate level of Institute of Charted Accountants of Sri Lanka - ICASL)

(ii) பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சை (Institute of Management Accounts -CIMA - Intermediate level)

(iii) பட்டய சான்றுபடுத்திய கணக்காளர் சங்கத்தின் (Association of certificate and Corporate Accounts -ACCA ) IIஆம் படிநிலை

(iv) அரச தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் உயர் தேசிய கணக்காளர் டிப்ளோமா/ உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா (HNDA/HNDC)

அத்துடன்

மேற்கூறப்பட்ட 2ஆம் இலக்கத்தின் கீழ் ஏதாவது தகைமையப் பெற்றுக்கொண்டதன் பின் அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியாயாதிக்க சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நிதித் துறையில் ஒரு (01) வருட அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. கனிஷ்ட முகாமைத்துவ சேவை தொகுதியில் (JM 1-2) குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**MM-1-1 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10 = 95,575/-

ரூபா 53,175/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**MM-1-1 சம்பள வகுதிக்கு பின்வரும் மேலதிக கொடுப்பனவுகள் உரித்தாகும்.**

1. அரச வியாபார 02/2022ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொலைத்தொடர்பு பற்றுச்சீட்டு கொடுப்பனவுகள்
2. முகாமைத்துவ சேவை 05/2017ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவிக்குரித்தான செயல்நிலை சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்சார் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

**05. கணக்கியல் அதிகாரி - (Accounts Officer)**
**முகாமைத்துவ சேவை தொகுதி (JM 1-2)**
**வெற்றிடம் நிலவும் இடம்: புல்மோட்டை பொறித்தொகுதி - 01 பதவி**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**
**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.**
**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் நிதி / கணக்கியல் / வர்த்தகமானி பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சை (Intermediate level of Institute of Charted Accountants of Sri Lanka - ICASL)

(3) பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (Charted Institute of Management Accounts) இடைநிலைப் பரீட்சை

(4) பட்டய சான்றுபடுத்திய கணக்காளர் சங்கத்தின் (Association of certificate and Corporate Accounts -ACCA ) IIஆம் படிநிலை

(5) அரச தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் உயர் தேசிய கணக்காளர் டிப்ளோமா / உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா (HNDA/ HNDC)

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

(அ) மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத (MA 1-1) சேவை வகுதியில் IIஆம் தரத்திற்குரித்தான விடயத்துறையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**JM-1-2 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - JM-1-2, ரூபா 43,355/- = 755x10, 1,135x18 = 71,335/-

ரூபா 43,355/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

**06. காசாளர் - (Cashier)**
**முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத சேவை தொகுதி (MA 1-1)**
**வெற்றிடம் நிலவும் இடம்: தலைமை அலுவலகம் - 01 பதவி**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.**
**கல்வித் தகைமைகள்**

(1) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில்

I. சிங்களம் / தமிழ்

II. கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் ஆங்கில மொழி உட்பட ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சையை விடுத்து) சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

பதவிக்குத் தேவையான ஏனைய விசேடத்துவ தகைமைகள்: கணனி சொல்லாக்கம்/ தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

(1) ஆரம்பத் தரம் - தொழில்நுட்பம் அல்லாத, அரைத் தேர்ச்சி, தேர்ச்சிபெற்ற சேவை தொகுதியின் கீழ் ‘அ’, ‘ஆ’ மற்றும் ‘இ’ என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட ஊழியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில்

I. சிங்களம் / தமிழ்

II. கணிதம்
உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி சகிதம் ஆங்கில மொழி உட்பட ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

கணனி சொல்லாக்கம்/தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்.

(ஆ) சேவையில் நிரந்தர நியமனத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் அந்த நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(இ) நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு முன்னர் நிரந்தர நியமனத்தின் கீழ் குறைந்தபட்சம் 05 வருட காலம் தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**MA-1-1 சேவை தொகுதிக்குரிய சங்கேத இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம்

சம்பள சங்கேத இலக்கம் - MA-1-1, ரூபா 27,910/- = 300x10, 350x7, 495x4, 660x20 = 48,540/-

ரூபா 27,910/- ஆரம்ப நிலையில் அமர்த்தப்பட்டு சம்பளம் வழங்கப்படும்.

HM-1-3, HM-1-1 சேவை தொகுதிக்குரிய பதவிகளுக்கான வயதெல்லை - 35 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

MM-1-1, JM-1-2 சேவை தொகுதிக்குரிய பதவிகளுக்கான வயதெல்லை - 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

MA-1-1 சேவை தொகுதிக்குரிய பதவிகளுக்கான வயதெல்லை - 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

உள்ளக விண்ணப்பதாரிகளை ஆட்சேர்க்கும்போது அமர்த்தப்பட வேண்டிய சம்பள நிலையானது நிறுவனக் கோவையின் VII அத்தியாயத்தின் விதிமுறைகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

வழங்கப்படும் அடிப்படைச் சம்பளத்திற்குப் புறம்பாக பின்வரும் கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் மேற்கூறப்பட்ட பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) (HM-1-3), பிரதான இரசாயனவியலாளர் (HM-1-1), சிவில் பொறியியலாளர் (MM-1-1), உள்ளகக் கணக்காய்வாளர் (MM-1-1), கணக்கியல் அதிகாரி (JM-1-2), காசாளர் (MA-1-1) போன்ற சகல பதவிகளுக்கும் உரித்தாகும்.

**கொடுப்பனவுகள்**

01. பொதுத் திறைசேரியினால் அனுமதிக்கப்பட்ட 7800.00 ரூபா வாழ்க்கைச் செலவுப் படி
02. மாதாந்த உணவுக் கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
03. மாதாந்த வரவு ஊக்குவிப்பு கொடுப்பனவு - நாளாந்த வரவு அடிப்படையில்
04. மாதாந்தம் 4,000.00 ரூபா கஷ்டப் பிரதேச கொடுப்பனவு (புல்மோட்டை பொறித்தொகுதியில் சேவையாற்றுபவர்களுக்கு மட்டும்)
05. மாதாந்த உற்பத்தியின் அடிப்படையில் வழங்கப்படும் உற்பத்தி ஊக்குவிப்புக் கொடுப்பனவு
06. 5,000.00 ரூபா இடைக்காலக் கொடுப்பனவு
07. 15,000.00 ரூபா பொறியியலாளர்களை தடுத்துவைத்துக்கொள்ளும் கொடுப்பனவு (சிவில் பொறியியலாளர் பதவிக்கு மட்டும்)

**ஏனைய சலுகைகள்**

01. வருடாந்த உற்பத்தியை ஊக்கப்படுத்தும் கொடுப்பனவு
02. வருடாந்த போனஸ்
03. சத்திரசிகிக்கை மற்றும் மருத்துவ விடுதி மற்றும் வெளியக சிகிச்சைக்கான காப்புறுதி பாதுகாப்பு
    i. ஒரு வருடத்துக்கு 200,000.00 ரூபாவுக்கான மருத்துவ விடுதிக் காப்புறுதி பாதுகாப்பு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    ii. ஒரு வருடத்துக்கு 20,000.00 ரூபாவுக்கான வெளியக சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
    iii. ஒரு வருடத்துக்கு 5,000.00 ரூபாவுக்கான பற்சிகிச்சை பற்றுச்சீட்டுக்கான மீள்கொடுப்பனவு (குடும்ப அங்கத்தவர்கள் உட்பட)
04. நிலையான (நிச்சயிக்கப்பட்ட) எல்லையில் மருத்துவச் செலவு வழங்கப்படும்.
    i. இரண்டு வருடத்திற்கு ஒரு முறை 12,000.00 ரூபாவுக்கான கொடுப்பனவு (மருத்துவ நிபுணர் கட்டணம், மருத்துவ பரிசோதனைக் கட்டணம், மூக்குக் கண்ணாடி மற்றும் செவிப்புல உபகரண செலவுகளுக்காக)
    ii. மகப்பேற்றிற்காக இரண்டு வருடத்திற்கொருமுறை 12,000.00 ரூபா கொடுப்பனவு.
05. இதற்குப் புறம்பாக நிரந்தர ஊழியர்களுக்கான ஏனைய சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் உரிமை உண்டு.
06. ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பாக ஊழியரினால் 10% மற்றும் நிறுவனத்தினால் 15% மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கு நிறுவனம் பங்களிப்புச் செய்யும்.

**பொது நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரரும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு ஒப்படைக்கப்படும் விடயங்களை செவ்வனே நிறைவேற்றுவதுடன், நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்குத் தேவையான உடல் ரீதியான மற்றும் மன ரீதியான தகுதி உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் மொத்த உழைப்பில் இருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி (Pay as you earn Paye Tax) அறவிடப்படும்.

அரசாங்க சேவை / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டசபைகள் மற்றும் அரச நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்கள் அவர்களின் விண்ணப்பத்தை தமது திணைக்களம் / நிறுவனத்தின் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்களை (உரிய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணபிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு ராஜகிரிய, சரண மாவத்தை, இல. 341/21ல் அமைந்துள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டட்டின் தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளருக்கு கிடைக்கும் வகையில் 2023-01-23ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**341/21, சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

# திஹாரிய "FINE" நிறுவன ஊழியர்களின் ஒன்று கூடலும் கௌரவிப்பும்

இலங்கையில் தொழிற்சாலை உபகரணங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான திஹாரிய 'Fine' நிறுவனத்தினால் புதுவருடத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள 'நிறுவனத்தின் உபகரணத்தொகுதிகள் (Catalogue) உள்ளடங்கிய கைநூல்' வெளியீட்டு விழாவும் நிறுவனத்தில் சேவையாற்றும் ஊழியர்களை கௌரவிக்குமுகமாக புதுவருட ஒன்று கூடலும் வருடாந்த ஊழியர் கௌரவிப்பும் கடந்த திங்கட் கிழமை (02) திஹாரிய ஸனாயா வரவேற்பு மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஏ.எம். இக்ராம் மற்றும் நிறுவன பணிப்பாளர் ஸப்ரா இக்ராம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நிறுவனத்தில் சேவையாற்றும் ஊழியர்கள் உட்பட அவர்களின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர். இதன்போது ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் முகாமைத்துவ பணிப்பாளரினால் நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.





SPC

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் பின்வரும் பொருட்களுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன. அதேபோல் கேள்வி ஆவணங்களை ''மெஹெவர பியச'', 16ஆம் தளம், இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டியில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் வரவேற்பு கருமபீடத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

| தொ. இல. | விபரங்கள் | கேள்வி இலக்கம் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாள் | கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் | கேள்வி ஆவணக் கட்டணம் | கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் கால எல்லை |
|---|---|---|---|---|---|---|
| 01 | Tender for supply of Shoes for the year 2023 | AD/1/SH/03/2023 | 23-01-2023 | மு.ப. 11.30 | 3,000.00 + VAT | 09-01-2023 முதல் 20-01-2023 வரை |
| 02 | Tender for Supply of Uniform Materials for the year 2023 | AD/1/UM/04/2023 | 24-01-2023 | மு.ப. 11.30 | 3,000.00 + VAT | 09-01-2023 முதல் 23-01-2023 வரை |
| 03 | Tender for Supply of Shirts for the year 2023 | AD/1/SHIRTS/05/2023 | 24-01-2023 | மு.ப. 11.30 | 3,000.00 + VAT | 09-01-2023 முதல் 23-01-2023 வரை |
| 04 | Tender for Purchase of 120 Nos. of UPS Batteries | AD/1/UPS/B/06/2023 | 23-01-2023 | மு.ப. 11.30 | 3,000.00 + VAT | 09-01-2023 முதல் 20-01-2023 வரை |
| 05 | Tender for Supply & Delivery of Computer Items | AD/1/CI/HO/07/2023 | 25-01-2023 | மு.ப. 11.30 | 3,000.00 + VAT | 09-01-2023 முதல் 24-01-2023 வரை |

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம், ''மெஹெவர பியச'', 16ஆம் தளம், இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டி எனும் முகவரிக்கு மேற்கூறப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லாவிடில் இந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கேள்வி கோரல் நிறைவடைந்த உடனடுத்து கேள்விப் படிவங்களைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**''மெஹெவர பியச'' 16ஆம் தளம்,**
**இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டி.**
**தொலைபேசி: 2320356-9**


## குழந்தைகளின் பாதுகாப்புக்கு... (11ஆம் பக்கத் தொடர்)

இத்தகைய சம்பவங்கள் மூலம் யதார்த்த வாழ்க்கையில் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்கிறதா என்ற கேள்வி தற்போது எழும்பியுள்ளது. இன்று குடும்ப சூழலே குழந்தைகளை அச்சுறுத்தும் இடமாக மாறிவருகின்றது. குழந்தை பாதுகாப்பு என்பது குடும்பத்தின் மிக முக்கிய பொறுப்பு என்பதை மறந்துவிட்டார்கள்.

அதனால் தான் கவனயீனம், தங்களுடைய சுயவிருப்பு வெறுப்புகளுக்காக குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் நாள்தோறும் பெருகிவருகின்றன. அதுவும் இலங்கையில் மோசமான பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலையேற்றம் என்பன சிறுவர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் குடும்பங்களில் அதிகரிப்பதற்கு காரணமாகவுள்ளன.

கடன்தொல்லைக்கும் அவமானத்துக்கும் தற்கொலை முடிவல்ல என ஒவ்வொருவரும் உணர வேண்டும் அவர்களுக்கு நம்பிக்கை தரவேண்டிய பொறுப்பு சமூகத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் உள்ளது. அதேபோல் இத்தகைய குடும்பங்களின் தேவை அறிந்து அவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட அனைவரும் முன்வரவேண்டும். வெறுமனே அரசு தான் எல்லாவற்றையும் கவனிக்கவேண்டும் என்று எண்ணுவதை விட ஒவ்வொருவருக்கும் இதில் பங்குண்டு என்று எண்ணினாலே பாதிப்பிரச்சினை தீர்ந்த மாதிரித்தான்.

வெறுமனே தேவையற்ற விடயங்களில் பணத்தைசெலவழிப்பதை விட தேவையானவர்களுக்கு, உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவுதல் என்பதை அனைவருமே மனத்தில் கொள்ள வேண்டும்.

## தமிழர் அரசியலின்... (08ஆம் பக்கத் தொடர்)

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் ஏற்கனவே பல தடவை பல மட்டங்களில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருப்பதால் முடிவொன்றை எடுத்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கான கால அவகாசமே தற்பொழுது தேவைப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகள் முழுமையான வெற்றியளிக்காத நிலையில், நாட்டில் கட்டமைப்பு மாற்றமொன்றுக்காக கேள்வி எழுந்துள்ள பின்புலத்தில் சர்வகட்சி மாநாடொன்றை ஜனாதிபதி கூட்டி தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிப்பது சாதகமானதொரு நடவடிக்கையாகப் பார்க்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதே காலத்தின் தேவையாக உள்ளது. ஒவ்வொருவரும் தனித்தனியாகச் சென்று தமக்கான கோரிக்கைகளையும், தமது நிலைப்பாடுகளையும் முன்வைப்பது பிரச்சினைக்குத் தீர்வை வழங்காது. அவ்வாறான ஒற்றுமையின்மையானது அரசியல் தீர்வை தென்னிலங்கை தட்டிக்கழிப்பதற்கான வாய்ப்பையே ஏற்படுத்தி விடும்.

அது மாத்திரமன்றி, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்களைக் குழப்புவதற்கு எதிர்பார்த்திருக்கும் இனவாத பின்புலத்தைக் கொண்ட தரப்பினருக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்காது நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிப்பதே இவ்வேளையில் உகந்ததாகும்.

உண்மையில் சிறுபான்மையினர் சுயகௌரவத்துடன் வாழக் கூடிய வகையில் தீர்வொன்றைக்காண்பதற்குதமிழ்ப்பிரதிநிதிகள் முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.


பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்

## தேயிலை ஆராய்ச்சி சபை

## பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி பதவி

தலவாக்கலையிலுள்ள இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்திலுள்ள மேலேயுள்ள பதவிக்காக தேவையான தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணி விளக்கம்:**
நிலையத்தின் அனைத்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் நிருவாக மற்றும் நிதியியல் சார்ந்த விடயங்களுக்கு பொறுப்பாகவிருப்பதுடன் நிலையத்தின் பதவிக் குழுவிற்கு தலைமைத்துவத்தையும் ஊக்கத்தையும் வழங்கல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்:**
**வெளிவாரி:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து முதல் வகுப்பு **அல்லது** இரண்டாம் வகுப்பு மேல் பிரிவுடன் விஞ்ஞானம்/ விவசாயம் **அல்லது** பொறியியலில் நான்கு (04) வருட விஷேட பட்டம் அத்துடன் உரித்தான கற்கைநெறியொன்றில் பெற்ற கலாநிதி பட்டமொன்று.

**அத்துடன்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் நிருவாக மற்றும் முகாமைத்துவ அனுபவத்துடன் ஆகக் குறைந்தது இருபது (20) வருட ஆராய்ச்சி அனுபவத்தில் பன்னிரண்டு (12) வருடங்கள் கலாநிதி பட்டத்தைப் பெற்ற பின்னரும் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட நிருவாக மட்டத்திலும் நிரூபிக்கப்பட்ட முன்னைய பணி அனுபவம்.

**அத்துடன்**

ஆராய்ச்சி விஞ்ஞானிகள் / விரிவாக்கவாதிகளின் பல்வகை கற்கைநெறிகளை தலைமைதாங்கல் மற்றும் நேரான வழியில் இட்டுச் செல்வதற்கான நிரூபிக்கப்பட்ட இயலுமை. முறையான நிலையெடுத்தல் மற்றும் மனித மற்றும் ஏனைய வளங்களின் வினைத்திறமையுடனான முகாமைத்துவமானது சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**உள்வாரி:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞானம் / விவசாயம் **அல்லது** பொறியியலில் இரண்டாம் வகுப்பு பிரிவுடன் நான்கு (04) வருட விஷேட பட்டம் அத்துடன் உரித்தான கற்கைநெறியொன்றில் பெற்ற கலாநிதி பட்டம் அத்துடன் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் மேலதிக பணிப்பாளரொருவராக மூன்று (03) வருட திருப்திகரமான சேவை **அல்லது** ஆராய்ச்சி / விரிவாக்கல் பிரதி பணிப்பாளராக ஐந்து (05) வருட சேவை **அல்லது** பிரிவின் தலைவராக / தலைமை ஆராய்ச்சி அலுவலராக/ தலைமை ஆலோசனை அலுவலராக எட்டு (08) வருட சேவை.

**அல்லது**

விஞ்ஞானம் / விவசாயத்தில் அல்லது பொறியியலில் பெற்ற பட்டமொன்று அத்துடன் இரு (02) வருட பட்டப்பின் பட்ட ஆராய்ச்சி பட்டம் அத்துடன் உரித்தான கற்கைநெறியில் பெற்ற கலாநிதி பட்டம் அத்துடன் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் மேலதிக பணிப்பாளராக மூன்று (03) வருட திருப்திகரமான சேவை **அல்லது** ஆராய்ச்சி / விரிவாக்கல் பிரதிப் பணிப்பாளராக ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை **அல்லது** பிரிவின் தலைவராக / தலைமை ஆராய்ச்சி அலுவலராக/ தலைமை ஆலோசனை அலுவலராக எட்டு (08) வருட சேவை.

**அத்துடன்**

ஆராய்ச்சி விஞ்ஞானிகள் / விரிவாக்கவாதிகளின் பல்வகை கற்கைநெறிகளை தலைமைதாங்கல் மற்றும் நேரான வழியில் இட்டுச் செல்வதற்கான நிரூபிக்கப்பட்ட இயலுமை. முறையான நிலையெடுத்தல் மற்றும் மனித மற்றும் ஏனைய வளங்களின் வினைத்திறமையுடனான முகாமைத்துவமானது சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**
ஏச்எம் 2-3 (2016) மாதாந்தம் 98,215 – 12 x 2,700 - 130,615 ரூபா.

**வயது:**
40 வயதிற்கு குறையாமலும் 50 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது.

**தெரிவு செய்தல் முறைமை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமாக மேற்கொள்ளப்படும்.

**ஏனைய அனுகூலங்கள்:**
i. தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் முழுமையான தளபாடங்களை கொண்ட விடுதி.
ii. நிலையத்தின் தற்போது அமுலிலுள்ள சட்டங்களுக்கமைவான மருத்துவ அனுகூலங்கள்.
iii. சேமலாப நிதியம்: தெரிவு செய்யப்பட்ட அபேட்சகரானவர் சம்பளத்தின் 10% ஐ பதவி அலுவலர்களுக்கான சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுவார். அதே வேளையில் நிலையமானது 15% ஐ பங்களிப்புச் செய்யும். மேலும் நிலையமானது 3% ஐயும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு செய்யும்.
iv. வீட்டு வேலைகளுக்காக நான்கு தொழிலாளர் தொகுதிகள். (உள்வேலைகளுக்காக இருவர் மற்றும் வெளி வேலைகளுக்காக இருவர்)
v. தற்போது அமுலிலுள்ள அரசாங்க ஒழுங்குவிதிகளுக்கமைவாக சாதாரணமான கொடுப்பனவில் வரையறுக்கப்பட்ட பிரத்தியேக பாவனைக்காக தொழில் நியமனம் செய்பவரின் விருப்புரிமையில் வாகனமொன்று.
vi. பதவிக்கு ஏற்புடையதான ஏனைய மேலதிக அனுகூலங்கள்.

இப்பதவியானது நிரந்தரமானது. கீழே கையொப்பமிட்டவருக்கு கிடைக்கும் வகையில் **2023 சனவரி 24 ஆம் திகதியன்று** அல்லது அதற்கு முன்னராக பதிவுத் தபாலில் விண்ணப்பத்துடன் முழுமையான சுயதரவு அத்துடன் பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்று, உரித்தான கல்விசார் மற்றும் ஏனைய தொழில்சார் தகைமைகள் மற்றும் சேவை சான்றிதழ்களின் பிரதிகள், அத்துடன் உரித்தான துறையில் விண்ணப்பதாரியின் திறன்கள் மற்றும் அறிவு ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்காக உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஆகியவற்றையும் அனுப்புதல் வேண்டும்.

அரச சேவை/கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் சேவைபுரியும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவன தலைவரூடாகவே அனுப்பப்படல் வேண்டும். இந்த தேவைப்பாட்டின் இணக்கமின்மையானது விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கான வழியை வகுக்கும். அத்துடன், விண்ணப்பிக்கும் பதவியை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

தகவலுக்காக தயவு செய்து தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் **www.tri.lk** என்ற இணையத்தளத்தை பார்வையிடவும்.

**தலைவர், தேயிலை ஆராய்ச்சி சபை,**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்,**
**சென் கூம்ஸ், தலவாக்கலை.**






இலங்கையின் முன்னணி அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது நாடு முழுவதும் 272 கிளைகள் மற்றும் 3000 இற்கும் மேற்பட்ட திறமைமிக்க ஊழியர்களை கொண்டு செயற்படுகின்றது என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்கு தேவையான தகைமைகளுடன், முன்னனுபவம் கொண்ட திறமை மிக்க விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

# உதவி முகாமையாளர் - சட்ட அலுவல்கள்

## தொழில் அமைவிடம்: நீதிமன்ற சட்ட வலயம் - வடமத்திய மாகாணம்.

### முக்கிய பொறுப்புக்கள்

- அடகுப் பத்திரங்கள் மற்றும் சட்ட ஆவணங்களை வங்கியின் சார்பில் நிறைவேற்றுதல்.
- சட்ட அலுவல்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் பற்றி வங்கி அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தல்.
- முகாமைத்துவத்தினால் வழங்கப்படும் விடயங்கள் தொடர்பாக, சட்டநிபுணர்கள், சட்டத்தரணி சபை வழக்கறிஞர்களுடன் கலந்தாலோசித்தல்.
- விசாரணைகளை நெறிப்படுத்தல் மற்றும் முறையீடுகள் வரைபு, சத்தியக் கடதாசிகள், வழக்குகளை தாக்கல் செய்தல் என்பவற்றை பொறுப்பேற்றல் மற்றும் நீதிமன்றங்களில் வழக்குகளுக்கு ஆஜராகுதல்.
- ஏனைய சட்ட நடவடிக்கைகள்.

### முக்கிய தகைமைகள்

- Attorney -at- Law and Notary Public உடன் LLB பட்டப்படிப்பினை பூர்த்தி செய்தோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும். (துறைசார் பட்டபின்படிப்பு தகுதிகள் அல்லது தொழில்சார் வங்கியியல் / நிதியியல் தொடர்பான பட்டப்பின்படிப்பு என்பன மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.)

அத்துடன்

- சிவில் நீதிமன்ற நடைமுறை தொடர்பில் ஆகக் குறைந்தது 2 வருடகால அனுபவம் கொண்டிருத்தல். அல்லது பொது அல்லது தனியார் துறை நிதியியல்/ சட்ட நிறுவனத்தில் 2 வருட தொழில் அனுபவம்.
  வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் 2 மொழிகளுக்குமான நொத்தாரிசு அனுமதிப்பத்திரத்தினை குறித்த நீதிமன்ற வலயத்தில் கொண்டிருத்தல் அவசியம். ( சிங்களம் மற்றும் ஆங்கிலம்)
- கணனி கல்வியறிவு.
- வயது 40 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும்.
- ஆரம்பத்தில் 2 வருடகால ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

**தெரிவு செய்யும் முறை**
விண்ணப்பதாரிகள் தகைமைகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் குறும்பட்டியலிடப்பட்டு அதன் பின்னர் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர்.

**சம்பளம்**
தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான பேசி தீர்மானிக்கக்கூடிய சம்பள பொதி ஒன்று வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி**
2023 ஜனவரி 20

**விண்ணப்பிக்கும் முறை**
ஆர்வமுடைய தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் தங்களின் விண்ணப்பப்படிவங்களை சுயவிபரக்கோவை, கல்வி மற்றும் தொழில்சார் தகைமை பத்திரங்களின் பிரதிகள், வேலை அனுபவம், சிபாரிசு செய்யக்கூடிய உறவினரல்லா இரு தொழில்வல்லுனர்களின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களுடன் அனுப்பி வைக்கவும். விண்ணப்பிக்கும் பதவியை, விண்ணப்பப்படிவத்தினை தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும். அல்லது careers@rdb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலே கோரப்பட்டுள்ள தகுதிகளை கொண்டிராத அல்லது தவறான தகவல்களை கொண்டிருக்கும் விண்ணப்பப்படிவங்கள் ஆட்சேர்ப்பு செயல்முறைகளில் எக்கட்டத்திலும், எவ்வித முன்னறிவித்தல்களுமின்றி நிராகரிக்கப்படலாம். குறும்பட்டியலிடப்பட்ட சரியான விண்ணப்பதாரிகளை மாத்திரம் நேர்முக தேர்விற்கு அழைத்தல், அல்லது ஆட்சேர்ப்பு நடவடிக்கையை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உரியது.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி,
இல. 933, கண்டி வீதி, வெதமுல்ல, கண்டி.
0112 42 52 62 | www.rdb.lk

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

ஜோதிடர்களே, உங்களுக்கு கிடைக்கும் வீட்டு வரைபடத்தை பொறுப்புடன் எம்மைக் கொண்டு பூர்த்தி செய்து கொள்ளுங்கள். V. C. டி சில்வா (N.C.T. Civil Eng) தொலைபேசி 0729546653. 001162

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

0777 438169 கண்டி தலதா மாளிகைக்கு 20 மீற்றர் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நிதமும் நடமாடும் வியாபாரஸ்தலம், 180 சதுர அடி கடை அறை நீண்டகால குத்தகை உடன்படுக்கைக்கு அல்லது விற்பனைக்கு 8 10 மில்லியனுக்கு இடையிலான தொகைக்கு 0777 282147. 079956

வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

### திருமண சேவைகள்

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

பத்தரமுல்ல மரக்கறி கடைக்கு தங்கி சேவை செய்ய ஊழியர்கள் தேவை.உணவு, தங்குமிடத்து டன் சம்பளம் ரூ. 50, 000. 07774 11891 . 001409

### 309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

கொழும்பு12, பழைய சோனகத் தெருவிலுள்ள ஹாட்வெயார் கடையில் வேலை செய்வதற்கு ஆண் கணக்காளர், Book-Keeper தேவை. தொலைபேசி 0777310731. 000136

### 317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்

அனுபவமுள்ள முறையாக அபாயா வெட்டி தைக்கக்கூடிய திறமையான டெயிலர் அல்லது பெண் டெயிலர் ராஜகிரிய ஆடை Shop இல் வேலை செய்வதற்கு அல்லது வீட்டிற்கு கொண்டு சென்று தைப்பதற்கு நுகேகொட மற்றும் அருகிலுள்ள பிரதேசங்களில் தேவை. 0772838397. 001424

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கொழும்பு08, கம்பனிக்கு அனுபவமுள்ள 50 வயதிற்குக் குறைந்த சாரதி தேவை. C, C1 செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் தொடர்பு கொள்ளும் ஆற்றல் தேவை. தொடர்பு 0705363099, மின்னஞ்சல்: careerke@gmail.com 001476

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

சகல வீட்டு வேலைகளும் நன்றாக தெரிந்த வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. 0711390410. 000530

சமையல் மற்றும் வீட்டின் அன்றாட வேலைகளை செய்யக்கூடிய நடுத்தர வயது ஆண் அல்லது பெண் மொறட்டுவை பிரதேசத்தின் கிறிஸ்தவரின் வீட்டிற்கு தேவை. விண்ணப்பதாரி அவரது குறித்த குருவானவரால் உறுதி செய்யக்கூடிய நபராக இருத்தல் வேண்டும். குடிப்பழக்கமற்ற, ஆரோக்கியமான, நேர்மையான, சுத்தமானவராக இருத்தல் வேண்டும். உணவு, தங்குமிடம் வழங்கப்படும். நியாயமான சம்பளம் வழங்கப்படும். தொடர்பு 0703703408. 001457

மொறட்டுவயிலுள்ள வீடொன்றிற்கு தங்கியிருந்து வீட்டு வேலைகள் மற்றும் வீட்டை சுத்தமாக வைத்திருத்தல் வேலை செய்வதற்கான தமிழ் ஆணொருவர் தேவை. சிங்களம் பேசுதல் வேண்டும். தொடர்பெண் 0773054908. 000760

மொறட்டுவை நகரில் அமைந்துள்ள வீட்டில் சமையல் மற்றும் வீட்டை சுத்திகரிக்கும், வீட்டு வேலைக்கு சிங்களம் கதைக்கக்கூடிய தமிழ் ஊழியர் தேவை. தொடர்புகள் தொலைபேசி 07730 5 4 9 0 8. 000279

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

தோட்ட வேலை மற்றும் சுத்திகரிப்பிற்கு ஆண் ஊழியர் தேவை. ஓர் தம்பதியும் விரும்பப்படுவர். ஹம்பாந்தோட்டையில் அமைந்துள்ளது. 0773576097. 001213

### 322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

NSJ தளபாடம் தச்சர் மற்றும் பெயிண்ட் பாஸ் தேவை. நல்ல சம்பளம். வாரத்தில் 4 நாட்கள் மற்றும் நீண்ட காலத்திற்கு தங்கியிருந்து வேலை செய்யலாம். நிட்டம்புவ சங்கபோதி பாடசாலையிலிருந்து கொழும்பு பக்கமாக 200மீ. மொழிப் பிரச்சினை இல்லை. 0776518188 காலை 10 மணியிலிருந்து மாலை 6 மணி வரையும் அழைக்கவும். 000744

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

கையுதவியாட்கள் பால் ஆடு மற்றும் வெளிநாட்டு நாய் பண்ணைக்கு (கம்பஹா) தேவை. சம்பளம் 40, 000 உணவு, தங்குமிடம் இலவசம். 0771077077. 001414

புறொய்லர் கோழிப் பண்ணைக்கு தங்கி வேலை செய்வதற்கு தம்பதி தேவை. சம்பளம் 50,000. தொலைபேசி 077 3 935552 ராகம. 001417

### 325 தொழில்துறை பொது

குளியாப்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள தேங்காய் பால் உற்பத்தி நிலையத்திற்கு வயதெல்லை 18 65 ஆண், பெண் இருபாலாரும் வேலைக்கு தேவை. உணவு, தங்குமிடம் உட்பட மாதாந்தம் 45000/ = இற்கும் மேல் வருமானம். தொடர்புகளுக்கு 0777355722, 0701186473, 0765989822. 001361

கொள்ளுப்பிட்டியிலுள்ள பைகள் விற்கும் காட்சியறைக்கு காசாளர் பதவிக்கு வாட்டசாட்டமான 20 35 வயதுக்கிடைப்பட்ட பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். விண்ணப்பிக்கவும். சி.ஜே. நிமல சிறி, இல. 297, காலி வீதி, கொழும்பு03. மின்னஞ்சல்: pgmartin@sltnet.lk தொலைபேசி: 07 77 68 45 2 2. 001506

மீரிகம பிரதேசத்தில் அமைந்துள்ள கோழி இறைச்சி, சொசேஜஸ் பெக்கிங் தொழிற்சாலைக்கு வயதெல்லை 17 50 ஆண், பெண் இருபாலாரும் அவசியம். உணவு, தங்குமிடம் உட்பட மாதாந்தம் 45000/ = இற்கு மேல் வருமானம். தொடர்புகளுக்கு 07 7 7 355722, 0701 1 8 6473, 0765 9 8 9822. 001359

ஆண்கள் அலுவலக உதவியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பரிசுப் பொருட்கள் கம்பனியில் உடனடி வேலை. வயது 18 45, சம்பளம் 30, 000 ரூபா. உங்கள் சுயதரவுடன் கொழும்பு12, டாம் வீதி, 77ஆம் இலக்கத்திற்கு தயவு செய்து வரவும். தொலைபேசி 07 74065161. 000515

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கல்கிசை சென். ரீட்டா வீதி 12 பேர்ச் காணி மற்றும் 03 அறை வீடு. SE-AESTA நவீன வீட்டுத் தொகுதிக்கு அருகில். காலி வீதிக்கு மற்றும் கல்கிசை ரெயில் நிலையத்திற்கு அருகில். 0777772482. 001161

தலவத்துகொட சாலிந்த திஸாநாயக்க மாவத்த Austasia வுடன் இணைந்த 20 பேர்ச் காணி. காணியின் பின்புறம் மற்றும் முன்புறம் 2 பிரவேசங்கள். பிரிக்கவும் முடியும். நியாயமான விலை +94760004196, +94773020275. 000902

வெலிகாமம் பாலத்தடியில் 10 பேர்ச்சஸ் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு 0777954722, 0714500412. 001278

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

ராகமையில் 27 1/2 பேர்ச் முழுமையான 5 அறைகளுடன் இரு மாடி வீடு 380 இலட்ச ரூபாவிற்கு விற்கப்படும். 0777790692. 000926

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

பிரமிக்க வைக்கும் காட்சிகள் நிறைந்த குளிரான மலைநாட்டின் அழகை அனுபவிப்பதற்கு விருப்பமான உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக பெறுமதியான வியாபார மற்றும் வதிவிட 100 காணித்துண்டுகள். ஒரு பேர்ச் ரூபா 245, 000/ = தொடக்கம். விஷேட கழிவுடன் வட்டியில்லாத இலகு கொடுப்பனவு முறை. தொடர்பு கொள்ளுங்கள். சிறிபொல லேண்ட்ஸ் 0702484848. 001225

ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக 10 பேர்ச் கொண்ட பெறுமதியான 100 காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு. குழாய் நீர் மற்றும் மூன்று பேஸ் மின்சாரம் கொண்டது. ஒரு பேர்ச் ரூபா 245, 000/ = தொடக்கம். இலகு கொடுப்பனவு முறை மற்றும் விஷேட கழிவொன்று சகிதம் உங்கள் காணியை இன்றே ஒதுக்கிக் கொள்வதற்கு தொடர்பு கொள்ளுங்கள். சிறிபொல லேண்ட்ஸ் 0702484848. 001224

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

சிறிய தோட்டம், இணைந்த குளியலறையுடன் அனெக்ஸ் இருவருக்கான பிரத்தியேக அறை. St. Thomas Offeciete Caughts இற்கு நடைதூரம். காலி வீதிக்கு அருகில். 011 2730364, 077 7522011. 001348

வெலிகாமம் பாலத்தடியில் 1ம் மாடி வீடு வாடகைக்கு உண்டு. பூரண டைல்ஸ் பதிக்கப்பட்டுள்ளது. தொடர்புக்கு 0770743669. 001264

வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845
















Advertise Here

வாரமஞ்சரி BUDGET adz

5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com












# படித்ததும் பகர்வதும் 126



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

பாடசாலைகளின் புதிய தவணை ஆரம்பித்துள்ளது. புத்தாண்டின் முதல் தவணை என்பதால் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்குத் தேவையான பாடசாலை புத்தகங்கள், அப்பியாச கொப்பிகள், காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள் என்பவற்றை வாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஒவ்வொரு வருடமும் பெற்றோர் தம் பிள்ளைகளுக்காக இவற்றை அதீத ஆர்வத்தோடும், ஆசையோடும் விருப்பத்தோடும், வாங்கி வந்துள்ளனர்.

ஆனால், இந்த வருடத்தில் இவற்றை வாங்குவது அவர்களுக்கு பெரும் சுமையாகவும், சோதனை மிக்கதாகவும் உள்ளதை காணக்கூடியதாக இருக்கிறது. இதற்குக் காரணம் இவற்றின் விலைகள் குறைந்த பட்சம் மூன்று அல்லது நான்கு மடங்கு அதிகரித்துள்ளமையே ஆகும். அத்துடன் கூடிய விலை கொடுத்து வாங்கும் போது கூட தரமானவற்றை வாங்க முடியாமலும் இருக்கிறது.



இந்த இக்கட்டான நிலையில் பெற்றோர்கள் அதிக மன அழுத்தங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் ஆளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அன்றாட உணவுக்கே கஷ்டப்படும் பலர் தம் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கான பொருட்களை வாங்குவதில் படுகின்ற பாடு பெரும்பாடாகவே இருக்கின்றது.

மாணவர்களின் கல்வி சிறப்பான எதிர்காலத்துக்கான அத்தியாவசியமான முதலீடு என்பதை எவராலும் மறுக்க முடியாது. இதனை நன்கு கருத்தில் பதித்து எல்லாவித சிரமங்களுக்கு மத்தியிலும், எல்லாவித சூழ்நிலைகளிலும் மாணவர்களது கல்வி நடவடிக்கைகள் பாதிப்புறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் இயலுமான மாற்று வழிகளை கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமாகும். தமது மூத்த பிள்ளைகள் பாவித்த புத்தகங்களை இளைய பிள்ளைகளுக்குக் கொடுத்தல், கடந்த ஆண்டுகளில் பாவித்த அப்பியாசக் கொப்பிகளில் மீதமிருக்கும் தாள்களை சேர்த்து, பாவிக்கக் கூடிய முறையில் புதிய அப்பியாச கொப்பிகளை செய்து கொள்ளல். தமது வீடுகளில் மேலதிகமாக இருக்கும் இத்தகையவற்றை பக்கத்து வீடுகளிலுள்ள, தேவையானவர்களுக்கு கொடுத்து உதவுதல் போன்றவற்றை ஒவ்வொரு பெற்றோரும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

எல்லா ஊர்களிலும், பிரதேசங்களிலும் இயங்குகின்ற சமூக சேவை அமைப்புகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, உண்மையான தேவையுள்ளோரை அடையாளம் கண்டு, அவர்களுக்கு இவற்றை வழங்கி உதவிட வேண்டும். வசதி படைத்தவர்களும் தமது வீடுகளில் நடத்தக்கூடிய உற்சவங்கள், விழாக்கள், பண்டிகைகள், விருந்துபசாரங்கள் போன்றவற்றை இயலுமான அளவில் சிக்கனமாக செய்து, அவற்றில் மீதப்படும் தொகையை இத்தகைய கல்விப் பணிகளுக்கு வழங்கி உதவிட முன்வர வேண்டும்.

இந்த முக்கிய நற்பணியை, உளமார, தாராளமாக, பரந்த அளவில் செய்திட இப் புத்தாண்டின் மற்றுமொரு உறுதிமொழியாக எடுத்து, நற்பணியாக செய்திடுவோம்.

## நெஞ்சுக்கு நீதி

மாணவர் கல்விதான் நாளைக்கான முதலீடு
மாணவர் கற்றிடகஸ்டங்களை பொறுத்திடு
வேணவா கொண்டு வேண்டியதை செய்திடு
வெற்றிகள் நிச்சயம் வெறியுடன் உழைத்திடு

## பிரிந்தார் பெருமை

**'கறுப்பு முத்து' பேலே**



கால்பந்தாட்ட விளையாட்டின் முடிசூடா மன்னன், பிரேசிலின் 'கறுப்பு முத்து' உலக கால்பந்தாட்ட ஜாம்பவான் பேலே தனது 82வது வயதில் கடந்த டிசம்பர் 29ம் திகதி (2022.12.29) காலமானார்.

கால்பந்தாட்ட விளையாட்டில் பல்வேறு சாதனைகளுக்கு சொந்தக்காரரான பேலே, அதிக தடவைகள் உலக சாம்பியன் அணியை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரே வீரர் என்ற சிறப்பிற்குரியவர். 5 தடவைகள் வென்று, அதிக தடவைகள் உலக சாம்பியன் பட்டத்தை சூடிய பிரேசில் அணியில் 3 தடவைகள் பேலே இடம்பிடித்துள்ளார். 1958, 1962, 1970ஆம் ஆண்டுகளில் பிரேஸிலின் உலக சாம்பியன் வெற்றிக்கு பேலேயின் பங்களிப்பு அளப்பரியது.

1953ம் ஆண்டு தனது 13ஆவது வயதில் பிரேஸிலின் தேசிய இளையோர் கால்பந்தாட்ட அணியில் இடம்பிடித்த பேலே அடுத்த 4 வருடங்கள் தொடர்ச்சியாக அதி சிறந்த இளம் வீரராக தெரிவாகி 1958ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடருக்கான பிரேஸில் குழாத்தில் தனது 17வது வயதிலேயே வாய்ப்புப் பெற்றார். இத்தொடரில் தனது அபார விளையாட்டின் மூலம் முழு உலகையுமே வியப்பில் ஆழ்த்தினார்.

மைதானத்தின் எந்தவொரு பகுதியிலிருந்தும் பந்தை கொண்டு செல்லும் வல்லமை, களத்தில் இரண்டு, மூன்று வீரர்களையும் ஏமாற்றி பந்துடன் தந்திரமாக முன்னேறும் ஆற்றல், தலையாலும் மார்பாலும் தொடையாலும் பந்தை கட்டுப்படுத்தும் அதீத திறமை, எவ்வளவு தூரத்திலிருந்தும் குறி தவறாமல் பந்தை கோல் கம்பத்துக்குள் செலுத்தும் திறமை என்பன இரசிகர்களை கிறங்கடித்த பேலேயின் சிறப்பாற்றல்களாகும்.

1970ல் லாகோஸில் நடைபெற்ற போட்டியொன்றில் பேலேயின் ஆட்டத்தை பார்ப்பதற்காக, நைஜீரியாவில் அப்போது உள்நாட்டுப்போரில் ஈடுபட்டிருந்த இரண்டு குழுக்கள் 48 மணிநேர போர் நிறுத்தத்தை அறிவித்தமை ஒரு தனித்துவ வரலாற்றுப் பதிவாக உள்ளது.

1970ஆம் ஆண்டு சர்வதேச கால்பந்தாட்ட அரங்கிலிருந்து பேலே ஓய்வுபெற்றாலும், சாண்டோஸ் கழகத்துக்காக தொடர்ந்து விளையாடினார். 1974ல் அதிலிருந்து விடை பெற்றதுடன் அமெரிக்காவின் நியூயோர்க் கொஸ்மாஸ் கழகத்தில் இணைந்து, அமெரிக்காவில் கால்பந்தாட்டத்தை பிரபல்யப்படுத்துவதில் பெரும் பங்காற்றினார்.

பேலேவின் 22 வருட கால் கால்பந்தாட்ட வரலாற்றில், மொத்தமாக 1282 கோல்களைப் போட்டுள்ளதுடன், 92 போட்டிகளில் ஹெட்ரிக் கோலடித்து சாதனை படைத்துள்ளார். 1970ம் ஆண்டுகளில் பிரேஸிலின் தேசிய புதையலாக அறிவிக்கப்பட்ட பேலே, 20ஆம் நூற்றாண்டு முடிய முன்னரேயே 1980ல் அந்த நூற்றாண்டின் தலைசிறந்த விளையாட்டு வீரராக சர்வதேச ஒலிம்பிக் குழுவால் அறிவிக்கப்பட்டார்.

1978ம் ஆண்டு கால்பந்தாட்டத்திலிருந்து பேலே முழுமையாக ஓய்வு பெற்றார். அவரது ஓய்வுபற்றிய அறிவிப்பு நிகழ்ச்சியில் 25 நாடுகளைச் சேர்ந்த 761 பத்திரிகையாளர்களும், சில நாடுகளின் தலைவர்களும் கலந்துகொண்டு பிரியாவிடை அளித்தமை விசேட அம்சமாகும்.

பேலே இவ்வுலகைப் பிரிந்தாலும் கால்பந்தாட்ட இரசிகர்களின் மனங்களில் அவர் என்றென்றும் முடிசூடா மன்னராவே நிலைத்திருப்பார் என்பது உறுதி.

## வாசித்ததில் வசீகரித்தது

**தற்புகழ்ச்சி அறிவாளிகளுக்கு நஞ்சு**

தன்னைத் தான் புகழ்ந்து கொள்வது போன்று அருவருக்கத்தக்க குணம் வேறொன்றுமில்லை. 'தற்புகழ்ச்சிக்காரர்கள் தங்களுடைய பித்தளைப் பானையைக் கூடத் தங்கப்பானை என்று கூறுவார்கள்' என்று கூறுகிறது டச்சுப் பழமொழி ஒன்று.

தற்புகழ்ச்சிக்காரர்கள் தங்களைப் பிறர் பெருமையாக எண்ணிக் கொள்ளட்டும் என்று, நாம் அவர்களை யாதொன்றும் கேட்காதபோதிலும் அவர்களே தங்களைப் பற்றிப் பிரமாதமாக அளந்துகொட்ட ஆரம்பித்து விடுகிறார்கள். அவர்களை மற்றவர்கள் முட்டாள்கள் என்று கருதிக் கொள்கிறார்கள் என்பதை அவர்கள் உணர்வதில்லை. அவர்கள் எப்பொழுது தங்களையே தாம் புகழ்ந்து கொள்வதை நிறுத்துகிறார்களோ அப்பொழுதுதான் அவர்களின் புகழானது விண்ணை நோக்கி உயரத் துவங்குகின்றது. எப்பொழுது அவர்கள் தங்களைத் தாங்களே புகழத் துவங்குகின்றார்களோ அப்பொழுது அது படுபாதாளத்தை நோக்கி விரைந்து செல்கின்றது.

நம்மிடம் சிறந்த பண்பாடுகள் காணப்படின் அவற்றைப் பிறர் வாயிலாகக் கேட்பதே செவிக்கும் மனதிற்கும் இன்பம் பயக்குமேயன்றி நம் வாயாலே கூறுவது அருவருக்கத்தக்கதே. தற்புகழ்ச்சியை முட்டாள்கள் உணவாகவும், அறிவாளிகள் நஞ்சாகவும் கருதுகின்றனர்.

தற்புகழ்ச்சிக்காரர்களால் யாதொரு செயலையும் ஆற்ற முடியாது. எனவே தான் இத்தாலியப் பழமொழி ஒன்று இப்படி கூறுகிறது, "அவர்கள் தூரத்திலுள்ள சிங்கத்தைப் பிடித்து நிறுத்தி விடுவதாகக் கூறுவார்கள். ஆனால் தங்கள் முன்னுள்ள கோவேறு கழுதையைப் பிடித்து நிறுத்தப் பயப்படுவார்கள்" என்று.

ஒருவன் எவ்வளவுதான் திறமையுள்ளவனாக இருந்த போதிலும் அவன் தன்னுடைய திறமையைப் பற்றியோ தன்னுடைய வெற்றிகளைப் பற்றியோ தானே எடுத்துரைப்பின் அவன் பிறரால் எள்ளி நகைக்கப்படுவான் என்பதில் ஐயமில்லை.

நூல்: வழி காட்டும் ஒளி விளக்கு, ஆசிரியர்: அப்துற் றஹீம்,, வெளியீடு: யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், சென்னை, தமிழ்நாடு. தொடர்புகளுக்கு: ++919444047786

## தகவல் களஞ்சியம்

**சிறைச்சாலையில் பட்டதாரிகள்!**



இலங்கையில், 300க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலை சிறைச்சாலைகளின் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க வெளியிட்டுள்ளார்.

அவர் தெரிவித்துள்ள தகவல்களின்படி, பல்வேறுபட்ட குற்றச்சாட்டுகளுக்காக 14,547 குற்றவாளிகளும், 62,426 சந்தேக நபர்களும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மொத்தமாக 349 பட்டதாரிகளும், உயர்தரம் சித்திபெற்ற 5,395 பேரும், சாதாரண தரத்தில் சித்திபெற்ற 17,616 பேரும் உள்ளனர்.

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நீதிமன்றங்களால் தண்டனை விதிக்கப்பட்ட அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளதாக சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறையில் அடைக்கப்பட்டவர்களில் 2.2% பேர் பாடசாலைக்கு செல்லாதவர்கள் என்று புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. வயது அடிப்படையில் வகைப்படுத்தும் போது, கடந்த ஆண்டு 16 வயதுக்குட்பட்ட 87 பேரும், 16 முதல் 22 வயதுக்குட்பட்ட 5,983 பேரும், 22 முதல் 30 வயதுக்குட்பட்ட 18,377 பேரும், 30 முதல் 40 வயதுக்குட்பட்ட 26,134 பேரும் பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். மேலும், 70 வயதுக்கு மேற்பட்ட 436 கைதிகளும் சிறையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பேசும் கவிதை

**மரணம்**

எல்லோருக்கும் கிடைக்கும்
பாரபட்சமின்றி
மரணம்
★★★★★★★★★★★★
பகிர நினைத்தாலும்
பகிர முடியாதது
மரணம்
★★★★★★★★★★★★
கேட்கும் நேரம் அல்ல
கேட்காத நேரமே வரும்
மரணம்
★★★★★★★★★★★★
உணர மட்டுமே முடிந்தது
உணர வைக்க முடியாதது
மரணம்
★★★★★★★★★★★★
விரும்பாதவனையும்
விரும்பியே அணைத்திடும்
மரணம்
★★★★★★★★★★★★
எம்.எப்.கே பஹ்மியா
(உடுதெனிய மடிகே)

## பொன் மொழி அது பொய்யா மொழி

நல்லவராக இருப்பது சிறந்தது தான். ஆனால் நல்லது கெட்டது தெரியாத நல்லவராக இருப்பது ஆபத்தானது.

கடலில் மூழ்கினால் முத்து எடுக்கலாம். கடனில் மூழ்கினால் வாழ்க்கை போய் விடும்.

அறிமுகம் இல்லாத மனிதர்களின் பார்வையில் நாம் அனைவரும் சாதாரண மனிதர்கள் தான்.

மனிதனின் பாவங்களில் பெரும்பாலானவை அவனின் நாவில் இருந்து தான் பிறக்கின்றது.

ஒருவனிடம் உள்ள மிகப் பெரிய பலவீனம் தன்னை தானே மிகப் பெரிய புத்திசாலி என்று எண்ணுவதுதான்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207



# ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 34

மூத்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா தி. ஞானசேகரன்

# ஈழத்து ஹைக்கூ கவிதை முன்னோடி சு. முரளிதரன்



"ஈழத்து நவீன தமிழ்க் கவிதை மரபில் ஹைக்கூ இணைந்து ஏறக்குறைய 20 ஆண்டுகளாகிவிட்டன. முதன்முதலில் வெளிவந்த கவிதைத் தொகுதி சு. முரளிதரனுடைய கூடைக்குள் தேசம் என்பதாகும். இது 1986இல் வெளிவந்தது. இந்நூலில் முன்னுரையாக கவிஞர் அப்துல் ரஹ்மான் கூறியவை ஹைக்கூ கவிதையைப் படிப்பதற்குத் தூண்டும்.

எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டிருப்பது கவிதையின் வேலையில்லை. கட்டுரையின் வேலை. நம்மில் பலருக்கு இந்தக் கலைத்துவம் புரிவதில்லை. ஒரு காட்சியைக் காட்டுவதோடு ஹைக்கூவின் வேலை முடிந்துவிடும். அதில் உள்ள அர்த்தங்களைத் தோண்டி இறைத்துக் கொள்வது வாசகன் பொறுப்பு. இந்த வகையில் வாசகனும் கவிதையில் ஒரு கூட்டுப் படைப்பாளி. ஒரு காட்சியில் வாழ்க்கையின் அற்புதமான தரிசனத்தை தத்துவ உண்மையின் மின்னல் வீச்சை ஏற்படுத்துகிற வல்லமை ஒவ்வொரு ஹைக்கூவுக்கும் உண்டு. சு. முரளிதரன் ஈழத்துத் தமிழ்க் ஹைக்கூ தொகுப்பை வெளியிட்ட முன்னோடியாவார்." எனக் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ( ஈழத்து தமிழ்ப் புதுக்கவிதை மரபில் ஹைக்கு கவிதைகள் "ஞானம் சஞ்சிகை 100ஆவது இதழ் செப்டெம்பர் 2008)

முரளிதரன் அக்கரப்பத்தனையை அடுத்துள்ள மன்ராசி என்ற ஊரில் சுப்பிரமணியம்பிள்ளை மகாலட்சுமி அம்மாள் தம்பதியினரின் மகனாக 08.06.1964 அன்று பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை கோல்புறூக் தமிழ் வித்தியாலயம் மற்றும் கண்டி சில்வஸ்ரர் கல்லூரி ஆகியவற்றில் பெற்றவர்.

கோல்புறூக் பாடசாலையில் கலாநிதி செ.யோகராசா 1977இல் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் எட்டாம் வகுப்பில் தமிழார்வமும் படைப்புச் சிந்தனையும் கொண்ட மாணாக்கனாக சு.முரளிதரனை இனங்கண்டார்.

அவர் முரளிதரனுக்கு வழங்கிய மல்லிகை இதழ்களும், வானம்பாடி இதழ்களும், இலக்கிய நூல்களும் முரளிதரனைப் புடம்போட்டன. 'இளந்தளிர் எனும் கையெழுத்துப் பத்திரிகையுடன் தொடங்கிய முரளிதரனது இலக்கிய முயற்சி வியர்வை எனும் கவிதைப் படைப்பை 1979ஆம் ஆண்டு மல்லிகையில் வெளிவரச் செய்ததன்மூலம் பரிணமித்தது.

பின்னர் கண்டி சில்வஸ்டர் கல்லூரியில் 1981 /83 காலப்பகுதியில் மாணாக்கனாக விளங்கிய பொழுது திராவிட இயக்கத்தில் பூத்த க.ப.சிவம், இலக்கிய நண்பர் அந்தனி ஜீவா ஆகியோருடன் ஏற்பட்ட அறிமுகத்தால் மலையக கலை இலக்கியப் பேரவையின் தீவிர உறுப்பினராகச் செயற்பட்டார். உயர்தரப் பரீட்சை முடிந்த கையோடு ஏற்றுக்கொண்ட ஆசிரியத் தொழிலில் அறிமுகமான இன்னொருவர் சக ஆசிரியரான அகளங்கன். அவருடன் இணைந்து சமவெளி மலைகள் என்ற கவிதைத் தொகுதியை வெளிக்கொணர்ந்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் உயிரியல் துறை மாணாக்கனாக இருந்த காலத்தில் மலையகத்தின் முதல் புதுக்கவிதைத் தொகுதி எனக் கருத்தில் கொள்ள வைக்கும் அவருடைய தியாக யந்திரங்கள் மலையக கலை இலக்கியப் பேரவையின் ஐந்தாவது ஆண்டு விழாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

முரளிதரனின் கவிதை நூலில் காணப்பட்ட கருத்துப் புதுமைகள் அவரை முக்கிய கவிஞனாக இனங்காட்டியது. விஞ்ஞானத்துறை மாணவனாக இருந்தபோதிலும் பேராதனை தமிழ்ச்சங்கத்தில் இவரது இயக்கம் மற்றும் தமிழ் வெளிப்பாடுகள், பேராசிரியர் தில்லைநாதன், பேராசிரியர் அருணாசலம், கலாநிதி துரை மனோகரன், பேராசிரியர் சிவராஜா போன்றோரின் அரவணைப்பைப் பெற்றுத்தந்தன.

இந்தக் காலத்தில் அவரின் 'மானுடம் வென்றதம்மா' என்ற நாடகப் பிரதிக்கு அமைச்சு மட்டத்தில் நடந்த போட்டியில் முதற்பரிசு கிடைத்தது. அதுவே பின்னர் வெள்ளிநிலா கலாலயத்தினால் 'ஒன்று எங்கள் ஜாதியே| என்ற பேரில் பலமுறை மேடையேற்றப்பட்ட வெற்றி நாடகமாகும்.

இதே காலப்பகுதியில் 10.04.88இல் இவரது கூடைக்குள் தேசம் இலங்கையின் முதலாவது ஹைக்கூ கவிதைத் தொகுதியும் வெளிவந்தது. அந்த நூலுடன் அவர் தமிழகத்திலும் அறிமுகமானார். அத்தோடு தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சிநெறி தமிழ்ப்பாட மொடியூலில் கவிதை வளர்ச்சி பற்றிய கட்டுரையில் இவரது ஹைக்கூவும் இடம்பெற்றது. க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் பொதுப் பரீட்சைகளில் கூடைக்குள் தேசம் பற்றி வினாக்கள் கேட்கப்படுவதும் இடம்பெற்றன. அதே காலப்பகுதியில் தமிழகத்திலும் இவரது கூடைக்குள் தேசம் ஹைக்கூ ஆய்வாளர்களிடம் பரவலாகியது. 1994ஆம் ஆண்டு எம். பில் பட்டத்துக்காக சென்னைப் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேட்டில் பல்வேறு தலைப்புகளின்கீழ் இவரது ஹைக்கூ கவிதைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இந்தியாவின் சாகித்திய மண்டல வெளியீடாகத் தொகுக்கப்பட்ட ஹைக்கூ தொகுப்பில் இவரது கூடைக்குள் தேசத்தில் உள்ளடங்கிய ஹைக்கூ கவிதைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. 2006ஆம் ஆண்டில் ஸ்ரீ. பிரசாந்தன் தொகுத்த ஈழத்துத் தமிழ்க்கவிதைகள் தொகுப்பிலும் கூடைக்குள் தேசம் கவிதைகள் அடங்கியுள்ளன.

முரளிதரன் தனது பல்கலைக் கல்வியை முடித்த பின்னர் சிறிது காலம் ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். அப்போது ஹட்டனில் இயங்கிய மானுடம் கலை இலக்கிய வட்டம், நந்தலாலா இலக்கிய வட்டம் ஆகிவற்றுடன் இணைந்து இலக்கிய விமர்சனத்துறையில் கவனம் செலுத்துபவரானார். அதன்பின் பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் விலங்கியல் துறையில் உதவி விரிவுரையாளராக பணியாற்றச் சென்ற வேளையில் மீண்டும் குன்றின் குரல், கொழுந்து, மலையக் கலை இலக்கியப் பேரவை என்பனவற்றுடன் இணைந்து செயற்படலானார்.

1991ஆம் ஆண்டு ஸ்ரீபாதக் கல்வியியல் கல்லூரி மலையகத்தில் இயங்கத் தொடங்கிய வேளையில், உதவி விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.




இடைக் காலத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியெய்தி, யதன்சைட் ஆசிரியர் கலாசாலைக்குச் சென்று விரிவுரையாளராகவும், பிரதி அதிபராகவும் நான்கு ஆண்டுகள் கடமையாற்றினார். இக்காலம் இவரது இலக்கிய வாழ்வின் உச்சக்கட்டமாகும்.

பல்வேறு கவி அரங்குகளில் பங்குபற்றி மலையகத்தின் வாழ்க்கை நிலையை எடுத்துக் கூறினார். இலக்கிய ஆய்வரங்குகளில் கட்டுரைகள் சமர்ப்பித்தார். இலக்கிய நூல்களையும் சிங்கள திரைப்படங்களையும் பத்திரிகைகளில் விமர்சித்தார். மலையக நாட்டாரியல் பற்றி பத்திரிகைகளில் தொடர்கட்டுரைகள் எழுதினார்.

சோமகாந்தனின் அரவணைப்பில் கலைப் பூங்கா நிகழ்ச்சியை வானொலியில் நடாத்தினார். குன்றின்குரல், கொழுந்து ஆசிரிய பீடங்களை அலங்கரித்தார். இவ்விதம் எழுச்சிபெற்ற இவரின் பங்களிப்பால் கலாசார அமைச்சின் கலைக்கழக இலக்கியக் குழுவுக்கும் தெரிவானார்.

1994ஆம் ஆண்டு இவரது தலைமைப் பொறுப்பில் காத்திரமான ஒரு சாகித்திய விழா நடைபெறவும், காரணகர்த்தாவாக விளங்கினார். 1996இல் மலையக தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுவதற்கும் பெரும் பங்காற்றினார். இக்காலப்பகுதியில் புலமைப்பரிசில் பெற்று கனடாவுக்கு முதுகல்வி மாணி கல்வியைப் பெறுவதற்குச் சென்றபோது, இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து கனடாவில் இயங்கிய சேரன், திருமாவளவன், சக்கரவர்த்தி ஆகியோர்களுடன் இணைந்து இயங்கினார்.

மீண்டும் இலங்கை வந்து 2000ஆம் ஆண்டு முதல், ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரியில் செயல் நிறைவேற்றும் பீடாதிபதியாக கடமையேற்றார். இளம் வயதிலேயே இவர்மீது சுமத்தப்பட்ட நிர்வாகச்சுமை மிகுந்த பணி இது. இக்காலத்தில் இவர் ஏலவே எழுதியிருந்த படைப்புகளைத் தொகுத்து 'தீவகத்து ஊமைகள்' என்ற கவிதைத் தொகுதியையும் மலையக இலக்கியத் தளங்கள் என்ற கட்டுரைத் தொகுதியையும் வெளிக் கொணர்ந்தார். கட்டுரைத் தொகுதி மத்திய மாகாண சாகித்தியப் பரிசை 2002ஆம் ஆண்டு பெற்றது.

இவரது கவிதைகள் பல சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு இணையத் தளங்களில் வலம் வருகின்றன.


"கவிஞர் முரளிதரனின் பார்வை வெறுமனே புறப்பார்வையாகவோ தொலைப்பார்வையாகவோ அன்றி உணர்ச்சிமிக்க அனுபவம் சார்ந்த புறப்பார்வையாக விளங்குவதையும், தோட்டத் தொழிலாளர் பிரச்சினைகளை அறிவு பூர்வமாகவும் உணர்வு பூர்வமாகவும் அணுகி கலைத்துவம் குன்றாமல் வெளியிடுவதையும் அவரது கவிதைகளில் காணலாம். அவரது கவிதைகளில் இடம்பெறும் தோட்டத் தொழிலாளர்களது வேதனைகளும் அவலங்களும் உள்ளக்குமுறல்களும் போராட்டங்களும் மரணங்களும் தியாகங்களும் உயிர்ப்புள்ளவை. உண்மையானவை. அவை, சத்தியத்தின் தரிசனங்களே. அவரது கவிதைகளிற் பாசாங்கையோ போலித்தனங்களையோ செயற்கைப் பாங்கையோ காண்பதரிது.

முரளிதரனது கவிதைகளின் தனித்துவப் பண்புகளுள் குறிப்பிடத்தக்கது, அவர் தம்மை தொழிலாளர்களுள் ஒருவராக நின்று அவலங்களும் துன்பங்களும் தியாகங்களும் மலிந்த அவர்களது சோகவரலாற்றை உள்ளக் குமுறலுடனும் யதார்த்த பூர்வமாகவும் வெளிப்படுத்துவதேயாகும். இப்பண்பு அவரது அதிகமான கவிதைகளில் நிரம்பிக் காணப்படுகின்றன" எனக் குறிப்பிட்டுள்ளார் கலாநிதி க. அருணாசலம்.

கவிஞர் முரளிதரன் தற்போது மலையக பாடசாலைகள் அபிவிருத்தி பணிப்பாளராகக் கடமை புரிகின்றார்.

# சிறுவர் உலகம்

சுகந்தி



குறளமுதம் :

**கல்வி : தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு**

***தெளிவுரை :***

*மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்க்கு நீர் ஊறும், அதுபோல் மக்களின் கற்றக் கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 45

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | | 07 | | 08 |
| 09 | | 10 | 11 | | 12 |
| 13 | 14 | 15 | | 16 | 17 |
| | | | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | | 24 | |

பெயர் ..............................

வகுப்பு ..............................

தொலைபேசி இல ..............................

பாடசாலை பெயர் ..............................

வதிவிட முகவரி ..............................

..............................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

**(1) காலை எழுந்தவுடனும், இரவில் உறக்கத்துக்குச் செல்வதற்கு முன்னரும் எமது பற்களைச் சுத்தம் செய்வது பற்களின் ஆரோக்கியத்துக்கு உகந்தது. பற்களைச் சுத்தம் செய்வதற்கான சாதனம் இது.**

**(10) சூரியத் தொகுதியில் சூரியனைச் சுற்றி வருகின்ற கிரகங்களுக்கு இவ்வாறும் ஒரு பெயர் உண்டு. (தலைகீழான சொல்)**

**(13) கால்விரல்களிடையே சவ்வும், தட்டையான அலகின் இருபுறமும் நீர் வெளியேறிச் செல்வதற்கான துவாரங்களும் கொண்ட பறவை இது. இப்பறவை நன்னீர்நிலைகளில் நீரின் மேலாக நீந்திச் சென்று சிறிய மீன்களையும் பூச்சிபுழுக்களையும் பிடித்துண்பதற்காகவே இந்த இசைவாக்கம். சிலர் வீடுகளில் இப்பறவையை வளர்க்கின்றனர். (தலைகீழான சொல்)**

**(16) கவிதைகள் புனைபவர் இவர். (தலைகீழான சொல்)**

**(18) தொலைவு என்ற அர்த்தம் தருகின்ற சொல்.**

**(21) கொடிய விஷம் கொண்ட பாம்பு இது. இப்பெயரில் உலோகம் ஒன்றும் உள்ளது.**

**மேலிருந்து கீழ்**

**(1) வேட்டையாடி இரை பிடிக்கும் பறவை இது. வானத்தில் தூரத்தில் வட்டமிட்டபடியே தரையில் உலவும் சிறிய பிராணிகளை இனம்கண்டு, தாழப்பறந்து வந்து பிடித்துச் செல்லும். இரையைப் பிடித்துச் செல்வதற்காக கூரிய நகங்கள் கொண்ட நீளமான கால்விரல்களும், இரையைக் கிழித்து உண்பதற்காக கூரிய வளைந்த அலகும் கொண்ட பறவை.**

**(4) மரத்தைத் தறிப்பதற்கும், விறகு வெட்டுவதற்குமான கூரிய உபகரணம். (தலைகீழான சொல்)**

**(8) நாய், பூனை, புலி, சிங்கம், மாடு, ஆடு போன்ற பிராணிகளை பொதுவாக இப்பெயரால் குறிப்பிடுவர்.**

**(10) அக்காலத்தில் அரசர்கள் மற்றும் வீரர்கள் போர் புரிவதற்கு பயன்படுத்திய கூரிய உலோக ஆயுதம். (தலைகீழான சொல்)**

**(16) குதிரைக்கு அசுவம் என்றொரு ஒத்தசொல் உள்ளது. அதுபோன்று இதுவும் மற்றொரு ஒத்தகருத்துச் சொல். (தலைகீழான சொல்)**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 44

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கொரோனா 06. விசும்பு 10. புவி 12. களை
14. குரு 16. தாழை 18. அணை 23. அவனி

**மேலிருந்து கீழ்**

01. கொம்பு 03. வினா 04.புறா 07. சுளை
08. தாகம் 11. அரவி 17. கோழை 18. வீணை
20. வளை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 43

### பாராட்டு பெறுவோர்

**1. தமிழ் குமார் தேனுஜான்**
தரம் 02, காரைதீவு சண்முகா வித்தியாலயம்,
இளங்கோ வீதி, காரைதீவு

**2. எம்.எம்.எம். அப்ராஸ்**
தரம் 04, மா/சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை.
இல. 37, கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**3. பஹ்மா ருஷ்டி**
தரம் 08A, பென்ஹில் கல்லூரி, கம்பளை.
இல. 12/22A, இளவத்துறை, கம்பளை.

**4. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, மேமா/மது/ரஹ்மானிய்யா, ம.வி.,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**5. அப்லல் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வி,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**6. ஸீனத் தஹானி சாட்**
தரம் 10B, க/பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி, கண்டி.

**7. யூ.ஹக்கீமா**
தரம் 03B, அல் ஹசனியா ம.வித்தியாலயம்,
இல. 53, இந்திரிலி கொட, மக்கொன.

**8. எம். புளைல்**
தரம் 06, அல் அஸர் தேசிய பாடசாலை,
இல. 123/4, பள்ளிபோருவ, ஹெம்மாதகம.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 45
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

## திருந்திய சிறுவன்

ஒழுகினசேரி என்ற கிராமத்தில் ஒரு சிறுவன், தெருவில் போவோர் வருவோர் மீது கற்களை எறிந்து வேடிக்கைப் பார்ப்பது வழக்கம். அவனுக்கு அது ஒரு பொழுது போக்கு.

ஒரு நாள், அவ்வழியே சென்று கொண்டு இருந்த ஒருவர் மீது சிறு கல் விழுந்தது. கல் எறிந்த சிறுவனை அவர் கண்டு கொண்டார்.

சிறுவன் மீது கோபித்துக் கொள்ளவில்லை. 'சிறுவனே, இந்தச் சிறு கல்லை எறிகிறாயே கொஞ்சம் பெரிய கல்லாய் பார்த்து எறி' என்று சொல்லி விட்டுப் போனார்.

மறுநாள், அவர் சொன்னபடியே பெரிய கல்லொன்றைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். அப்போது, அவ்வழியே வயோதிபர் ஒருவர் போய்க் கொண்டிருந்தார். அவர் மீது சிறுவன் கல்லை எறிந்து விட்டான். அது அவர் தலையில் பட்டு இரத்தம் பெருகியது.

வழக்கமாக ஓடிப் போகும் சிறுவன், ஓடி ஒளிந்துக் கொள்ளவில்லை. சிறுவனின் மனம் வருந்தியது. தேம்பித் தேம்பி அழத் தொடங்கினான். வயோதிபருக்கு சிறுவன் மீது இரக்கம் ஏற்பட்டது.

'இனி இவ்வாறு கல் எறிய மாட்டாய் என்று நினைக்கிறேன். நீ திருந்தி விட்டாய். எதிர்காலத்தில் புகழுடன் வாழப் போகின்றாய்' என்று வாழ்த்தி விட்டு சென்றார்.

அந்தச் சிறுவன் யார் தெரியுமா?

'இந்தியன் சார்லி சப்ளியன்' என்று பின்னாளில் பாராட்டுப் பெற்ற கலைவாணர் என். எஸ். கிருஷ்ணண் ஆவார்.


மாணவர்களே நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினை இச் சம்பவத்தில் இருக்கின்றது.

**சாரணா கையூம்**

## இவ்வார மழலை




நேசன்/ருஷ்னிகா வைஷ்ணவி,
கொழும்பு



## உலகக் கிண்ண கால்பந்து

4 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் உலகக் கிண்ண கால்பந்து போட்டி 1930ஆம் ஆண்டு ஆரம்பமானது. 2022ஆம் ஆண்டு 22ஆவது போட்டியாக கட்டார் நாட்டில் நடைபெற்றது. இப்போட்டியை உலக சனத்தொகையில் அரைப்பங்கினருக்கும் அதிகமானவர்கள் கண்டுகளித்தனர் எனக் கூறப்படுகின்றது.

32 நாட்டு அணிகள் இப் போட்டியில் பங்குபற்றின. இறுதியாக 3ஆம் இடத்தைப் பெற்ற குரோசிய அணியினருக்கு 27 மில்லியன் அமெரிக்க டொலரும் 2ஆம் இடத்தை வென்ற பிரான்ஸ் அணியினருக்கு 30 மி.அ. டொலரும் முதலாம் இடத்தைப் பெற்று செம்பியனான ஆர்ஜென்டீனாவுக்கு 42 மி.அ. டொலரும் 2 3/4 கிலோ எடையுள்ள தங்க நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் இப்போட்டியில் சிறந்த வீரருக்கான தங்கப் பந்து 'லயனல் மெஸி'க்கும் அதிக கோல்கள் செலுத்திய பிரான்ஸ் அணித் தலைவர் 'கிலியன் எம்பாபே'க்கு தங்கப் பாதணி சின்னமும் வழங்கப்பட்டதோடு, சிறந்த கோல் காப்பாளருக்கான தங்கக் கையுரை 'எமிலியானோ மார்டினஸ்க்கும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

அடுத்த உலகக் கிண்ண கால்பந்து போட்டி 2026இல் அமெரிக்கா, கனடா, மெக்சிகோ நாடுகளில் நடத்த இருப்பதாக பீ:பா தலைவர் 'கியானி இன்பன் டினோ' அறிவித்துள்ளார்.

**என். மொஹமட் லாபீர், பதுளை**



## டானாகில் டிப்ரஷன்

பூமியில், நமக்கு விளங்காத மர்மங்களை கொண்டிருக்கும் பல இடங்கள் உள்ளன. அதில் ஒன்று தான் டானாகில் டிப்ரஷன் என்ற இடம். இது வட ஆபிரிக்காவில் எத்தியோப்பியா என்ற நாட்டில் அமைந்துள்ளது. இங்கு பல சூடான நீரூற்றுகள் மற்றும் எரிமலைகளும் உள்ளன. அதோடு மட்டுமல்ல இங்கு நெருப்பு மழையும் பெய்யுமாம். டானாகில் டிப்ரஷன் என்ற இடத்தில் அதிக அளவு பொட்டாசியம் உப்பு மற்றும் கந்தகம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன் காரணமாக, அதைச் சுற்றியுள்ள நிலம் சிவப்பு, மஞ்சள், ஆரஞ்சு மற்றும் வெள்ளை நிறமாக மாறியுள்ளது. இதில் ஆச்சரியமான விடயம் என்னவென்றால், டானாகில் டிப்ரஷன் கடல் மட்டத்திலிருந்து 125 மீட்டர் கீழே அமைந்துள்ளது.

இந்த இடத்தில் மூன்று டெக்டோனிக் ப்ளேட்டுகள் உள்ளன. டெக்டோனிக் இயக்கம் காரணமாக, இந்த தட்டுகள் ஒவ்வொரு ஆண்டும் 1 அல்லது 2 சென்டிமீற்றர் தொலைவில் நகர்கின்றன. தட்டுகள் விலகுவதால் இங்கு விரிசல் வருகிறது. இதன் காரணமாக, பூமியின் உள்ளே இருந்து சூடான எரிமலை வெடிக்கிறது. சிறிது நேரம் கழித்து ஆழமான பள்ளம் தோன்றி, அதில் கடல் நீரை முழுமையாக நிரம்பி விடும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.




**ஹரிஹர சுதன்**
தரம் 08, கேம்பிரிஜ் பாடசாலை, கொழும்பு - 15



**நி. ஷைனி**
தரம் 01, சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு 06





**எம். சித்தார்த்தன்**
தரம் 08, கேம்பிரிஜ் பாடசாலை, கொழும்பு - 15

## நடனப் போட்டியில் இரண்டாமிடம்

அகில இலங்கை ரீதியில் அனுராதபுரத்தில் அண்மையில் நடைபெற்ற குறத்தி நடனப்போட்டியில் மருதானை இந்து வித்தியாலய மாணவி வி. சிப்ரல் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இச்சாதனைக்கு மாணவியை பல சிரமங்களுக்கு மத்தியில் பயிற்றுவித்து போட்டியில் பங்குபெறச் செய்த பாடசாலையின் நடன ஆசிரியை திருமதி எம். கோகிலப்பிரியா, உதவிபுரிந்த சங்கீத ஆசிரியை திருமதி ஈ.டி சுகந்தி ஆகியோரை வித்தியாலய அதிபர் கே. செல்வகுமார் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டியுள்ளனர்.



## வாரம் ஒரு பெரியார்

## தமிழின் பெருமையை உலகெங்கும் பரப்பிய தனிநாயகம் அடிகளார்



தனிநாயகம் அடிகளார் யாழ்ப்பாணம் மாவட்டத்தில், ஊர்காவற்றுறையில் கரம்பொன் கிராமத்தில் நாகநாதன் ஹென்றி ஸ்ரெனிஸ்லொஸ் மற்றும் சிசிலியா இராசம்மா பஸ்தியாம்பிள்ளைத் தம்பதியருக்கு 1913 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2ஆம் திகதி மகனாகப் பிறந்தார். தனிநாயகம் அடிகளின் இயற்பெயர் சேவியர் நிக்கலஸ் ஸ்ரெனிஸ்லொஸ் என்பதாகும்.

இவர் ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை 1920 முதல் 1922 வரை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் ஆங்கில மொழியில் பயின்றார்.

இவர் 1931 முதல் 1934 வரை கொழும்பில் புனித பேர்னாட் மறைப் பள்ளியில் சேர்ந்து இறையியல் கல்வி பயின்றதுடன் ஆங்கிலம், இலத்தின், இத்தாலியம், பிரெஞ்சு, ஜேர்மன், ஸ்பானியம், போத்துக்கீயம், ரஷ்சியம், கிரேக்கம், ஹிபுரு, சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளைக் கற்றுப் பன்மொழிப் புலவரானார்.

குருத்துவக் கல்வியை முடித்து அதில் பட்டம் பெற்ற பின்பு தென்னிந்தியா திருநெல்வேலி வடக்கன்குளம் கிராமத்தில் உள்ள புனித திரேசா மடப் பாடசாலையில் 1940 முதல் 1945 வரை துணைத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். முறையான தமிழைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இங்கேயே தோன்றியது. பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயர் என்பவரிடம் தமிழ் பயில ஆரம்பித்தார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முதுமாணிப் பட்டம் பெற்றார்.

1945ஆம் ஆண்டு தமிழ் இலக்கியத்தில் பட்டப்படிப்பிற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து தமிழ் இலக்கியம் படித்தார். இவர் இளமாணிப் படிப்பு முடிக்காமலே நேரடியாக முதுகலைமாணிப் படிப்பினை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டார். அங்கு சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்து முதுகலை பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

1947 தொடக்கம் 1949 வரை தமிழ் இலக்கியத்தில் 'சங்ககால இலக்கியச் செய்யுளில் இயற்கை' என்னும் தலைப்பில் தனது ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்து பட்டம் பெற்றார். 1952 தொடக்கம் 1961 வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில் 1955 முதல் 1957 வரை லண்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் வழியாகக் கல்வியியல் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து கல்வியியலில் கலாநிதி பட்டத்தினை இரண்டாவது முறையாகப் பெற்றுக் கொண்டார். 1961 முதல் 1968ஆம் ஆண்டுவரை மலேசியாவில் உள்ள மலாய் பல்கலைக்கழகத்தில் இந்தியத் துறையின் தலைவராகவும் தமிழ்த் துறையின் பீடாதிபதியாகவும் தமிழ் பேராசிரியராகவும் பணியாற்றினார். 1969 இல் மலேசியாவை விட்டு நீங்கியவுடன் பாரிஸ் மற்றும் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

அவரது அரிய முயற்சியின் விளைவாக உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் (International Association for Tamil Research, IATR) 1964 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1961ஆம் ஆண்டில் அவர் மலாய் பல்கலைக் கழகத்தில் இந்தியத் துறைத் தலைவராகவும் தமிழ் பேராசிரியராகவும் பணியாற்றினார். புரொயென்காவின் போர்த்துக்கீச தமிழ் அகராதியை அங்கு மீள்பதிவாக்கம் செய்து இம்மாநாட்டில் தனிநாயகம் அடிகளார் வெளியிட்டுள்ளார்.

தமிழ் மேல் கொண்ட பற்றால் 1949 மற்றும் 1950 ஆம் ஆண்டுகளில் உலகின் பல்வேறு நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு தமிழ்த் தூது நிகழ்த்தியுள்ளார். ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரேசில், எக்குவடோர், பெரு, மெக்சிக்கோ மற்றும் இத்தாலி என்பன அவர் உரை நிகழ்த்திய நாடுகளாகும். அமெரிக்க நாட்டில் மட்டும் தமிழின் சிறப்பைப் பற்றி ஒரே ஆண்டில் 200 விரிவுரைகள் ஆற்றியுள்ளார்.

உலக அரங்கில் பல நாடுகளில் தமிழாய்வு நடைபெற வழிவகுத்த பெருமை அடிகளாருக்கு உரியது. அடிகளார் எழுதிய நூல்கள் ஏராளம். தமிழுக்கு தொண்டாற்றிய தமிழ் தூதுவர் தனிநாயகம் அடிகளார் 1980 செப்டெம்பர் முதலாம் திகதி மாலை 6.30 மணியளவில் இறையடி சேர்ந்தார்.

1981 இல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அடிகளாரின் உருவச்சிலை திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்கு கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.



# விளையாட்டு

## இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கும்

# ஒருநாள் தொடர்

## தசுனை திரும்பிப் பார்க்குமா உலகம்?

தசுன் ஷானக்க எப்போது எப்படி ஆடுவார் என்று தெரியாது. ஆனால் எப்போதென்றாலும் ஆட்டத்தை தலைகீழாக திசை திருப்பக்கூடிய திறமை படைத்தவர். அதற்கு எத்தனையோ உதாரணங்களை குறிப்பிடலாம். கடைசியாக பூனேவில் நடந்த இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் 20 பந்துகளில் அரைச் சதம் பெற்று அதிவேக அரைச்சதம் பெற்ற இலங்கை வீரராக சாதனை படைத்த அவர், கடைசி ஓவருக்கு இந்திய அணி 21 ஓட்டங்களை பெற இருந்தபோது 2 விக்கெட்டுகளை வீழ்த்தி இலங்கை அணியை காப்பாற்றினார்.

என்றாலும் ஷானக்கவின் திறமையை உலகம் மதிப்பதாக இல்லை என்பதுதான் பெரும் குறை. அதற்கு நல்ல உதாரணம் ஐ.பி.எல் தொடர். ஒவ்வொரு முறையும் அவர் தனது பெயரை ஐ.பி.எல்லுக்குக் கொடுத்தபோதும் யாரும் வாங்குவதாகத் தெரியவில்லை.

கடைசியாக கடந்த டிசம்பர் கடைசியில் கொச்சினில் நடந்த ஐ.பி.எல் ஏலத்திலும் தசுன் ஷானக்கவின் பெயர் இருந்தது. அது 50 இலட்சம் இந்திய ரூபா என்ற அடிமாட்டு விலையே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், அவரை யாரும் வாங்க முன்வரவில்லை.



இத்தனைக்கும் தசுன் ஷானக்க இந்தியாவுக்கு எதிரான போட்டி என்றால் ஒரு வழி செய்துவிடுவார். அவர் இந்தியாவுக்கு எதிராக கடைசியாக ஆடிய ஐந்து டி20 இன்னிங்ஸ்களிலும் பெற்ற மொத்த ஓட்டங்கள் 255. ஓட்ட வேகமோ 205. அந்த ஐந்து இன்னிங்ஸ்களிலும் இந்தியாவால் அவரை ஒரு தடவைதான் ஆட்டமிழக்கச் செய்ய முடிந்தது.

இப்போது இந்திய ரசிகர்களே ஷானக்க ஏன் ஐ.பி.எல்லில் வாங்கப்படவில்லை என்று கேள்வி எழுப்ப ஆரம்பித்திருக்கிறார்கள். ஒருவேளை அவர் இங்கிலாந்தில் இருந்து டர்ரன் ஷானக்கவென்றோ, இல்லை அவுஸ்திரேலியாவில் இருந்து டேமியன் ஷானக்க என்றோ வந்திருந்தால் ஐ.பி.எல் அணிகள் முண்டியடித்து வாங்கி இருக்கும் என்று கேலி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஐ.பி.எல் மாத்திரம் அல்ல வேறு எந்த வெளிநாட்டு டி20 தொடரிலும் ஷானக்கவை யாரும் ஒரு பொருட்டாக மதிப்பதாகத் தெரியவில்லை.

ஷானக்க இலங்கை அணி பல வீனப்பட்டிருக்கும் வேளையிலேயே அணித் தலைவராக நியமிக்கப்பட்டார். அப்போது அவர் இலங்கை அணியில் கூட தனது இருப்பை நிலை நாட்டிக் கொண்டவராக இருக்கவில்லை. இப்போதும் கூட அவருக்கு தொடருக்குத் தொடரே அணித் தலைமை பதவி வழங்கப்படுவதே ஒழிய, அவரை ஒரு நிரந்தரத் தலைவராக தேர்வுக் குழு கூட மதிக்கவில்லை.



என்றாலும், ஷானக்கவை வெளிநாட்டு அணிகள் மதிக்காதது ஒரு பக்கத்தில் இலங்கைக்கு நல்லதே. அப்போதுதான் அவர் இலங்கை அணியின் பக்கம் அதிக அவதானம் செலுத்த முடியும்.



ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இன்னும் ஒன்பது மாதங்களில் இந்தியாவில் நடைபெறவுள்ளது. அதாவது உலகக் கிண்ணத்திற்கு தயாராக இலங்கைக்கு இருப்பதோ இன்னும் ஒன்பது மாதங்கள்.

இப்போது பார்த்து இலங்கை அணி இந்தியாவுடன் இந்திய மண்ணில் ஒருநாள் தொடர் ஒன்றில் ஆடுவது என்பது மிக அரிதான வாய்ப்பு. இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடர் முடிவுற்ற நிலையில் வரும் ஜனவரி 10ஆம் திகதி தொடக்கம் ஒருநாள் தொடர் ஆரம்பமாகிறது.



மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த ஒருநாள் தொடருக்கு இலங்கை ஆயத்தம் எப்படி என்பது போட்டி ஆரம்பித்த பின்னர் தான் முழுமையாகத் தெரிய வரும். ஏனென்றால், அண்மைக் காலத்தில் டி20 போட்டிகளில் அதிக அவதானம் செலுத்தியதால் ஒருநாள் போட்டிகளில் தனிக் கரிசனை காட்ட முடியவில்லை.

இலங்கை அணி கடந்த ஆண்டு ஆடிய ஒருநாள் போட்டிகளின் எண்ணிக்கை மொத்தமே 11 தான். அதில் ஆறு போட்டிகளில் வென்று 4இல் தோற்றது. இந்த சொற்ப போட்டிகளை வைத்து இலங்கை ஒருநாள் அணியை முழுமையாக மதிப்பிட முடியாது.

டி20 போட்டிகளைக் பொறுத்தவரை இலங்கை கடந்த ஆண்டில் 25 போட்டிகளில் ஆடி 11இல் வென்று 13இல் தோற்றிருக்கிறது. என்றாலும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் டி20 வடிவத்தில் நடந்த ஆசிய கிண்ணத்தை இலங்கை அணி வென்றது கடந்த அரை தசாப்தத்திற்கு மேலான வரலாற்றில் ஒரு பெரும் திருப்பம்.

டி20 மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கு தசுன் ஷானக்கவே தலைமை வகிப்பது மற்றும் அணியின் உள்ளடக்கமும் கிட்டத்தட்ட ஒரே வகையில் இருந்தபோதும் இரண்டும் ஒரே மாதிரியான போட்டி என்று முடிவுக்கு வர முடியாது.

டி20இன் வேகத்தை ஒருநாள் போட்டியில் காண்பிப்பது முட்டாள்தனம் என்பதோடு டெஸ்ட் போட்டியின் நிதானத்துடன் ஆடுவது அதனை விடவும் முட்டாள்தனமானது. எனவே இரண்டுக்கும் மத்தியலான ஆட்டம் ஒன்றை வெளிப்படுத்தினாலேயே ஒருநாள் போட்டியில் சாதிக்க முடியும்.

இந்த பின்னணியில் இந்தியாவுடனான ஒருநாள் தொடர் என்பது இலங்கைக்கு முக்கியமானது. ஒருநாள் குழாத்தில் இருந்து டி20இல் ஆடிய பானுக்க ராஜபக்ஷ மற்றும் நுவன் துஷார நீக்கப்பட்டு ஜெப்ரி வன்டர்சே மற்றும் நுவனிது பெர்னாண்டோ சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இதில் டி20 போட்டிகளில் இலங்கை அணியில் நிரந்தர இடம்பிடித்திருக்கும் பானுக்க ராஜபக்ஷவின் ஒருநாள் கிரிக்கெட் என்பது எல்லோருக்குமே குழப்பமான ஒன்றாக இருக்கிறது.

அண்மையில் நடந்த ஆப்கானுடனான ஒருநாள் தொடரில் இலங்கைக் குழாத்தில் பானுக்க இணைக்கப்பட்ட நிலையில் சொந்த விருப்பில் அவர் விலகிக் கொண்டது தொடக்கம் இந்தக் குழப்பம் நீடிக்கிறது. ஒருநாள் போட்டிகளில் இடைவெளி தேவை என்று அப்போது அவர் குறிப்பிட்டபோதும், உலகக் கிண்ணத்திற்கு தயாராகும் இலங்கை ஒருநாள் அணியில் பானுக்கவை சேர்ப்பதா? இல்லையா? என்பதை தீர்மானிக்கும் தருணமாக இது இருக்கிறது.

பானுக்கவை இந்திய ஒருநாள் தொடரில் சேர்த்துக் கொள்ளாததை எந்த வகையில் எடுத்துக் கொள்வது என்பது புரியவில்லை. ஆனால் அனுபவ வீரர் தினேஷ் சந்திமாலுக்கு வாய்ப்பு அளிக்காதது அணியின் துடுப்பாட்ட வரிசையில் எத்தனை தாக்கம் செலுத்தும் என்று தெரியவில்லை.

இந்த ஒருநாள் அணியில் தனஞ்சய டி சில்வா, சரித் அசலங்க போன்ற திறமையான துடுப்பாட்ட வீரர்கள் இருந்தபோதும் மத்திய வரிசையில் போட்டியை திசைதிருப்பும் திறன் படைத்த அனுபவ துடுப்பாட்ட வீரர் ஒருவரின் குறை இருக்கிறது. அதனை தனியே தசுன் ஷானக்கவினால் மாத்திரம் செய்ய முடியாது.

உலகக் கிண்ணம் நெருங்கி இருக்கும் நிலையில் புதிய சோதனைகள் செய்வதற்கு இது நேரம் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக உலகக் கிண்ணத்திற்கு முன்னர் இலங்கை அணிக்கு இன்னும் எஞ்சி இருப்பது ஒருசில ஒருநாள் போட்டிகளே.

இந்தியாவுடனான ஒருநாள் தொடரை தவிர்த்து இலங்கை அணி அடுத்த ஒன்பது மாதங்களில் ஆப்கானுடன் மூன்று ஒருநாள் போட்டிகள், பின்னர் நியூசிலாந்துடன் மூன்று ஒருநாள் போட்டிகள், அயர்லாந்துடன் இரண்டு ஒருநாள் போட்டிகள் மற்றும் பாகிஸ்தானில் ஆசிய கிண்ணத் தொடரில் ஆடவிருக்கிறது.

இதில் நியூசிலாந்துடனான தொடர் தீர்க்கமானது. ஏனென்றால் இலங்கை அணி உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெறுவதை தீர்மானிக்கும் போட்டியாகவே அது இருக்கப்போகிறது.

அடிப்படையில் இலங்கை அணி உலகக் கிண்ணத்திற்கு இன்னும் தகுதி பெறவே இல்லை. உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெறக் கூடிய உலகக் கிண்ண சுப்பர் லீக் சுற்றில் இலங்கை அணி தற்போது 77 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்திலேயே உள்ளது. 13 அணிகள் இடம்பெற்றிருக்கும் இந்த சுப்பர் லீக் சுற்றில் எட்டு அணிகளே நேரடித் தகுதி பெறும் என்ற நிலையில் போட்டியை நடத்தும் இந்தியா உட்பட ஏழு அணிகள் ஏற்கனவே தகுதி பெற்றுவிட்டன.

இருக்கும் ஒரு இடத்திற்கு இலங்கையுடன் மேற்கிந்திய தீவுகள், அயர்லாந்து, தென்னாபிரிக்க அணிகள் இடையே போட்டி நிலவுகிறது. இதில் 88 புள்ளிகளுடன் மேற்கிந்திய தீவுகள் எட்டாவது இடத்தில் இருந்தபோதும் அதற்கு மேலும் புள்ளிகளை பெறவோ அல்லது குறைக்கவோ போட்டிகள் இல்லை. எனவே மற்ற அணிகளின் போட்டி முடிவிலேயே அதன் தலையெழுத்து தங்கி இருக்கிறது.

எனவே இலங்கை வரும் மார்ச் மாதம் நியூசிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆடும் மூன்று ஒருநாள் போட்டிகளும் முக்கியமானது. இதில் மூன்று போட்டிகளிலும் வெற்றியீட்டினால் கிட்டத்தட்ட உலகக் கிண்ணத்திற்கு நேரடியாகச் சென்றுவிட முடியும். அதில் பெறும் ஒவ்வொரு தோல்வியும் உலகக் கிண்ணத்திற்கு முன்னேறும் இடைவெளியை தூரமாக்கிவிடும்.

ஒருவேளை இலங்கை அணி நேரடித் தகுதி பெறாவிட்டால், வரும் ஜூன் ஜூலையில் நடைபெறவிருக்கும் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் ஆட வேண்டி ஏற்படும். இதில் பலவீனமான அணிகள் பங்கேற்றபோதும் சிறு தவறு கூட உலகக் கிண்ணத்திற்கு முன்னேறுவதை தடுத்துவிடக் கூடியது. எனவே இலங்கையின் எதிர்காலப் பயணம் என்பது முழுமையாக இலகுவானது என்று கூறிவிட முடியாது.

மறுபக்கம் இந்திய அணியும் இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை இலகுவாக எடுத்துக் கொள்ளவில்லை. டி20இல் ஹார்திக் பாண்டியா தலைமையில் இளம் அணி ஒன்றை அனுப்பிவிட்டு ஒருநாள் தொடரில் முழுமையான அணியை தயார்படுத்தி இருக்கிறது.

இந்த ஆண்டின் முக்கியத்துவத்தை புரிந்தே இந்தியா இவ்வாறு செய்திருக்கிறது. ரோஹித் ஷர்மா தலைமையிலான இந்திய ஒருநாள் குழாத்தில் விராட் கொஹ்லி மீண்டும் அணிக்குத் திரும்புகிறார். அதேபோன்று அண்மைக்காலமாக உபாதையால் ஆடமல் இருந்த வேகப் பந்து வீச்சாளர் ஜெஸ்பிரிட் பூம்ரா இடைநடுவில் ஒருநாள் அணியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். எனவே இந்திய அணி இந்தத் தொடரில் அதிக தீவிரத்துடன் தயாராகி இருப்பது தெரிகிறது.

இந்திய மண் என்பது இலங்கைக்கு புதிதல்ல. அதன் ஆடுகளங்கள் கிட்டத்தட்ட இலங்கை ஆடுகளங்களுடன் ஒத்துப்போகிறது. துடுப்பாட்ட வீரர்களுக்கு சற்று அதிகம் உதவுகின்ற, சுழற்பந்து வீச்சாளர்கள் சாகசம் நிகழ்த்தும் ஆடுகளங்களே பொதுவாக இந்தியாவில் இருக்கும். என்றாலும் இந்திய மண்ணில் இந்திய அணிக்கு எதிராக இதுவரை இரு தரப்பு ஒருநாள் தொடர் ஒன்றை இலங்கையால் கைப்பற்ற முடிந்ததில்லை.

1982 தொடக்கம் 2017 வரை இலங்கை அணி இந்தியா சுற்றுப்பயணம் மேற்கொண்டு இதுவரை 10 ஒருநாள் தொடர்களில் ஆடி இருக்கிறது எனினும் ஒன்றில் கூட வென்றதில்லை.

இலங்கை அணி உலகக் கிண்ணத்தை



> இந்திய மண் இலங்கைக்கு பரீட்சயமானது என்றபோதும் இந்தியாவுக்கு எதிராக ஆடுவது என்பது அத்தனை இலகுவானதல்ல

வென்ற கையோடு 1997ஆம் ஆண்டு இந்தியா சுற்றுப்பயணம் சென்று மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை வெல்ல பொன்னான வாய்ப்பு ஒன்று ஏற்பட்டபோதும் அதில் ஒரு போட்டி ஆடுகளம் மோசமாக இருந்ததால் கைவிடப்பட தொடர் 1–1 என சமநிலை பெற்றது.

மற்றபடி இந்திய சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இரு தரப்பு ஒருநாள் தொடர்களில் இலங்கை சோபிப்பதில்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிந்தது. அது அரவிந்த டி சில்வா இருந்தபோதும் அப்படித்தான் இருந்தது குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன இருந்தபோதும் அதே நிலைதான் இருந்தது.

இலங்கை அணி கடைசியாக 2017 ஆம் ஆண்டு திசர பெரேரா தலைமையில் இந்தியா சுற்றுப்பயணம் மேற்கொண்டுமூன்றுபோட்டிகளைக்கொண்ட ஒருநாள் தொடரில் ஆடியபோது முதல் போட்டியில் இந்திய அணியை 112 ஓட்டங்களுக்கு சுருட்டி வெற்றியீட்டியபோதும் அடுத்த இரண்டு போட்டியிலும் இந்திய அணிக்கு ஈடு கொடுத்து ஆட முடியாமல்போனது.

ஒட்டுமொத்தமாக இலங்கை அணி இந்திய மண்ணில் இந்தியாவுக்கு எதிரான 51 போட்டிகளில் ஆடியபோதும் அதில் 12இல் தான் வெற்றியீட்ட முடிந்திருப்பதோடு 36 போட்டிகளில் தோல்வி அடைந்திருக்கிறது. எனவே இந்திய மண் இலங்கைக்கு பரீட்சயமானது என்றபோதும் இந்தியாவுக்கு எதிராக ஆடுவது என்பது அத்தனை இலகுவானதல்ல.

எனவே, எதிர்வரும் ஒருநாள் தொடரில் இலங்கை அணியால் சாதிக்க முடியும் என்றால், அடுத்த ஒன்பது மாதங்களுக்கான நல்ல சமிக்ஞையாக அமையும்.



எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2023 ஜனவரி 8 ஞாயிற்றுக்கிழமை
கலைகளில் கைதேர்ந்த
டிலுக்ஷிகா

# பட்டாசு சண்டை

கிரேக்கத்தின் சியோஸ் தீவில் இருக்கும் இரு போட்டி தேவாலயங்கள் இடையில் நடக்கும் சண்டை என்பது ஒரு முடியாத கதை. ஒவ்வொரு உயிர்த்த ஞாயிறு நள்ளிரவிலும் இரு தேவாலயங்களிலும் கூடும் ஊர் மக்கள் எதிர் தேவாலயத்தின் மீது பட்டாசை கொளுத்தி எறிவார்கள். குறுக்கும் நெடுக்குமாக பாயும் அந்தப் பட்டாசுகளை தூரத்தில் இருந்து பார்த்தால் பெரும் போர் போல தெரியும்.

இந்த இரு தேவாலயங்களும் 400 மீற்றர் இடைவெளியில் இரு குன்றுகளில் கட்டப்பட்டிருப்பதால் சண்டை பிடிப்பதற்கும் இலகுவாக இருக்கும். யார் அதிக பட்டாசுகளை எதிர் தேவாலயத்தின் மீது விடுகிறார்களோ அவர்களுக்கு வெற்றி அறிவிக்கப்படும்.

பட்டாசு விட்ட அடுத்த நாள் யாருக்கு சேதாரம் அதிகம் என்று அடையாளங்களை வைத்து எண்ணப்பட்டு வெற்றி அறிவிக்கப்படும். என்றாலும் தோற்ற தரப்பு அந்த முடிவை ஏற்றுக்கொள்ளாது. அடுத்த ஆண்டு பார்த்துக் கொள்வோம் என்று கூறி விட்டுப் போகும்.

இப்படியே தலைமுறை தலைமுறையாக இந்த சண்டை முடிந்தபாடில்லை. இது எப்படி ஆரம்பித்தது என்றும் உறுதியாகத் தெரியாது.

என்றாலும் உஸ்மானியர் ஆட்சிக் காலத்திலேயே இந்த இரு தேவாலயத்திற்கும் சண்டை ஆரம்பித்ததாகவும் அப்போது இரு தரப்பும் உண்மையன பீரங்கியால் சண்டையிட்டதாகவும் ஊர் மக்கள் கூறுகிறார்கள்.




# நீரோ... நல்லவரா? கெட்டவரா?



ரோம் எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதை இன்றும் புழக்கத்தில் இருக்கும் ஒரு சொல்லாடல். ஆனால் அந்தக் கதையில் பின்னணியில் இருக்கும் மர்மம் இன்னும் தீர்க்கப்படாத ஒன்று.

கி.பி. 64 ஜூலை மாதம் 19ஆம் திகதி இரவு ரோமில் இருக்கும் தேர் ஓட்டப் போட்டி நடக்கின்ற இராட்சத அரங்கை ஒட்டிய கடை ஒன்றில் தீப் பிடித்தது. அந்தத் தீ முழு நகருக்கும் பரவியது. ஆறு நாட்கள் இடைவிடாது தீ பரவியது. அதனை கட்டுப்படுத்தினாலும் மீண்டும் பற்றிய தீ இன்னும் மூன்று நாட்கள் நீடித்தது.

முழு நகரின் மூன்றில் இரண்டு பகுதி சாம்பலானது. நகரமே தீயில் வெந்துகொண்டிருந்தபோதும்நீரோ அங்கே இருக்கவில்லை. சில மைல் தொலைவில் இருக்கும் குளிர்ச்சியான மாளிகையில் இருந்தார். அப்போதே அவர் பிடில் வாசித்துக் கொண்டிருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

பிரபுக்கள் மற்றும் வரலாற்றாசிரியர் டசிடஸ் ஆகியோரே இந்த பிடில் கதை பற்றி கூறியிருக்கிறார்கள். நீரோ பிடில் வாசித்துக் கொண்டே ரோம் தீப்பற்றுவதை பார்த்தார் என்று கூறப்படுகிறது.

உண்மையில் இந்தத் தீக்கே காரணம் நீரோதான் என்ற பொதுவான குற்றச்சாட்டு உள்ளது. நீரோ தலைநகரை ஆடம்பரமாகக் கட்டுவதற்கு



திட்டம் வகுத்ததாகவும், ஆனால் ரோமானிய செனட் அதனை நிராகரித்த நிலையிலேயே தீ வைத்து நகரை அழித்து தனது திட்டத்தை நிறைவேற்றப்பார்த்தாகவும் அப்போதிருந்த வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் நிரோவோ கிறிஸ்தவர்கள் மீது குற்றம்சாட்டுகிறார். ரோம் தீயில் சாம்பலாகப்போகிறது என்று கிறிஸ்தவர்கள் எதிர்வுகூறிய நிலையில், அதனை உண்மையாக்க அவர்களே தீ வைத்தார்கள் என்கிறார் நீரோ.

இதனால் கிறிஸ்தவ தரப்பில் இருந்தே நீரோ மீதான கடுமையான குற்றச்சாட்டுகள் எழுகின்றன. அவர் கொடுங்கோலர், தாயுடன் கள்ள உறவு வைத்திருந்தவர், தங்கையை மணந்தவர், கர்ப்பமான மனைவியை எட்டி உதைத்துக் கொன்றவர், தாயை கொன்றவர், தம்பியை கொன்றவர் என்று நீரோ மீது ஏகப்பட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன.

என்றாலும் அப்போதைய ரோமப் பேரரசர்களுடன் ஒப்பிடுகையில் இதுவெல்லாம் வழக்கமானது என்ற அளவுக்கு ஒருவரும் நல்லவரில்லை. எல்லாவற்றையும் தாண்டி நீரோவின் வரலாற்று இப்போது மீள் வாசிக்கப்பட்டு வருகிறது. அவர் காலத்தைத் தாண்டிய சீர்திருத்தவாதி என்ற கூற்று இப்போது பெரிதாக எழுகிறது.

நீரோ பிடில் வாசித்த கதையின் உண்மைத் தன்மை எப்படி இருந்தபோதும் அவர் தீ பரவிய பின் விரைவாக ரோமுக்குத் திரும்பி பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கியது மற்றும் அவர்கள் தங்க பூங்காக்களை திறந்துவிட்டது போன்ற அதிரடி நடவடிக்கைகளைச் செய்தார் என வரலாற்றாசிரியர் டசிடஸ் கூறுகிறார்.

ரோமுக்கு யார் தீ வைத்தார்கள் என்பது இன்றும் அவிழ்க்க முடியாத மர்மம். என்றாலும் ரோமில் கோடை காலத்தில் வெப்பக் காற்று வீசும்போதும் தீ பரவுவது வழக்கமான ஒன்று. எனவே அப்படியான தீயாகக் கூட இது இருக்கலாம்.

# அந்த 90 விமானங்களுக்கு என்ன ஆனது



கடந்த 67 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 90 வர்த்தக விமானங்கள் காணாமல்போயுள்ளன. அதாவது அந்த விமானங்களின் பாகங்கள், விமானத்தில் சென்றவர்கள் அல்லது அவர்களின் சடலங்கள் எதுவும் இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஒருசில ஆண்டுகளுக்கு முன்னர் கூட அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இவ்வாறான சம்பவம் மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் 370 காணாமல்போனதுதான். 2014 மார்ச் மாதம் காணாமல்போன அந்த விமானத்திற்கு என்ன ஆனது என்று பல மில்லியன் டொலர் செலவு செய்து தேடிப்பார்த்தார்கள், எந்த துப்பும் கிடைக்கவில்லை. விமானத்தில் மொத்தம் 239 பேர் இருந்தார்கள். அதாவது உலகில் அதிகம் பேருடன் மாயமான விமானம் இதுதான்.

## செல்ஃபி உலா



ஷாருலதா பாலகிருஷ்ணன்



Dhurshany Muthiah

# 30 வருடங்களாக அறநெறி ஆசிரியராக கடமையாற்றும் ரஞ்சனி சுரேஷ்



இலங்கையில் அறத்தை தர்மத்தை போதிப்பதில் அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் ஆற்றி வருகின்ற பணி போற்றதற்குரியது. அந்த வகையில் 2015 ஆம் ஆண்டில் இருந்து கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய அறநெறி பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி வருபவர் செல்வரட்ணம் ரஞ்சனி சுரேஷ். இவர் அறநெறி ஆசிரியராக சேவை செய்து இந்த வருடத்தோட 30 வருடங்களாகின்றன.

1993 ஆம் ஆண்டு முதன்முதலாக களுத்துறை மாவட்டத்திலுள்ள இங்கிரிய றைகம் கீழ்பிரிவு விக்னேஷ்வரா அறநெறி பாடசாலையில் அறநெறி ஆசிரியராக இணைந்து கொண்ட இவர், 2015 ஆம் ஆண்டு வரை இங்கு ஆசிரியராக கடமையாற்றினார். 2015 இல் இருந்து இன்று வரை கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் அறநெறி பாடசாலையில் கடமையாற்றி வருகின்றார்.

# அமுக்குவான் பேய்!

இரவு நீங்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது, யாரோ உங்கள் மேல் ஏறி அழுத்துவது போல் இருக்கும். உங்களால் கண்ணைத் திறக்க முடியாது. கத்தலாம் என்றாலும் குரல் வெளியே வராது. சரி, திரும்பிப் படுக்கலாம் என்று நினைத்தாலும் திரும்பி படுக்க முடியாது. ஒரு நிமிடம் கழித்துத்தான் உங்களால் எதுவும் செய்யமுடியும்.



எழுந்து பார்த்தால் யாரும் அருகில் இருக்கமாட்டார்கள். என்னடா இது என்று திகைத்திருப்பீர்கள். இதுதான் அமுக்குவான் பேய். உயிரைக் கொல்லும் அளவுக்கு கொடூரமான பேய் இல்லை என்றாலும், இதுவும் ஒரு முக்கியமான பேயாக கிரேக்கப் புராணங்களில் கூறப்படுகிறது.





பொதுவாய் அமுக்குவான் பேய்கள் மற்ற பேய்கள் போல் புளியமரத்திலோ வேப்பமரத்தின் உச்சியிலோ இருக்காது. பூச்சிகளின் இராஜாவான இது உங்கள் வீட்டின் சிலந்திகளின் கூட்டிற்குள், எறும்புகளின் குறிப்பாக சிவப்பு எறும்புகளின் புற்றில், கரப்பான் பூச்சிகளின் பொந்துகளில் தான் வாழும். இது உலவும் நேரம் பெரும்பாலும் சூரியன் உதிப்பதற்கு சற்று முன்பாக மூன்று மணியில் இருந்து நாலு மணி வரை ஆனால் சில சமயம் அவை பகலில் கூட வரும். என்றெல்லாம் சுவாரஸ்யமாக த்ரில்லாக கதை எழுத ஆசை தான் ஆனால் அது உண்மை இல்லையே, என்ன செய்வது..? நம்மூரில் அமுக்குவான் பேய் என்று சொல்லப்படுவது உண்மையில் தூக்க பக்கவாதம் என்கிற கோளாறு.

சில சமயம் உங்கள் மூளை விழித்துக் கொண்ட பிறகும் உங்கள் உடல் தூங்கிக் கொண்டே இருக்கும். அதனால் தான் உங்களால் எழவோ, பேசவோ, கண்களைத் திறக்கவோ முடியாது. இந்தக் கோளாறு தூக்கத்தில் ஏற்படும் இடையூறினால் இது வருகிறது.

துயில் மயக்க நோய், ஒற்றைத் தலைவலி, ஏக்க நோய்கள், மற்றும் தூக்கத்தில் மூச்சுத் திணறல் ஆகிய கோளாறுகளுக்கும் இதற்கும் தொடர்புகள் உண்டு. இதை தனிமைத் தூக்க பக்கவாதம், தொடர் தனிமைத் தூக்க பக்கவாதம் என்று இரண்டு வகைகளாகப் பிரிக்கிறார்கள்.

இதில் தனிமைத் தூக்க பக்கவாதம் என்பது ஒரு நபரின் வாழ்க்கையில் எப்போதாவது இரு நிமிடங்களுக்கும் குறைந்த நேரத்தில்தான் நிகழும். இது ஒன்றும் பிரச்னைக்குரியது அல்ல.

தொடர் தனிமைத் தூக்க பக்கவாதம் பேருக்கு ஏற்றபடி அடிக்கடி ஏற்படும். மேலும் இது ஒரு மணி நேரம் வரைக்கும் கூட இருக்கும். சில சமயம் அந்தரத்தில் பறப்பது போல்கூட தோன்றும். இதற்கு மருத்துவர்களிடம் (மந்திரவாதிகளிடம் அல்ல) சென்றே ஆகவேண்டும்.

துயில் மயக்க நோய் உடையவர்களுக்கு சிகிச்சை எடுத்துக் கொள்பவர்களில் 50 சதவீதம் பேருக்கு இப்பிரச்னை ஏற்படும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், இன்றும் பெரும் அளவில் மக்கள் இது ஏதோ பில்லி சூனியத்தின் வேலை என்று நினைத்துக் கொண்டு மந்திரவாதிகளைத் தேடி ஓடிக்கொண்டிருக்கின்றனர். இந்த மாதிரி மூட நம்பிக்கைகளில் இருந்து விடுபடுங்கள்.



# "ஐயோ சாமி நீ எமக்கு வேண்டும்" ஒரு மாணவனின் வாக்குமூலம்

கவிஞர் அஸ்மினின் திரைப்பாடல்களின் துவக்கம் என்பது திடீரென்று நிகழ்ந்த ஒன்றல்ல. சக்தியின் இசை இளவரசர்கள் நிகழ்ச்சி தொடங்கி ஒவ்வொரு படித்தட்டிலும் இந்த உலகின் பாரபட்சங்களை நன்றாகவே உணர்ந்து எழுந்த பெரும் ஊற்று அது.

அய்யோ சாமி பாடலை Spotify trending இல் காட்டியபோதும் சரி அறைத்தோழர்கள் இந்த பாடலை முணுமுணுக்க தொடங்கிய போதும் சரி பெரிதாக எந்த சிலிர்ப்பையும் உணர முடியவில்லை. அதற்குக் காரணம் பாடலாசிரியர் அஸ்மினை கவிஞர் அஸ்மினாக எனக்குத் தெரியும்.

கவிஞருக்கும் எனக்குமான தொடர்பு அவரது முதல் புத்தகம் விடியலின் ராகங்களை வாசித்த போதே தொடங்கி விட்டது. என் அறிவுக்கெட்டியவரை நான் வாசித்த முதல் கவிதை இவருடையது தான். அவரது காதலும் சமூக விடியலும் எழுந்து நின்ற கவிதைத்தொகுப்பான விடியலின் ராகங்களே என்னை பாடல்களையும் கவிதைகளையும் எழுத வைத்தது.

ஆசிரியராக அவர் பணியாற்றிய பின்னர் அடிக்கடி எங்களது பாடசாலை கலை நிகழ்ச்சிகளுக்காக அவரது வருகை நிகழும். அப்போதெல்லாம் அவரை சூழ்ந்து கொள்ளும் சிறுவர்களில் நானும் ஒருவன். அப்போதெல்லாம் இருந்த சிலிர்ப்பு துடிதுடிப்புக்கு காரணம் இன்றைய உலகின் trending இல் வராத அவரது அழகான வரிகளும் அப்போதிருந்த காதல் சோகம் ததும்பிய அந்த பாடல்களும் தான்.

பாடலாசிரியராக அவரை தமிழ் சினிமா இன்னமும் பயன்படுத்த வேண்டியிருப்பதனை மெல்ல மெல்ல உணரத் தொடங்கியிருக்கிறது. பேச்சிலும் வீச்சிலும் உற்சாகம் தெளிக்கும் கவிஞர் அவர். அவரது பாடல்களின் உலகம் இசையமைப்பாளர்களின் கட்டுக்குள் இருப்பதாக ஒரு தடவை குறிப்பிட்டார். அய்யோ சாமியும் அந்த வரிசையில் தான் வந்திருக்கவேண்டும் ஆனால் இளசுகளின் மனதின் மெட்டுக்கு பாட்டமைக்கும் கலையை பெற்றிருக்கிறார் என்பதே உண்மை.

பஸ்ஸில் ஒரு குழந்தை அந்த பாடலைக்கேட்டு தானும் மீண்டும் படிக்கிறது பாட்டு நின்று அடுத்த பாட்டு போகின்ற போதும் அந்த குழந்தையின் உதடுகள் "மனசாட்சியை நீ விலைபேசினாய்" என்கிறது.

ஜெயகாந்தன் சொல்வதுபோல இது எனது ஊர் என்று பெருமைப்பட எதுவுமே இல்லை ஏதோ நானும் இங்கே பிறந்துவிட்டேன் அவ்வளவும் தான்... இந்த ஊர் தான் பாடலாசிரியர் அஸ்மின் என்பது என் ஊரின் பெயரைக்கேட்பவர்களின் அடையாளச்சொல்லாக இப்போது மாறியிருக்கிறது. சிங்கள நண்பர்களும் கூட யார் இந்த அஸ்மின் என்று கேட்க துவங்கிவிட்டனர் என்பது கூடுதல் செய்தி.

அது இவ்வாறு இருக்க இவரது கவிதை பற்றி பார்ப்போம். திரைப் பாடலும் கவிதையும் என இரு தளங்களில் பயணிக்கும் ஒரு படைப்பாளி இரண்டையும் எவ்வாறு வேறுபடுத்துவார்? பாடல் எழுதுவதை காட்சியின் சந்தர்ப்பங்கள் ,மற்றவரின் திருப்திப்படுத்தல்கள் என்பன தீர்மானித்தாலும் கவிதையை யாரும் கட்டுக்குள் வைத்து இது இப்படித்தான் என்று கூறிவிட முடிவதில்லை இந்த போக்கே இலக்கிய உலகின் ஆரோக்கியமற்ற கவிதைகளின் பிரசவத்திற்கு காரணமாகி இருந்தாலும் இந்நிலை பல வெற்றிகளையும் தமிழ் இலக்கிய உலகில் ஏற்படுத்தாமலில்லை

ஆனால் மேல் வகையில் சாராமல் முறையான கவிதைபற்றி அறிவையும் கற்று திரைப்பாடல் துறையிலும் தனக்கான தனியிடம் பதித்துள்ளார் பாடலாசிரியர் அஸ்மின் பொத்துவில்

அவரது கவிதை பற்றிய கொள்கைகளை மிகவும் வெளிப்படையாக மரபில் மட்டுமே கவித்துவம் தெறிக்கிறது என்று மரபு போற்றும் கவிஞராகவே தன்னை அடையாளப்படுத்திக்கொள்கிறார்.

தன் கவிதைகளில் ஒரு அழகியலை அதே சமயத்தில் ஒரு புனைவான ஈர்ப்பை ஒரு வெளிப்படையான உணர்ச்சி மேலீட்டை காட்டுகின்றார். கவிதை என்பது பலரிடத்தில் காகித முகமாகவே இருக்கின்ற இந்த காலத்தில் தான் கவிஞர் அஸ்மின் தன் கவிதைகளின் முகமாக தன்னை செதுக்கியுள்ள நுட்பத்தை வியக்க முடிகிறது

வெளிநாட்டு வாழ்க்கை சொகுசானது அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பின் பின்னர் நம் நிலை மாறும் என்று எண்ணுகின்ற சராசரி நடுத்தரவர்க்கத்து கனவுகளையும் கவிஞர் சுமந்துள்ளார் என்பதை பதிவு செய்த கவிதையொன்றில்

"அதுவரும் இதுவரும் என்பார்உம்மாஆனைய குடுத்தாலும் சோத்தோட திம்பார்ஊட்டுக்கு தேடிநாம் போனா'சேர்எடுபிடி அனுப்பி 'பிஸி' எனச்சொல்வார் வக்கின்றி வாக்குகள் கேட்டுஊட்டவருவோர்க்கு உம்மாநீ வாருகள் காட்டுஎருமைங்க கதையல கேட்டுஏமாந்து இனிமேலும் போடாதே ஓட்டு

ஒழைக்காட்டி ஒசந்தவர் யாரு? நாங்க ஒழைக்காம தின்டிட்டா மதிக்குமா ஊரு?ஒழச்சத்தான் கக்கிஷம் போகும்இதஒணராட்டி எப்புடி சோகங்கள் சாகும்?"

நடுத்தர வரக்கத்தின் ஏழைக்கனவுகளில் தன்னிலை அரசியலை ஒரு தாயோடு பேசும் அதீத உரிமைப்பாணியில் பிரகடனம் செய்ய கவிஞரால் முடிந்திருக்கிறது.

கவிஞரின் கவிதைப்போக்குகளை பொதுவாக பின்வரும் மூன்று வகைகளுக்குள் அடக்கிவிட முடியும் என்பது என் பார்வை

1. வாழ்வில் ஒரு சாமான்யன் நோக்கும் பிரச்சனைகளை முன்னிலைப்படுத்தியவை

2. சமூகத்தின் தொடர்ந்தேச்சையான பேசுபொருட்களான கல்வி, அரசியல், இலக்கியம் உள்ளிட்ட விடயங்களை பேசக்கூடியவை

3.காதல், உள்ளத்தின் உணர்ச்சிகள் சம்பந்தமானவை

ஒவ்வொரு வகைக்கும் உதாரணங்களை வழங்க முடியும் என்றாலும் பதிவின் நோக்கத்தை சில பொருத்தமான கவிதைகளை குறிப்பிட்டு நகர்த்துகிறேன்.

அரசியல் அல்லது இரண்டாம் வகை கவிதைகளுள் பின்வரும் வரிகள் நோக்கத்தக்கன

"சும்மா புகழுவார் பேச்சிலே!கொடும்சுயநல முள்ளது மூச்சிலே! வாழ்க்கை எரியுது நெருப்பிலே!உலகில்வாழ்வது அவரவர் பொறுப்பிலே!"

"பாவிகளின் இடுப்பொடிக்க ஒருபோதும் அஞ்சோம்!பல்லிளித்து ஈழம்தா என்றும்நாம் கெஞ்சோம்!ஆவிபறி போனாலும் மீண்டும்நாம் பிறப்போம்அடிவருடி களையொழிக்க உயிருறவை துறப்போம்!"

ஈழத்துப்போரின் கோரமுகத்தை நேரடியாக பார்த்தவர்கள் இலங்கைச்சோனகர்கள். இருபுறத்தாலும் சந்தேகப்பார்வையும் அழிவுகளும் இனத்தின் இருப்பை கேள்விக்குள்ளாக்கியதை மேற்படி வரிகள் வீரத்துடன் பேசுகின்றன

"தலையில்லாத் தலைகளினை தலைவரென நினைத்ததற்காய்தலையிடிதான் எங்களுக்குப் பரிசு!பதவிக்காய்தலைசொறிந்து பல்லிளிக்கும் தலைவர்களால்தடுமாறும் எம்வாழ்க்கை தரிசு!"

இவை இன்று தடம் புரண்டு கொண்டிருக்கும் அரசியல் தலைமைகளை மொத்தமாய் சாடிநிற்கின்ற வரிகள் இலக்கியத்துறையில் வழங்கப்படும் பட்டங்களை பற்றி பேசுகின்றபோது

"உனக்கு நாளை சூட்டுகிறேன்எனக்கு இன்று சூட்டு' என்றுதிட்டமிட்டு திருடுவதா பட்டம்?கணக்கற்ற பட்டம் வேண்டகலங்காதே தோழா நீயும் காசிருந்தால் வாங்கிடலாம் பட்டம்..!!"

கனத்த சொற்களில் அரசியலை வெளிப்படுத்திய இதே கவிஞரால் தான் காதலின் வெளிப்பாட்டை கட்டற்றே பொழிய முடிகிறது.

"வேலிக்கு மேலாலெட்டிப் பார்ப்பாய் என்வேதனையை புன்னகையால் தீர்ப்பாய்.கேலிபலர் எனைச் செய்தபோதும்அடிகேள்கிளியே உன் நினைவே மோதும்."

"கொழந்த மனசறிஞ்சும்கொரல்வலய முறிச்சவளே...எல்லாம் நெனப்பிருக்குஎன்னெப்பு ஒனக்கிருக்கா..."

"இதழோரப் புன்னகையோஇதயத்தைக் கைப்பற்றும்உன்னோரப் பார்வைகளால்உள்நெஞ்சில் தீப்பற்றும்

பார்வைகளால் பலபாடம்பலதடவை நான்கற்றும்உணர்வெல்லாம் உன்னோடுஉணர்விழந்து ஊர்சுற்றும்"

கவிஞரின் கவிதை பற்றிய கருத்துக்கள் எத்தகையனவாகிலும் ஒரு படைப்பாளி தன் படைப்பு நிலைகுறித்த தன்முனைக்கருத்துக்களை வெளிப்படுத்த முழுச்சுதந்திரம் பெற்றவராகிறார்.

ஒரு படைப்பாளியின் சமூக, வரலாற்றியல் சூழல், அவரது உலக நோக்கு என்பனவற்றாலேயே அவரது படைப்புக்கொள்கை கட்டமைக்கப்படுவதை புரிந்து கொள்ள வேண்டும்.எனவே தான் பல முகங்களை கொண்ட தற்கால கவிதைகளில் தனக்கு பிடித்த ஒரு முகத்தை மட்டுமே தொடர்ச்சியாக ஏற்றுக்கொள்ளவும் விரும்பவும் ஏனைய முகங்களை விமர்சிக்கவும் ஒரு படைப்பாளி தலைப்படுகிறான்.

கவிதைப்போக்கு போலவே கவிஞரின் பாடல்களும் நோக்கத்தக்க தனித்துவம் மிளிர்கின்றன. பத்தாண்டுகளுக்கு முன்பு விஜய் ஆண்டனியின் "நான்" திரைப்படத்தில் தமிழ் சினிமாவில் அவர் எழுதிய "தப்பெல்லாம் தப்பே இல்லை" முதல் பாடலிலே கருக்கொண்ட இந்த மேகம் பெரும் புயலாகி தமிழ் நாட்டை தாக்கப்போகிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

நூற்றுக்கும் அதிகமான பாடல்களை தமிழ் சினிமாவிலும் சினிமாவுக்கு வெளியிலும் எழுதியுள்ள அஸ்மின் கன்னிப்பாடலே ஒரு பானைச்சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல அவரது கவியாற்றலின் ஆழ அகலங்களை அறிய போதுமானது.

"வாழ்க்கை ஒரு போராட்டம் தான்வாழ்வே ஒரு வியாபாரம் தான்கீழே நீயும் வீழ்ந்து விட்டால் புல்லும் சிரிக்கும்

போகும் திசை யாவும் உன்னைபோடா என சொல்லி சொல்லிஏமாற்றங்கள் நாளும் உந்தன்நெஞ்சை கிழிக்கும்

பூமி தான் காசுக்கு வாலாட்டும்பொய்களை தாலாட்டும் உண்மைக்கு தீ மூட்டும்

ஏக்கங்கள் இன்றோடு போகட்டும்சந்தோஷம் கூடட்டும் சாபங்கள் ஓடட்டும்"

கவிஞராக ,பாடலாசிரியராக இன்னும் பல படிகளை தாண்ட இருக்கும் கவிஞர் அஸ்மின் அவர்களை வாழ்த்துவதில் இந்த மாணவனுக்கு எப்போதும் மகிழ்ச்சிதான். ஒரு பாடலால் உலக புகழ்பெற்றிருக்கும் பொத்துவில் அஸ்மினை பார்த்து தமிழ்சினிமா மட்டுமல்ல சிங்கள இசையுலகமும் "ஐயோ சாமி நீ எமக்கு வேண்டும்' என்று புலம்ப தொடங்கியுள்ளன.

பொத்துவில்
முஜாஹித் ஷரீப்
B.Sc ( யாழ் பல்கலைக்கழகம்)



# எந்த மொழியாகினும் அந்த மொழி வழி கேளும்

முதல் தோன்றியது எது?
இலக்கணமா? இல்லை
இலக்கியமா?

சற்றே நின்று
சிந்தை கொண்டால்
இன்னொன்றும் சொல்வேன்.

முதலில் ஒலி வந்ததா?
இல்லை
குறியசைவு வந்ததா?
தமக்கிடையே தம்
கருத்தை நன்றே பகிர்ந்திட.

மற்றொன்றை நோக்கும்.
சிந்தனைக்கு நலமது.

மொழியின் ஒலியா?
இல்லை
மொழியின் வரியா?
முதல் வந்திருக்க கூடும்.

விடையிட முன்
மொழி வகை உண்டு
அதனையும் நோக்கும்.

மொழி வகை இரண்டு.
இயற்கை வழி மொழி.
செயற்கை வழி மொழி.
என்பதையும் காணும்.

இத்தோடு உண்டு
இப்படியும் ஒன்று.

மொழியின் கிளை
ஒலி மொழியும்
வரி மொழியும்
என இரு கிளை.

குறியசைவின் வழி
முதல் மனிதர் தான்
தம் கருத்துரைத்து
நெறி நின்று வாழ்ந்தார்.

குரல்வழி ஒரு மொழி
தோன்றிதைக் கண்டார்.
தினமொரு செயல்
ஒலி கொண்டு நின்றார்.

குறியசைவு மொழி அங்கே
ஒலியசைவு மொழியாகி
ஒரு படி வளர்ந்தது காணும்.
என் கருத்தித்து என்பேன்.

கிறுக்கல் வழி குறியீடு
தோன்றி வளர்ந்தது காணும்.
ஒலிக்கொரு வரி வடிவம்
கொடுத்திட துணிந்தாரோ?
வரிவழி யொரு மொழி
நமக்கிங்கே இன்று கிடைத்தது.

அதிகம் பேசிய வார்த்தை
எழுதி வைத்து பார்த்தால்
மொழியாடலில் ஒரு அழகு
இருந்திடக் கண்டு ஆங்கே
இலக்கியம் என்று வைத்து
பேணி நின்றார் போலும்.

அந்த இலக்கியம் வழி
நின்று இன்புற்ற போது
அதில் சொல்லும் ஒசையும்
அமைந்திடும் ஒழுங் கொன்று
கண்டு கொண்டு மகிழ்ந்தார்.

அந்த இலகு வழி பயன்
மொழியால் ஒழுங்கொன்று
கண்டு வரைந்து நின்றார்.
மொழிக்கொரு இலக்கணம்.

இப்படி ஒன்று இருந்திடும்
இயற்கை வழி மொழியில் தான்.

இல்லை இப்படி ஒரு
இலகுவில் ஒழுங்கு
செயற்கை மொழியில் தான்.

அறிவால் வளர்ந்து
நல்ல பல ஒழிவழியில்
நமக்கொரு ஒரு மொழி
ஆக்கிட நினைந்தவர்
ஆக்கியதால் தோன்றிடும்
ஒரு மொழி பாரும் அது
செயற்கை வழி மொழி
என்றுரைபேன் நான் நின்று.

இப்படி ஒரு நிலையில்
எப்படி சொல்வீர் இலக்கணம்.
கவிதைக்கு என்பேன்.

இலக்கணம் கற்று
அதன் வழி கவிதை
ஆக்கி போதல் ஒரு வகை.
கவிதை ஆக்கி
அதன் வழி இலக்கணம்
ஆக்கிப் போதல் ஒரு வகை.

பாரதி வழி பிறந்தது
தமிழில் உரை நடை கவிதை.
பாரதி ஆங்கே அன்று
இலக்கணம் கற்று
அதன் வழி நின்று
கவிதை ஆக்கிப் போனால்
இன்று இல்லை தமிழில்
புதிய கவிதை இலக்கணம்.

புதுக்கவிதையும் ஆங்கே
புது இலக்கணம் காணும்.
பாரதி போல இங்கே இப்போ
மதிப்பிழந்து அதுவும் போகலாம்.
பின் வருவோர் இதை
புது இலக்கணமாக்கி
கொண்டாடி மகிழலாம்.

எப்படி நோக்கி
நற்படி வாழ்ந்து நாம்
நலம் பெற்றுப் போவதோ?

எந்த மொழியாகிலும்
அந்த மொழி வழி கேளுங்கள்.
மொழிப் பிறப்பின் வழி.

... அன்புடன் நதுநசி.

## வலி

மனிதனின்
வாழ்க்கையில்
உடலில்லா உறுப்பாய்
படைக்கப்பட்ட ஒன்று

திறமை இருந்தும்
நிராகரிக்கப்பட்டு
முடக்கப்படும்
மனதின் வலி...
வெயில் தரையில்
விழுந்து துடிக்கும்
புழுவின் வலியை
போன்றது

" இவ்வளவு
கஷ்டப்படுறியே
நீ வாழ்க்கையில்
நல்லா இருப்ப"
என்று யாரோ
ஒருவர்
சொல்லும்
வார்த்தை தான்
இன்று வரை
பலரையும்
ஓட வைக்கிறது....

வெற்றிக்காக
கடைசியாக
ஓடுகிறேன்...
என்பதையும் மீறி
நிற்காமல் ஓடுகிறேன்
என்பதே என்னை
உந்து தள்ளுகிறது
ஆயிரம் வலிகளும்
அவளணைப்பில்
அணைந்து போகிறது
அவள் என் பேரிடர்
கால மீட்பு தேவதை

நா.மேனன்



நிருபர் : உங்க வருங்காலக் கணவர் எப்படி இருக்கணும்னு நினைக்கிறீங்க?

நடிகை : நிகழ்கா லக் கணவரை விட நல்லவரா இருக்கணும்னு தான்.



வேலு : "ஓட்டல் ஓனர் வீட்ல பொண்ணு பார்க்கப் போனது தப் பாப்போச்சு"

ரமனன் : "ஏன்?"

வேலு : "பொண்ணு பிடிக்க லேன்னு சொன்னதும், சாப்பிட்ட பஜ்ஜி, சொஜ்ஜி, காபிக்கெல்லாம் காசு வாங்கிட்டாரு."



பாக்கி : ஏன் சார் ஜோக் எழுதறேன்று சொல்றீங்க. ஆனா ஒரு ஜோக்குக்கு கூட சிரிப்பே வரலயே?

ரமனன் : பிறர் சிரிக்கும் படியான காரியத்தை செய்யா தன்னு எங்க பாட்டி அடிக்கடி சொல்வாங்க.

டாக்டர் : தினமும் குளுக் கோஸ் சாப்பிடுங்க

மாயாண்டி மாமா : அது கிடைக்க லேன்னா முட்டை'கோஸ்' சாப்பிட லாமா?





வேலு : எங்க ஆபீஸ்ல மேனேஜர் இருக்காரு கிளார்க் இருக் காங்க . . .

கைப்பில்ல : இதெல்லாம் எதுக்கு எங்கிட்ட வந்து சொல்றீங்க?

வேலு : நீங்கதானே படிச்சிட்டு யாராவது வேலையில்லாம இருந்தா சொல்லச் சொன் னீங்க.



# கலை இலக்கிய உலகுக்குள் ஜொலிக்கும் இளம் ஆசிரியர் இராசேஸ்வரன் நிஷாந்தன்



*** உங்களைப் பற்றிய அறிமுகம்?**

எனது பெயர் இராசேஸ்வரன் நிஷாந்தன். நான் கிளிநொச்சி மாவட்டத்தில் இராமநாதபுரம் எனும் கிராமத்தில் வசித்து வருகின்றேன். எனக்கு தாய், தந்தையரோடு இரண்டு சகோதரர்கள், அன்பான மனைவி என எனது குடும்பம் விளங்குகின்றது. தற்போது தமிழ்ப்பாட ஆசிரியராக பாடசாலையில் கடமையாற்றி வருகின்றேன். கலை, இலக்கியம் மற்றும் ஆன்மீகத்தில் மிகுந்த விருப்பமும், ஈடுபடும் கொண்டவன் நான். அதன் காரணமாக எழுத்துத் துறையில் பயணிக்கத் தொடங்கினேன். 2012 ஆண்டில் தொடங்கிய எனது எழுத்துப்பயணம் இன்று பத்து ஆண்டுகள் கடந்த நிலையில் தொடருகின்றது. இக்காலப் பகுதியில் எழுத்துத் துறை சார்ந்து கட்டுரை, கவிதை மற்றும் பாடல் வரிகள் என்பவற்றை எழுதி வருவதோடு பேச்சுத் துறை சார்ந்தும் கதாப்பிரசங்கம், நேர்முக வர்ணனை, மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பு என்பவற்றிலும் பயணித்து வருகின்றேன்.

*** எனக்குள் எழுத்தார்வம் ஏற்பட்டமை பற்றி..**

நான் க.பொ.த உயரத்தில் கலைப்பிரிவினைத் தெரிவு செய்திருந்தேன். அவ்வேளை தமிழ் மற்றும் இந்து சமயத்தில் மிகுந்த விருப்பம் உண்டானது. நான் கற்றுக் கொண்ட விடயங்களை எழுத்துருவில் வெளிப்படுத்த வேண்டும் எனும் எண்ணம் எனக்குள் ஏற்பட்டது. இதன் காரணமாக கட்டுரை மற்றும் கவிதை எழுதத் தொடங்கினேன். முதன் முதலில் 2012 ம் ஆண்டு உயர்தரம் படிக்கும் காலத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலை விழாவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் "பகவத்கீதையில் கருமயோகம்" எனும் தலைப்பில் எழுதிய கட்டுரை இரண்டாம் இடம் பெற்றுக்கொண்டது. இதுவே எனது எழுத்தாக்கத்திற்கு கிடைத்த முதல் அங்கீகாரம். அன்றிலிருந்து எழுத்தார்வம் என்னில் அதிகரித்தது. 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நான் எழுதிய "கம்பன் காட்டும் கைகேயி" எனும் தலைப்பிலான இலக்கியக் கட்டுரை உதயன் பத்திரிகையில் பிரசுரமாகியது. பத்திரிகையில் வெளிவந்த முதலாவது கட்டுரை இதுவாகும். இதன் பின்னர் எனது எழுத்துப் பயணம் மேன்மை பெறத் தொடங்கியது. தொடர்ந்தும் இலக்கியம், ஆன்மீகம் சார்ந்த கட்டுரைகளை எழுதத் தொடங்கினேன். இன்று வரை அந்த எழுத்துப்பயணம் தொடர்கின்றது. தற்போது வரைக்கும் இலக்கியம் மற்றும் ஆன்மீகம் சார்ந்த 400 வரையான கட்டுரைகள் இலங்கையில் இருந்து வெளிவருகின்ற தினகரன், உதயன், வலம்புரி, தினக்குரல், தினக்குரல், ஒளி அரசி, மித்திரன், தமிழருவி முதலான பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அது மட்டுமல்லாது இருநூறுக்கும் அதிகமான கவிதைகள் பத்திரிகைகள் மற்றும் முகநூல் கவிதைக் குழுமங்களிலும் வெளிவந்துள்ளன. இவற்றோடு பத்து வரையான பாடல்களையும் எழுதியுள்ளேன். இன்றும் எனது எழுத்துப் பயணம் தடையின்றி தொடர்கின்றது.

*** வாசிப்பு மற்றும் தேடல் அனுபவம் ***

நான் உயர்தரம் படிக்கும் காலம் முதல் வாசிப்பில் ஆர்வம் காட்டத் தொடங்கினேன். அதிலும் குறிப்பாக உயர்தரப் பரீட்சை முடிந்த பின்னர் கிடைத்த விடுமுறையினை நான் இதற்காக முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டேன். அக்காலப் பகுதியில் இராமாயணம், மகாபாரதம், முதலிய இதிகாசங்கள் கந்தபுராணம், விநாயகர் புராணம், விஷ்ணுபுராணம் முதலானவற்றோடு குறுந்தொகை, புறநானூறு முதலான சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, நளவெண்பா, முத்தொள்ளாயிரம் மற்றும் பகவத்கீதை, நாலாயிரத் திவ்ய பிரபந்தம் முதலிய பல்வேறு நூல்களை வாசிக்கத் தொடங்கினேன். அதன் காரணமாக கட்டுரைகளை எழுதுவது மிகவும் இலகுவாக இருந்தது. இலக்கிய இரசனை வெளிப்படும் வகையில் பாடசாலை மாணவர்கள் முதல் இலக்கிய ஆர்வம் கொண்ட அனைவரும் படித்து இன்புறத்தக்கவாறு எனது கட்டுரைகள் அமையப்பெற்றுள்ளன. அது போல என்னிடம் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கும் வாசிப்பின் அவசியத்தை எடுத்துரைத்து அவர்களையும் வாசிப்பில் ஈடுபடுத்தி வருகின்றேன். மேலும் கவிதை, கட்டுரை என்பவற்றை எழுதுவதற்கும் அவர்களை வழிப்படுத்தி வருகின்றேன்.

*** இதுவரை பெற்ற விருதுகள் மற்றும் மதிப்பளிப்புக்கள் ***

பத்து வருட எனது கலைப்பயணத்தில் இதுவரை எனக்கு கிடைத்த விருதுகள் மற்றும் மதிப்பளிப்புக்கள் தொடர்பாக உங்களோடு பகிருவதில் மகிழ்ச்சியடைகின்றேன். அவ்வகையில் 2020ம் ஆண்டு சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் சிறந்த எழுத்தாளருக்கான "கலாவிபூஷணம்" எனும் உயர்விருது வழங்கி கௌரவித்திருந்தது. அது போல அண்மையில் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தினால் சிறந்த எழுத்தாளருக்கான "கலாரத்னவிபூஷண்" எனும் விருதும் கிடைக்கப்பெற்றிருந்தது. மேலும் தேடல் கலை இலக்கிய மன்றம் சிறந்த கவிஞருக்கான "கவிக்கேசரி" எனும் விருதினை வழங்கிக் கௌரவித்தது. இவற்றோடு சிறந்த பாடல் வரிகளுக்காக சிறந்த பாடலாசிரியர் எனும் வகையில் "அரங்கக்கவியோன்" எனும் விருதும் கிடைக்கப்பெற்றுள்ளது. இவை தவிர, முகப்புத்தக கவிதைக் குழுமங்களின் ஆண்டுவிழாப் போட்டிகளில் வெற்றியீட்டியமைக்காக "கவிக்குறள் விருது", "காதல் கவிநிலா விருது" "கவிப்புயல் விருது" முதலான விருதுகளும், இணையவழி விருதுகளாக " ஒளிச்சுடர் சக்ரா விருது" மற்றும் "கவிமணிச்சுடர் விருது" என்பனவும் கிடைக்கப்பெற்றுள்ளது. 2021ம் ஆண்டு அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் பாடலாக்கம் சார்ந்து தேசிய மட்டத்தில் ஆறாம் இடம் பெற்று ஆறுதல் பரிசும், பணப்பரிசும் கிடைக்கப்பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தவிர, கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய 2022ம் ஆண்டிற்கான கலை இலக்கியப் போட்டித் தொடரில் பாடல் ஆக்கப் போட்டி சார்ந்து பிரதேச மட்டம், மற்றும் மாவட்ட மட்டம் என்பவற்றில் முதலாம் இடம் கிடைக்கப்பெற்றுள்ளது.



*** இது வரை வெளியிட்ட நூல்கள் தொடர்பாக..***

நூலுருவாக்கம் என்பது ஒரு எழுத்துப் பயணத்தில் புதியதொரு அனுபவம் எனலாம். இதுவரை நான் தரம் 10,11 மாணவர்களுக்கான தமிழ் மொழியும் இலக்கியமும் சார்ந்த வினா விடைத் தொகுப்பு நூல் ஒன்றை 2019ம் ஆண்டில் வெளியிட்டிருக்கின்றேன். தற்போது என்னால் எழுதப்பட்டு பத்திரிகைகளில் வெளிவந்துள்ள இலக்கியக் கட்டுரைகளைத் ஒன்றிணைத்து ஓர் நூலாக வெளியிடும் முயற்சி நிறைவு பெற்று "கலை முகை" எனும் பெயரில் வெகு விரைவில் வெளிவரக் காத்திருக்கின்றது. அது போல என்னால் எழுதப்பட்ட கவிதைகளின் நூல் தொகுப்பு ஒன்றையும் விரைவில் வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றேன்.

**★ எனது கட்டுரைகள் மீதான விமர்சனம் ★**

விமர்சனம் என்பதே ஒருவனை உயரத்திற்கு கொண்டு செல்லும் என்பது என் கருத்தாகும். எந்தவொரு படைப்பாக இருந்தாலும் அது பல வகையிலும் விமர்சனத்தை பெறும் போது அது அந்த படைப்பு வெற்றி பெறுகின்றது என்பது உண்மை. என்னுடைய கட்டுரைகள் மீதான விமர்சனங்கள் பெரும்பாலும் சாதகமாகவே கிடைக்கப்பெற்றுள்ளன. அதையும் தாண்டி ஒரு சில பாதகமான விமர்சனங்களும் முன் வைக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றையெல்லாம் நான் எனது வளர்ச்சியின் படிக்கற்களாகக் கொண்டு தொடர்ந்தும் எனது எழுத்துப்பயணத்தில் முன்னோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றேன். அவரவர் திறமைக்கு ஏற்ப அவர்களுக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறும் என்பது உண்மையே. எனவே போட்டியோ, பொறாமையோ இன்றி அனைவரோடும் ஒற்றுமையோடு பயணிக்க வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

***எழுத்துத்துறை தவிர்த்து ஈடுபாடு கொண்டவை ***

எழுத்தாக்கத்திற்கு பேச்சுத்துறை மீது அதீத ஈடுபாடு கொண்டுள்ளேன். அதன் மூலம் கதாப்பிர சங்கம், மேடைப்பேச்சு மற்றும் ஆலயங்களில் தேர்த்திருவிழாக்கள், கும்பாபிஷேக நிகழ்வுகள் போன்றவற்றில் நேர்முக வர்ணனைகளையும் நிகழ்த்தி வருவதோடு, நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் செயற்பட்டு வருகின்றேன். இது தவிர அறநெறிப்பாடசாலை ஆசிரியராகவும் மாணவர்களுக்கு அறக்கல்வியை போதித்தும் வருகின்றேன். மேலும் தரம் 09 13 வரையான தமிழ்ப்பாடம் கற்கின்ற மாணவர்களின் கற்றலுக்கு உதவியாக நயம் பேசு ( Nayam pesu) எனும் YouTube யூடியூப் பக்கம் ஒன்றை நிர்வகித்து வருகின்றேன். இதில் தமிழ்ப் பாடம் மற்றும் இலக்கிய நய பாடம் சார்ந்து பாட விளக்கங்களை காணொளிகளாக பதிவேற்றி வருகின்றேன். இவற்றோடு இலக்கியப்பாடல்கள் வெளிப்படுத்தும் நயம் சார்ந்த காணொளிகளையும் பதிவிட்டும் வருகின்றேன். இலங்கையின் பல பாகங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள் பலருக்கும் இந்த YouTube பக்கம் பெரும் உதவியாக இருந்து வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

*** நன்றிக்குரியவர்கள் ***

எனது இந்த கலைப்பயணத்தில் எனக்கு ஆதரவாகவும், உதவியாகவும் பலர் உள்ளனர். அதில் எனது தாய், தந்தையர் முக்கியமானவர்கள். எனது கலைப்பயணத்திலும் சரி, ஆன்மீக ஈடுபாட்டிலும் சரி, சிறப்பான முறையில் எப்போதும் என்னை வழிப்படுத்தி வருகின்றனர் அவர்களோடு எனது கலைப்பயணத்தில் என் மனைவி மிகுந்த ஆதரவாக இருந்து வருகின்றார். தவிர, ஆன்மீகத்தில் பல விடயங்களை எனக்கு கற்றுத்தந்த எனது ஆன்மீக குருநாதர் சிவஸ்ரீ. அமிர்த ஸ்ரீ காந்தக்குருக்கள் அவர்கள் இன்றும் எனது கலைப்பயணத்தில் முக்கிய பங்காற்றி வருகின்றார். அவரும் எனது நன்றிக்குரியவர்.

மேலும், பாடசாலையில் உயர்தரம் கற்கின்ற போது தமிழ்ப்பாடம் கற்பித்த ஆசிரியர்களும், தற்போது என்னோடு பணி புரிகின்ற ஆசிரியர்களும் எனது எழுத்துப்பயணத்திற்கு ஆதரவாக இருந்துள்ளனர். இவர்களோடு எனது சகோதரர்களோடு உறவினர்கள் பலரும் எனது கலைப்பயணத்தில் என்னோடு உடன் இருந்து ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருகின்றனர். எனது கட்டுரைகள் பலவும் பத்திரிகையில் வெளிவருவதற்கு பெரும் உதவியாக இருந்து வரும் நண்பன் பிரகாஸ் பெரும் நன்றிக்குரியவன். ஆக மொத்தத்தில் எனது எழுத்துப்பயணத்தில் என்னோடு ஆதரவாக இருந்து உதவும் அனைத்து உள்ளங்களுக்கும், எனது கட்டுரைகளை பிரசுரித்து வருகின்ற பத்திரிகை ஆசிரியர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

# தொலைக்காட்சி அறிவிப்பாளராக, படப்பிடிப்பாளராக திகழும் டிலு

தொலைக்காட்சி அறிவிப்பாளராக கலைத்துறைக்குள் பிரவேசித்த டிலு என்று அழைக்கப்படுகின்ற டிலுக்ஷிகா புகைப் படம் பிடிப்பதிலும் சித்திரம் வரைவதிலும் நடிப்புத் துறையிலும் பெண்களின் அலங்கார ஆபரணங்களை தயாரிப்பதிலும் கைதேர்ந்த கலைஞராகத் திகழ்கிறார். இவ்வாறு பல்வேறு துறைகளில் தன் திறமையை வெளிக்காட்டி வருகிற இவரை செந்தூரம் இதழுக்காக பேட்டி கண்டபோது அவர் கூறிய கருத்துக்கள் மிகவும் சுவாரஸ்யமாக இருந்தன.

**பெண்களுக்கே இலக்கணமாகத் திகழ்கின்ற நீங்கள் உங்களைப் பற்றி சுருக்கமாகக் கூறுங்களேன்...?**

வணக்கம், நான் டிலுக்ஷிகா பிரவீன். தொலைக்காட்சி பக்கம் டிலு என்று கூறினால் அனைவருக்கும் தெரியும். இது தொலைக்காட்சி துறைகளில் அறிமுகமான பெயர்.

**சித்திரம் வரைதலிலும் சிறந்த இவர், ஹரிகரனை வரைந்து அவரது பாராட்டை பெற்றவர்**

**நீங்கள் எப்போது தொலைக்காட்சி அறிவிப்பாளராக அறிமுகமானீர்கள்?**

நான் 2016 ம் ஆண்டு தொலைக்காட்சி அறிவிப்பாளராக அறிமுகமானேன்.

**நீங்கள் தற்போது எந்த தொலைக்காட்சி அலைவரிசையில் அறிவிப்பாளராக கடமையாற்றுகின்றீங்கள்?**

தற்போது நான் நேத்ரா தொலைக்காட்சி அறிவிப்பாளர்.



**தொலைக்காட்சியில் இணையும் போது நீங்கள் கலைத்துறைக்காக செய்த அட்டகாசங்கள் என்ன?**

தொலைக்காட்சியில் இணையும் போது சோலையன், பாலை மற்றும் பல அல்பம் பாடல்களில் நடித்துள்ளேன்.

**நீங்கள் வெறுமனமே அறிவிப்பாளர், பாடகி மட்டும் தானா......?**


டிலு பிடித்த புகைப்படம்


டிலு பிடித்த புகைப்படம்

பலருக்கும் என்னை ஒரு அறிவிப்பாளராகவே தெரியக்கூடும், அதையும் தாண்டி மணப்பெண் ஒப்பனை கலைஞராகவும், *Photograper* ஆகவும் எனது திறமைகளை வெளிக்கொண்டு வந்துள்ளேன். தொடர்ந்து வருகின்றேன்.

**இதற்கு யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லையா?**

ஆரம்பக் காலத்தில் பெண்களுக்கு புகைப்படம் எடுப்பது போன்ற கலைகள் பொருத்தமற்றது என்றே கூறினார்கள்.

**அதனால் புகைப்படம் எடுக்கும் கலையை கைவிட்டு விட்டீங்களா?**

இல்லை, நான் *Moi Photos* என்ற பக்கத்தை கிரியேட் செய்து அதன் மூலம் முஸ்லிம் திருமண விழா படப்பிடிப்புகளையும் மற்றும் தனித்துவமான படப்பிடிப்புகளையும் செய்து வருகிறேன்.

**கலைத்துறையோடு சம்பந்தப்பட்ட வேறு ஏதாவது துறைகளிலும் நீங்கள் அசத்தி வருகிறீர்களா?**

முன்பு இலங்கையில் *Therakota* நகைகள் காணப்படவில்லை. களி மண்ணால் செய்யக்கூடிய நகைகள் செய்து *Online* மூலமாக விற்று வருகின்றேன்.

**இவற்றையெல்லாம் விட இன்னும் வேறு ஏதாவது துறையில் சாதிக்க வேண்டும் என்று நினைத்தது உண்டா?**

இவற்றையெல்லாம் விட பொழுது போக்குக்காக நான் செய்யக் கூடிய விடயம் தான் வரைதல். நான் வரைந்ததில் எனக்கு மிகவும் பிடித்தது *Sir* ஹரிகரனை வரைந்தது தான். அந்த வரைதலில் அவரது *Shirt* ல் அவர் பாடிய 400க்கு மேற்பட்ட பாடல் வரிகளை எழுதியுள்ளேன். பதிவிட்டிருந்த வரைதலை பார்த்து அவரே லைக் செய்து கருத்தும் தெரிவித்திருந்தார். நான் அறிவிப்பாளர் மட்டுமல்ல, நான் ஒரு *Artist, Photographer, Makeup Artist, Jewellery Designer* அது



மட்டுமல்லாமல் எதிர்காலத்தில் *Kurthi Designing* ம் கற்றுக் கொள்ள விரும்புகிறேன்.

**நீங்கள் இத்துறையில் பிரவேசிப்பதற்கு உதவிய யாருக்காவது நன்றி தெரிவிக்க விரும்புகிறீங்களா?**


இது போன்ற எனது திறமைகளை வெளிக்கொண்டுவர உதவிய ஈஸ்வரலிங்கம் ஐயாவுக்கு இந்நேரத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் எந்த ஒரு முயற்சியையும் செயற்படுத்த உறுதுணையாக இருந்து வருவது என் சகோதரி ரஜிக்கா மற்றும் வருங்கால கணவர் ரொஷான் அத்துடன் எனது குடும்பமும் எனக்கு முழு ஆதரவையும் தந்து உதவுகிறது.

**நீங்கள் இளம் பெண்களுக்கு கூற விரும்புகின்ற கருத்து என்ன?**

நான் கூற விரும்புவது அனைத்து பெண்களுக்கும் தனக்கென்று ஒரு தனி வியாபாரத்தை வெற்றிகரமாக எடுத்துச் செல்லுங்கள். அது இருக்கும் வரை யாருக்காகவும் யாரிடமும் அடிபணியத் தேவை இல்லை.





கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

Senthooram
செந்தூரம்



சினி மஞ்சரி

# டைரக்டராக பயிற்சி எடுக்கிறேன்

நடிகை ராதிகா ஆப்தே

முன்னணி கதாநாயகியாக உயர்ந்துள்ள ராதிகா ஆப்தேவும் படம் இயக்க வருகிறார். கதாநாயகிகள் பலர் படம் டைரக்டு செய்ய வந்துள்ளனர். ரேவதி, கங்கனா ரணாவத், நந்திதா தாஸ், ஹேமமாலினி, பூஜா பட் உள்ளிட்ட நடிகைகள் டைரக்டர்களாக மாறி உள்ளனர்.

இந்த நிலையில் தமிழில் ரஜினிகாந்த் ஜோடியாக கபாலி, கார்த்தி ஜோடியாக ஆல் இன் ஆல் அழகுராஜா படங்களில் நடித்து இந்தியில் முன்னணி கதாநாயகியாக உயர்ந்துள்ள ராதிகா ஆப்தேவும் படம் இயக்க வருகிறார். இதற்காக நடிப்புக்கு முழுக்கு போட போகிறார் என்றும் தகவல் பரவியது. இதுகுறித்து ராதிகா ஆப்தே அளித்துள்ள பேட்டியில், இயக்குனராக வேண்டும் என முதலில் இருந்தே எனக்கு ஆசை உள்ளது. ஆனால் எதிர்பாராமல் நடிகையாகி விட்டேன்.

அதுமட்டுமின்றி நான் ஏற்கனவே இயக்குனர் பிரிவில் பயிற்சியும் பெற்றிருக்கிறேன். விரைவில் ஒரு படத்தை இயக்க போகிறேன். ஆனால் அதற்கு முன்பு திரைக்கதை பற்றி இன்னும் கொஞ்சம் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக சில இயக்குனர்களிடம் பணியாற்றி பயிற்சி பெற முடிவு செய்திருக்கிறேன். திரைக்கதைகளை கூட தயார் செய்து கொண்டிருக்கிறேன்.

இயக்குனர் ஆனாலும் நடிப்பில் இருந்து விலக மாட்டேன். நடிப்புக்குத்தான் எப்போதும் முன்னுரிமை கொடுப்பேன் என்றார்.



# சுட்டு போட்டாலும் உங்களுக்கு அது வரல



தமிழ் திரை உலகிற்கு அறிமுகமாவதற்கு முன்பு மலையாளம் மற்றும் ஹிந்தி படங்களில் அதிகம் நடித்த மாளவிகா மோகனன் பின்னர் ரஜினி நடிப்பில் வெளியான பேட்ட படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு காலடி எடுத்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மாஸ்டர் படத்தில் விஜய்யுடன் ஜோடியாக நடித்து புகழின் உச்சிக்கே சென்றார்.

இருப்பினும் டாப் நடிகையாக மாறத் துடிக்கும் மாளவிகா மோகனன், கதாநாயகிகளின் கதாபாத்திரம் வலுவாக பேசக்கூடிய படத்திற்காக காத்திருக்கிறார். அந்த சமயத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினியின் கபாலி பட இயக்குனர் பா. ரஞ்சித் படத்தில் நடிப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது.

ஆனால் சுட்டு போட்டாலும் உங்களுக்கு அது வராது என பா. ரஞ்சித் மாளவிகா மோகனனை அந்த படத்தில் இருந்து நீக்கி விட பார்த்திருக்கிறார். அதாவது பா. ரஞ்சித் தற்போது விக்ரமை வைத்து எடுத்துக் கொண்டிருக்கும் படம் தங்கலான். இந்தப் படம் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் நடக்கும் கதைக்களம் என்பது அவர்கள் போட்டிருக்கும் கெட்டப்பை பார்த்தாலே தெரிகிறது. இந்த படத்தில் இரண்டு ஹீரோயின்கள் ஒன்று மாளவிகா மோகனன். தங்கலான் படத்தின் கதைப்படி மாளவிகா மோகனுக்கு சிலம்பம் தெரியனுமாம். ஆனால் சுட்டுப் போட்டாலும் மாளவிகா மோகனுக்கு சிலம்பம் வரவே இல்லையாம். இதனால் இந்த படத்தில் இருந்து மாளவிகா மோகனனை விலக்கி விடும் எண்ணத்தில் பா. ரஞ்சித் இருந்திருக்கிறார்.

அதனால் இந்தப் படத்தின் ஹீரோயின் நீங்க இல்லை என்று கூறி விட்டாராம். வேறு ஏதாவது சப்போர்ட்டிவ் கேரக்டரை மாளவிகா மோகனுக்கு கொடுத்து விடலாம் என்றும் பா. ரஞ்சித் முடிவெடுத்திருந்தார். ஆனால் இதை கொஞ்சம் கூட ஏற்றுக் கொள்ள முடியாமல் மாளவிகா மோகனன் ஒரே நாள் இரவில் அவரை வியக்க வைக்க கூடிய செயலை செய்துள்ளார்.

இவ்வளவு நாள் சவால் நிறைந்த கேரக்டருக்காக ஏங்கிக் கொண்டிருந்த மாளவிகா மோகனன் தங்கலான் படத்தில் நிச்சயம் கதாநாயகியாக நடித்து ரசிகர்களை வியக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில், தனியாக சிலம்பம் மாஸ்டரை வரவழைத்து இரவும் பகலும் கஷ்டப்பட்டு ஒரு வாரத்தில் கற்றுக் கொண்டாராம். இதை பார்த்து பிரமிப்பு அடைந்த பா ரஞ்சித் மாளவிகா மோகனையே ஹீரோயினாக்க முடிவு செய்துவிட்டாராம்.



வயதான ஹீரோக்களுக்கு ஜோடியாக நடிப்பது ஏன்? என்று நடிகை சுருதிஹாசன் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழ், தெலுங்கில் முன்னணி கதாநாயகியாக உயர்ந்துள்ள சுருதிஹாசன் சினிமாவுக்கு வந்த புதிதில் இளம் கதாநாயகர்களுடன் ஜோடி சேர்ந்து நடித்தார். இப்போது 60 வயதைக் கடந்த சிரஞ்சீவி, பாலகிருஷ்ணா போன்ற நடிகர்களுக்கு ஜோடியாக நடிக்கிறார். இது வலைத்தளங்களில் விமர்சனங்களை கிளப்பி உள்ளது.

பட வாய்ப்பு இல்லாமல் நடிக்கிறாரா? அல்லது அதிக சம்பளம் கிடைப்பதால் நடிக்கிறாரா? என்றெல்லாம் கேள்விகள் எழுப்புகின்றனர்.

பாலகிருஷ்ணா ஜோடியாக வீர சிம்மா ரெட்டி படத்திலும், சிரஞ்சீவி ஜோடியாக வால்டர் வீரய்யா படத்திலும் சுருதிஹாசன் நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த படங்கள் பொங்கலுக்கு வெளியாக உள்ளன.

சுருதிஹாசனிடம் வயதான நடிகர்களுடன் நடிப்பது குறித்த கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு சுருதிஹாசன் பதில் அளித்து கூறும்போது, ''நடிப்பு துறையில் வயது என்பது ஒரு நம்பர் மட்டுமே. நடிக்கும் திறமை இருந்தால் உயிரோடு இருக்கும் வரை நடிக்கலாம். இதை ஏற்கனவே பல வயதான ஹீரோக்கள் தங்களைவிட இரண்டு மடங்கு வயது குறைவான இளம் கதாநாயகிகளுடன் நடித்து நிரூபித்து இருக்கிறார்கள். இதற்கு நான் ஒன்றும் விதி விலக்கு அல்ல'' என்றார்.

# வயதான ஹீரோக்களுக்கு ஜோடியாக நடிப்பது ஏன்?



கடந்த வருடம் சவாலான வேடங்களில் நடித்தது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று நடிகர் கார்த்தி தெரிவித்து உள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2022 ஆம் ஆண்டில் விருமன், பொன்னியின் செல்வன்1 மற்றும் "சர்தார்" ஆகிய மூன்று திரைப்படங்களும் மாபெரும் வெற்றிபெற்று, தொழில் ரீதியாக சிறப்பான ஆண்டாக அமைந்தது.

இந்த வணிக வெற்றிக்கான பாராட்டுகளை எனது படங்களில் எனது தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், சக நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். அதே நேரத்தில்,

# சவாலான வேடங்களில் நடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது



என்னுள் இருக்கும் கலைஞன் வெளிப்பட்டதில் மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக, வந்தியதேவன் மற்றும் சர்தார் போன்ற தனித்துவமான மற்றும் சவாலான கதாபாத்திரங்களில் நடித்ததில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

உழவன் அறக்கட்டளையில் எனது சகோதர சகோதரிகள் ஆற்றிய பாராட்டுக்குரிய பணிக்காக நான் பெருமைப்படுகிறேன். விவசாயிகளை அங்கீகரிப்பதற்காக நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பது, அவர்களுக்கு புதிய வாய்ப்புகளைக் கொண்டு வருவதற்கு அதிக தெரிவு நிலையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

2023 மற்றும் பல வருடங்களுக்கு எனது தீவிர ரசிகர்களையும், பார்வையாளர்களையும் தரமான படங்களுடன் தொடர்ந்து மகிழ்விப்பேன் என்று நான் உறுதியளிக்கிறேன். அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துகள்" என்று கூறியுள்ளார்.

தமிழ் சினிமாவில் கடந்த 2022 ஆம் ஆண்டு ரிலீசான படங்களின் வெற்றிகள் சற்று குறைவு தான். இருந்தாலும் நடிகைகள் தங்களது ரசிகர்களை குஷிப்படுத்துவதில் குறையே வைக்கவில்லை என்று தான் சொல்ல வேண்டும். அப்படி 2022 ஆம் ஆண்டில் ரசிகர்களின் மனதை கொள்ளைக் கொண்டு கனவு கன்னியாக வலம் வரும் 5 நடிகைகளை பற்றி பார்க்கலாம்.

கடந்தாண்டின் சிறந்த ஐந்து நடிகைகள்ப்ரியா பவானி ஷங்கர்: இந்தாண்டு நடிகை ப்ரியா பவானி ஷங்கர் நடிப்பில் திருச்சிற்றம்பலம்,யானை உள்ளிட்ட படங்கள் வெளியானது. தனுஷின் திருச்சிற்றம்பலம் படத்தில் இவர் நடித்தாரா என்று கேட்கும் அளவிற்கு இப்படத்தில் இவரது காட்சிகள் இடம் பெற்றிருந்தாலும், பாவாடை தாவணி கட்டிய அழகில் இவர் ரசிகர்களை கிறங்கடித்திருப்பார். அடுத்ததாக இயக்குனர் ஹரியின் இயக்கத்தில் வெளியான யானை படம் கலவையான விமர்சங்கள் பெற்றிருந்தாலும், இவரின் நடிப்பு பேசப்பட்டது.

சமந்தா : நடிகை சமந்தாவிற்கு 2022 ஆம் ஆண்டு அம்சமான ஆண்டாக அமைந்திருந்தாலும், உடல் நல குறைவால் சற்று அவதிப்பட்டார். நடிகை சமந்தா நடிப்பில் இந்தாண்டு பேன் இந்தியா படமாக வெளியான யசோதா திரைப்படம் மாபெரும் வெற்றியடைந்தது. கர்ப்பமான பெண்ணாக வலம் வரும் சமந்தாவின் சண்டை காட்சிகள் அற்புதமாக இருந்தது. புஷ்பா பட ஐட்டம் சாங்கில் ஆடிய சமந்தா, யசோதா படத்தின் மூலமாக, தான் ஒரு சிறந்த நடிகை என்பதை மீண்டும் நிரூபித்தார்.

ஐஸ்வர்யா ராஜேஷ்: 2022 ஆம் ஆண்டில் ஐஸ்வர்யா ராஜேஷ் நடிப்பில் ஜமுனா திரைப்படம் மட்டுமே ரிலீசானது. இத்திரைப்படத்தில் கார் ஓட்டும் காட்சிகள், சண்டைக்காட்சிகள், செண்டிமெண்ட் காட்சிகள் என ஜமுனாவாக பின்னி பெடலெடுத்திருப்பார் ஐஸ்வர்யா ராஜேஷ். நயன்தாரா பாணியில் பெண் கதாபாத்திரங்களை மையமாக வைத்த கதைகளை தேர்ந்தெடுத்து ஐஸ்வர்யா ராஜேஷின் அடுத்தடுத்த படங்கள் வெளியாக உள்ளது.

நித்யா மேனன்: நடிகை நித்யாமேனன் தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் 2022 ஆம் ஆண்டு நடித்த அத்தனை படங்களும் ஹிட்டானது.நித்யாமேனன் தமிழில் தனுஷின் நடிப்பில் வெளியான திருச்சிற்றம்பலம் படத்தில் ஷோபா கதாபாத்திரத்தில் தனுஷின் தோழியாக நடித்து அசத்தியிருப்பார். இவரை போல ஒரு பெண் நம் வாழ்க்கையில் இல்லையே என இளைஞர்கள் ஒவ்வொருவரும் ஏங்கிய கதாபாத்திரமாக அமைந்தது.

ப்ரியங்கா மோகன்: 2022 ஆம் ஆண்டில் நடிகர் சூர்யா நடிப்பில் வெளியான எதற்கும் துணிந்தான், சிவ கார்த்திகேயனின் டான் உள்ளிட்ட படங்களில் கதாநாயகியாக நடித்தார். உள்ளம் உருகுதைய்யா பாடலில் ஆடிய இவரின் நடனத்தை வச்ச கண் வாங்காமல் ரசிகர்கள் பார்த்து ரசித்தார்கள். வளர்ந்து வரும் நடிகைகளில் ப்ரியங்கா மோகன் முதலிடத்தில் உள்ள நிலையில் ரஜினியின் ஜெயிலர் படத்தில் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# கடந்தாண்டின் சிறந்த ஐந்து நடிகைகள்



# தாயாகப் போகும் பூர்ணா

நடிகை பூர்ணா, தனது யூடியூப் வலைத்தளம் மூலமாக அம்மா ஆவதற்கு தயாராகி விட்டதாக கூறியுள்ளார். மலையாள நடிகையான பூர்ணா தமிழில் 'முனியாண்டி விலங்கியல் மூன்றாம் ஆண்டு' என்ற படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார். ஆடுபுலி, கந்தகோட்டை, தகராறு, அடங்கமறு, காப்பான், தலைவி உள்ளிட்ட பல படங்களில் நடித்து இருக்கிறார். தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார். கொச்சியில் குடும்பத்தினருடன் வசித்த பூர்ணா திருமண மோசடி கும்பலிடம் சிக்கிய சம்பவம் பரபரப்பானது. பூர்ணா அளித்த புகாரின் பேரில் மோசடியில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். சில மாதங்களுக்கு முன்பு துபாய் தொழில் அதிபர் சானித் ஆசிப் அலியை பூர்ணா திருமணம் செய்து கொண்டார். இந்த நிலையில் பூர்ணா தற்போது கர்ப்பமாகி உள்ளார். இதுகுறித்து, பூர்ணா வெளியிட்டுள்ள வீடியோவில் பேசும்போது, "நான் அம்மா ஆவதற்கு தயாராகி விட்டேன். என் தாய் பாட்டியாகவும், தந்தை தாத்தாவாகவும் ஆகப் போகிறார்கள். நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். எனக்கு அனைவரின் வாழ்த்துகளும் வேண்டும். எல்லோருக்கும் நன்றி" என்று கூறியுள்ளார். பூர்ணாவுக்கு ரசிகர்கள் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள்.

# மனசை லேசாக்கும் காதல் ஹோமோன்கள்

அக்சிடோசின், எண்டோர்பின், டோபமைன் மற்றும் செரோடோனின் எனும் நான்கு ஹோமோன்கள் தான் மகிழ்ச்சி உணர்வு ஏற்படுவதற்கு காரணமானவை. உடலின் செயல்பாடுகளை கட்டுப்படுத்தும் தன்மை கொண்ட ரசாயன திரவங்களே 'ஹோமோன்கள்'. இவை உடலில் உள்ள நாளமில்லா சுரப்பிகளில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன. ரத்த ஓட்டத்தின் மூலம் உடல் முழுவதும் கொண்டு செல்லப்படுகின்றன. ஒவ்வொரு வகையான ஹோமோன்களும், உடலில் ஒவ்வொரு செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தும் செயலை செய்கின்றன. அவற்றில் மகிழ்ச்சி உணர்வை ஏற்படுத்தும் ஹோமோன்களைப் பற்றி இங்கே தெரிந்துகொள்வோம். நாம் அனைவரும் ஏதோ ஒருவகையில் மகிழ்ச்சியைத் தேடி ஓடுகிறோம். அதை அடிப்படையாக வைத்தே செயல்படுகிறோம். அத்தகைய உணர்வை நமக்குள் ஏற்படுத்துபவை 'மகிழ்ச்சி ஹோமோன்கள்'. அக்சிடோசின், எண்டோர்பின், டோபமைன் மற்றும் செரோடோனின் எனும் நான்கு ஹோமோன்கள் தான் மகிழ்ச்சி உணர்வு ஏற்படுவதற்கு காரணமானவை.



அக்சிடோசின்: இது 'காதல் ஹோமோன்கள்' என்று அழைக்கப்படுகிறது. நம்பிக்கை, பாலியல் உணர்வை தூண்டுதல் மற்றும் உறவுகளை வளர்ப்பதில் பங்காற்றுகிறது. தாய்ப்பால் சுரப்பதற்கும், குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையேயான இணைப்பை உருவாக்குவதற்கும் இந்த ஹோமோன்கள் அவசியம்.

எண்டோர்பின்: உடல், மன அழுத்தத்திற்கு உட்பட்டு அசௌகரியத்தை உணரும்போது இந்த ஹோர்மோன் 'இயற்கை வலி நிவாரணி'யாக செயல்படுகிறது. உடற்பயிற்சி மற்றும் யோகா போன்ற செயல்களில் ஈடுபடும் போது 'எண்டோர்பின்' சுரக்கிறது.

செரோடோனின்:

இந்த ஹோர்மோன்கள் கற்றல், நினைவாற்றல், தூக்கம், உடல் வெப்பநிலை, பசி மற்றும் பாலியல் நடத்தை போன்றவற்றுக்கு அவசியமானது. சாப்பிடும்போது பசியைக் கட்டுப்படுத்தி, வயிறு நிறைந்த உணர்வை அளிக்கிறது.

டோபமைன்: இது 'நல்லுணர்வு' ஹோமோன் என்று அழைக்கப்படுகிறது. வளர்சிதை மாற்றத்தைக் கட்டுப்படுத்துகிறது. உடல் இயக்கம், நினைவாற்றல் மற்றும் சுய ஊக்கத்தை அதிகப்படுத்துகிறது. அறிவாற்றல் செயல்பாடு மற்றும் படைப்பாற்றலைத் தூண்டுகிறது.

உடற்பயிற்சி செய்யும்போது எண்டோர்பின் ஹோர்மோன் அதிகமாக சுரக்கும். தனியாக உடற்பயிற்சி செய்வதை விட, குழுவாக சேர்ந்து பயிற்சியில் ஈடுபடும் போது அதிக பலன்கள் கிடைக்கும். எனவே உங்கள் தோழிகள் அல்லது குடும்பத்தினரோடு உடற்பயிற்சி செய்யுங்கள்.

# அழகுக்கு அழகு சேர்க்கும் ஒப்பனை

அழகுக்கு அழகு சேர்ப்பது தான் 'மேக்அப்'. இதில் பல நுணுக்கங்கள் இருக்கின்றன. ஆனாலும், 'மேக்அப்' என்றதும் பவுண்டேஷன் போட்டு, அதற்கு மேல் ரோஸ் பவுடர் போடுவது என்ற தவறான கருத்து பலரிடம் இருக்கிறது. மேக்அப் என்பது ஒரு படிப்படியான செய்முறை. அதன் விளக்கங்களை கீழே காணலாம்:



1. முதலில் மேக்அப் செட்டிங் ஸ்பிரே அடித்து, சருமத்தை மேக்அப்பிற்குத் தயார் செய்ய வேண்டும்.

2. அடுத்ததாக மேக்அப்பின் அடிப்படையாக செயல்படும், பிரைமரை (primer) சருமத்தில் பூச வேண்டும். எண்ணெய்பசை கொண்ட சருமத்திற்கு, ஜெல் வடிவிலான பிரைமரையும், உலர்ந்த சருமத்திற்கு, கிரீம் வடிவிலுள்ள பிரைமரையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

3. அதைத் தொடர்ந்து முகத்தில் இருக்கும் கரும்புள்ளிகள், திட்டுகள் உள்ள இடத்தில் கலர் கரெக்டரை பூசி, அதை சருமத்துடன் ஒன்றுமாறு செய்ய வேண்டும்.

4. பின்பு, கண்ணுக்குக் கீழே உள்ள கருவளையங்கள் மற்றும் உதட்டை சுற்றியுள்ள கருமை நிறத்தை மறைக்க, கன்சீலரைப் (concealer) பயன்படுத்த வேண்டும். இதையும் பிளண்டர் வைத்து பிளண்ட் செய்வது அவசியம்.

5. உங்கள் சரும நிறத்திற்கு ஏற்ற பவுண்டேஷனைத் தேர்வு செய்ய வேண்டும். அதை முகத்தில் புள்ளி புள்ளியாக ஆங்காங்கே வைத்து பூச வேண்டும். முகத்தோடு சேர்த்துக் கழுத்திலும் பூசுவது அவசியம். அப்பொழுதுதான் முகம் தனியாக வித்தியாசமாகத் தெரியாமல் இருக்கும். பவுண்டேஷனைக் கீழ் நோக்கி தடவும் முறையே சரியானது.

6. இதற்கு அடுத்து, காம்பேக்ட் பவுடரை முகத்தில் பூச வேண்டும். முகத்திலுள்ள சிறுசிறு குழிகள், கோடுகளை மறைக்கவும், சரி செய்து சமன்படுத்தவும் இது உதவும்.

7. இப்பொழுது கண்களுக்கான மேக்அப்பில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் உடைக்கு ஏற்ற நிறத்தில் 'ஐ ஷேடோ' வைத் தேர்ந்தெடுத்து, அதனுடன் ஒரு தங்க நிற நிறமியைக் கலந்து பூசினால், கண்கள் பளிச்சென இருக்கும்.



8. காஜலை கண்களுக்குக் கீழேயும், ஐலைனரை கண்களுக்கு மேலேயும், கவனமானத் தடவ வேண்டும். அது கரைந்து போகாத மற்றும் வாட்டர் ப்ரூப் ஐலைனராக இருந்தால் சிறந்தது.

9. செயற்கையாக விற்கும் கண் இமை முடிகளை, அதன் பசையுடன் சேர்த்து ஒட்டிக் கொண்டால், கண்களை மேலும் அழகாகக் காட்ட முடியும். இல்லையெனில், மஸ்காரா தடவி இமை முடிகளை அடர்த்தியாக காட்டலாம்.

10. புருவத்திற்கென தனியாக ஸ்பூலி பிரஷ் (spoolie brush) கிடைக்கிறது. முதலில் அதன் ஒரு பக்கம் இருக்கும் மையை பயன்படுத்தி, புருவத்தின் பார்டரை வரைந்துவிட்டு, மறுபக்கம் உள்ள பிரஷின் மூலம், புருவ முடிகளை ஒழுங்குபடுத்தி பிளண்ட் செய்துகொள்ள வேண்டும்.












தென்றல் அறிவிப்பாளரும் பாடகருமான முஹம்மட் இர்பான் வழங்கிய பொன்மாலைப் பொழுது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆனந்த சமரக்கோன் கலையகத்தில் நடைப்பெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள். படங்கள்: சுதத் மலவீர, எம்.நசார்

# தினகரன் பிரதேச செய்தியாளர்கள் எழுவர் உட்பட 22 பேருக்கு கௌரவம்








**மட்டக்களப்பு குறூப் நிருபர்**


பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் மக்களுக்கு அர்ப்பணிப்புடன் ஊடகப் பணியாற்றி வரும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 22 ஊடகவியலாளர்கள், சரீரம் நிஷப்தபதி ஸ்ரீலங்கா தேசிய மன்றத்தினால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் தினகரன் பிரதேச ஊடகவியலாளர்கள் 7 பேர் அடங்குகின்றனர்.

தினகரன் பிரதேச ஊடகவியலாளர்களான ரீ.எல்.ஜவ்பர்கான், எம்.எஸ்.எம். நூர்தீன், யு.உதயகாந்த், வ.சக்திவேல், வி.பத்மசிறீ, எஸ்.பேரின்பராசா, சிவம் பாக்கியநாதன் உள்ளிட்டோர் அடங்குகின்றனர்.

தாழங்குடா ஆரையம்பதி சரீரம் நிஷப்தபதி ஆலயத்தின் 33ஆவது ஆண்டு நிறைவையொட்டிய வருடாபிஷேகம், அவ்வாலயத்தில் அண்மையில் நடைபெற்ற போதே, இவ் ஊடகவியலாளர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.





ரொஷான் அஷரப் அஸிஸ் நிதியத்தின் அனுசரணையுடன் அகவம் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்களன்று நடைபெற்ற போது...


## நிறம் தீட்டுங்கள்




## வழிகாட்டுங்கள்



## பறவை ஒன்றை வரைவதற்கான 6 படிமுறைகள்





## தொடர்பு படுத்துங்கள்




## 10 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



நான் ரொம்ப பிஸி...

# முகநூல் தந்த கவிஞன்

# 'கிண்ணியாக்கவி' ஏ.எம். சிஹார்தீன்

பத்திரிகை உலகில் அறியப்படாத பல முகநூல் கவிஞர்கள் இலக்கிய வானில் வலம் வந்து தங்களது எழுத்துப் பணியை தொடராக செய்து வருவதை காணலாம். அந்த வகையில் நீண்ட காலமாக எழுதி வருபவர். முகநூலில் பலருக்கும் அறிந்த முகம். அவரே "கிண்ணியாக்கவி" என்ற பெயரில் எழுதி வரும் ஏ.எம். சிஹார்தீன். அவர் பற்றிய தகவல்களை நான் ரொம்ப பிஸி பகுதியில் பகிர்ந்து கொள்கிறேன்.

சிஹார்தீன் ஒரு கவிதைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லலாம். வாவன்காடு வசந்தன், கட்டையாறு கவிராயர், மனாபு ஏ.ரசூல் என்ற பெயர்களில் 1987 தொடக்கம் தினகரன் பத்திரிகையில் சிறுகதை எழுத்தாளராக அறிமுகமாகியவர். வாசல்வரை வந்தாள், சின்னஞ் சிறுசுகள், முற்றுப் பெறாதவீடு, என பல சிறந்த சிறுகதைகளை தந்த கவிஞர் பாஅமுதன் ஏ.எம்.ஏ.ரசூல் இவரது சகோதரராவார்.

அவரொரு இலக்கிய பாரம்பரியத்தை கொண்ட தந்தை வாப்புத்தம்பி கயாத்து முகம்மது அப்துல் மனாபு வழியில் 'பாட்டு முத்தலிபு' அல்லது கிண்ணியாப் பாட்டுக்காரன் என அழைக்கப் படுகின்ற அப்துல் முத்தலிபின் குடும்பத்தைச் சேர்ந்தவராவார்.

சிஹார்தீன் தாய்நாட்டில் இருக்கும்போது பத்திரிகைகளில் இடையிடையே எழுதி வந்தார். ஆனால் கட்டார் நாட்டில் தொழில் கிடைத்துச் சென்றபோதே முகநூல் அவரின் எழுத்துக்கு களம் அமைத்துக் கொடுத்தது எனலாம்.




எழுத்துக்கள் என்பது இரசனையுள்ள கற்பனை உள்ளங்களில் இருந்து ஊற்றெடுத்து வெளிப்படுவதை தவிர்க்க முடியாததாகும். தடையின்றி அது நதிபோல ஓடிக்கொண்டிருக்கும்.

கவிதை பற்றி அவரிடம் வினவியபோது ஆரம்பத்தில் மரபுக் கவிதை, புதுக்கவிதை என்றே நான் அறிந்து வைத்திருக்கிறேன். இப்போது நவீனத்துவம் மற்றும் பின் நவீனத்துவ தோற்றத்தின் பின்னால் எல்லாரையுமே கவிதை எழுத வைத்துள்ளது. இம் முறையில் எழுதுபவர்கள் ஒவ்வொருவரும் தான் எழுதுவதே சரியென உரிமைக்காகான விவாதங்களிலே ஈடுபட்டு வருவதை முகநூலில் கூட காண முடிகிறது. புதுக் கவிதை அல்லது மரபுக் கவிதையில் காணப்படும் வடிவம் இங்கில்லாத காரணமாக அமையலாம் என நினைக்கிறேன். எல்லாக் கவிதைகளும் அப்படியல்ல அத்துறை சார்ந்தவர்களால் நல்ல கவிதைகளும் எழுதப் படுகின்றன.



நவீனத்துவம் சார்ந்த சிலரது கவிதைகளை வாசிப்பாளர்களிடம் கொடுத்து பொருள் சொல்லுமாறு கூறினால் ஒவ்வொருத்தரும் வெவ்வேறு பொருளைச் சொல்கின்றனர். எனவே தான் எழுதியவரிடமே பொருளைக் கேட்டறிய வேண்டிய சூழல் இங்கு உருவாகிறது. எழுதியவர் மரணித்தால் யாரிடம் கேட்டு விளங்கிக் கொள்வது? எனவேதான் இப்படியான கவிதைகளுக்கு பொழிப்புரை எழுதும் காலமும் பிறக்கலாம்.

அண்மையில் முகநூலில் ஜிப்ரி ஹாஸன், ஜெ. பிரான்சிஸ் கிருபாவின் கவிதையான

என்ன ஆயிற்று இந்த இரவுக்கு?

முழிக்கும் முழியே சரியில்லையே!

அறைவிளக்கை எதற்கும்

அணைக்காமலே வைப்போம்.

எனத் தொடங்கும் கவிதையை பதிவிட்டபோது இது ஒரு உரைநடைபோல செல்கிறது. ஒரு விடயத்தை சித்தரிக்கிறது. இதில் கவிநயத்தை காண முடியவில்லை. ஆனாலும் பிரபலங்களின் வரிகள் கவிதையாகத்தான் இருக்கும் என்ற உணர்வு நமக்குள் ஏற்படுத்திச்செல்கிறது. இது எனது அபிப்பிராயம். ஏனென்றால் இதுபோல நானும் நிறையவே எழுதியிருக்கிறேன் கவிஞரே என்று கவிஞர் மூஸா விஜிலி சொல்கிறார். அதே கவிதையை உரைநடைப் பாணியில் அமைந்திருந்தாலும் அருமை என கவிஞர் ஏரூர் கே.நௌஷாத் சொல்வதைக் காணலாம். இதுதான் கவிதை, இப்படித்தான் எழுதுங்கள் என்று ஜிப்ரி ஹாஸன் சொல்வதை தான் வாழ்த்துகிறேன் என திக்வல்லை ஸப்வான் தனது கருத்துக்களை முன்வைக்கின்றார். இங்கு உடன்படாத கருத்தொன்று நிலவுவதை வாசகர்கள் அவதானிக்கலாம்.

மேலும் அவர் கூறுகையில் இன்று பலர் முகநூல் கவிஞர்களை வெறுக்கின்றனர். அதில் வரும் எல்லாம் கவிதைகளும் கவிதை என ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்கின்றனர். அதில் உண்மையில்லாமல் இல்லை, பல நல்ல கவிஞர்களும் எழுதுகின்றனர் என நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இவர் குழும போட்டிகளில் பங்கு பற்றி தருகின்ற தலைப்புகளுக்கு கவிதை எழுதி அதிக சான்றிதழ்கள் மற்றும் விருதுகளும் பெற்றுள்ளார்.

இவர் கவிதை எழுதிய குழுமத்தின் பெயர்கள்,

கவியுலகப் பூஞ்சோலை, கவிப்பட்டறை, தேடல் கலை இலக்கிய அமைப்பு, கவிஞர்களின் கருவூலம், திவ்விய கவிச்சோலை, ஈராக்தமிழ்ச்சங்கம், ஹைக்கூ பூஞ்சோலை, முத்தமிழ்கலை இலக்கிய மன்றம், நிலா முற்றம், விடிசேவல் கலை இலக்கிய ஒன்றியம், தமிழ் சங்கே முழங்கு கவிதை குழுமம், தமிழ் பூஞ்சோலை, நிலாச்சோறு குழுமம், மீராவின் கவிதாலயம், கம்பன் கவிக்கூடம், கவிதை தூவனம் என்பனவாகும்.



கவிஞர் சிஹார்தீன் பெற்ற விருதுகள் பல. அதில் சில கவிச்சற்பி விருது, கவிச்சுடர் விருது, கவி இமயம் விருது, ஆசுகவி விருது, கவித்தென்றல் விருது, பெரியார் விருது, கவிச்சிறகு விருது, கவிக்கேசரி விருது எனத் தொடர்கிறது. தினகரன், நவமணி, சுடர் ஒளி, ஜனனி, மித்திரன், வீரகேசரி, துணிந்தெழு சஞ்சிகை ஆகியவற்றில் கவிஞர் சிஹார்தீன் ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்ட இதழ்களாகும். தென்றல் வானொலி, சக்தி எப்.எம், இலங்கை வானொலி வர்த்தக மற்றும் முஸ்லிம் சேவையிலும் இவரது கவிதைகள் ஒலிபரப்பப் பட்டன. இவ்வாறு கவிஞரது இலக்கியப் பணி தொடர்கிறது.

நேர்காணல்:
**ஏ.எம் கஸ்புள்ளா**







தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# கடுவன்பூனை வளர்த்தல்



எங்கிருந்தோ ஒரு அவா என்னை நோக்கிப் பறந்து வருகிறது அது பறக்க நினைக்கும் திசையெங்கும் என்னை அழைத்துச்செல்ல என கவிதை வளர்க்கும் ஏ.கே.முஜாரத்தின் கடுவன்பூனை அண்மையில் 2021 ஆம் ஆண்டுக்கான விருதினை வென்றிருக்கிறது. எறும்புகள் பதிப்பித்த கடுவன்பூனை முஜாரத்தின் நான்காவது கவிதைப் பிரதி. பூக்களால் ஒரு புகைப்படம், றிசானாவும் எதுவும் பேசா தவாத்மி சுவர்களும், சாத்தான் வழிந்தோடும் சொற்கள், பட்டாம் பூச்சிகளால் உன் பெயரை எழுதுகிறேன் என கவிதைச் சொற்கள் வழியே வெளிப்பட்டவர் முஜாரத். முஜாரத் கவிதைகளில் கற்பனையை அதிகம் வளர்ப்பார். மாற்றம் முதலாக இரவை மிதித்து விளையாடிக் கொண்டிருந்த வரையான இந்தப் பிரதியிலும் அவர் கடுவன்பூனை வளர்க்கிறார். கனவு என்பதும் ஒரு வகைக் கற்பனைதான். அவர் கனவுக்குள் நுழைகிறார். நான் கனவைக் திறந்து உள்ளே நுழையப் போகிறேன்... எனக் கனவின் வாசல் திறக்கிறார் முஜாரத். சொற்கள் என்னைக் கடத்திச் செல்கிறது நான் அச்சத்தின் காரணமாக நடுங்கிக் கொண்டிருக்கிறேன். காடு, கடல், வானம் என ஃ எல்லாத் திசைகளுக்கும் மிக வேகமாக எடுத்துச் செல்லப்படுகிறேன் என்பதாக கற்பனையின் பதட்ட சூழலை அல்லது சூட்சுமத்தை கவிதையெங்கும் வளர்க்கிறார். மீ புனைவின் மாய யதார்த்தப்பாங்கு முஜாரத்தின் கற்பனையைச் செழுமை செய்கிறது அல்லது கற்பனை மாய யதார்த்தத்தில் மிதக்கிறது.

இயற்கை நம்முன் நிகழ்த்தும் யதார்த்தங்களை அல்லது இயல்புகளை மீறி இயற்கை மீது கவிஞன் புனையும் செயல்பாடும் வித்தியாசமான அனுபவங்களைப் பெய்து விடுகிறது. முஜாரத்தின் சொற்களிலிருந்து பறவைகள் வெளியாகின்றன. அவர் மரமாகிறார். கையில் சூரியனை எடுக்கிறார். கோடையையும் மழையையும் பொழிகிறார். காற்றைப் பறவையாக்குகிறார். மழை பொழிகிறார். மேகத்துக்குள் ஏறுகிறார். மண்ணோடு பேசுகிறார். சூரியனை இரவு அறைக்குள் நிறுத்துகிறார். பனிக் காட்டில் அலைகிறார். வானத்தைக் கீழே கொண்டுவருகிறார். பூமியை மேலே கொண்டு செல்கிறார். முஜாரத் இப்படியே இயற்கை மீது வதம் புரிகிறார். வதம் என்பது இங்கே கற்பனை.

முஜாரத் கவிதைகளில் இரவு, மழை, வானம், பறவை, காற்று, கவிதை, வீடு, ஜன்னல் என நிறையும் சொற்கள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு அர்த்தங்களுடன் கவிபுரிகின்றன. வெள்ளைப்பூனை என்பது இந்தப் பகல். இங்கே குதிரை என்பது எனது கவிதை என்றெல்லாம் அவர் மாயம் காட்டுவது கவிதைக்கு அழகுதான். ஆம் முஜாரத்தின் கடுவன்பூனை என்பதும் கனவுக்குள் நிகழும் கற்பனை தான். அவர் கடுவன்பூனை வளர்க்கிறார்.

# அழகிரிசாமியின் அணில்

நுண் புதினமொன்றிற்கான தலைப்புகள்தான் இவை என்பதைப் புரிந்து கொள்ள நாட் சென்றது. புதினத்தை எதிலிருந்து தொடங்குவதென எழுதியெழுதிக் குவித்த காகிதக் குவியல் ஒரு கடல். கடல் நடுவே பேனாக்கோலோடு வலித்துக்கொண்டிருந்தார் புதினர் புத்தக ஓடம்.

புதினரென அவர் தன்னைப் பெயரிட்ட நாளில் தொடங்கிய வேலையிது. முதலில் தன் பிறப்பிலிருந்து நுண் புதினத்தை தொடங்கப் பார்த்தார். பிறப்பின் வரலாற்றுக் குறிப்புகளை தந்தையாரின் டயறியிலிருந்து தேடத் தொடங்கினார் புதினர்.

அதுவொரு புதினம். டயறியில் இவர் பிறந்ததென பேர்த் சேர்ட்டிபிக்கட் சொல்லும் தேதித்தாள் பக்கங்கள் எழுத்து மழுங்கிக் கிடந்தன. அதன் காரணத்தைத் தேடி அலைந்தார் புதினர். பாட்டனாரொன்று பாட்டியாரொன்று என வேவ்வேறு காரணங்கள் பிறந்தன. தான் பிறந்த தேதி அழிந்த கதையையைத் தேடி அலைந்ததில் புதினம் பிந்திற்று.

நுண் புதினத்தை எப்படித் தொடங்குவது. தான் பிறந்த காலத்தில் ஏற்பட்ட பெரும் பிரளயத்தில் தொடங்குவதா இல்லை ஊருக்கு கரண்ட் வாரத்துக்கு முன்னம் குப்பி விளக்குகள் எரிந்ததிலிருந்தா இல்லை கக்கூசுக்கு காட்டுக்குப் போனதும் வரும்போது பனங் கொட்டை பொறுக்குறதுமான கைங்கரியத்திலிருந்து தொடங்குவதா. குழம்பிப் போனார் புதினர். அவரது கசங்கிய காகிதக் கடல் பெருத்தது. சின்னத்தில் கண்ட மூன்றாம் சாமத்துப் பேயைப் பற்றி அப்பா வீட்டில் வளர்த்த வீமனைப் பற்றி அது வாலாட்டும் நன்றிக் கடன் பற்றி ஊரை வெட்டித் துண்டு போட்டு அப்பா ஊர், அம்மா ஊரென்று பிரிச்சு ஊர் பற்றி எது பற்றியெழுதுவது புதினருக்கு புதினம் லாவயப்படுவது எப்போதோ.

அவர் ஓடக்கோலைப் பற்றியபடி தூங்கிப்போனதும்..... தூக்கத்தில் கனவு காண்பதும். அரைகுறையாய் விழித்துக் கனவிலிருந்து தொடங்கி இருட்டில் வழுக்கி விழுவதுமாய் சில காலம் கடந்தது. ஆனாலும் நுண் புதினத்தை புதினர் தொடங்கியபாடில்லை.

புதின எழுத்தாளராக அவர் தன்னைப் பிரகடனப்படுத்தியிலிருந்து இன்றுவரை எவரும் சரியாகப் புதினம் எழுதவில்லை என்பது அவரது கூர்ந்த விமர்சனம். கட்டுக்கட்டாய்ப் பேப்பர்களை நிறைத்து விருதும் பொன்னாடையும் பெறும் கூட்டமென்று விமர்சிப்பதா என ஒரு பெரிய ஆய்வு கூடச் செய்திருந்தார். அதனாற்தான் யாரும் எழுதாதபடி புத்துயிர் பண்பு நுண்புதினத்தை எழுத முற்பட்டுத் தன்னை அவிழ்க்கத் தொடங்கினார். மாயப் புனைவில் தன்னைத் தொலைத்தார்.

புதினர் தான் எழுதப்போகும் புதினத்தை தொடங்குவது பற்றிய முயற்சியில் அல்லது பயிற்சியில் ஈடுபடத் தொடங்கிய காலத்திலிருந்து தாடி வளரத் தொடங்கியிருந்தது. அது ஒரு காடு. முகமும் மறைந்த காடு. புதினத்தை உணர்வு ததும்பும் நிலைக்கு கொண்டு வர அரும்பாடுபட்டார். ஒருவாறு தொடங்கியும் விட்டார். தொடங்கும் போது சொற்களோ, சம்பவங்களோ, பாத்திரங்களோ இருக்கவில்லை. வெறும் இருட்டு. கறுத்த பக்கம். மூன்றாம் பக்கத்தில் தான் மெல்லிய நீல இருள் பரவத்தொடங்கிற்று. அப்போது ஒரு அணிற்குஞ்சு கீச்சிடும் சத்தம் கேட்டது. புதினர் அணில் குஞ்சாகி அணில் வாழ்வொன்றை அனுபவிக்கவும் தொடங்கினார். இளங்காலைச் சூடு அணிலுக்கு சுகமாக இருந்தது. அந்த அணில் கு.அழகிரிசாமியின் அணில். புதினம் முடிந்ததா? இல்லையா என்பது அவருக்கே தெரியவில்லை. ஆனால் கொஞ்சநாள் கழித்து நுண்புதினமொன்றுக்கான விருதுக்கு அழைப்பு ஒன்று வந்திருந்தது. பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்தார். அந்தப் பனுவலில் இவர் கிழித்துப் போட்ட காகிதக் கடல் மிதந்து கொண்டிருந்தது. புதினர் தன் அறையில் கிழித்துப் போட்ட காகிதக் குப்பைகளை ஜன்னல் வழியே அள்ளிச் சென்றிருந்த காற்றுப் பற்றி அவர் நுண் புதினத்தைத் தொடங்கியிருக்கலாமென்று யோசிக்கவேயில்லை.

பொன்மீரா





# ஊமக்காச்சி 04

முயலாடு முன்றில் அழகானது. அவை துள்ளியோடிக் குழந்தைகளை மகிழ்வூட்டும் தருணங்கள் அலாதியானவை. அவை போன்றே குழந்தை முயல்கள் உலாவும் முன்றிலும் உணர்வுபூர்வமானது. உயிர்த்துடிப்புமிக்கது. கரும்பு மொழியின் இனிமையும், தேன் சுவையின் சிரிப்புமாக இன்பமூட்டுவது.

இன்று குழந்தைகளின் உலகு டிஜிட்டல் உலகாகி விட்டது. இருபத்தோராம் நூற்றாண்டின் தகவல் மையச் சுழற்சி மனித வாழ்வின் பாரம்பரிய யதார்த்த உயிர்ப்புக்களைக் கொன்று விட்டதோ என்று எண்ணும்போது குழந்தைகளின் உலகு சுருங்கி விட்டது அல்லது தொடுதிரைக்குள் அமுங்கி விட்டது.


குழந்தைகள் ஓடியாடி விளையாடிய முற்றம் இருண்டு விட்டது. இன்றைய நவீன குழந்தை டிஜிட்டல் முற்றத்தில் மூச்சிரைத்துக் கிடக்கிறது. குழந்தை எனும் அற்புதம், அருள், அன்பு, நிறை உணர்வுடையன இன்று சடப் பொருளாகி விட்டதோ என்று நினைந்துருக வேண்டியுள்ளது.

சிறுவர்களுக்கான உரிமைகள் குறித்துச் சட்டங்களும் சமயங்களும் நிறையவே உண்டு. குழந்தைகளை முன்னிறுத்தி இயங்குகிற யுனிசெப் உள்ளிட்ட நிறுவனங்கள் அதிகம் குழந்தை வாழ்வியல் சார்ந்து சிந்திக்கின்றன. ஆனாலும் குழந்தை மீறல் என்பது தன் பேய்க் கரத்தை நீட்டியபடிதான் நிற்கிறது. குழந்தைத் தொழில் முதல் சிறுவர் கல்வி மறுப்பு, போஷாக்குணவு மறுப்பு, பாலியல் அச்சுறுத்தல், சமத்துவப் பிளவு, போரிடை தோய்தலென இதன் இருப்பு நீட்சியானது. இதனிடை தோய்ந்து வழியும் சிறுவர் உலகு துன்புறும் நிலையை வாழ்வு நெடுகிலும் காணுகிறோம்.

முற்றவெளி எண்மவெளியாக மாறுமிடத்தில் பெரும் வெறுமை தொற்றிக்கொள்வதனை, உலகு தனிமனித அளவுக்குச் சுருங்கி விட்டதைக் காணலாம். பாட்டி, பாட்டன், அம்மா, அப்பா, தம்பி, தங்கையென உறவுகளால் சூழப்பட்ட குழந்தையுலகு தொடுதிரைக்குள் சிறையாகிக்கிடக்கிறது.

2017இல் யுனிசெப் மேற்கொண்ட ஆய்வின்படி 11 18 வயதுக்குட்பட்டோரில் 53 சத வீதத்தினர் டிஜிட்டல் உலகுக்குள் சிக்குண்டுள்ளனர். 'ஓடிவிளையாடு பாப்பா ஒரு குழந்தையை வையாதே பாப்பா' என்ற எண்ணம் சிறுவர் உலகில் அற்றுப் போய்விட்டது. நேரலை விளையாட்டுக் கணினி முற்றத்தில் பிள்ளைகள் அமிழ்ந்து போயினர். Box play station களில் நேரத்தைப் புதைத்துவிட்டனர். இதன் பக்கவிளைவாக மணிக்கட்டு வலி, ஒற்றைத்தலை வலி, முள்ளந்தண்டு உபாதை, நித்திரையின்மை, ஒழுங்கற்ற உணவுப் பழக்கவழக்கமென குழந்தையின் வாழ்வியல் கேள்விக்குறியாகிவிட்டது.

தனித்த உலகில் சுருண்டதான நிலை, கட்டுப்பாட்டுத் தோல்வியையே உரு



வாக்கி விட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன. நேரலை வசப்படுத்ததிலிருந்து குழந்தையுலகை முயலாடு முன்றலுக்கு மீளமைக்க வேண்டும்.

இந்நிலையில் மாற்றுகை இல்லையெனில் இதுவும் ஒருவகையில் சிறுவர் உரிமை மீறல் சார்ந்ததே எனலாம்.

ஐக்கியநாடுகள் சபையின் சிறுவர் உரிமை சமவாயம் (1989) பதினெட்டுக்குக் குறைந்த வயதினரைச் சிறுவரென வகைமைப்படுத்துகிறது. சிறுவரின் ஆற்றல், மனப்பாங்கு, உளவிருத்தி, நடத்தை, என்பனவற்றில் கவனக்குவிவை அவாவுகிறது. சூழலாலும், சமூக இயக்கத்தாலும் வளர்வுறும் குழந்தைப் பராயத்தைப் பிறப்புக்கு முன்பிருந்து நோக்குகிறது.

குழந்தைப் பருவத்தை, மகப்பேற்றுக்கு முன்னைய பருவத்திலிருந்து சிறுவர் உரிமை தொடக்குகிறது. தாயின் கருவறைக் காலத்திலேயே சிறுவருக்கான தேவையும், உரிமையும் கட்டமைகிறது எனில் அது பிறந்த பின்பான குழந்தைப்பருவம், முன்பிள்ளைப் பருவம், பிள்ளைப் பருவம், கட்டிளமைப் பருவங்களில் குழந்தைமையின் உரிமை பேணப்பட வேண்டும். ஆனால் இன்று குழந்தை மீது கட்டவிழ்த்துவிடப்படும் சுரண்டல் பயங்கரமானது. அதிலும் டிஜிட்டல் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து குழந்தைகளை மீட்டெடுத்து முயலாடு முன்றலில் விளையாட விட வேண்டும். இது பெற்றோர் மீதுள்ள கடப்பாடெனலாம்.

## வாகைத்திமிர்

### ஔவன் கவிதை

எலுமிச்சம் இலையளவு வாசம்
பரந்த சேதி
பூரண நிலவில் மிதப்பதான
மகிழ்வின் பெருங்கணம்
ஒவ்வொரு நட்சத்திரங்களும்
சொற்களில் வந்தமர
நீ கோர்த்த கவிதையில் நான்
சூர்யனாகித் திமிர்கிறேன்

வாகைத் தருவின் உச்சக் கிளையில்
சிறுகுருவியொன்று
ஒற்றைச்சிற கால் வருட
சிலிர்த்த கவிதை
நீயெனில்
நான் வாகைத்
திணையாவேன்

வா
பூச்சூடி
பாலையைக் கடப்போம்



# தென்னிந்தியத் திரையுலகின் பிரபல குணச்சித்திர நடிகை சௌகார் ஜானகி



ஆந்திர மாநிலம் ராஜமுந்திரியில் 1931.12.12 இல் பிறந்தவர் சௌகார் ஜானகி. தந்தை காகித மில் அதிபர். இவரது தொழில் காரணமாக பல்வேறு இடங்களில் வசிக்க நேர்ந்தது. சென்னையில் வசித்தபோது, சாரதா வித்யாலயாவில் படித்தார். குழந்தைகளுக்கான வானொலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

வானொலி நாடகங்களிலும் பங்கேற்றார். இவரது வானொலி நாடகத்தைக் கேட்ட சினிமா தயாரிப்பாளர் பி.என்.ரெட்டி, 'குணசுந்தரி கதா' என்ற தெலுங்கு படத்தில் நடிக்க அழைத்தார். இதில் பெற்றோருக்கு விருப்பம் இல்லாததால், உறவுக்காரப் பையனுக்கு இவரை மணமுடித்து வைத்தனர்.

கணவருடன் ஆந்திர மாநில விஜயவாடாவில் வசித்தார். அவர் வேறு நல்ல வேலை தேடி, சென்னைக்கு வந்தார். சினிமா ஆசை துளிர்த்ததால் இவரும் சென்னை வந்து, தயாரிப்பாளர் பி.என்.ரெட்டியை சந்தித்தார். தன் தம்பி நாகிரெட்டியிடம் அவர் சிபாரிசு செய்தார்.

விஜயா புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் என்.டி.ராமாராவ் நடித்த 'சௌகார்' என்ற தெலுங்கு படத்தில் 19வது வயதில் கதாநாயகியாக அறிமுகமானார். தோற்றமும், நடிப்பும் இயல்பாக இருந்ததால் ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றார். இதனால் வெறும் ஜானகி 'சௌகார் ஜானகி' ஆனார். மாடர்ன் தியேட்டர்ஸின் 'வளையாபதி' படத்தில் பாரதிதாசன் எழுதிய வசனத்தைப் பேசி நடித்தார். தொடர்ந்து ஜெமினி, ஏவிஎம் என முன்னணி நிறுவனங்களின் படங்களில் வாய்ப்புகள் குவிந்தன. அற்புத நடிப்பாற்றல், அபாரமாக வசனம் பேசும் திறன் கொண்ட இவர், 'பாக்கியலட்சுமி' 'படிக்காத மேதை', 'பாலும் பழமும்' என பீம்சிங்கின் பல வெற்றிப் படங்களில் நடித்தார். 'பார் மகளே பார்', 'புதிய பறவை', 'நீர்க்குமிழி', 'பாமா விஜயம்', 'எதிர் நீச்சல்', 'இரு கோடுகள்', 'தில்லுமுல்லு' உள்ளிட்ட திரைப்படங்கள் இவருக்குப் பெயர் வாங்கிக் கொடுத்தன. சோகக் காட்சியில் நடிக்கும் வாய்ப்பே அதிகம் கிடைத்தாலும், காதல், வீரம், பாசம், கோபம், நகைச்சுவை என அனைத்து பாவங்களையும் சிறப்பாக வெளிப்படுத்தக்கூடியவர் சௌகார் ஜானகி.

தமிழில் எம்ஜிஆர், சிவாஜி, ஜெமினி, தெலுங்கில் என்.டி.ராமாராவ், நாகேஸ்வர ராவ் என முன்னணி நாயகர்களுடன் நடித்தார். தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, மலையாளம் உட்பட 385க்கும் அதிகமான திரைப்படங்களில் நடித்துள்ளார்.

எந்த மொழியானாலும் அவரே டப்பிங் பேசுவார். கே.பாலசந்தரின் நாடகங்களிலும் நடித்தவர். 300க்கும் மேற்பட்ட முறை மேடையேறியவர். காவியத்தலைவி, ரங்கராட்டினம் ஆகிய 2 படங்களை தயாரித்தார்.இரு கோடுகள் படத்தில் இவரின் நடிப்பை பாராட்டி கருணாநிதி இவருக்கு ஓர் வாழ்த்து மலையும் வழங்கினார். தனது அமைதியான குணச்சித்திர நடிப்பின் மூலம் அதீத புகழடைந்த கலைஞர் சௌகார் ஜானகி. கே.பாலச்சந்தரின் ஆஸ்தான கதாநாயகிகளில் ஒருவர் சௌகார் ஜானகி. எவ்வித பாத்திரமானாலும் தனது இயல்பான நடிப்பால் வியாபிப்பவர் சௌகார் ஜானகி. புதிய பறவை, இரு கோடுகள்,பாமா விஜயம்,தில்லுமுல்லு,காவியத்தலைவி,ஒளிவிளக்கு, பாக்யலட்சுமி போன்ற படங்கள் இவரின் நடிப்பாற்றலுக்கு நற்சான்று வழங்கிய படங்கள்.தெலுங்கு திரைப்பட விருதுகள் கமிட்டி தலைவராகப் பணிபுரிந்தார். சமையல், தோட்டக் கலையில் வல்லவர்.

சென்னையில் 1965ல் சத்ய சாய்பாபாவை சந்தித்த பிறகு, அவரை தன் குருவாக ஏற்றுக்கொண்டார். அவரால் தன் வாழ்க்கையில் பல அற்புதங்கள் நடந்துள்ளதாக பலமுறை குறிப்பிட்டுள்ளார். வாழ்நாள் சாதனையாளர் விருது, கலைமாமணி உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

ரசிகர்களிடம் இருந்து உண்மையான அன்பையும், மரியாதையையும் இத்தனை ஆண்டுகளாக பெற்றுவரும் நான் உண்மையில் 'சௌகார்'தான் (சௌகார் என்பதற்கு பணக்காரன் என அர்த்தம்) என்பார்.

91வது வயதில் அடியெடுத்து வைத்திருக்கும் பண்பட்ட கலைஞர் சௌகார் ஜானகி அவர்களுக்கு இலங்கை ரசிகர்கள் சார்பாக எமது இனிய பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

ரஜினிகாந்த் நடித்த "தீ"படப்பிடிப்பின் போது சௌகார் ஜானகியை கொழும்பு மஹாராஜா நிறுவன அலுவலகத்தில் சந்தித்ததை இப்பதிவில் நினைவு கொள்கின்றேன்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

அங்கம் 16

## முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டெடுத்த பேரறிஞர் அண்ணா

# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா



இத்தீர்மானம், 1967 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18ஆம் திகதியன்று சட்டப்பேரவையில் நிறைவேறியது. இத்தீர்மானம் நிறைவேறியதும் அண்ணா மூன்று முறை "தமிழ்நாடு" என முழங்க, அனைவரும் வாழ்க என முழக்கமிட்டனர். அதற்கு முன்பே அண்ணா ஆட்சிக்கு வந்த முதல் தமிழ்ப்புத்தாண்டு 14.04.1967 அன்று அரசின் தலைமைச் செயலகம் இயங்கி வந்த கட்டிடமான "புனித செயிண்ட் ஜோர்ஜ் கோட்டை" என்ற பெயரை "தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்" என்று பெயர்மாற்றிய பலகையை அண்ணா திறந்து வைத்தார். இலட்சிணையில் காணப்பட்ட "மதராஸ் கவர்ன்மெண்ட்" என்ற வார்த்தை "தமிழக அரசு" என்றும் "சத்திய மேவஜெயதே" என்ற வார்த்தை "வாய்மையே வெல்லும்" என்றும் அண்ணா தமிழில் மாற்றி அமைத்தார்.

"சங்கீத நாடக மன்றம்" எனும் வார்த்தை "இயல் இசை நாடக மன்றம்" என்றும் "நமஸ்காரம்" என்ற வார்த்தை "வணக்கம்" என்றும் "மந்திரி" என்ற வார்த்தை "அமைச்சர்" என்றும் அழைக்கப்பட ஆணை பிறப்பித்தார்.ஸ்ரீ, ஸ்ரீமதி, குமாரி என்றும் சமஸ்கிருத வடமொழிச் சொற்களுக்கு மாறாக, முறையே திரு, திருமதி, செல்வி என்னும் தமிழ் சொற்களை அரசு மடல்களில், ஆவணங்களில் பயன்படுத்த வேண்டும் என்று அண்ணா உத்தரவிட்டார். அரசியலில் அனைவரையும் நண்பர்களாகவே கருதினார் அண்ணா. எதிரான கருத்து என்றாலும் அவற்றை ஆராய்ந்து நல்லதை ஏற்றுக்கொள்வார். தவறுகள் என உணர்ந்தால் அதை தக்க காரணம், காரியங்களுடன் நிராகரிப்பார். மேடைப்பேச்சிற்கு இலக்கணம் வகுத்தவர் அறிஞர் அண்ணா.

அறிஞர் அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து பஸ் வண்டிகளில் திருவள்ளுவர் படம் பொருத்தப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார். ஆகா~வாணி என்று அழைக்கப்பட்டு வந்த ரேடியோ ஒலிபரப்பை "வானொலி" என்று பெயர் மாற்றி வைத்தவரும் அண்ணாதான். சாதி, மத வேறுபாடுகளை அகற்றவும் தீண்டாமையை ஒழிக்கவும் விரும்பிய அண்ணா, கலப்புத் திருமணம் செய்வோர்க்கு தங்கப்பதக்கம் வழங்கப்படும் எனவும் அறிவித்தார். சுயமரியாதை திருமணங்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கினார். அண்ணாவின் ஆட்சிக்காலத்தில்தான் சென்னை கடற்கரையில் கற்புரக்கரசி கண்ணகி மற்றும் தமிழ்ச் சான்றோர்களின் சிலைகள் நிறுவப்பட்டன.

அறிஞர் அண்ணா அரசியல் நாகரிகம் பற்றி கூறுகையில், மரத்தை வெட்டுகின்றவன் கூட களைத்துப் போனால் ஓய்வெடுப்பதற்கு இன்னொரு மரத்தின் நிழலில்தான் அமருகிறான். நம்மையும் இவன் வெட்டுவானே என்று நினையாமல் அந்த மரம் அவனுக்கு நிழல் தருகிறது. அதுபோல அரசியலில் நம்மை தாக்குவோரிடத்திலும் நிழல் தரும் மரம் போல அன்பு காட்ட வேண்டும். அதுதான் அரசியல் நாகரிகம் என்றார். அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்த போது இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு சென்னையில் ஜனாதிபதி ஜாகிர் ஹு{ஸைன் தலைமையில் நடைபெற்றது. வெளிநாட்டிலிருந்தும் தமிழ்நாட்டிலிருந்தும், இந்திய நாட்டின் பல மாநிலங்களிலிருந்தும் பல அறிஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஆராய்ச்சி, கருத்தரங்கு, கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம், கலைக்கண்காட்சி போன்றவை சிறப்பாக நடைபெற்றன. காமராஜர் சிறப்புவிருந்தினராக கலந்து கொள்ள முதலமைச்சர் அறிஞர் ஏற்பாடு செய்தார். வீதியில் தமிழ் சான்றோர்களின் சிலைகள் நிறுவப்பட்டன.

அறிஞர் அண்ணா காரைக்காலில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு திரும்பும்போது திருநள்ளாறு என்ற இடத்தில் அண்ணாவின் கார் பழுதாகிவிட்டது. விரைவாக வேறு சக்கரம் மாற்றப்பட்டது.

பேரளம் என்ற ஊர் வந்தது அந்த ஊரிலுள்ள சினிமா தியேட்டர் அருகே காரை நிறுத்த சொன்னார் அண்ணா. காரில் அண்ணாவுடன் கூட வந்தவர்கள் எல்லோரும் அண்ணாவையே பார்த்தனர். அண்ணா அவர்களை பார்த்து கூறினார் "என்ன பார்க்கிறீர்கள்? நம்ம எம்.ஜி.ஆர் நடித்த 'அன்பே வா' எனும் சிறந்த படம் திரையிடப்பட்டிருக்கிறது எல்லோரும் பார்த்துவிட்டு போவோம்" என்றார். அண்ணாவுடன் வந்த ஒருவர் திரையரங்கினுள் சென்று தியேட்டர் மனேஜரிடம் விடயத்தை தெரிவித்தார். தியேட்டர் உரிமையாளரும் மனேஜரும் பரவசத்துடன் ஓடிவந்தனர்.



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

வாழும் போதே வாழ்த்துவோம்

தினகரன் வாரமஞ்சரி

ஊடக அனுசரணையில்



பிரதம அதிதி
புரவலர் ஹாசிம் உமர்



# Shangkavi Theater & Shangkavi Films Presents

## Kalavibushanam Award & World Tamil Award 2023

## 28.02.2023 மன்னார் பேசாலை சங்கவி திரையரங்கில்



விசேட அதிதி பிரதம ஆசிரியர்
தெ. செந்தில் வேலவர்

# உலகத் தமிழர் விருது, கலாவிபூஷணம் விருதிற்கு தெரிவு செய்யப்பட்ட சில கலைஞர்கள்





கே. ஈஸ்வரலிங்கம்



தனேந்திரன்



வை.கஜேந்திரன்



நா.விதுசியா



லோ.சத்யாழினி



கா. திருப்பதி



அ.அஜந்தறூபன்



சு.அனுலக்ஷியா



லோ.கொன்ஷல்வாஸ் கூஞ்ஞு



ஜெ.தக்ஷாலினி



பா.விமிலியா



நீ.நியூட்டன்



நவச்செல்வன்



மு.ஸ்ரீமுருகன்



தவ.தவேந்திரன்




கோ.சஜிந்தினி



ஜெ.சாண்



வி.சிந்துஜா



கி.அக்ஷலா



வாவிசர்மா



அ.அன்பழகன்



ச.கவிகரன்



செல்வராசா கண்ணன்



வி.சரன்ஜா



வி.கமலநாதன்



சின்னையா துரைராசா



செ.றேனுசகானா



அழகேசன் அமிர்தசிந்துஜன்



பணிப்பாளர்
துறைராசா சுரேஷ்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.